naj Foundation Ch

விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் - செ.

in. Gurukul Kangri

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1000 67

விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்

DONATION

செ. திவான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

100067

" Presented free of cost with compliments
from the Central Institute of Indian Languages
(Government of India) Mysore - 570 006. "

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்

TAMIL NADU MUSLIMS IN FREEDOM STRUGGLE

DONATION
100067

1993-ம் ஆண்டிற்கான வள்ளல் சீதக்காதி
அறக்கட்டளையின்
முதல் பரிசு ரூ. 10,000 பெற்ற நூல்.

पुस्तकालय

செ. திவான், எம்.ஏ., எம்.ஃபில்.,

போன் : 72665

சுஹைனா பதிப்பகம்
106, எப். 5, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை — 627 002,
நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற் பதிப்பு : ஜனவரி 1994

உரிமை : ஆசிரியருக்கே

விலை : நாற்பது ரூபாய்

அச்சிட்டோர் : ஹிலால் பிரஸ்,
112, வடக்கு ரதவீதி,
திருநெல்வேலி.

முகப்போவியம் : ஓவியர் A. செல்வம்,
வின்சென்ட் ஆர்ட்ஸ்,
நெல்லை டவுண்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சமர்ப்பணம்

இளம் வயதிலேயே சதாவதானி செய்குத்தம்பி பாவலர் போன்ற பெருமக்களைக் கொண்டு நிகழ்ச்சிகள் நடத்தியும், கையெழுத்து ஏடுகள் வெளியிட்டும், மொழிப் பற்றுடனும் சமுதாய நோக்குடனும் திகழ்ந்து, எண்ணற்ற இளையோர் கல்விக் கண்பெறப் பாடுபட்டு, மாவட்டக் கல்வி அதிகாரியாகவும், முதியோர் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றிய கல்வித் தந்தை

என் அன்பு மாமனார் மறைந்த

ஜனாப் A. S. சுலைமான், M A., B Ed.,

அவர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பிக்கிறோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சீதக்காதி அறக்கட்டளையார் 21 6—93-ல்
சென்னையில் நடத்திய விழாவில் தமிழகக்
காவல்துறைத் தலைவர் திருமிகு S. ஸ்ரீபால், I.P.S.,
பங்கேற்றுச் சிறப்பிக்க, உயர்நீதிமன்ற நீதிபதி
மாண்புமிகு A. அப்துல் ஹாதி சாஹிப் அவர்களிடம்
நூலாசிரியர் செ. திவான் இலக்கியப் பரிசிற்கான
சான்றிதழைப் பெறுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளுறை

அணிந்துரைகள்

எண்ண அலைகள்

தமிழகத்தில் முஸ்லிம்கள் 1—8

தமிழகம் — அரேபியத்தொடர்பு
இஸ்லாம் பரவுதல் — சரித்திரச் சான்றுகள்
முதல் பள்ளிவாசல், மார்க்கமேதைகள்
பாண்டியர் காலச் சான்றுகள், அரேபிய நாணயங்கள்

வெள்ளையர்கள் இந்தியாவை வளைத்த வரலாறு 9—19

ஆங்கிலேயரின் இந்திய வாணிப எண்ணம்
முகலாய மன்னரின் அனுமதி
சந்திரகிரி பாளையக் காரரிடம் கிஸ்திசெலுத்தி
பெற்றநிலம் — சென்னையில் கோட்டை கட்டப்படல்
ஆங்கிலேயர் ஆதிக்கம் பெறுதல் — நாடு அடிமை யாகுதல்

குஞ்சாலி மரைக் காயர் 20—27

மலபார் கரையோரம் நடந்த முதல் சுதத்திரப்
போர் — கடற் போர் தளபதி குஞ்சாலி மரைக்காயர்
நடத்திய தீரப்போர்கள்

கம்மந் தான் கான் சாகிப் 28—34

முதல் இந்திய கமாண்டர், பூலித்தேவர்
தென்பகுதி ஆட்சிப் பொறுப்பு
மதுரையில் நடந்த சுதந்திரப்போர்

முகம்மது தம்பி யூசுப் லெப்பை 35—38

பாஞ்சாலங் குறிச்சி வீரபாண்டிய
கட்டபொம்மனுக்கு உதவியாக சுதந்திரப்
போருக்குச் சென்றவர்கள்—
முகம்மது தம்பி, யூசுப்பு லெப்பை

முஹம்மது ஹசம் 39—42

மருதுபாண்டியர் காலம் —
திண்டுக்கல் தீர்மானம் சுதந்திரப் போர் —
முஸ்லிம்கள் தூக்கில் தொங்கவிடப்படுதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேக் உசேன் 43 - 45

மருது பாண்டியரின் மறைவிற்குப் பிறகு
தூத்துக்குடி துறைமுகத் திலிருந்து —
இச்சப்பட்டி அமீர்தார் சேக் உசேன்

ஜமேதார் ஷேக்காசீம் 1806
வேலூர் மௌலவி 1838 46—54

ஹைதர் அலி — திப்பு சுல்தான்
வேலூர் புரட்சி ஜமேதார் ஷேக்காசிம்
வேலூர் மௌலவி

சென்னை மௌலவி அகமதுல்லாஹ் 1857 55—64

1857 புரட்சி சென்னை மௌலவி அகமதுல்லாஹ் —
அயோத்தி ஜகன்னாதராஜா — மௌலவி மறைவு
மௌலவி சென்னையில் பிறந்தவர்.

சேலம் குலாம் தஸ்தகீர் சாஹிப் 65—68
(காங்கிரசிற்கு முன்னால்)

மெட்ராஸ் நேடிவ் அசோசியேசன்
சென்னை பொதுமகாஜன சபை
குலாம் தஸ்தகீர் சாகிப்

காங்கிரஸ் மஹா சபையில் (1906வரை) 69—76

அமீர்கான்
நார்மன் கொலை வழக்கு
அகில இந்தியகாங்கிரசின் தோற்றம்
சென்னையில் கூடிய மூன்றாவது காங்கிரஸ்
1888—1906 வரைகூடிய காங்கிரஸ் சபைகளில்
கலந்து கொண்ட முஸ்லிம்கள்

சுதேசிக் கப்பல் பக்கீர் முகம்மது சேட் 77—82

வ. உ. சி. யின் எழுச்சிக் காலம்
சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் — கப்பல் கம்பெனிக்கு
நிதியளித்த ஹாஜி பக்கீர் முகம்மது சேட்
அப்துல் ரஹிமான் சேட்
கப்பல் கம்பெனிக்குநிதி வழங்கிய முஸ்லிம்கள்
நெல்லை எழுச்சியில் மாண்ட முஹம்மதுயாசீன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காங்கிரஸ் மகா சபையில் (1919 வரை) 83—92

காந்திய சகாப்தம் துவக்கம்
சென்னையில் கூடிய காங்கிரஸ்
காங்கிரஸ் மகாசபை கூட்டத்தில் கலந்து கொண்ட முஸ்லிம் பிரமுகர்கள்
காந்தியின் அரசியல் பிரவேசம்
சர் ஸெய்யத் அஹ்மத் கான்
முஸ்லிம் சங்கங்கள்
முஸ்லிம் லீக்
ஜாலியான் வாலாபாக் படுகொலை

கிலாபத் 93—96

ஒத்துழையாமை இயக்கம்
நான்கு ஷரத்துக்கள்
ஏழு கோரிக்கைகள்

எழுச்சியின் வடிவம் யாகூப் ஹசன் 97—111

யாகூப் ஹசன் — தமிழ்நாடு காங்கிரஸ்
மாநில அரசியல் மாநாடு
கே. டி. எம். அஹமது இப்ராகீம்
காந்தியின் தமிழக அரசியல் சுற்றுப்பயணம்
ஹாஜி அப்துல் ரகீம் சாகிப்
ஆம்பூர் மாலிக் அப்துல் ரகிமான் சாஹிப்
இராஜகிரி அப்துல் மஜித், நாகூர் மாலிம் சாகிப்
திருச்சி வி. எஸ். முகம்மது இப்ராஹிம்
மாப்பிள்ளை எழுச்சி
கூட்ஸ் வண்டியில் நடந்தகொடுமை

கிலாபத்தில் முஸ்லிம்கள் 112—119

அய்யம் பேட்டை
திருச்சி, கான்சாபுரம், சந்தைப் பேட்டை
ஆம்பூர் லால்குடி, பாபுராஜபுரம்
ரவணசமுத்திரம் பண்டாரவாடை, தஞ்சாவூர், மதுரை
காயிதேமில்லத் சென்னை எழுச்சி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீலன் சிலை உடைத்த தீரன் 120—128

நீலன் — கான்பூர் ஸாபர்அலி
வாளேந்திய இராம்நாதபுரம் முஹம்மது சாலி
நீலன் சிலையை முதலில் உடைத்த
முகமது அலியின் வீரச்செயல்

மாறாத கொள்கை தீரர்
மதுரை மௌலானா சாகிப் 129—137

உப்பு வரி
தண்டி—வேதராண்யம் உப்பு சத்தியாக்கிரகங்கள்
மதுரை மௌலானா சாஹிப்
முகம்மது காசிம் சாகிப்
கடலூர் ஜெயிலில் நடந்த மாநாடு
சென்னை உப்புச் சத்தியாக்கிரகம்

நேதாஜியின் இராணுவத்தில் 138—151

பகத்சிங் — திருப்பூர் குமரன்
1942 ஆகஸ்ட் புரட்சி நேதாஜி
பகதூர்ஷா ஷாநவாஸ்கான்
மணிமொழி மௌலானா
உபைதுல்லாஹ் டான்ஜீடத்தோ, அறிஞர் கரீம்கனி
படையில் பணியாற்றியவர்கள்

அண்ணல் காந்தியின் அறப்போரிலே 152—288

சுல்தான் பகுதாதி நாகபுரி கொடிப்போர்
தாவூத்ஷா—பீஅம்மா—கதர்
மு. ந. அப்துர்ரஹ்மான் சாஹிப்
கம்பம் பீர்முஹம்மது புலவர்
காசி முகம்மது இஸ்மாயில்
கான் முகம்மது
ஹாஜி ஜமால் முகம்மது சாகிப்
ஈரோடு மாநாடு
ராணிப்பேட்டை முகம்மது சுலைமான்
கவிஞர் கா. மு. ஷெரீப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சதாவதானி செய்குதம்பிப் பாவலர்
மாஜிஸ்டிரேட் அப்பாஸ் அலிகான்
பசீர் அமீத்சையது — ஹமீது கான்—ஷாபிமுஹம்மது
வேலூர் வி. எம். உபயத்துல்லா
விருதுநகர் அப்துல் ரகுமான்
சையது முர்த்தஸா ஹஸரத்
எஸ். ஏ. ரஹீம்—கரூர் நன்னாசாகிப்
பியாரிபீவி — மஹதி
ஹாஜி கருத்தராவுத்தர்
திண்டுக்கல் ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி
சி. அப்துல் ஹகீம் நவாப்-அல்லாமா நஹ்வி செய்யது
அகம்மது மௌலானா — டி. எம். காதர் பாட்சா
அப்துர்ரஸ்ஸாக்—மதுரை அலியார்—ஏ.பி. மொய்தீன்
எஸ். எஸ். சாப்ஜான்—ஜி. எம். பஷீர்—ஏ. ஏ. ரஹூப்
ஷைகு அப்துல் காதிர் ஆலிம் சாஹிபு
முஹம்மது முஸ்தபா இராவுத்தர் — அப்துல்லத்தீப் சாஹிப்
சையது முஹம்மது — முஹ்யித்தீன் இப்ராஹிம்
மதுரை மேலூர் ஒ.ந.வ. முகையதீன் அப்துல் காதிர்
புலவர் ஆபிதீன், ஏ.கே.ஜி.அஹ்மதுதம்பி மரைக்காயர்
திருப்பூர் முஹைதீன் — வேலாயுதம் பாளையம் எப். எம். பாஜான்
பஷிர் அகமத் சையத்—கா. மு. அகமது மீரான்
காஜாமியான் ராவுத்தர், சி. நா. ந. செய்யது முகம்மது காசிம்
காதர் முஹையதீன் மரைக் காயர்
மூ. இ. முஹம்மது அப்துல் காதர் சாஹிபு — காதர் முகையதீன் மரைக்காயர், அப்துல் ஹமீது கான்
பசீர் அகமது சையத்—முகமது அலி – பி.என். அப்துல் கபீர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பண்டிட் அப்துல் மஜீது, அமானி ஹஸரத்,
ஜலீல்கான், அப்துல் ஹகீம்
ஈஸிம்ஸா, கலீபுல்லாஹ்
கான்பகதூர் கலிபுல்லா சாஹிப்
கான்பகதூர் உஸ்மான் சாஹிப்
கம்பம் அப்துல் ரஹ்மான்
'காந்தி' பத்திரிகை
சுதந்திரச் சங்கு
தேச பக்தன்
ஹாஜா ஷெரீப்
வாணியம்பாடி முஸ்லிம்கள்
தென்காசி தேசிய முஸ்லிம் சங்கம் —
ஏ. எம். அகம்மது மீரான் சாகிப்
சென்னை மாவட்டத்தில் சிறை சென்றவர்கள்
கோவை, பெரியார் மாவட்டங்களில் சிறை சென்றவர்கள்
குமரி — தர்மபுரி மாவட்டங்கள்
இராமநாதபுரம் காமராசர், பசும்பொன் தேவர் மாவட்டங்களில் சிறை சென்றவர்கள்
வடஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களில் சிறை சென்றவர்கள்
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்
நீலகிரி — புதுக்கோட்டை — சிதம்பரனார் மாவட்டங்கள்
திருச்சி மாவட்டம்
மதுரை மாவட்டம்
உத்தமபாளையம்
தென்ஆற்காடு மாவட்டம்
சேலம் மாவட்டம்
தஞ்சாவூர் மாவட்டம்

பின் இணைப்பு
ஆற்காடு நவாபுகள் வரிசை
கவர்னர் — ஜெனரல் பட்டியல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பத்ரூதீன் தயாப்ஜி, முஹம்மது
ரஹிமுத்துல்லாரும் சஹானி ஹஸன் இமாம்
நவாப் செய்யது முஹம்மது பஹ்தூர்,
மௌலானா முகம்மது அலிஜௌஹர்
ஹகீம் அஜ்மல்கான்
இப்ராகீம் ரகுமத் அலி சக்கரியா
டாக்டர் எம். ஏ. அன்சாரி
பேராசிரியர் ஹுமாயூன் கபீர்
மௌலானா அபுல் கலாம் ஆஸாத்
டாக்டர் ஜாகீர் உசேன்
காயிதே ஆஜம் ஜின்னா
எல்லைக் காந்தி கான்அப்துல் கபார்கான்
ஆஸஃப் அலி
இலட்சியக் கவிஞர் அல்லாமா இக்பால்
முன்ஷி முபாரக் அலி
செய்யது அகம்மது பரெல்வி
ஜாலியான் வாலாபாக் சிந்தனை
நாமக்கல் உஸ்மான் சாகிப்

முடிவுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

" விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்
பாடப் புத்தகம் ஆகவேண்டும் "

சிறுபான்மை மக்களின் காவல் அரண்

வை. கோ. அவர்களின்

அணிந்துரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

" பாடப் புத்தகம் ஆக வேண்டும் "

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நெல்லை மாவட்டத்தின் தி.மு. கழக மாணவரணி அமைப்பாளராக நான் செயல்பட்ட நாட்களில் புயல் வேகத் துடிப்புடனும், மாணவர் உலகத்துக்கு எடுத்துக்காட்டான நேர்மைத் திறத்துடனும் என் இதயம் கவர்ந்த இளஞ்சிங்கம் தான் செங்கோட்டை தந்த செ. திவான் முகமது அவர்கள்.

நூல்களைப் படிப்பதில் - பழந்தமிழர் வாழ்வு, விடுதலைப்போர் நிகழ்வு குறித்த செய்திகளைச் சேகரிப்பதில் அவருக்கு நிகர் அவரே. தமிழ்த் தாத்தா உ. வே. சா. கால்கள் தேய கவின் தமிழகமெங்கும் நடந்து பழந்தமிழ்ச் சுவடிகளை தேடிப் பாதுகாத்து தந்தது போல் இந்த இலட்சிய இளைஞனும் வரலாற்றின் சாட்சியங்களையும், குறிப்புக்களையும் தேடித் தேடி சேகரித்து தன்னையே ஒரு கருத்துப் பெட்டகமாக — செய்திக் களஞ்சியமாக ஆக்கிக் கொண்டார்.

பணியாற்றுவதில் அவர் ஒரு நடமாடும் கம்ப்யூட்டர், பதினைந்து ஆண்டுகளாக எனக்கு உதவியாளர். வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த விலை மதிப்பற்ற வரப்பிரசாதம் செ. திவான் அவர்கள் ஆவார்.

என் மனசாட்சியின் பாதுகாவலராகவும் திகழ்கிறார். என்னால் அவருக்கு பெருமை என்பதை விட அவரால் தான் எனக்கு எல்லாப் பெருமையும். பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும் என்பார்கள். பூக்கள் வாடி விடும். மணம் இழந்து விடும். நாள்தோறும் புதிது புதிதாக பூக்களை சேர்ப்பதற்கு நார் பயன்படும். இதனால் மலர்களுக்கு மரியாதையை வழங்கிக் கொண்டு இருப்பது நார் தான்.

பெருமானார் அண்ணல் நபிகள் (சல்) அவர்கள் வகுத்த பாதையில் நடை போட்ட நேர்மையின் சிகரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலிஃபா உமர் கடைபிடித்த நாணயத்தையும்—நேர்மையையும் வழுவாது பின்பற்றும் வாய்மையின் இலக்கணமே என் உதவியாளர்—இந்த நூலாசிரியர் திரு. செ. திவான் அவர்கள்.

சிந்து நதி தீரத்தில் மொகஞ்சோதாராவில் கிறிஸ்து நாதர் பிறப்பதற்கு பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திராவிடர்களின் கலாச்சாரத்தையும் — அவர்கள் வசித்த கட்டிடங்களின் பெருமைகளையும் தனக்குள்ளே புதைத்து வைத்திருந்த பூமியை அகழ்ந்து ஆராய்ந்து அக் கருவூலங்களை உலகத்தின் பார்வைக்கு ஆய்வாளர்கள் எடுத்து வைத்ததைப் போல்—இந்திய தீபகற்பம் சந்தித்த சுதந்திர வேள்வியில் தங்களைத் தாரை வார்த்துக் கொண்ட தமிழக முஸ்லிம்களின் தியாக சரித்திரத்தை அற்புதமாகத் தீட்டியிருக்கிறார் செ. திவான்.

வரலாறு தான் மக்களுக்கு ஆசிரியனாகவும்—வழி காட்டியாகவும் திகழ முடியும். பிரித்தானிய ஆதிக்கத்தின் பிடியிலிருந்து தாயகம் மீட்கவும்—அடிமை விலங்குகளை உடைக்கவும் சமர்க்களங்களில் அஞ்சா நெஞ்சத்துடன் போராடிய தமிழக முஸ்லிம்களின் புனிதப் போர் குறித்து இதுகாறும் விவரிக்கப்படாத அரிய செய்திகளை படிப்போரின் இருதயத்தை ஈர்த்து ஆக்கிரமிக்கும் வகையில் நூலாசிரியர் திறம்பட எழுதி இருக்கிறார். எளிமை, நேர்மை, வாய்மை, ஒழுக்கம் இவை அனைத்துக்கும் எடுத்துக்காட்டாகத் திகழும் இசுலாமிய இளைஞரான திவான்—திராவிட இயக்கத்தின் எழுத்துலகுக்குக் கிடைத்துள்ள சிறந்த படைப்பாளி ஆவார்.

விடுதலைப்போரில் சங்கநாதம் எழுப்பிய தெற்குச் சீமையில் — வீரப்புதல்வன் வாஞ்சி, தியாகச் சுடரொளி சிதம்பரம்பிள்ளை நிகழ்த்திய சாகசம் நிறைந்த போராட்டங்கள் குறித்த மக்கள் கவனத்துக்கு வராத உண்மைகளைத் தொகுத்து பல்கலைக்கழகத்தில் எம். ஃபில் பட்டம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற இருக்கும் இந்த இளம் எழுத்தாளரால் செய்திக் களஞ்சியமாகவே தொகுக்கப்பட்டுள்ள நூலான ''விடுதலைப் போரில் தமிழக முஸ்லீம்கள் பங்கு'' கையி லெடுத்தவுடன் கடைசிப் பக்கத்தை படித்து முடிக்கும் வரை சிந்தையை வேறுபக்கம் செலுத்த அனுமதிக்காது.

மதவெறியின் ஓங்காரக் கூச்சல் வியாபித்து வரும் சோதனையான இந்த நாட்களில் இந்நூல் மண்ணின் விடுதலைக்கு இசுலாமியர்கள் தங்கள் உதிரத்தையும்—உயிரையும் அருட்கொடையாக வழங்கிய நிகழ்வுகளின் செய்திகள் வகுப்பு துவேஷிகளின் மீது தொடுக்கப்படும் சவுக்கடிகளாகும்.

உருவிய வாளுடனும்—உறுதிமாறா நேர்மையுடனும் அரேபிய வெளிகளில் போராடிய பெருமானார் அண்ணல் நபிகள் (சல்) நிலைநாட்டிய இசுலாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட தமிழ்நாட்டுப் பெருமக்கள் பரங்கியர் சைன்யங் களின் பீரங்கிகளுக்கும், துப்பாக்கிகளுக்கும் அஞ்சாமல் களங்கண்ட சம்பவங்கள் இந்நூலில் நம்மை மெய்சிலிர்க்கச் செய்கின்றன. மான உணர்வு நம் மண்ணுக்குச் சொந்தம் எனும் பெருமிதத்தை ஊட்டுகிறது இந்நூல்.

வணிகம் நடத்திட உபகண்டத்துக்குள் பிரவேசித்து அடிமைக்காலனியாக்க ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரர் களும் தொடுத்த ஆரம்பகால ஆக்கிரமிப்புகளை—வாளின் முனையில் சந்தித்த இசுலாமியர்கள் கொட்டிய இரத்தம்—பிளாசியிலிருந்து ஆற்காடு வரை பரவிக்கிடப்பதை இந் நூல் விவரிக்கிறது. கடலிலும்—நிலத்திலும் போர்த்துக் கீசியரின் இரத்தத்தைப் பெருக்கெடுத்து ஓடச்செய்த மாவீரர் குஞ்சாலி மரைக்காயர் எந்த மன்னனுக்காகப் போராடினாரோ அந்த அரசனால் எதிரிகளுக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டு உயிர் பறிக்கப்பட்ட கொடூரத்தை அறியும் போது வரலாறு நெடுகிலும் சிலரின் மகுடங்களைக் காப்ப தற்கு தளகர்த்தர்கள் வஞ்சகமாய் அழிக்கப்பட்டார்கள் எனும் செய்தி வாசகர்களின் நெஞ்சை ரணமாக்கும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிகரற்றபெருவீரன் கம்மந்தான் கான்சாகிப் துரோகத்தால் பலியானதும், விடுதலைப்போரில் வீரவாளை முதலில் உயர்த்திய மறவேந்தர் பூலித்தேவர்—அவரை அடுத்து களப்புகழ் நாட்டிய கட்டபொம்மன் நடத்திய படைகளில் மகமது தம்பி, ஈசுபுலுப்பை, குப்பை ராவுத்தர் இஸ்மான் ராவுத்தர் போன்ற முஸ்லீம் வீரர்கள் பாஞ்சாலங் குறிச்சி சேனையின் முதன்மை வீரர்களாய் திகழ்ந்ததும் விவரிக்கப்பட்டுள்ளன.

சுதந்திர யுத்தத்தில் வெள்ளைப் படைகளை சின்னா பின்னம் செய்து சிதறடித்த மாவீரர்கள் தொடர்ந்து கிடைத்த வெற்றிகளைத் தக்கவைத்துக் கொள்ள இயலாமல் எதிரிகளின் நவீன ஆயுத பலத்தாலும்—சொந்த நாட்டுத் துரோகிகளின் சூழ்ச்சியாலும் தூக்கு மரங்களில் தொங்கவிடப்பட்ட சம்பவங்கள் அடுத்தடுத்து அக்டோபர் திங்களிலேயே நடந்துள்ளது வரலாற்றின் விசித்திரமாகப் படுகிறது.

கம்மந்தான் கான்சாகிப் வஞ்சகத்தால் வளைக்கப்பட்டு தூக்கிலிடப்பட்ட நாள் 1764-அக்டோபர் 15, பாஞ்சை வேந்தன் வீரபாண்டிய கட்டபொம்மன் புதுக்கோட்டையும், எட்டையபுரமும் செய்த துரோகத்தால் மரணக்கயிற்றில் தொங்கவிடப்பட்ட நாள் 1799-அக்டோபர் 16. சிவந்த இரத்தத்தால் சிவகங்கையை புகழ் பூமியாக்கிய மருதுபாண்டியர்களின் தலைகள் வாங்கப்பட்ட நாள் 1801-அக்டோபர் 27.

அகிலத்தின் போக்கை மாற்றியமைத்த புரட்சிக்குச் சாட்சியமான அக்டோபர் திங்களில் தெற்குச் சீமையின் தளநாயகர்கள் மானம் காக்க மரணத்தின் மடியில் தலைகளைத் தந்தனர்.

1857 - முதல் சுதந்திரப்போரில் மவுலவி அகமது ஷாவும், அஜமுல்கானும், பகதூர் ஷாவும் வீசிய வாட்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இருதயத்தை நடுங்கச் செய்த செய்திகள் வாசகர்களை மெய்சிலிர்க்கச் செய்வனவாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகில இந்திய காங்கிரசுக்கு வெள்ளையர் தொட்டில் கட்டியதைச் சுட்டிக் காட்டி சூரத் காங்கிரசில் செருப்புகளும் நாற்காலிகளும் மோதிட்ட விவகாரத்தை விளக்கியதோடு- தீரர் திலகரின் ஆவேசம், மகாத்மாவின் பிரவேசம், கிலாபத் இயக்கத்தின் கீர்த்தி அனைத்தும் உன்னதமாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

மலையாள நாட்டில் நடந்த மாப்பிள்ளைமார் புரட்சியிலும், செக்கிழுத்த செம்மல் சுதேசிக்கப்பல் கம்பெனி இயக்கத்திலும் முஸ்லீம் பெருமக்கள் ஆற்றிய மகத்தான பங்கு பாங்குற சொல்லப்பட்டுள்ளது. சவுகத் அலி, முகமது அலி சகோதரர்களின் சேவையும், வங்கத்துச் சிங்கம் நேதாஜியின் இந்திய தேசியப்படையில் சேர்ந்து தியாகச் சமர் புரிந்த முஸ்லீம் தீரர்களின் பட்டியலும் முறையாக நூலாசிரியரால் கையாளப்பட்டுன்ளன.

அண்ணல் காந்தியாரின் அகிம்சைப் போரில் முன்னணியில் நின்ற முஸ்லீம்களின் முனைப்பான போராட்டத்தையும், தியாகத்தையும் எழுதியுள்ள நூலாசிரியர் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள் மாணவப் பருவத்தில் விடுதலைப் போரில் குதித்ததையும், மண்ணின் விடுதலைக்கு அவர் உரத்து எழுப்பிய உரை முழக்கங்களையும், விறுவிறுப்புக் குறையாமல் விவரித்திருக்கிறார்.

எதிர்காலத் தலை முறைக்குப் பெரும்பயன் விளைவிக்கும் இந்த நூல் பாடசாலைகளிலும், கலாசாலைகளிலும் மாணவர்களுக்குப் பாடப்புத்தகம் ஆக வேண்டும். தமிழர் தம் ஒவ்வொரு இல்லத்தையும் இந்நூல் அலங்கரிக்க வேண்டும் என்பதே எனது தணியாத வேட்கையாகும்.

ஜெ. கோபால்ஸ்வாமி

15/12/93

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலத்தின் தேவை நிறைவேறுகிறது

சொற்செல்வர் சி. சு. மணி அவர்களின் அணிந்துரை

இந்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு இது வரையிலும் வரலாற்று ஆய்வாளர்கள் பார்வையிலிருந்து எழுதப்படவில்லை என்றே சொல்லலாம். விடுதலை இயக்கத்தில் பெரும் பங்கு கொண்ட பட்டாபி சீதா ராமையா இந்திய தேசிய காங்கிரசின் அறுபதாண்டு வரலாற்றை எழுதினார். அது அதிகார பூர்வமான வரலாறு என்று கூறப்பட்டது. அதில் ஒரு பிறவியில் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக இரண்டு வாழ்நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட வ. உ. சிதம்பரனாரைப் பற்றி ஒரு வரி கூட இல்லை. விந்தியத்திற்கு வடக்கிலிருந்து விடுதலைப் போரைப் பற்றி எழுதியவர்கள் தெற்கை மறந்தார்கள்.

இந்திய சுதந்திரம் ஒருவரால் 'வாங்கித்' தரப்பட்டது என்று நம்புபவர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். அரசின் விளம்பரச் சாதனங்கள் கூட அப்படித்தான் சொல்லுகின்றன.

''ஒருவரால் அன்று; அந்த ஒருவரோடு இணைந்து நின்ற ஒரு குடும்பத்தால் இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தது'' என்று சொல்கிறவர்களும் இருக்கின்றார்கள்.

விடுதலைப் போர் வரலாறு புலித்தேவர் காலம் முதல் தொடங்குகிறதா? அல்லது கட்டபொம்மன் காலம் தொடங்கியதா? அல்லது 1857இல் படையினரிடையே நடந்த புரட்சியில் இருந்து தொடங்குகிறதா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தெளிவான விடை இன்னும் தரப்படவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழகத்தில் விடுதலைப்போரின் வரலாற்றை ம. பொ. சி. தமது பார்வையிலிருந்து எழுதியிருக்கிறார். அந்த நூலில் சொல்லப்பட்டவை தவிர, சொல்லாமல் விடப்பட்டவை மிகுதி. கோவை அய்யா முத்துவின் நூலை படித்தால் அது மற்றொரு பார்வையிலிருந்து எழுதப் பட்டது என்பது புரியும்; விடுதலைப் போர் வீரர்களில் பலர் மறக்கப்பட்டனர், என்பதை விட மறைக்கப்பட்டனர் என்பதே உண்மை.

கத்தியின்றி ரத்தமின்றி வந்ததன்று சுதந்திரம், செந் நீர் சிந்தியவர்களின் முகங்களும் பெயர்களும் பட்டிய லிட்டுக் காட்டுவதற்கு அடங்காதவை.

இப்பொழுதெல்லாம் ஒரு கருத்து வலியுறுத்தப்படு கிறது. வேதகாலத்து விழுமியங்களை மீண்டும் கொண்டு வர விரும்பியவர்கள் தாம் இந்திய விடுதலைப் போரின் ஈட்டி முனைகள் என்று 'சித்திரிக்கிறார்கள்'. எனவே இந்துக்களின் முயற்சியில் விளைந்ததே சுதந்திரப் போர் என்று கூறுகிறார்கள். அவர்கள் கொள்கைப்படி வங்காளத் தின் துறவிகளின் எழுச்சி முதல் சுதந்திரப் போர்.

உண்மை இதற்கு முற்றிலும் மாறானது. மதங்கள் கடந்து, மாநில எல்லைகளைக் கடந்து மொழிவேற்றுமை களைக் கடந்து இந்திய விடுதலை இயக்கம் காலத்துக்குக் காலம், தன் அணுகு முறைகளை மாற்றிக் கொண்டு நடைபெற்றது என்பதே உண்மை.

இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் எல்லோரும் பங்கேற்றனர். ஆயினும் ஆங் கிலேயர் வருகையால் தங்கள் ஆட்சியைப் பறி கொடுத்த இசுலாமிய சமுதாயத்திற்கு ஆத்திரம் மூண்டு அவர்கள் விடுதலைப் போரில் வேகமாகப் பங்கு கொண்டனர் என் பதை மறுக்க முடியாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வள்ளல் சீதக்காதி அறக்கட்டளையார் 'விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்களின் பங்கு' என்ற தலைப் பினைத் தந்து 1993ம் ஆண்டிற்கான கட்டுரைப் போட்டியை சென்னையில் அறிவித்தார்கள், தம்பி செ. திவான் அந்தப் போட்டிக்கு அனுப்பிய கட்டுரை இப் பொழுது நூல் வடிவம் பெற்று வெளி வருகிறது. காலத் திற்குப் பொருத்தமான தலைப்புக் கொடுத்த அறக் கட்டளையினர் பாராட்டுக்கு உரியவர்கள். காலத்தின் தேவையை நிறைவு செய்த திரு. செ. திவான் பாராட்டுக் கும் போற்றுதலுக்கும் உரியவர்.

இந்த நூல் முழுவதையும் படித்துப் பார்த்தால் திரு. செ. திவான் இத்தனைத் தகவல்களையும் சேகரிக்க எவ்வளவு அரும்பாடு பட்டிருப்பார் என்பது புலனாகும். விடுதலைப் போராட்டகாலத்தில் வெளிவந்த தேசிய நாளிதழ்களையும், வாரஇதழ்களையும், மலர்த் தொகுப்பு களையும், நூல்களையும் திரு. செ. திவான் நுணுகிப் படித்து இச்செய்திகளைத் திரட்டியிருக்கிறார்; திரட்டிய செய்திகளை நிரல்படத் தொகுத்திருக்கிறார். இசுலாம் தமிழகத்தில் வேர் விட்ட நாளிலிருந்து பல தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

ஓர் ஆய்வுக் கட்டுரையையும் விஞ்சிய அளவுக்குச் செய்திகள், தகவல்கள், பெயர்கள், முகவரிகள், போராட்டங்கள் யாவற்றையும் தொகுத்திருக்கிறார்.

அவையனைத்தையும் ஒருசேரத் தரவேண்டும்; ஒன்று கூட விட்டுப் போகக் கூடாது என்ற ஆசையினாற் போலும், அவருடைய நடை சில இடங்களில் 'தந்தி'ச் செய்திபோல அமைந்துள்ளது; அதுவும் ஒரு வகை அழகுதான்!

மாநிறத்திற்கும் சற்றுக் கூடுதலான நிறம்; வலப் பக்கம் வகிடு; உடையில் கவனமின்மை; நிமிரத்தயங்கும் குனிந்தநிலை; நிமிர்ந்து முகம் பார்க்கும் போது பளீரென்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புன்சிரிப்பு; வாய் திறந்தால் வெட்கம் கலந்து வரும் இன் சொற்கள்; இந்தத் தோற்றத்தோடு யாராவது ஒருவர் புத்தகக் கடையில் பழம்புத்தகமோ, புதுப்புத்தகமோ, எதுவானாலும்–என்ன விலையானாலும் வாங்கிக் கொண்டு நின்று கொண்டிருக்கக் கண்டால் தயக்கமின்றிச் சொல்லி விடலாம் அவர்தான் என் அன்புக்குரிய தம்பி திரு. செ. திவான்.

எறும்பின் சுறுசுறுப்பு; தேனீயின் தேடல்; உடலை மறந்த உழைப்பு; இவ்வளவும் சேர்ந்த உருவம் திரு. செ. திவான், அவ்வாறு இருப்பதால்தான் என் அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய தமிழினத் தலைவர் திரு. வை. கோபால்சாமி அவர்களின் நம்பிக்கைக்குரிய முதல் தம்பியாக விளங்குகிறார் திரு. செ. திவான்.

அவருக்கு இருக்கிற அறிவுப் பசிக்கு அவர் சேமித்து வைத்திருக்கிற பத்தாயிரம் புத்தகங்கள் போதா.

இது போன்ற கருத்தாழம் மிக்க பல நூல்களை அவர் தமிழுக்கு வழங்க வேண்டும் என்பது என் தணியாத ஆசை.

அவர் புதிய முகடுகளைத் தொட என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!

30—11—93 }
பாளை }

சி. சு. மணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழுலகம் நன்றிக்கடன்பட்டுள்ளது

'ஜமாஅத்துல் உலமா' ஆசிரியர்
மீ.இ.மு. அபுல் ஹஸன் ஷாதலி ஸாஹிப்
(நூரிய்யா, பாஜில் பாகவி) அவர்களின்

அணிந்துரை

மனிதன் சுதந்திரத்தையே விரும்புகிறான். அதிலும் கொடுமைகள் நிறைந்த அரசாட்சியில் இருந்து பூரண சுதந்திரம் பெறவே ஆசைப்படுகிறான். இந்தியா சுமார் இருநூறு வருடங்களுக்குமுன்பு ஆங்கிலேயருக்கு எப்படியோ அடிமைப்பட்டுவிட்டது. இந்த அடிமைத் தனத்தை அகற்றி சுதந்திர இந்தியாவாகத் திகழ பெரும் பெரும் தியாகங்கள் செய்யவேண்டி யிருந்தது. இதற்காக பல புரட்சிகள் ஏற்பட்டன. துப்பாக்கி எந்தி போரிட வேண்டிய கால கட்டங்களும் வந்தன.

பிரிட்டிஷாரின் சோல்ஜர்களாக இருந்தவர்களே அரசை எதிர்த்து போர் முழக்கம் செய்தனர். வட இந்தியாவை விட தென்னிந்தியா மிகப் பெரிய போர் ஒன்றை நடத்தியது. அதுதான் மலபார் புரட்சி. இதில் எண்ணற்ற முஸ்லிம் மக்கள் பிரிட்டிஷாரால் குண்டுகள் வீசியும், பீரங்கிகளால் தாக்கியும் அழிக்கப்பட்டார்கள். பல்லாயிர மக்கள் சிறைக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டு, பலர் சென்னை இராஜதானியில் பல்வேறு மத்திய சிறைச்சாலைகளில் தூக்கிலிடப்பட்டார்கள்; எண்ணற்றோர் நாடுகடத்தப் பட்டு அந்தமான் தீவுகளுக்கு கொண்டு செல்லப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொடுமை செய்யப்பட்டார்கள். இப்படி போர் நடத்தியவர்களில் முஸ்லிம்கள் கணக்கற்றோர்.

வட இந்தியாவில் மார்க்க அறிஞர்களான உலமாக்கள் தலைமை தாங்கி பல்வேறு கொடுமைகளுக்காளானார்கள். பல கிராமங்கள் அடித்து தரைமட்டமாக்கப்பட்டன. இந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலைகளை விளக்கும் நூல்கள் ஆங்கிலம், உர்தூபாஷை களில் இன்றும் காணலாம்.

தமிழ்நாட்டில் பல வழிகளிலும் பிரிட்டிஷாரை எதிர்த்து அவர்களின் ஆட்சியை அகற்ற பெரும் போர்கள் நடை பெற்று மக்கள் கொல்லப்பட்டும், நாடு கடத்தப்பட்டும், சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு பெரும் கஷ்டங்களை சகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தமிழகத்தில் முஸ்லிம் கள் செய்த தியாகங்கள் கணக்கிலடங்காது. இவைகளைப் பற்றிய விபரங்களைத்தான் விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் என்ற இந்நூல் தருகிறது.

நாங்கள் திருச்சி சென்ரல் ஜெயிலில் அடைக்கப் பட்டிருந்த போது அங்கு வார்டன்களாக பல மலபார் முஸ்லிம் சகோதரர்கள் இருந்தார்கள் அவர்கள் மலபார் முஸ்லிம்கள் செய்த தியாகங்களை தெளிவாக எங்களிடம் கூறியதுடன், மலபார் முஸ்லிம்கள் பலர் திருச்சி சென்ரல் ஜெயிலுக்கு கொண்டு வரப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார்கள் இவர்களில் மார்க்க அறிஞர்கள், தங்கள்கள், தலைவர்கள் பற்றியும் தகவல்கள் தெரிவித் தார்கள். திருச்சி காஜாமலைப்பகுதியில் அன்று தூக்கில் போட்ட பலநூறு ஷகீதுகளின் கப்ருகள் (இறந்தவர்களின் கல்லறைகள்) இன்றும் இருப்பதை பார்க்கலாம்.

எனவே சுதந்திர இந்தியாவில் அதிகமான பலன் களைப் பெற உரிமை உள்ளவர்கள் முஸ்லிம்கள் தான் என்பதை உலகறிய உணர்த்த இந்நூலைப் போன்று பல நூல்கள் எழுதப்பட வேண்டும். இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு முஸ்லிம்கள் செய்த மிகப் பெரும் தியாகங் களை தமக்கு கிடைத்த தகவல்களை ஆதாரமாகக் கொண்டு அருமைச் சகோதரர் செ. திவான் அவர்கள் இந்த நூலை தயார் செய்தார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விஷப் பாம்புகளை விடக் கொடிய பகைவர்களால் அன்னியனாக முஸ்லிம்கள் சித்தரிக்கப்பட்டு வரும் இக் காலகட்டத்தில் இச்சமுதாயத்தின் தன்மானத்தை, கௌரவத்தை, தேசப்பற்றை உலகறிய வெளிச்சம் போட்டுக் காட்டும் மகத்தான சமுதாயப் பணியின் சாதனை இந்த நூல்.

இந்த நூலை இயற்றுவதில் ஜனாப் செ. திவான் அவர்கள் எடுத்த முயற்சிகளுக்காக தமிழுலகம் திவான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

30–11–93
நெல்லை.

மீ.இ.மு. அபுல்ஹஸன் ஷாதலி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரிசுகள் பலபெற்றுப் பார்போற்ற வாழ்க!

சீரிய சிந்தனையாளர் ஏ கே. ரிபாயி Ex. M.P., அவர்களின் அணிந்துரை

செங்கோட்டை ரயிலடி விசுவநாதபுரம் கிராமத்தில் மிகவும் சாதாரணமானதொரு குடும்பத்தில் பிறந்த ஜனாப் செ. திவான் அவர்கள் ஒரு சிறந்த அறிவாளி; நல்ல ஆராய்ச்சியாளர்; கல்வி கேள்விகளின் வாயிலாகவும் திறமையினாலும், சலியாத உழைப்பினாலும் தமது மதி நுட்பத்தை அவர் பெருக்கிக் கொண்டார். இருப்பினும் அவருக்குள்ள அறிவுத்தாகம் கட்டுக்கடங்காதது.

சுய முயற்சியினாலும் நண்பர்கள் ஒருசிலரின் உதவி ஒத்தாசைகளினாலும் தம் முன் பொங்கி எழுந்த அறிவுப் பசியை அதன் உச்சகட்டம் வரை வளர்க்கும் வாய்ப்புக் களை அவர் சுயமாகவே தேடிக்கொண்டதில் வியப்பில்லை தான். பட்டம் பெற்றார்; முதுகலை பட்டம் பெற்றார்; 'எம்ஃபில்' ஆராய்ச்சிபட்டத்தையும் பெற இருக்கிறார்; பிஎச்டி என்ற டாக்டர் பட்டத்தையும் பெறும் முயற்சியிலும் இறங்க இருக்கிறார்.

அவரது மாணவப் பருவத்தையும் வாலிபப் பருவத் தையும் அரிய பல நூல்களைத் தேடிப்பிடித்துச் சேகரிப்ப திலும், படித்தறிவதிலும் இன்பம் கண்டவர். அவர் கைக்குக்கிடைக்கும் காசையெல்லாம் பழைய புத்தகக் கடைக்காரரிடம் கொடுத்து புத்திக் கொள்முதல் கணக்கில் பற்று எழுதிக் கொண்டார். நெல்லையில் மட்டுமல்ல மதுரை, திருச்சி, மதறாஸ் என்று எந்த நகருக்குச் சென்றாலும் பழைய புத்தகக் கடைகளின் முன்புதான் அவரைக் காணலாம். தமது நேரத்தை மணிக்கணக்கில் அங்கு செலவிடுவார். பழைய சஞ்சிகைகளையும், குற்று யிரும் குலை உயிருமாகக் காட்சி அளிக்கும் அரிய நூல் களையும் புரட்டிப் பார்த்து சேகரிப்பது ஒன்றே அவரது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொழுது போக்கு. அபூர்வமான நூல்கள் பலவும் கிடைத் தற்கரிய வார, மாத இதழ்களும், துண்டுப் பிரசுரங்கள் பலவும் பல்லாயிரக் கணக்கில் அவரிடம் உள்ளன; அவரது இல்லத்தின் பெரும்பகுதியை இப் புத்தகக் குவியல்தான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது என்றால் அதில் வியப் பொன்றும் இல்லைதான்!

தமிழ்நாட்டின் பெரும் நகரங்களிலுள்ள புத்தக வியா பாரிகள் அனைவருக்கும் அவர் நன்கு அறிமுகமானவர் என்பதால் தமது சட்டைப்பையிலுள்ள பணத்திற்கு ஏற்ப புத்தகக் கொள்முதலை அவர் நிறுத்திக்கொள்வதில்லை. கையில் காசில்லாவிட்டாலும் தேவையான அனைத்து நூல்களையும் வாரிக் கொள்வார். அது மட்டுமல்ல ஊர் திரும்புவதற்கு ரயில் கட்டணத்தையும் வழிச் செலவுக்குப் பணத்தையும் அந்த வியாபாரிகளிடம் கை மாத்தாகவே வாங்கிக் கொண்டு அவர் புறப்படுவதும் உண்டு; ஊர் திரும்பியதும் அவருக்குச் சேர வேண்டிய தொகைகள் மணிஆர்டர் மூலம் தாமதமில்லாமல் போய்ச் சேர்ந்துவிடும். அந்த அளவுக்கு புத்தகங்களின் மீது அவருக்கு அளவு கடந்த காதல்!

பிறந்த மண்ணில் இயற்கையாக ஊற்றெடுத்துக் கிளம்பும் தமிழ் பற்றுத்தான் நண்பர் திவானை ஆரம்ப கட்டத்தில் ஆட்கொண்டிருந்தது; தமிழ் இலக்கியம், தமிழ் பண்பாடு, தமிழ் கலாச்சாரம் தமிழர் அரசியல், தமிழர் வரலாறு போன்ற சிந்தனைகளிலேயே அவர் முழுக்க முழுக்க ஈடுபட்டிருந்தார். ஆனால் நாளாக நாளாக அவரது பார்வையும் சிந்தனையும் அவர் சார்ந்திருந்த சமுதாயத்தின் பக்கமும் திரும்பிற்று.

இக்கால கட்டத்தில் தான் மதறாஸ் சீதக்காதி அறக் கட்டளையின் சார்பு அங்கமான இஸ்லாமிய ஆய்வு பண் பாட்டு நிலையம் ஆண்டு தோறும் நடத்தும் இலக்கியக் கட்டுரைப் போட்டி குறித்த அறிவிப்புக்கள் பத்திரிகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களில் பிரசுரமாகியிருந்தன. ''ஷேக் சதக்கத்துல்லாஹ் அப்பா இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பரிசு 1993'' என்ற பெயரில் 'இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழக முஸ்லிம்களின் பங்கு' (The part played by the Muslims of Tamilnadu in India's Struggle For Freedom'') என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டிருந்தன. பரிசுப்போட்டி தேதி நெருங்கி விட்டகாலகட்டத்தில் தான் அவரது நண்பர்கள் சிலர், இப்போட்டியில் கலந்து கொள்ளுமாறு அவரைத் தூண்டினர். ஏற்கனவே ஆராய்ச்சிக் கடலில் மூழ்கி முத்துக்களை எடுத்துப் பழக்கப் பட்ட நண்பர் திவான் தமது படைப்பை தயாரித்து அனுப்பி வைத்தார். அவரது படைப்புக்கு உரிய பரிசு கிடைத்தது என்ற போதிலும், இந்த தலைப்பில் அவரது முயற்சிகள் இன்னும் ஆழமாகப் போயிருக்க வேண்டும்; போயிருக்க முடியும்; கால அவகாசமின்மை குறுக்கிட்டு விட்டது.

இப்பொழுது அவரது ஆய்வுக் கட்டுரை நூல் உருவம் பெற்று வெளிவந்துள்ளது. இந்த முதல் பதிப்பிலேயே புதிதாக சில தகவல்களையும் அவர் சேர்த்திருக்கிறார் என்பது மகிழ்ச்சிக் குரியதே, இனி வருங்காலங்களில் இந்நூலில் புதிய பதிப்புக்கள் வெளிவரும் சமயம், மென் மேலும் அதிகமான செய்திகளையும் உண்மைகளையும் அவர் சேர்த்துக் கொள்வார் என நாம் நம்புவோமாக.

நண்பர் திவான் முழுக்க முழுக்க ஆராய்ச்சித் துறை யில் ஊறிப் போனவர்; தமிழ் மாநில அளவிலும், பல இலக்கியப் போட்டிகள் இன்று நடைபெற்று வருகின்றன. அகிலபாரத அளவிலும் இலக்கியப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சாஹித்திய அகாடமி, ஞான பீடம் போன்ற உச்சகட்ட பரிசுகளும் ஆண்டு தோறும் அளிக்கப் படுகின்றன. இந்த விருதுகளையெல்லாம் தட்டிப்பறித்துச் செல்லும் தகுதியும் ஆற்றலும் நண்பர் திவானுக்கு உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருங்காலங்களில் அவற்றையெல்லாம் அவர் பெற்றுப் பார் போற்ற வாழவேண்டும் என நாம் வாழ்த்துவோமாக! அத்தகைய புகழுக் கெல்லாம் அவர் உரியவராவதுடன் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும், மொழிக்கும் அவர் பெருமை சேர்க்க வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

2—11—93
நன்னகரம்

ஏ. கே. ரிபாயி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுத்துலகிற்கோர் இளங்கதிர் வாழ்க !

தமிழ் வென்றி என்ற
சி. இராசா முகம்மது

மொழியும் நாடும்
    மூத்த பண் பாடும்
இழிவினில் வீழப்
    பழியுற வாழ்வதோ?
அடிமையாய் நெளியவோ
    ஆருயிர் கொண்டோம்?
உடைக்குமே விலங்கை
    விலங்கினம் கூட!
சரித்திரப் புகழுடன்
    மரித்தலும் கசக்குமோ?
உரிமை யிழந்தபின்
    உயிரும் இனிக்குமோ?
மானம் இழத்தலோ
    மானிடர் இயல்பு?
ஆணவக் காரரின்
    அடிவீ ழாமல்
காண்போம் விடுதலை
    களம்புக வாரீர்!
மாண்புறும் வாழ்வே
    மானிடர் வாழ்வு!
பதரென இருத்தல்
    பழிதரும் இழிவு!
சுதந்திரம் மூச்சு!
    சோறல்ல வாழ்வு!
என்னும் குரலே
    எங்கும் எழுந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொன்னாள் அதனில்
புன்மத வெறியைக்
கொண்டு திணித்த
கொலைச் செயலாலே
கண்டோம் பிரிவினை!
காந்தியின் மரணம்!
விடுதலைப் போரில்
வேற்றுமை யின்றிப்
படுகளம் கண்ட
பலருள் முஸ்லிம்
மக்களின் பங்கை
மறுக்கிறார் சிலபேர்!
தக்கவே சான்றுகள்
தகையுறக் காட்டினார்
மிக்க நுண் மாண் நுழை
புலத்தால் நம் திவான்!
அடுக்கடுக் கான
ஆதா ரங்களால்
கெடுநர் மொழிந்த
கேடுகள் மாய்க்கிறார்!
இந்து மட்டுமே
இந்தியர் என்பதோ?
வெந்து மடிந்திட
வித்தூன்றுவதோ?
மயானம் ஆவதோ
மண்ணிடை பாரதம்?
தியாக நெருப்பினில்
சிரித்துக் குளித்தவர்
சிறுமதக் கூட்டில்
சிறைப்படுவாரோ?
பிறந்தஇம் மண்ணிடைப்
பேதமோ நமக்கு?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மண்ணின் மைந்தரை
மாற்றா ரென்பரோ?
கண்ணில் மணியும்
அன்னியம் ஆமோ?
இன்னுயிர் முன்னோர்
இதற்கோ ஈந்தனர்?
புண்ணியர் தியாகம்
புதையுற லாமோ?
கண்களை எரித்தபின்
காட்சியும் உண்டோ?
எண்ணிப் பார்த்திட
ஏட்டினைத் தந்துளார்!
மதவெறி யென்னும்
மாயையை மாய்த்துச்
சுதந்திரம் பேணச்
சூளுரைக் கின்றார்!
திவான் எனும் பெயரினில்
திகழ்-வான் அடங்கும்!
இவருடை எழுத்தினில்
லட்சியம் முழங்கும்!
எழுத்துல கிற்கோர்
இளங்கதிர்
கிழித்தது கிழக்கை!
கீர்த்தி விரித்தே!

" Presented free of cost with compliments from the Central Institute of Indian Languages (Government of India) Mysore - 570 006. "

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்ண அலைகள்

இந்திய விடுதலைப் போரில் இன்னுயிரைத் துச்சமென ஈந்தோர், இல்லம் இழந்தோர், இல்லாளைப் பிரிந்தோர், தடியடி பட்டோர், தண்டனைகள் பெற்றோர், சிறைச்சாலையில் சித்திரவதைக்குள்ளானோர் என நீண்டு கொண்டே செல்லும் தியாகசீலர்களின் வரலாற்றில் அத்தியாயங்களாக, வாக்கியங்களாக, ஏன் வார்த்தையாகக் கூட இடம் பெறாமல் வஞ்சிக்கப்பட்டு தங்கள் வரலாற்றையே தியாகம் செய்தவர்கள் தமிழக முஸ்லிம்கள். அவர்கள் இந்திய விடுதலைப் போரில் ஆற்றிய தியாகத்தை இயன்றவரை தொகுத்திருக்கிறேன். இன்னும் தொடர்ந்து அந்தப் பணியினைச் செய்து வருகிறேன்.

இந்த வரலாற்று ஆய்வுத் தொகுப்பில் இட்டுக்கட்டியும், இல்லாதவற்றையும் எவரைப் பற்றியேனும் எதனைப் பற்றியேனும், எங்கேனும், எள்ளளவேனும் எழுதியிருப்பதாக எவரேனும் கருதினால் என்னைப் பொறுத்துக் கொள்ளத் தேவையில்லை! கனலாக மாறலாம்; அனலாகச் சுடலாம். அக்கினிப் பிரவேசத்துக்கு ஆயத்தமாகப்...... புதர்க் குப்பைகளை அல்ல...... பொன்னைத்தான் தொகுத்துத் தந்துள்ளேன்.

இந்நூலுக்கு மட்டுமின்றி, என் வாழ்விற்கும் அடிப்படையாக அமைந்த கண்ணியத்திற்குரிய அண்ணாச்சி வை. கோபால்சாமி M.A.B.L., M.P. அவர்களுக்கும், அவர்களின் நிழலாக இலட்சியப் பயணத்தில் வழிநடக்கும் அண்ணன் T. A. K. இலக்குமணன் அவர்களுக்கும், அறிவு ஆசான் அண்ணன் சி. சு. மணி அவர்களுக்கும், உற்றுழி உதவும் நற்றகையாளர் குட்டி (எ) C. A. R. சண்முக சிதம்பரம் அவர்களுக்கும், சீரிய சிந்தனையாளர் A. K. ரிபாயி Ex. M. P. அவர்களுக்கும் ஜமாஅத்துல் உலமா ஆசிரியர் மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலிசாஹிப் அவர்களுக்கும், குர்ஆனின் குரல் துணை ஆசிரியர் என் பள்ளித் தோழர் மௌலவி எம். ஜே. அன்வரி அவர்களுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும், உடன்பிறவாச் சகோதரர் கவிஞர் சி. இராசா முகம்மது அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமென்று உற்சாகமூட்டிய என் பாசமிகு மைத்துனர் டாக்டர் S. M. A. Q. ஜெய்லானி B. V. Sc. அவர்களுக்கும், என் அத்தனை முயற்சிகளுக்கும் ஜீவஊற்றாகத் திகழும் அன்புத் துணைவி டாக்டர் திவானி ஜகானரா B.S M.S.க்கும், நன்றியறிதலை கூறுவது என் கடமையாகும்.

நல்மனதுடன் நூல்வெளிவர துணைபுரிந்த ரோஹிணி P. நாராயணன் அவர்களுக்கும் என்றென்றும் என் பணிகளில் துணை இருக்கும் அன்பிற்கு இலக்கணமாகத் திகழும், சகோதரர் L. K. S. S. M. செய்யது அகமது ஆகியோர்க்கு நன்றி. தம்பிமார்கள் P. கல்லத்தியான், P.S. முத்து, செ. இப்ராகிம், செ. அசன், M. Com, B.Ed., ரயில்வே, ஐ. சாமுவேல், அண்ணன் பாளை. மு. அருணாசலம் ஆகியோரின் பங்களிப்பை நான் மறந்திட இயலாது. மாப்பிள்ளைகள் S. சாகுல்ஹமீது M. A., M. Phil., T. A. H. ஹபீபுல்லா ஆசிரியர் M செய்யது இப்ராஹிம் பாதுஷா ஆகியோர் என் வெற்றிக்குத் தந்துள்ள ஊக்கம் மறக்கக் கூடியதல்ல. நூலை நன் முறையில் அச்சிட்டுத் தந்த ஹிலால் பிரஸ் அதிபர் அண்ணன் சாதிக் அவர்களுக்கும் முகப்போவியம் வரைந்த A செல்வம் அவர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கிய நாவலாசிரியர் தோப்பில் முஹம்மது மீரான் அவர்களுக்கும் என் நன்றி.

நூலைப் படித்து நிறை குறைகளைச் சுட்டிக் காட்டுவதுடன், வரலாற்றில் இன்னும் இடம் பெற வேண்டிய பெருமக்களைப் பற்றி விவரங்களை அளித்தால் அடுத்து வரும் பதிப்புகளில் அவற்றை நன்றியுடன் பயன்படுத்திக் கொள்வேன்.

பாளையங்கேட்டை.
1—12–1993

செ. திவான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிழை திருத்தம்

பக்	வரி	பிழை	திருத்தம்
100	15	10tical	logical
,,	24	மகாதேவ் தேவியும்	மகாதேவ் தேசாயும்
103	21	ஹஸ்ராத் மக்காவில்	ஹஸ்ரத் மக்கானில்
106	31	1992	1922
109	2	திருருரிலிருந்து	திருரிலிருந்து
111	9	எர்ஸ்சின்	எர்ஸ்கின்
123	4	சென்றார்கள்	சொன்னார்கள்
123	14, 16	மண்டபம்	மண்டயம்
134	6	எக்னேஞ்வர சர்மா	எக்னேஸ்வர சர்மா
136	3	மாநாட்டில்	மாநாட்டின் போது
139	27	ஓ. வி. ராமசாமி ரெட்டியார்	ஓ. பி. ராமசாமி ரெட்டியார்
143	26	பார்மோகாதீவில்	பார்மோசா தீவில்
150	9	188ல்	1880ல்
157	25	வள்ளண்மை	வள்ளன்மை
,,	26	வாரிய	வாரி
179	4	உயர் பெற்று	உயிர் பெற்று
181	2	அண்ணாரை	அன்னாரை
236	8	அவயம்	அபயம்
277	17	பெருதல்	பெறுதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழகத்தில் முஸ்லிம்கள்

அகிலத்திற்கோர் அருட்கொடையாகத் தோன்றிய அண்ணல் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் போதித்த சத்திய சன்மார்க்க இஸ்லாம் அரபு நாட்டில் மட்டுமின்றிக் கடல் வழியாகவும், தரை மார்க்கமாகவும், அகில உலகெங்கிலும், குறிப்பாக தென்கிழக்கு, மத்திய கிழக்கு, ஆசிய நாடுகளில் வேகமாக வளர்ந்தோங்கி வேரூன்றத் துவங்கியது.

ஆசியாவின் நடுமேட்டு நிலத்திற்குத் தெற்கிலுள்ள பகுதி முழுவதும் சம்புத்தீவு அல்லது நாவலந்தீவு என்று அழைக்கப்பட்டது. நாவலந்தீவில் விந்தியமலைக்குத் தெற்கிலுள்ள பகுதி தட்சிணாபதம் அல்லது தென்னாடு என்றும், அதன் தென் கோடியில் தமிழர் வாழும் இடம் தமிழகம் (தமிரிகெ) என்றும் அழைக்கப் பெற்றன.

கீழ் கடலுக்கும் மேல் கடலுக்கும் இடையே தமிழ் என்ற ஒரே ஒரு மொழி மட்டும் பேசப்பட்ட இந்த நாட்டின் வடக்கே வேங்கட மலையும், அதற்கு அருகே வடக்கில் வாழ்ந்த மக்கள் வடுகர் என்றும், தெற்கே குமரி முனையும், கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே அரபிக் கடலும் இருந்தன.*

டாக்டர் பாண்டர்கரின் 'தக்கணத்தின் முற்கால வரலாறு' என்ற நூலிலும் சங்கத் தமிழ் இலக்கியங்களிலும், எண்ணற்ற அறிஞர்கள் எழுதிய குறிப்புகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

வெளிநாட்டு வாணிகம்

மிகத் தொடக்க காலத்திலிருந்தே, தமிழகத்தின் பொருள் வளங்கள் தொலைதூர நாடுகளின் வணிகர்களின்

---

* மக்கிரிண்டில் ''செங்கடற் பயணம்'' நூல் பக்கம் 124

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவனத்தைக் கவர்ந்து வந்தன. கிட்டத்தட்ட கி. மு. ஆயிரத்தில் சாலமன் ஆட்சியின் போது மூன்று ஆண்டு களுக்கு ஒரு முறை தார்ஷிஷின் கப்பல்கள் தங்கம், வெள்ளி, தந்தம், குரங்குகள், மயில்கள் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு தமிழகத்திலிருந்து சென்றன என்று வி. கனகசபை ஆங்கிலத்தில் எழுதிப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை தமிழில் மொழிபெயர்த்த ''ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்'' என்ற நூலில் பக்கம் 59ல் குறிப்பிடுகிறார்.

படிப்படியாக அரேபியர்களும், கிரேக்கர்களும், தமிழ கத்தில் வாணிபத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். கி.பி. ஆறாவது நூற்றாண்டின் இறுதி வரை தென்னிந்தி யாவின் மேற்குக் கரைக்கும், கிழக்குக்கரைக்கும் வியாபார நிமித்தம் பயணம் வந்த அரேபியர்களில் சிலை வணக்கக் காரர்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், ஷாபியீன்கள் போன்றோர் இருந்தனர். ஆனால் கி. பி. ஏழாவது நூற் றாண்டின் மத்திக்குள்ளாக அரேபியர்கள் அனைவருமே இஸ்லாத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர். கோவளத்தில் தமிமுல்அன்சாரி (ரலி) அவர்களது அடக்கத் தலமும், தென்னாற்காடு மாவட்டம், முஹம்மதுபந்தரில் (பரங்கிப் பேட்டையில்) ஹஸரத் அபிவக்காஸ் (ரலி) அவர் களது அடக்கத்தலமும் இருக்கிறது. இவர்கள் நபிகள் நாயகத்தின் தோழர்கள் (சஹாபாக்கள்) என்ற அந்தஸ் தைப்பெற்றவர்கள். சஹாபாக்கள் பலரும், சமயப் பிரச் சாரத்திற்கென்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு உலகின் பல திக்குக்கும் சென்று, திரும்பி வரும் நினைப் பில்லாத பயணத்தை மேற்கொண்டனர். ஏற்கனவே, இந்தியாவோடு இருந்து வந்த வணிகத் தொடர்போடு புதிதாக மார்க்கத் தொடர்பும் சேர்ந்து கொண்டது.

சரக்குகளோடும், குதிரைகளோடும் வாணிபத்திற்காக வந்தவர்களும், அவர்களுக்கு ஏவல் புரிய வந்தவர்களும், இங்கேயே தங்கினர். திருமண உறவுகளைக் கொண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டனர். இஸ்லாமிய நெறிமுறையை ஏற்றுக் கொண்ட அவர்களது வாழ்வு தமிழகத்தில் தொடர்ந்தது.

வரலாற்று ஆசிரியர் சைனுத்தீன் அவர்களின் ''துஹ்ஃபதுல் முஜாஹிதீன்'' என்ற நூலில் முன்னுரையில், ரௌலண்ட்சன் என்பவர் ஏழாவது நூற்றாண்டின் இறுதியிலேயே அரபு நாட்டு முஸ்லிம்கள் இந்தியாவின் மேலக்கரையில் முதன்முதலாகக் குடியேறினார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல் பள்ளிவாசல்

கி. பி. 642-இல் மலபார் கரையிலுள்ள முசிறி துறை முகப்பட்டினத்தில் இன்றைய கொடுங்கானூரில் அன்றைய தமிழகத்தில் முதல் பள்ளிவாசல் கட்டப்பட்டது.*

திருச்சி நகரின் நடுவில் மெயின்கார்டு கேட்டின் அருகே கோட்டை ரயில்நிலையம் சமீபத்தில் பழுதுபட்டுக் காணப்படும் பள்ளிவாயில் கி. பி. 738-இல் கட்டப்பட்டது.**

''அல்லா என வந்து சந்தியும்
நந்தாவகை தொழும் சீர் நல்லார்''

என்று களவியற் காரிகை அகப்பொருள் இலக்கண நூலில் வருகிறது.

கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் இலக்கியங்களில் இஸ்லாம் பேசப்படுவதால் ஏழாவது நூற்றாண்டின் இறுதியிலேயே தமிழகத்தில் இஸ்லாமிய சமுதாயத்தினரின் வாழ்வு துவங்கப்பட்டுவிட்டதை உறுதி செய்கிறது.

* ஏ. கே, ரிபாயி ''தமிழகத்தில் இஸ்லாமியர் வரலாறு'' பக்கம் 40-41
** பேராசிரியர் கேப்டன் என். ஏ. அமீர் அலி ''வள்ளல் சீதக்காதியின் வாழ்வும் காலமும்'' பக்கம் 2।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இஸ்லாத்தை தமிழகம் ஏற்றுக்கொள்ளத் துவங்கிய போது காவிரிக்குத் தெற்கே பாண்டியர்களும், வடக்கே பல்லவர்களும், ஆட்சி புரிந்து வந்தனர். தமிழகத்தில் அப்போது சைவ, வைணவ, புத்த மதக் கொள்கைகள் பின்பற்றப்பட்டு வந்தன.

கண்ணனூர், தலைச்சேரி, கொச்சி, கொல்லம், குமரி, உவரி, புன்னக்காயல், தூத்துக்குடி, வைப்பார், கீழக்கரை ராமேஸ்வரம், தொண்டி, வேளாங்கண்ணி, நாகப்பட்டினம், காரைக்கால், தரங்கம்பாடி, சிதம்பரம், கடலூர், பாண்டிச்சேரி, என்று கடற்கரையோரப் பகுதி களில் கிறிஸ்தவமும் வளரத் துவங்கியிருந்த வேளை.

மார்க்க மேதைகள்

சேர நாட்டில் பாஸ்கர ரவிவர்மன் என்ற சேரமான் பெருமாள் நாயனார் (கி. பி. 780-834) இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்டிருந்த வேளை அதற்குப்பின் தமிழகத்தில் 700 கலந்தர்களை உருவாக்கி மார்க்கச் சுற்றுப்பயணஞ் செய்திட அவர்களை ஊக்குவித்தும், கடைசியில் திருச்சியில் அடக்கமாயிருக்கும் நத்தம் ஷாஹ்ற ஒலி (கி.பி. 969-1039) அவர்களது தூய மார்க்கப் பணி தொய்வின்றித் தொடர்ந்தது.

தென்மாவட்டங்களில் பாபாபக்ருதீன் என்ற காட்டு பாவா சாகிப் அவர்களும், மதுரையில் ஹஸரத் அலியார் ஷா சாகிப் அவர்களும், இஸ்லாமியப் பணியினை இன் முகத்துடன் செய்து கொண்டிருந்தனர்.

இறை நேசச் செல்வர் சையிது இப்ராஹிம் வஹீது வலி ஹிஜ்ரி 530-ல் மொரோக்காவில் தோன்றி பின் இந்தியா வில் இஸ்லாம் மார்க்கத்தைப் பரப்பிட வந்தவர் ஆவார் பாண்டிய மன்னர்களுடன் உறவு கொண்டும், போர் செய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தும் தூய தொண்டாற்றி இராமநாதபுர மாவட்டம் ஏர்வாடியில் அடங்கப் பெற்றிருக்கிறார்கள். இவர்களுடன் வந்த படைத் தளபதி ஹுசைனரபியின் வழிவந்தவர்களே தென்காசி பங்காரு முத்துமீரான் குடும்பத்தினர்*

பதினாறாம் நூற்றாண்டில் நாகூர் சாகுல் ஹமீது ஒலி அவர்கள் பெருமைக்குரிய பணியினை ஆற்றினார்கள்** கல்வத்து நாயகம் அவர்களும், செய்யது முகம்மது ஆலீம் புலவர் அவர்களும் சிறப்பான பணியினை ஆற்றினார்கள். செய்கு அப்துல்காதிர் மரைக்காயர் என்று குறிப்பிடும் வள்ளல் சீதக்காதி அவர்களின் நண்பரும், கீழக்கரையில் வாழ்ந்தவருமான சேக்சதக்கத்துல்லா அப்பா அவர்களிடம் கி. பி. 1622-இல் 4000 பேர்கள் கலிமாச் சொல்லி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர்***

அல்லாஹ் என்றால் எல்லாம் மறந்திடும் நல்லோர்கள்

''மார்க்கப்'' என்பது கப்பலைக் குறிக்கும் அரபுச் சொல். கப்பல் அல்லது மரக்கலத்தில் வந்தவர்கள் மரக்கலராயர் என்றாகி, பின் மரக்காயர் ஆனார்கள்.

இஸ்லாமியப் பணிகளில் ஈடுபட்டோர் ''லப்பைக்'' என்ற அரபிச் சொல்லைப் பயன்படுத்திட அதுவே, ''லப்பை'' என்றானது.

---

* முஸல்மான் பத்திரிகை ஆசிரியர் மீ.மு. முஹம்மது அப்துல்காதிர் சாஹிபும், ஜமா அத்துல் உலமா பத்திரிகை ஆசிரியர் மௌலவி அபுல் ஹசன் ஷாதலி ஹஊரத்தும் இந்த வமிச வழியினரென்று எம் ஆர். எம். அப்துற்றஹீம் தனது இஸ்லாமிய கலைக் களஞ்சியம் நூலில் தெரிவித்துள்ளார்.

** டி. டபுள்யூ. ஆர்னால்டின் The Preaching of Islam என்ற நூலில் இது பற்றிய விபரங்கள் காணக்கிடப்பதை தமிழ் வட்டம் முதல் ஆண்டுவிழா 1967 மலரில் ஜனாப் ஆர். பி. எம். கனி அவர்கள் எழுதிய கட்டுரை பக்கம் 88ல் தெரிவித்துள்ளார்கள்.

*** ஜனாப் அப்துற் றஹிம், இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் தொகுதி-3 பக்கம் 75.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குதிரை வணிகத்திற்காக வந்தவர்கள், குதிரையை அடக்கியாளும் ஆற்றலுடையவர்கள் என்ற பொருளில் இராவுத்தர் ஆனார்கள்*

தமிழகத்தின் வரலாறு சங்ககாலம், பல்லவர்காலம், இடையில் களப்பிரர்காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், என்று தொடர்கிறது. ''அப்துல் ரகுமான் என்ற அரபியர் பாண்டிய மன்னனின் அரண்மனையில் பெரிய தோர் அதிகாரம் வகித்திருந்ததாகவும், காயல் துறை முகத்தில் சுங்கம் வசூலித்ததாகவும், ஞா. துரைச்சாமிப் பிள்ளை, எம். ஏ. எல். டி., அவர்கள் "பாண்டியர்காலம்" என்ற சொற்பொழிவில் குறிப்பிட்டுள்ளார்கள்**

கி. பி. 1276ல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் அரபு நாட்டின் கைஸ் மன்னரான மலிகுல் இஸ்லாம் ஜமாலுத்தீன் அவர்களோடு நெருங்கிய நட்புறவு கொண் டிருந்தார். ஆண்டு ஒன்றுக்கு 10,000 அரபிக் குதிரைகள் அனுப்பப்பட்டதாக வரலாற்று ஆசிரியர் வஸ்ஸாப் கூறு கிறார்.

கி. பி. 1280-இல் குலசேகரப் பாண்டியன் ஜமாலுத் தீன் என்ற தூதுவரைச் சீனநாட்டிற்கு அனுப்பினார்***

1297-இல் ஜமாலுத்தீனின் திருமகனார் பகுருத்தீன் அகம்மதை சீனாவுக்கு பாண்டிய மன்னர் தூதராக அனுப்பினார்.****

* உ. வே. சாமிநாத அய்யர் நல்லுரைக்கோவை இரண்டாம் பாகம் பக்கம்-126.

** தமிழக வரலாறு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு பக்கம்-220.

*** மா இராசமாணிக்கனார் தமிழர் நாகரீகமும், பண்பாடும் பக்கம்-76.

**** S. Krishnasamy Iyengar, South India and Her Mohammadas Invaders P 72.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜமாலுத்தீனின் சகோதரர் தசியுத்தீன் அப்துர்ரகுமான் கி. பி. 1303 வரை அமைச்சராகவும் வரி வசூலிக்கும் அதிகாரியாகவும், பணியாற்றினார். தொடர்ந்து சிராஜுத்தீனும் அவரது பேரனார் நிஜாமுத்தீனும், பதவியில் இருந்ததை கிருஷ்ணசாமி அய்யங்கார் தெரிவிக்கிறார். பாண்டிய மன்னர்கள் வேட்டைக்குச் செல்லும் போது பிடிபட்ட பறவைகளையும், மிருகங்களையும், அறுத்திட முஸ்லிம் உதவியாளர்கள் இருந்தனர்.*

திருவைகுண்டம் அணைக்கட்டில் 25—12—1872ல் வேலை செய்து கொண்டிருந்த கூலியாட்கள் பெரிய செப்புப்பானையில் அன்றைய ஒருலட்சரூபாய் மதிப்புள்ள தங்க நாணயங்களை புதையலாக கண்டெடுத்ததை தாசில் தார் கண்டுபிடித்து அவைகளைக் கைப்பற்றினார்*

அதில் ஒரே ஒரு ஐரோப்பிய நாணயம் நீங்கலாக மற்றவையெல்லாம் அரேபிய நாணயங்கள். சுல்தான் சலாவுதீன் பெயரை உடையதும் 1236ல் அச்சடிக்கப்பட்ட காஸ்டல் ஜோவன்னவின் (Joanna of Castile) முத்திரை உடையதும், ஹிஜ்ரி 71ம் வருடத்தில் அச்சிடப்பட்ட நாணயமும் அதில் இருந்தது**

தமிழகத்தின் தென்பகுதியில் இஸ்லாமியர் வணிகத் திலும், அரசியலிலும் சமுதாய அந்தஸ்திலும் முக்கியப் பங்கு வகித்திருந்தனர் என்பதனை மேற்கூறிய சரித்திரச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கில்ஜி வம்ச ஆட்சிக்காலத்தில் அலாவுதீன் முதன் முதலாக தென்ன

* கே ஏ நீலகண்டசாஸ்திரியின் பாண்டியப் பேரரசு பக்கம் 198.

** எஸ்.குருகுஹதாஸப் பிள்ளை, 'திருநெல்வேலி. சீமைச்சரித்திரம்' பக்345,346

*** Bishop R. Caldwell. 'A History of Tinnevelly' Appendix V P. 288

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கத்தில் படையெடுத்தார். முதல் மாறவர்மன் காலத்தில் மாலிக்காபூர் படையெடுத்தார். சுந்தரபாண்டியன் காலத்தில் குஸ்ருகான் படையெடுத்தார். கி.பி. 1323-ல் பராக்கிரமதேவபாண்டியன் காலத்திலும், உலூகான் படையெடுத்து பாண்டிய நாட்டைக் கைப்பற்றினார்.

நாயக்கர் வம்ச இரண்டாம் ஹரிஹரர் (1376 1404) காலத்தில் மதுரைச் சுல்தான்கள் ஆட்சி முடிவுக்கு வந்தது என்று அ.கி. பரந்தாமனார் ''மதுரை நாயக்கர் வரலாறு'' என்ற நூலில் பக்கம் 27 முதல் 53 வரை இதனைத் தெளிவு படுத்தியிருக்கிறார்.

இஸ்லாமியரின் ஆட்சி அதிகாரங்கள் தமிழகத்தில் இல்லாத காலங்களிலும் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' ''யாதும் ஊரே யாவருங்கேளிர்'' என்ற தமிழர் தத்துவங்கள், இஸ்லாமியக் கலாச்சாரத்திற்கும் பொதுவாக இருந்தமையால் தமிழகம் அன்போடு இஸ்லாத்தை அணைத்துக் கொண்டது. அல்லாஹ் என்றால் எல்லாம் மறந்திடும் நல்லோர்களின் மூலம் இஸ்லாம் மார்க்கம் இன்பத் தமிழகத்தில் வேகமாக வளரத் துவங்கியது. கட்டுரைத் தலைப்பிற்குரிய தமிழக முஸ்லிம்களின் சுருக்க வரலாறு இது, விரிவஞ்சி விளக்கவில்லை.

———

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெள்ளையர்கள் இந்தியாவை வளைத்த வரலாறு

''இந்திய வர்த்தகம் உலக வர்த்தகம் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். இந்திய வர்த்தகத்தை ஏக போக உரிமையாக ஆண்டனுபவிப்பரே ஐரோப்பாவின் சர்வாதிகாரியாக விளங்கமுடியும்'' என்ற ரஷ்ய சக்கர வர்த்தி மகாபீட்டர் தனது உயிலில் குறிப்பிட்டதை முன் கூட்டியே உணர்ந்து கொண்டவர்கள் ஆங்கிலேயர்கள் என்றால் அது மிகையாகாது.

தாமஸ் ஸ்டீபன்ஸ் என்ற ஆங்கிலேய கிறிஸ்தவப் பாதிரி 1579-இல் தமிழகம் வந்தார். வளங்கொழிக்கும் இந்தப் பூமியைப் பற்றி தம் தந்தையாருக்குப் பல கடிதங் கள் எழுதினார். அக்கடிதங்களே இந்நாட்டிற்கும், இங்கிலாந்திற்குமிடையே துவங்கிய வாணிப உறவிற்கு வழிகோலின என்பது வரலாறு அறிந்தவர்களின் கருத்து*

கொள்ளைக்குக் கிளம்பிய வெள்ளை வியாபாரிகள்

இந்தியாவின் செல்வச் செழிப்பை அறிந்து கொண்ட வெள்ளைக்கார வியாபாரிகள் எண்பது பேர் 1599 செப்டம் பர் 24-ல் இலண்டனின் ''பவுண்டர்ஸ் ஹால்'' என்ற இடத்தில் கூடி இந்தியாவில் தங்களது வர்த்தக நோக்கத் திற்கு நல்ல வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்து பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் உரிமைச் சாசனம் பெற அனு மதி வேண்டினர்.

கி. பி. 1600 டிசம்பர் 31-ஆம் நாள் கிழக்கிந்தியக் கம்பெனி ஒன்றை ஆரம்பித்து நடத்திட இங்கிலாந்தின்

---

* திரு சிவ. இராமச்சந்திரன், பி. ஏ நெல்லை அருணகிரி இசைக் கழக நிகழ்ச்சியில் தமிழக வரலாறு ''ஆங்கிலேயர் காலம்'' என்ற தலைப்பில் 24—1—54-ல் ஆற்றிய உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எலிசபெத் மகாராணி உத்திரவிட்டு உரிமைச்சாசனமும் தந்தார். இந்தியாவிற்கு முதன்முதலில் வந்த கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த போர்த்துக்கீசியர்களும், பிராடஸ்டன்ட் பிரிவைச் சேர்ந்த டச்சுக்காரர்களும் ஒருவரை ஒருவர் வணிக, மத, விஷயங்களில் இந்தியாவில் போட்டி போட்டுக் கொண்டிருந்த காலம் அது.

முகலாய மன்னரின் அனுமதி

முகலாய மன்னர் ஜஹாங்கீர் (1569-1617) காலத்தில் அனைத்து சூழ்ச்சிகளையும், வென்று வெள்ளையர்கள் 1612-ல் ஹுக்லி நதிக் கரையில் சூரத்தில் வர்த்தக நிறுவனத்தை அமைத்திட அனுமதியும் பெற்றுக் கொண்டனர்.

தென்னிந்தியாவின் புகழ் பெற்ற வைரங்கள் இரத்தினங்கள், ஆகியவற்றுக்கு முக்கியச் சந்தையாக திகழ்ந்ததும், வண்ணத்தாலான விலை உயர்ந்த சீட்டுத்துணிகள் (Chintz)பலவண்ண அச்சடித்த துணிகள் (Printed Cloth) போன்றவை இன்றும் தயாரிக்கப்பட்டு வரும் மசூலிப் பட்டினத்தில் தங்களது பண்டகசாலையை பல்வேறு முயற்சிகளுக்குப் பின் வெள்ளையர்கள் அமைத்தனர்.

ஆனால் அந்த நகரின் கவர்னராக இருந்த இஸ்லாமியப் பெரியவரது நடவடிக்கைகளினால் தாக்குப்பிடிக்க முடியாமல் ஆங்கிலேயர்களின் மசூலிப்பட்டினப் பண்டகசாலை மூடப்பட்டு தெற்குநோக்கி அவர்கள் நகர ஆரம்பித்தார்கள்.

பழவேற்காட்டில் டச்சுக்காரர்களுடன், கூட்டாக வாணிபம் செய்ய 1621-ல் முயன்று தோற்ற ஆங்கிலேயர் நிஜாம்பட்டினத்திலும், பெத்தபள்ளியிலும், நிலைக்க முற்பட்டு, அங்குள்ள வெட்ப தட்ப சூழ்நிலையால் தாக்குப்பிடிக்க முடியாமல் அங்கிருந்தும், நகர ஆரம்பித்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பழவேற்காட்டிற்கு வடக்கே 30 மைல் தூரத்தில் உள்ள ஆறுமுகப்பட்டினத்தை (Armagom) 1626-இல் அடைந்தனர். அங்கும் முயற்சி திருப்திகரமாக இல்லை, திரும்பவும் மசூலிப்பட்டினத்திற்கே சென்றார்கள். அங்கும் வியாபாரம் விருத்தியடையவில்லை.

1637-இல் ஆறுமுகப்பட்டின துணைப் பண்டகசாலையில் தலைவராகப் பணியாற்றிய பிரான்சிஸ்டே என்பவர் மலிவாக நெசவுப் பொருள் எங்கு கிடைக்கும் என்பதனை அறிந்திடவும், வாணிபஞ் செய்திட புதிய இடத்தைத் தேர்ந்தெடுத்திடவும் வேண்டித் கடற்கரையோரமாகப் பயணம் செய்தார்.

பழவேற்காட்டிற்குத் தெற்கே உள்ள பகுதிகளில் நெய்யப்படும் துணிகளின் விலையைக் காட்டிலும், மதராஸ் பட்டணத்தில் 20லிருந்து 30 சதவீதம் குறைவாக இருப்பதையும், அங்கு வேறு ஐரோப்பியர் எவரும் குடியேறாமல் இருப்பதையும் பிரான்சிஸ்டே தெரிந்து கொண்டு தனது மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

பின்னர் 1639-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ஆம் தேதி தாமஸ் வேங்கடபதி என்ற சந்திரகிரி பாளையக்காரரும், பிரான்சிஸ்டேயும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி மதராஸ் பட்டணத்தையும், அங்கே இரண்டாண்டுக் காலத்திற்குக் கோட்டையும், மாளிகையும் கட்டிக் கொள்ள ஆங்கிலேயர்களுக்கு அனுமதி தரப்பட்டது. ஆண்டொன்றுக்கு 1200 வராகன் கிஸ்தி கட்டுவதாகவும், ஆங்கிலேயர் அந்தப் பாளையக்காரரிடம் ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டனர். இந்த வேளையில் 1639-இல் தமிழகப் பாளையக்காரர் ஒருவருக்கு வரிக்கட்ட, கிஸ்தி செலுத்த ஒப்புக் கொண்ட ஆங்கிலேயர் பின்னாளில் வளமார்ந்த நாட்டை வளைத்துக் கொண்டு இந்த நாட்டுக் குறுநில மன்னர்களிடமும், பாளையக்காரர்களிடமும் வரி வசூல் செய்ய, கிஸ்தி கேட்க முற்பட்ட வரலாறு நினைவுக்கு வருகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும்பெனியாரின் வருகையும், கோட்டை கட்டப்படுதலும்

பிரான்சிஸ்டேயும், ஆண்ட்ரூ கோகனும் சில ஆலை முதலாளிகளும், கணக்கர்களும், 25 ஐரோப்பிய போர் வீரர்களைக் கொண்ட ஒரு சிறு காவற்படையும், ஐரோப்பியத் தொழிற் கம்மியர்களும் (Artificers) நாகப்பட்டன் என்னும் துப்பாக்கி மருந்து தயாரிக்கும் ஓர் இந்துவும், சென்னைப் பட்டணத்தில் முதன் முதலாக ஆங்கிலப் பண்டகசாலையை ஏற்படுத்துவதற்காக, 1640 பிப்ரவரி 22-ம் நாள் சென்னையை அடைந்தனர். அது முதல் ஆங்கிலேயர்கள் சென்னையில் நிலைபெறத் தொடங்கினர்.* 1640 மார்ச் முதல் நாள் பண்டகசாலை கட்டிட வேலை துவங்கப்பட்டு ஏப்ரல் 23ஆம் தேதி முடிந்தது. அன்று செயிண்ட் ஜார்ஜ் நாள் ஆதலால் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை என்று அதற்குப் பெயரிட்டனர். கடும் வறுமையிலும் நிதிநிலைப் பற்றாக்குறையிலும் கொஞ்சம் கொஞ்சமாக 14 ஆண்டுகளாகக் கட்டி முடித்த அந்த செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து பாளையங்கள் பலவற்றை வீழ்த்திடவும், சுதந்திரப் போர் தியாகிகளை சுட்டுத் தள்ளிடவும், தீவாந்திரத்திற்கு அவர்களை அனுப்பிடவும், பின்னாளில் பல்வேறு உத்திரவுகள் இங்கிருந்துதான் பிறப்பிக்கப்பட இருக்கிறது என்பதை அப்போது அறிந்தவர் இறைவன் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும்.

1642-இல் ஸ்ரீரங்கராயன் பட்டத்திற்கு வந்த போது பண்டகசாலைப் பொறுப்பிலிருந்த, தாமஸ் ஈவி, பாக்டரி கீரின்ஹில் என்பவரை அனுப்பி புதிய பட்டயத்தைப் பெற்று அதன் மூலம் சென்னைப் பட்டணத்தில் நீதி பரிபாலனம் செய்யும் உரிமையையும், பொன் தகட்டில் எழுதப்பட்ட பட்டயத்தின் மூலம் ஆங்கிலேயர் பெற்றுக்

* மா. சு. சம்பந்தன் எழுதிய சென்னை மாநகர் என்ற நூல் பக்கம் 32 33

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டனர். 1647-க்குள் 23 இடங்களில் இந்தியாவில் ஆங்கிலேயர் வர்த்தக நிலையங்களை அமைத்துக் கொண்டனர்.

சென்னைக்குத் தெற்கே சாந்தோமில் போர்ச்சுக்கீசியர்களும், பழவேற்காட்டில் டச்சுக்காரர்களும், புதுச்சேரி பகுதியில் பிரெஞ்சுக்காரர்களும் ஆதிக்கம் பெற்றிருந்தனர்.

தங்களுக்குள்ளே போட்டி

1680-இல் சிவாஜியின் இறப்பும், 1707-இல் ஔரங்கசீப்பின் மறைவும், மைய அரசியலில் வெற்றிடத்தை, சூன்யத்தை ஏற்படுத்தியது. இதனை மாற்றிட இந்திய மன்னர்கள் எவரும் முன்வரவில்லை.

சீக்கிய அரசர்களோ, ராஜபுத்திர வீரர்களோ, மராட்டிய மன்னர்களோ, முஸ்லிம் நவாபுகளோ, சாம்ராஜ்வாதிகளோ, எவரும் ஆங்கிலேய ஏகாதிபத்திய புதிய அபாயத்தை உணரும் நிலையில் அப்போது இல்லை. தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு ஒருவரையொருவர் ஒடுக்கவும், அழிக்கவும், காரியங்களைச் செய்து கொண்டிருந்தனர்.

அதனைப் பயன்படுத்திப் பிரெஞ்சுக் கம்பெனியாரும், பிரிட்டிஷ் கம்பெனியாரும் இந்தியத் திருநாட்டின் மன்னர்களை பாளையக்காரர்களை தங்கள் ஆதிக்கத்தைப் பரவச் செய்திடும் படுபயங்கர மோசடி சூதாட்டத்தில் பகடைக் காய்களாகப் பயன்படுத்தி வந்தனர்.

முதல் நவாப்

ஔரங்கசீப் காலத்தில் கர்நாடகத்தை முகலாயர்கள் கைப்பற்றி, சுல்பிகர்கான் என்பவரின் புதல்வரின் ஆட்சியின் கீழ் அது விடப்பட்ட போது ஆற்காட்டை தலைநகராக்கி முதலாவது நவாபாக தாவூத்கான் (1703-1710) ஆட்சி செய்யத் துவங்கினார். சாத்-அத்-உல்லாஹ்கான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(1710-1732), தோஸ்த் அலிகான் (1732-1740), சப்தர் அலிகான் (1740-1742), இரண்டாவது சாதக்துல்லாகான் (1742-1744), அன்வார்உத்தீன் (1744-1749) ஆகியோர் நவாபுகளாகத் தொடர்ந்து பதவியேற்றனர்.

சாதாரண ஊழியராயிருந்த அன்வார் உத்தீனை நவாபாக்கியது காலஞ்சென்ற தோஸ்த் அலி குடும்பத்தின ருக்குப் பிடிக்கவில்லை. எனவே, அன்வார் உத்தீனுக்கு எதிராகச் சதிச்செயலில் ஈடுபடத் துவங்கினர்.

கர்நாடக அரசியலில் சூழ்நிலை இவ்விதம் இருந்தது.

இந்தக் காலக்கட்டத்தில் ஐரோப்பாவில் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரர் களுக்கும் இடையே 1740-இல் நடைபெறத் துவங்கியது. இந்தியாவிலும், வாணிபத்திற்காக வந்த பிரெஞ்சுக்காரர் களும், ஆங்கிலேயரும், மோதிடும் நிலைமை ஏற்பட்டது.

அடையாற்றுப் போர்

சென்னையில் ஆங்கில கவர்னராக மார்ஸ் (Morse) இருந்தார். புதுச்சேரியில் தியூப்ளே (Dupleix) பிரெஞ்சு ஆளுநராக இருந்தார். இவர்கள் தென்னகத்தில் தங்களின் தாயகத்திற்காகப் போரிட முயன்ற வேளையில் ஆற்காடு நவாபான அன்வார்உத்தீன் தனது ஆட்சிப்பகுதியில் யாரும் போரிடக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். ஆங்கிலேயர் அதற்கு அடிபணிந்தனர். ஆனால் பிரெஞ்சு கவர்னரான தியூப்ளே, மொரிஷஸ் தீவின் ஆளுநரான போர்டனாய்ஸ் என்பவர் மூலம் போரிட்டு ஆங்கிலேயர் வசமிருந்த சென்னையைக் கைப்பற்றிக் கொண்டார். சென்னையைக் கைப்பற்றி ஆற்காடு நவாபான அன்வர் உத்தீனிடமே தந்து விடுவதாக ஆசை காட்டியிருந்த டியூப்ளே, தான் கொடுத்திருந்த வாக்கினை மீறி, ஏமாற்றத் துவங்கிய போது டியூப்ளேக்கு எதிராகப் பெரும் படை ஒன்றை அன்வர்உத்தீன் அனுப்பி வைத்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடையாறு ஆற்றங்கரையில் நடந்த முதல் கர்நாடகப் போரில் வெகுசுலபமாக ஆற்காடு நவாப் படைகளை (1746-1748) பிரெஞ்சுப் படைகள் தோல்வியைத் தழுவச் செய்தன.

கட்டுப்பாடும், தேர்ச்சியும் பெற்றிருந்த பீரங்கிப் படையினரின் முன்னால் இந்தியப் படையினரால் ஒன்றும் செய்ய இயலாது என்ற பெரிய உண்மையை பிரெஞ்சுக் காரரான டியூப்ளேவிற்கு மட்டுமின்றி ஆங்கிலேயருக்கும் உணர்த்திய அடையாற்றுப் போர் தமிழக சரித்திர வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது என்றால் அது மிகையாகாது.

டியூப்ளேயின் நாடு கவரும் ஆசை

இந்திய நாட்டிலிருந்த மன்னர்களின் படைவலிமை யைப் புரிந்து கொண்ட டியூப்ளே இந்தியாவில் பிரெஞ்சுப் பேரரசை நிறுவிடவும், ஆசை கொண்டார்.

இந்திய மண்ணில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கொடியை நாட்டிய ராபர்ட் கிளைவைப் பற்றி எழுதிய கட்டுரையில் மெகாலே ஓரிடத்தில் குறிப்பிடுகிறார் :

''மொகலாய சாம்ராஜ்யத்தின் அழிவிலே ஐரோப்பிய சாம்ராஜ்யத்தை உருவாக்க முடியும் என நம்பிக்கை தெரிவித்தவன் டியூப்ளே. ஆங்கிலக் கம்பெனியின் ஊழியர் கள் வர்த்தக விலைப்பட்டியலோடு ரசீதுகளையும், தயா ரிப்பதில் முனைந்து நின்ற நிலையில் டியூப்ளேயின் மனம் சாம்ராஜ்யம் காண அலைபாய்ந்தது. பெரிதும் சிந்தித்தது, புதிய கண்டுபிடிப்புக்களில் திளைத்தது என்று குறிப்பிடு கிறார்.

நவாப் பதவிக்கு நடந்த போட்டிகள்

ஐதராபாத் நவாபு ஆஸப்ஷா. 1748-இல் அவரது மகன் நஸிர்ஜங் பதவிக்கு வந்தார். ஆஸஃப் இறந்ததும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜாவின் மகளின் மகனான முஜாஃபர்ஜங் அதை எதிர்த்தார். மராத்தியரால் விடுவிக்கப்பட்ட சந்தா சாகிப்பும், அன்வார்உத்தீனை எதிர்த்து ஆற்காடு நவாப் பதவியை அடையப் போட்டியில் இறங்கினார்

டியூப்ளே ஐதராபாத்தில் முஜாஃபர்ஜங்வுடனும், ஆற்காட்டில் சந்தா சாகிபுடனும் கூட்டுச் சேர்ந்தார். இதனால் நாஸிர்ஜங்கும், அன்வார்உத்தீனும், ஆங்கிலேயரின் உதவியை நாடினார்கள்.

வாணிக, அரசு, ஆதிக்கக்காரணங்களால் 1749-இல் வேலூருக்கு அருகேயுள்ள ஆம்பூரில் இருதரப்புப் படைகளும் மோதின. அன்வார்உத்தீன் போரில் கொல்லப்பட்டு வெற்றி பெற்ற சந்தா சாகிபு ஆற்காட்டின் நவாபானார்* நாசிர்ஜங்கும் கொலை செய்யப்படவே, 1750-இல் ஐதராபாத்தின் நிஜாமாக முஜாஃபர்ஜங் பதவிக்கு வந்தார். 1748-1750 காலக்கட்டத்தில் டியூப்ளேவின் புகழ் உச்சிக்கு வந்தது. தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டிருக்கும் இந்திய சிற்றரசர்களுள் யாருக்கு ஐரோப்பியர் உதவி செய்கிறார்களோ, அவ்வரசு போரில் வெற்றி பெறுவது உறுதி என்னும் கருத்து நடைமுறையில் மெய்ப்பித்துக் காட்டப் பெற்றது.

சென்னையிலிருந்த ஆங்கிலேயர் டியூப்ளேயின் வளர்ச்சியைப் பார்த்துக் கொண்டு அமைதியாய் இருக்கவில்லை அப்படி இருப்பது தங்களுக்குப் பேராபத்து என்பதனையும் உணர்ந்தனர். 1749 இல் ஆம்பூர் போரில் தந்தை அன்வர் உத்தீன் கொலை செய்யப்பட்டதும், திருச்சிக்கு ஓடி ஒளிந்து கொண்ட முகம்மது அலிக்கு உதவுவதாக வாக்களித்து 210 வீரர்களுடன் திருச்சிக்கு 1751-இல் ராபர்ட் கிளைவ் தலைமையில் அனுப்பிவைத்ததன் மூலம் இந்திய அரசியல் அரங்கத்தில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்க ஆசைக்கு சாவுமணி அடிக்கச் செய்து விட்டது எனலாம்.

* பார்க்க பின் இணைப்பு. 1

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராபர்ட் கிளைவ்

ராபர்ட் கிளைவ் திருச்சிக்குச் செல்லும் வழியில் திடீரென்று தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டு ஆற்காட்டைத் தாக்கினார். சந்தாசாகிப்பின் முழுப்படையும், திருச்சிக் கோட்டையை முற்றுகையிடச் சென்ற சமயத்தில் வெகுளளிதில் ஆற்காட்டை கிளைவ் கைப் பற்றினார். ஆரணியிலும், காவேரிப்பாக்கத்திலும், பகைவர்களை வென்று திருச்சியில் சந்தாசாகிப் தஞ்சம் புகுந்திருந்த ஸ்ரீரெங்கத்தையும் கிளைவ் முற்றுகையிட்டார். சரண் அடைந்த சந்தாசாகிப்பை தூக்கிலிட்டு விட்டு முகம்மது அலியை கர்நாடக நவாப்பாக்கினார்.

ஆங்கிலக் கம்பெனி ஆதிக்கம் பெறுதல்

சென்னை கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரிவினரையும், கிளைவ்வையும் போர்வீரர்களாக மாற்ற வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளிய டியூப்ளேயின் முயற்சிகளுக்குப் போதிய ஆதரவு பிரெஞ்சு அரசாங்கத்திடம் இல்லை. கோதயூ என்ற வணிகக்குழு இயக்குநர் ஒருவரை அனுப்பி டியூப்ளேவைத் திருப்பி அழைத்தது பிரெஞ்சு அரசு. 1755-இல் தற்காலிக ஒப்பந்தம் செய்து தாயகம் சென்ற டியூப்ளே விசாரிக்கப்பட்டு, பட்டினி, நோய், இவற்றினால் அவதிப்பட்டு அநாதையாக 1763-இல் பாரிசில் காலமானார்.

1756-இல் ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் ஏற்பட்டபோது அதன் எதிரொலியாக இந்தியாவிலும், மூன்றாம் கர்நாடகப் போர்கள் நடைபெற்று 1763-ம் ஆண்டு பாரிஸ் உடன்படிக்கையின்படி அங்கு போர் முடிவுற்ற போது இந்தியாவிலும் போர் முடிவுக்கு வந்தது. பிரெஞ்சு கிழக்கிந்திய வணிகக்குழு 1770-இல் கலைக்கப்பட்டது. இதன் மூலம் தமிழகத்தில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி இராணுவப் பிரதேச ஆட்சிக் குழுவாக அரசியல் தன்மை பெற்று தனது அதிகாரத்தை மேலும், மேலும் நிலை நாட்டத் துவங்கியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகலாயமன்னர் சிராஜ்-உத்தௌலா (1756-57)

ஔரங்கசீப்பின் மறைவிற்குப் பின்னர் மூர்ஷித் குலீ கான் வங்கத்தின் கவர்னரானார். அவருக்குப்பின் அவரது மகன் ஷஜாகான் நவாபானார். 1742-இல் ஆப்கானியப் படைவீரர் அலிவர்த்திகான் ஷஜாகானைக் கொன்று தானே ஆளுநரானார். அவருக்குப் பின் அவரது பேரன் சிராஜ் உத்தௌலா நவாபானார். அவர் கல்கத்தாவில் பிரெஞ்சு ஆங்கிலக் கம்பெனியாரின் கோட்டை விஸ்தரிப்பு முயற்சிகளை ஒடுக்க முற்பட்டு அதற்கான உத்தரவுகளை பிறப்பித்தார். அதற்கு பிரெஞ்சுக்காரர்கள் இணங்கினர், ஆனால் ஆங்கிலேயர்கள் அதனை எதிர்த்தனர். சிராஜ்-உத்தௌலா ஆங்கிலேயர்களுடன், போர் நடத்தி வெற்றி பெற்றார். போரில் ஆங்கிலேயர்கள் பலர் கொல்லப்பட்டனர். பலர் தப்பி ஓடினர். சென்னை ஆளுநர் இராபர்ட் கிளைவ் ஆங்கிலேயக் கம்பெனியரால் வங்காளத்திற்கு அனுப்பப்பட்டார். கிளைவும்-சிராஜும், சூழ்நிலை சரியின்மையால் ஒப்பந்தத்திற்கு இசைந்தனர்*

1757-இல் பிளாசியில் நடைபெற்ற போரில் வழக்கம் போல துரோகிகளாலும், மோசடியான சூழ்ச்சிகளினாலும் சிராஜ்-உத்-தௌலா தோற்கடிக்கப்பட்டார். பின்னாளில் எத்தனை எத்தனை தியாகிகள் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தினை எதிர்த்து தூக்கில் தொங்க இருக்கிறார்கள் என்பதற்கு அச்சாரமாக சிராஜ்-உத்-தௌலாவும், அப்போது தூக்கிலிடப்பட்டார்.

கம்பெனியினரின் கொள்கைகள்

இந்தியச் செல்வத்தைக் கொள்ளையடித்து கப்பலேற்றும் பயங்கர சுரண்டல் வேகவேகமாக நிகழத் துவங்கியது ஆங்கிலக் கம்பெனியின் சிவில், இராணுவ ஊழியர்கள்

* து. சதாசிவன் 'இந்திய வரலாறு' "கி. பி. 1707 முதல் இன்று வரை பக்கம். 447

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுயேச்சையாக வாணிபம் செய்யவும், பணம் திரட்டவும், அனுமதிக்கப்பட்டிருந்ததால், ஊழலும், மோசடிகளும் மலிந்தன. கம்பெனியின் நடவடிக்கைகள் பற்றி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கூறப்பட்டது. கம்பெனியின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தை பிரிட்டிஷ் இராணுவங்களும், பிரிட்டிஷ் கப்பற்படைகளுமே வென்று தந்தன என்றும் எனவே, கம்பெனியின் செல்வங்களில் தமக்கும் பங்கு வேண்டுமென மந்திரிகள் கேட்க ஆரம்பித்தனர்.*

இந்தியாவை அடிமை நாடாக்குதல்

கம்பெனி ஏஜண்டுகளுக்கு பாக்டரி அமைக்கவும், சரக்குகளுக்கு இருப்பிடங்கள் ஏற்படுத்தவும், முதலில் முயன்ற கம்பெனி இந்த நிலையில் 1767 இல் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் உடன்படிக்கை செய்து தேசீயக் கருவூலத்திற்கு 4 லட்சம் பவுன் ஆண்டுதோறும் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு தன்னை காப்பாற்றிக்கொண்டு அந்தப் பணத்தைப் பெற்றிட இந்தியாவில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிட கோட்டைகளை அமைத்தும், இராணுவத்தைப் பலப்படுத்தியும், நடவடிக்கைகளில், வேகமாக இறங்கியது, வெற்றியும் கண்டது, இந்தியத் திருநாட்டை அடிமைப்படுத்தவும் செய்தது.

1773 இல் சென்னை, பம்பாய், கல்கத்தா மாநிலங்கள் மூன்றுக்கும் மையமான கவர்னர்-ஜெனரல் அமைப்பு தோன்றியது. முதலாவது வாரன்ஹேஸ்டிங்க்ஸ் கவர்னர் ஜெனரலானார்.** இந்தியாவை அவர்கள் ஆளத் துவங்கினர். அதன் பின் விடுதலைப் போரும் துவங்கியது.

* 1688ம் ஆண்டு புரட்சிக்கு முன்னால் அதிகாரத்திலுள்ளவர்களுக்கு நன்கொடை அளித்த வகையில் எந்த ஆண்டிலும், 1200 பவுனுக்கு மேல் செலவு செய்யாத கிழக்கிந்திய கம்பெனி 693 லேயே அந்த இனத்தில் 90 ஆயிரம் பவுன் செலவு செய்தது பாராளுமன்ற விசாரணையில் வெளிப்பட்டது லீட்ஸ்கோமகன் 5 ஆயிரம் பவுன் இலஞ்சமும், நல்லெண்ணமுக்க நெறி தவறாத அரசரே பத்தாயிரம் பவுன் கைக்கூலி பெற்றார் என்றும், குற்றச்சாட்டு நிரூபிக்கப் பெற்றிருந்தது (இந்தியாவின் முதல் விடுதலைப்போர் நூலில் மார்க்ஸ் எங்கெல்ஸ் (1857 - 1859) பக்கம்-34.

** பார்க்க பின் இணைப்பு-2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குஞ்சாலி மரைக்காயர்

வீரம் செறிந்த நம் நாட்டை வெள்ளையர் யாதொரு எதிர்ப்புமின்றி வென்றுவிடவில்லை. எதிர்த்துக் கிளம்பிய வீரர்களின் பெயர்களை வெள்ளையர் மறைத்துவிட்டனர். கோட்டை கொத்தளங்களை தகர்த்துத் தரைமட்டமாக்கி சுவடே தெரியாவண்ணம் அழித்துவிட்டனர். ஆகையால் நம்நாட்டு விடுதலை வீரர் புலர் காலம் என்னும் மண்ணில் புதைந்து கிடக்கின்றனர். அவர்களை அகழ்ந்து எடுக்க வேண்டியது ஆய்வாளர் பொறுப்பாகும்.

— மறைந்த மேதை ''மஹதி''

தோல்வைக்க இடம் கேட்டு
கால்ஊன்றக் கருத்துக் கொண்டு
நம்பிய வரைக் கழுத்தறுத்து
நாளும் மோசடி பல செய்து
வணிகக்கொடி பிடித்து
வஞ்சக வலை விரித்து — வெள்ளையர்
வளமார்ந்த நாட்டை வளைத்திட்ட
முயற்சிகளை முன்னரே பார்த்தோம்.

இந்திய மன்னர்களின் போட்டி பொறாமை, ஒற்றுமை யின்மை, ஒன்றுபட்டு நில்லாமல் ஒண்டவந்தவர்களுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு சொந்த நாட்டினரையே ஒழித்திட முயன்றுகொண்டிருந்த காலகட்டம்.

சூழ்ந்துகொண்டிருந்த அன்னிய ஆதிக்கத்திற்கு எதிராக முதன் முதலாக வீரம் செறிந்த போராட்டம், கேரளம் சார்ந்த தமிழ்நாட்டில்தான் தொடங்கியது என்பதும், அதனை நிகழ்த்திய தளபதியும் ஒரு தமிழ் முஸ்லிமே என்பதையும் குஞ்சாலி மரைக்காயர் வரலாறு கூறுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாஸ்கோடகாமா

100067

வாஸ்கோடகாமா 1498 மே 17-ல் முஸ்லிம் மாலுமியின் உதவியுடன் பயணம் செய்து* கோழிக்கோடு கப்பாட்டு என்ற இடத்தில் வந்து இறங்கியபோதே இங்கே முதல் சுதந்திர வீரரும் தோன்றிவிட்டார். வாஸ்கோடகாமா வரும் வழியிலேயே இஸ்லாமிய வணிகக் கப்பல்களை, பல்வேறு வணிகக் குழுவினரை கொள்ளையிட்ட வரலாறு வேறுவிஷயம். அந்தக் காலகட்டத்தில் இரண்டு பள்ளிவாசல்களும், 15,000 முஸ்லிம்களும் கள்ளிக்கோட்டையில் இருந்தனர்.

கோழிக்கோடு சாமூத்ரி

போர்த்துக்கீசிய வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டையில் காலடி எடுத்துவைத்தது முதல் 1600 வரை பதினைந்து மன்னர்கள் கோழிக்கோட்டில் பட்டத்திற்கு வந்திருந்தனர். ஒரே சீரான வெளிவிவகாரக்கொள்கையை அவர்கள் பின்பற்றவில்லை. இந்தக் காலகட்டத்தில் நான்கு கடற்படைத் தளபதிகள் வரிசையாக பொறுப்பிலிருந்தனர்.

வாஸ்கோடகாமா வந்தது முதல் கோழிக்கோடு சாமுத்ரி அரசனுக்கும், பரங்கியருக்கும், இடைவிடாத போர் நடந்துகொண்டிருந்தது. மலபார் பிராந்தியப் பறங்கியர் படைத்தலைவர் மார்ட்டிம்-டி-சோசா இருபத்தி ஐந்து போர்க் கப்பல்களுடன் வடக்கிலிருந்த கோலத்திரி மன்னரின் ஆதரவோடு கோழிக்கோடு கடற்கரையை அடைந்தார். இந்த சூழ்நிலையின்போது சாமூத்திரியின் அரச சபையில் தரைப்போர் தளபதி மங்நாட்டச்சனும் அரசனின் அந்தரங்க நண்பர்கள் தலைப்பண்ணை நம்பூதிரியும், குஞ்சிப் போக்கரும் மன்னரிடம் என்ன செய்வதென்று விவாதித்தனர்.

---

* பயிலை சீனி வேங்கடசாமி 'கிறிஸ்தவமும், தமிழும்'. பக்கம்-7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்போது நான் இருக்கிறேன் என்று இடியோசையைப்போல் குரல் எழுந்தது. குஞ்சாலி மரைக்காயர் வந்து கொண்டிருந்தார்*. அன்னியரை காலூன்ற அனுமதிக்க முடியாது. அதற்காக தரையிலும், கடலிலும், மனித இரத்தம் பெருக்கெடுத்தோடினாலும், நாம் அதற்குத் தயார் என்று குஞ்சாலி மரைக்காயர் சொன்னார். கடற்படைக்குத் தலைமையேற்றுச் சென்றார்.

மார்ட்டிம்-டி-சோசா

பறங்கித்தலைவர் மார்ட்டிம்-டி-சோசா சாமூத்திரியின் நண்பருக்குச் சொந்தமான கொச்சிக்கு அருகே இடப்பள்ளியை முற்றுகையிட்டார். குஞ்சாலி மரைக்காயர் கொச்சியைத் தாக்கவே, இங்கிருந்து பறங்கியர் படையை வாபஸ்பெற்றனர். இருதரப்பாருக்கும் கோவாவில் உடன்பாடு ஏற்பட்டது.

யூயி-தி-எமல்லோ என்ற படைத்தலைவர் கோழிக்கோட்டு படையை மேற்குக் கடலில் தாக்க குஞ்சாலி மரைக்காயர் எதிர் தாக்குதலை தொடர்ந்தார். பட்க்கல் விரிகுடாவில் டோம்பௌலோவை முறியடித்து கோவா வரை துரத்தினார். அல்வாரோ–சென்டேமெயரி தெற்கிலிருந்து தாக்கியதையும், குஞ்சாலி மரைக்காயர் முறியடித்தார். 36 கப்பல்களுடன் போர்த்துக்கீசிய வைசிராய் டிமிரேண்டா படையெடுத்து வந்த போது அவரைப் போரில் கொன்று வென்றார் குஞ்சாலி மரைக்காயர்.

1521-இல் கொச்சியிலிருந்து அகம்மது மரைக்காயர் அவரது தம்பி குஞ்சாலி மரைக்காயர் அவர்களது மாமா முகம்மது அலி மரைக்காயர் ஆகியோர் கோழிக்கோட்டிற்குச் சென்று தங்கலானார்கள். ஹென்றிக்-டிமெனபெஸ் லோப்வாஸ் டி-ஸம்பாயோ, ஆகியோர் அடங்கிய பறங்கிய கடற்படை சாமூத்திரியின் கடற்படைத்தளமான பொன்னானி மீது ஆக்கிரமிப்பை தொடுத்தது.

* கே. பத்மநாபன் நாயர் "குஞ்சாலி மரைக்காயர்". பக்கம்-9, 10

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1507-இல் அல்மேத தலைமையில் பொன்னானியை நோக்கி முதல் படையெடுப்பு நடைபெற்ற போதே சாமூத்திரியின் பரம்பரைக் கடற்படைத் தலைவர்களான மரைக்காயர்கள் கோட்டைக்கல்லில் தங்கள் தலைமையை மாற்றி இருந்தார்கள்.

1523-இல் 200 பெரிய போர்க்கப்பல்களை தயாராக வைத்திருந்தார் குஞ்சாலி மரைக்காயர். 1524-இல் நடைபெற்ற கடற் போரின் போது குட்டிஆலி என்ற பெயர் பறங்கியருக்கு சிம்மசொப்பனமாக இருந்தது.

1528-இல் பர்கூரில்

குட்டிஅலியின் படைகளும், போர்த்துக்கீசியப் படைகளும் மோதின. மங்களாவரத்துக்கும், மௌண்ட்டலிக்கும் இடையில் நடைபெற்ற போரில் சின்னக்குட்டி அலி போர்த்துக்கீசியர்களால் சிறைபிடிக்கப்பட்டார்.

1528-இல் செத்வாய் என்னுமிடத்தில் போர்த்துக்கீசியர் பல கப்பல்கள் நிறைய பண்டங்களை ஏற்றிக் கொண்டு பலத்த பாதுகாப்புடன் தங்கள் தாய்நாட்டிற்கு கொண்டு செல்ல முயன்ற போது குஞ்சாலி மரைக்காயர் தாக்கி ஒரு வெள்ளையரையும் விடாமல் கொன்று குவித்து மாபெரும் முதல் வெற்றியைப் பெற்றார்*

1531-இல் பறங்கியரை கடற்போரில் கதிகலங்கச் செய்த குட்டியகமது மரைக்காயர் வீரச்சாவினைத் தழுவிக் கொண்டார்.

இலங்கை பராக்கிரமவேந்தன் அவரது தம்பி மயாதுன்னாவிற்கும், நடந்த பதவிப் போட்டியில் பறங்கியர் தலையிட்டனர். மயாதுன்னாவிற்கு ஆதரவாக 1535-இல் அட்மிரல் சுலைமான் பாட்சா சாமூத்திரியின் படையுடன் சென்று பறங்கியரை வென்று அவர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றினார்.

---

* See : W. Logan, 'Malaber Manual'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாகப்பட்டினத்தில் நடைபெற்ற போர்

நூனோடி குன்ஹா கவர்னர் பதவிக்கு வந்த போது தியோ-கோ-தெ-எஸல்வேரியாவின் தலைமையில் கோழிக்கோடு கடற்கரையை முற்றுகையிடவும், பேப்பூர் நதிக் கரையில் உள்ள சாலியம் என்ற இடத்தில் கோட்டையைக் கட்டவும் முயன்ற போது குஞ்சாலி மரைக்காயர் சாலியம் கோட்டையைத் தாக்கினார், அதனைத் தொடர்ந்து நாகப்பட்டினத்தின் கடற்கரையிலும் போர் நடை பெற்றது*

1537-இல் 51 சிறந்த கப்பல்களில் எண்ணாயிரம் வீரர் களுடன் குஞ்சாலி மரைக்காயர் அங்கு சென்றார். இலங் கைக்கு தனது படையில் ஒரு பிரிவினரை அனுப்பினார்.

தூத்துக்குடி–வேதாளையில் நடைபெற்ற போர்கள்

தூத்துக்குடியில் போர்த்துக்கீசியர் பண்டகசாலை களைக் கட்டி வாணிபம் செய்தும், தங்களது கப்பல்களை நங்கூரம் பாய்ச்சி நிறுத்தியும் இருந்தனர். தூத்துக்குடி யில் கடும் போர் குஞ்சாலி மரைக்காயருக்கும், போர்த்துக் கீசியப் படைகளுக்கும் நடைபெற்றது. கப்பல்கள் கைப் பற்றப்பட்டன. அங்கிருந்து கீழக்கரைக்கு இடையில் உள்ள வேதாளைக்குப் புறப்பட்டுச் சென்று, அங்கேயும் போர்த்துக்கீசியப் படையை முறியடித்தார். அங்கு ஓய் வெடுத்துக் கொண்டிருந்த போது 1538-ஜனவரி 20ல் கோவாவிலிருந்து வந்த போர்த்துக்கீசியரின் தாக்கு தலைச் சமாளிக்க முடியாமல் தப்பி ஓடினார்கள்.**

கற்பனைகளுக்கும் மிஞ்சிய சாதனைகளோடு, நாட்டுப் பற்றோடு தனி மனிதர் ஒருவர் படைதிரட்டி நாட்டைக் காக்கும் பணியில் கொழும்பில் எதிரியின் குண்டுகளுக்குப் பலியானார்.

* கே. பத்மநாபன் நாயர் "குஞ்சாலி மரைக்காயர்" பக்கம்-103-105

** மஹதி "முதல் சுதந்திரவீரர் குஞ்சாலிமரைக்காயர்" பக்கம்-74-76

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழி வழி வந்தோர்

1570-இல் சாலியம்கோட்டைப் போரில் குஞ்சாலி மரைக்காயர் இரண்டாமவர் வெற்றி பெற்றார். கௌண்டின் ஹே தலைமையில் துவங்கிய கடலாதிக்கப் போர் 65 வருடங்களுக்குப் பிறகு முறியடிக்கப்பட்டது. குஞ்சாலி மரைக்காயர் மூன்றாமவர் தொடர்ந்து கடற் படைத் தளபதி பொறுப்பிற்கு வந்தார்.

புதுப்பட்டினத்தில் கோட்டைகளைக் கட்டி இராணு வத் தளங்களை அமைத்ததால் மரைக்காயர் கோட்டை என்ற பெயரில் அது புகழ் பெற்றது.

1572-இல் பறங்கியரின் படை மகுதிகளையும்' கோயில்களையும் கொள்ளையிட்டு கோழிக்கோடு, திருக் கொடி, கப்பக்காடு, பொன்னானி துறைமுகங்களுக்கு நஷ்டங்களை ஏற்படுத்திய போது, 1578-இல் உடன் படிக்கை முயற்சிகள் முடியாமல் போய் 586-இல் குஞ்சாலி மரைக்காயர் மூன்றாமவர் அவர்களை வெற்றி கொண்டார். அவரது மருமகன் குவாஜிமூஸா 1589-இல் பறங்கியரை வேறு ஒரு இடத்தில் வெற்றி கொண்டார்.

குஞ்சாலி மரைக்காயர் நான்காமவர்

1595-இல் குஞ்சாலி நான்காமவர் புதுப்பட்டினத்தின் கோட்டையின் நாயகர். இந்த நிலையில் சாமூத்திரி அரசர், வாஸ்கோடகாமாவின் பேரரான பிரான்சிஸ்கோ-டி-காமா வுடன் உடன்படிக்கை செய்து கொண்டதால், குஞ்சாலி மரைக்காயர் சாமூத்திரி அரசரிடம் சென்று தனது வாளினை அவரிடம் வழங்கி தலைவணங்கிய போது அந்த அரசர் தன்னுடைய படைத்தலைவனை பறங்கியரிடம் ஒப் படைத்தார். சங்கிலிகளால் நன்கு பிணைக்கப்பட்டு, ஊனும் உறக்கமும் இன்றி அழுக்குத் துணிகளுடன், திருட்டுக் கைதியைப் போல அழைத்துச் சென்று கோவா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வில் வாக்குறுதியை மீறி, சதிகாரத்தனமாக குஞ்சாலி மரைக்காயர் கொல்லப்பட்டார்* நாட்டின் நிகரில்லா வீரர் தன்னுயிரைத் தியாகம் செய்தார்.

இந்த வம்சத்தினரை கடற்கொள்ளையர்கள் என்று வெள்ளையர்கள் கள்ளத்தனமாக எழுதி வைத்த போதும்,

கோட்டைக் கல்லில். அடக்கமாகியிருக்கும் அவர்கள் உண்மையில் இந்த நாட்டை அன்னிய ஆக்கிரமிப் பிலிருந்து காப்பாற்றிய வீரதேச பக்தர்கள்.

பாரதத்தின் தேசீய கடற்படைத் தலைவன் குஞ்சாலி மரைக்காயர் இரண்டாமவர்தான் என்று சொல்வதில் தவறு எதுவும் இருக்க முடியாது** மரைக்காயர் என்னும் பெயர் சிறப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் வாழும் தமிழ் முஸ்லிம்களுடையது. மலையாளி முஸ்லிம்களுடையே அப்பெயர் கிடையாது. தமிழ்நாட்டிலிருந்து கள்ளிக் கோட்டை சென்று, நீண்டகாலமாகவே சாமூத்திரி மன்னர் களின் அதிகாரிகளாகி மலையாளிகளோடு மலையாளி களாக ஆகிவிட்டவராகவே குஞ்சாலி மரைக்காயரின் குடும்பத்தார் இருக்க வேண்டும்.***

''இந்தக் காலத்தில் மலபார் என்னும் ஐரோப்பியச் சொல் மலையாள தேசத்தை குறிக்கிறது. ஆனால் இதே மலபார் என்னும் சொல் சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழர் என்னும் பொருளில் வழங்கி வந்ததேயன்றி இப் போது வழங்கும் பொருளைக் குறிப்பிடவில்லை. ஐரோப்பிய இனத்தார் தமிழரை மலபார்கள் என்று அக் காலத்தில் வழங்கி வந்ததை, அவர்கள் எழுதிய நூல் களிலிருந்து இப்போதும் தெரிந்து கொள்ளலாம் ''இலங் கைத் தமிழரைக் கூட மலபாரிகள்'' என்று வழங்கிய

---

* O K. Nambiar Indian Sea Man P. 191.

** கே. பத்மநாபன்நாயர் ''குஞ்சாலி மரைக்காயர்'' பக்கம் 110.

*** மஹதி ''முதல் சுதந்திரவீரர் குஞ்சாலி மரைக்காயர்'' பக்கம் 44 45

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தற்கான ஆதாரங்களும், பல நூல்களிலிருந்து கிடைக்கின்றன. இது பலருக்கு வியப்பை உண்டாக்கக்கூடும். ஆனால் இஃது உண்மை என்பது ஆராய்ந்து பார்த்தால் விளங்கும்*

மேற்சொன்ன இரண்டு கருத்துக்களின் அடிப்படையில் குஞ்சாலி மரைக்காயரின் மரபினர் தமிழர்கள் என்பதும், அவர்களது வீரஞ்செறிந்த நாட்டுப்பற்று மிகுந்த கடற்போரும், இந்திய விடுதலை வரலாற்றில் தமிழக முஸ்லிம்களின் பங்கு என்பதும், தெள்ளத் தெளிவான உண்மைகளாகும்.

* மயிலை சீனி. வேங்கடசாமி 'கிறிஸ்தவமும், தமிழும்' பக்க 136

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கம்மந்தான் கான் சாகிப்

(பூலித் தேவர் காலம்)

1857-க்கு முந்தைய புரட்சிகள்

வடஇந்தியாவில் வங்காளத்திலும், தென்னிந்தியாவில் சென்னையிலும், 1765 முதல் 1857 வரை மேற்கு இந்தியாவில் பம்பாயிலும் பாளையக்காரர்கள் நடத்திய ஆங்கிலேயர் எதிர்ப்பு சுதந்திரப் போர் நடவடிக்கைகளையும், கிளர்ந்தெழுந்த 47 புரட்சிகளைப் பற்றியும் ''சிவில் டிஸ்டர்பன்சஸ்'' என்ற நூலில் சிறந்த வரலாற்றுப் பேராசிரியரான சசிபூஷன் தெரிவித்திருக்கிறார். வட இந்தியாவில் வங்காளப் பகுதியில் 1769-79ல் நடைபெற்ற தால்பூம் அரசர்களின் கிளர்ச்சியில் இருந்து துவங்கி 1855-60ல் சந்தால் மக்களின் எழுச்சி வரை நடைபெற்ற 23 புரட்சிகளையும், மேற்கு இந்தியாவில் பம்பாய் பகுதியில் 1824-1829ல் நடைபெற்ற கிட்டூர் புரட்சியிலிருந்து 1852 எல்லை மாகாணங்களின் எழுச்சிவரை 11 புரட்சிகளையும் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். தென்னகத்தில் நடைபெற்ற 1794 வினோரியம் ராஜுவின் புரட்சியில் துவங்கி வரிசையாக 1799-1800 பெட்னூரில் துண்டியாவின் புரட்சி, 1801-1805 ஆந்திர சீடட்டிஸ்டிர்கட்ஸ் பாளையக்காரர்கள்மீது அடக்குமுறை, 1803-1805 வடாற்காடு பாளையக்காரர்களின் போர், 1808-1809 திருவிதாங்கூரில் சுதந்திரப் போராட்டம், 1830-31 மைசூரில் புரட்சி, 1831-34 பரலேக்கிமடி எஸ்டேட்டில் தொழிலாளர் கிளர்ச்சி, 1830-34 விசாகப்பட்டின மாவட்டக் கிளர்ச்சி, 1800-05 கஞ்சம் மாவட்டத்திலும், 1835-37ல் கும்சூரிலும் நடைபெற்ற போராட்டங்கள், 1846-1847 நாசிம்மரெட்டி போராட்டம் என்று சொல்லிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டே செல்கிறார். இதில் திருநெல்வேலி, மதுரை, வடாற்காடு, பாளையக்காரர்களின் புரட்சியும், திருவிதாங்கூரில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டங்களும் தமிழகத்தின் எல்லைக்குள் வருவதால், அவைகளைப் பற்றியும், அதில் பங்கேற்ற முஸ்லிம்கள் பற்றியும் விளக்கிடவேண்டியது அவசியமாகிறது.

கம்மந்தான் கான் சாஹிபு

ஆங்கிலக் கம்பெனியின் கைப்பாவையாக முகம்மது அலி பெயரளவில் நவாபாக இருந்ததால், நாயக்க மன்னர்களுக்கு வரி வசூல் செய்துகொடுத்தும், ஆபத்துக்காலங்களில் படை திரட்டிக்கொடுத்தும் உதவிவந்த 72 பாளையக்காரர்கள் தனிக்காட்டு மன்னராக நடைபோடத் துவங்கினர்.

சேதமடைந்த ஆயுதங்களுக்கும், செத்துப்போன பிரிட்டிஷ் வீரர்களுக்கும் ஈட்டுத்தொகை என்றபெயரால் பெருந்தொகையை கம்பெனியார் முகம்மது அலியிடமிருந்து பெற்றுக்கொண்டனர். மாநிலத்தில் நிலவிய வறுமையும், வறட்சியும், குடிமக்களிடமிருந்து வரியை வசூலிக்கமுடியாமல் நவாப் திண்டாட, அதற்கும் ஆங்கிலப் படையை அனுப்பி மிரட்டி வரியை வசூல்செய்து வசூல்செய்த வகைக்கு ஆங்கிலக் கம்பெனிக்கு ஒரு தொகையும் நவாபால் வழங்கப்பட்டது.

பாளையங்களில் நவாப்பின் உறவினர்கள் சரியாக வரியை வசூல்செய்து அனுப்பாமலும், வசூலித்த வரியை தாங்களே செலவு செய்ததாலும், நவாப்கள் கடன்கார நிலைக்குத் தள்ளப்பட்டு, ஆங்கிலேயரிடம் மேலும், மேலும் கடன் வாங்கிக் காலத்தைக் கழிக்கமுற்பட்டனர். பென்பீல்ட் என்ற ஆங்கிலேயக் கனவானிடம் மட்டுமே ஆற்காடு நவாப் 23 லட்சம் ரூபாய் கடன்பட்டிருந்தார். அவர்களும் வாங்கின கடனை உடனே கொடுத்துவிட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டுமென்று நிர்ப்பந்தமும் செய்ய, வேறுவழியின்றி அதற்கு ஈடாக தமிழகத்தின் வரி வசூல் உரிமையை கும்பெனியாரிடம் நவாப் ஒப்படைத்தார். அப்போதுதான் உரிமைப் போர் நடத்திய பாளையக்காரர்களின் கோட்டைகள் ஆங்கிலேயரின் படையெடுப்புக்குள்ளாகி இடித்துத் தள்ளப்பட்டு பாளையக்காரர்கள் காட்டு மிருகங்களைப் போல வேட்டையாடப்பட்டு சிறைபிடிக்கப்பட்டு, பிடிபட்டவர்களும் உற்றார் உறவினர்களும் தூக்கிலிடப்பட்டனர். எஞ்சியவர்கள் நாடும் கடத்தப்பட்டனர்.

முதல் இந்திய கமாண்டர்

நெல்லூர்சுபேதார், ஈசப், யூசுப். யூசுப்கான், முகம்மது யூசுப், கான்சாகிப், கும்மந்தான் இப்படி பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்படும் இராமநாதபுரத்துப் பனையூரில் மருதநாயகம்பிள்ளையாக பிறந்து, இஸ்லாம் மார்க்கத்தை ஏற்று, முகம்மது யூசுப் என்ற பெயர் தாங்கியவர் கான்சாகிப்,

ஐரோப்பிய பிரண்டன் என்பவரிடம் வேலைக்கு அமர்ந்து கல்வி கற்று, நவாப்பின் படையில் சேர்ந்து மெல்ல மெல்ல உயர்நிலை பெற்றார்.

போர்த்துக்கீசியப் பெண் மாசாவை மணந்து கொண்ட அவர், காவேரிப் பாக்கத்தில் நடந்த போருக்குப் பிறகு தான் உருவாக்கிய பெரும்படையுடன் ஆங்கிலேய கிளைவ்-வின் படையோடு இணைந்தார். இந்தியாவில் ஆங்கிலேயர் நிலையான ஆட்சியை நிறுவிட காரணமாக இருந்த இராபர்ட்கிளைவ்வோடு கான்சாகிபையும் திருச்சி போரில் கிளைவோடு இருந்த லாரென்ஸ் என்ற வெள்ளைத் தளபதி ஒரேமாதிரி ஒப்பிட்டு வர்ணித்துள்ளதை அறிஞர் ஹில் மேற்கோள் காட்டுவதில் இருந்து கிளைவ்வும், கான்சாகிப்பும் சரிநிகர் சமமானவர்கள் என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் தெள்ளத் தெளிவாக உணர முடியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1755-இல் ஜனவரியில் மேஜர் லாரன்ஸ் ஆங்கிலக் கம்பெனிக்கு எழுதிய கடிதத்தில் கான்சாகிப் நம் சிப்பாய்களின் தலைவர். அவரது கூர்த்த அறிவையும் திறமையையும் மட்டுமின்றி, ஊக்கத்தையும், விழிப்பையும், எவ்வளவு புகழ்ந்தாலும் தகும் என்று அவரைப் பற்றி எழுதியதற்குப் பதிலாக கம்பெனியார் 'கும்பெனியாரின் எல்லாச் சிப்பாய்களுக்கும் கமாண்டராக அவரை நியமித்து தங்கப்பதக்கமும் பரிசளித்து உத்திரவு பிறப்பித்து அனுப்பினர்.

எல்லாச் சிப்பாய்களுக்கும் தளபதி என்ற பொருள் தரும் கமாண்டர் (கமாண்டன்-கமந்தன்-கும்மந்தான்) என்ற இந்தப்பட்டத்தை இந்திய நாட்டில் கம்பெனி படை ஊழியத்திலிருந்த ஆங்கிலேயர் அல்லாத ஒருவர் பெற்றது இதுவே முதல் முறை என்று அறிஞர் ஹில் ஆராய்ந்து கூறியுள்ளார்.

பூலித் தேவர்

ஆங்கிலக்கம்பெனி ஆட்சி ஏற்படுவதை எதிர்த்துப் போராடிய, காலத்தால் முந்தியவர் நெற்கட்டும்செவல் வீரத்தலைவர் பூலித்தேவர் (1710-1767) ஆவார்.

நவாப் முகம்மது அலி காலத்தில் மாபூஸ்கானும், கான் சாகிபும், கர்னல் ஹிரானையும், பாளையங்களில் வரி வசூல் செய்ய 1755-இல் தெற்கே அனுப்பி வைத்தனர். நடை பெற்ற பல போர்களில் பூலித்தேவரும், பாளையக்காரர்கள் பலரும் அடக்கப்பட்டனர் (விரிவான செய்திகளை விரிவஞ்சி சொல்லவில்லை) இந்தப் போர்களில் ஈடுபட்டு 1761-இல் பூலித்தேவரையும் வெற்றி பெற்ற கான் சாகிபை, இந்திய முஸ்லிம்களுள் மிகப்பெரிய வீரன் யூசுப் கான் என்று இராபர்ட்ஓர்ம் புகழ்ந்துள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தென்பகுதி ஆட்சிப் பொறுப்பில் கான்சாகிப்

1756 மார்ச் 14-இல் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களின் பேரதிகாரியாக (கவர்னராக) கான்சாகிப் நியமனம் பெற்றார். இந்த நிலையில் தான் பாளையக்காரர்களுக்கு ஆதரவாக போர் தொடுத்து வந்த மாவீரர் ஹைதர்அலியை நத்தம் என்ற இடத்தில் தோற்கடித்த பெருமை தமிழகத்து கான்சாகிபைச் சேரும்.

ஹைதரையும் தோற்கடிக்கும் ஆற்றல் பெற்றிருந்த அத்தமிழ் மகனின் ஆற்றலை நாம் போற்றாமல் இருக்க முடியாது*

கும்பெனியாரின் சுயமைத்தனமும் கான்சாகிப் கசக்கி எறியப்படுதலும்

1763 மார்ச் 24ம் தேதி மேஜர் லாரன்ஸ் கம்பெனிக்கு எழுதிய கடிதத்தில் கான்சாகிப் ஆங்கிலேய விசுவாசத்தை கைவிட்டுவிட்டார், அரசு உத்திரவுகளை உதறி எறிந்து விட்டார் அவரை அடக்க வேண்டும் என்று எழுதினார்.

தான் பதவியேற்ற நாளிலிருந்து எட்டாண்டுகள் வரை கம்பெனியாருக்கு விசுவாசமாக நடந்து வந்த கான் சாகிப் "நாட்டபிமானங்கொண்ட சுதந்திர வீரனாக மாறி, தன் வசமிருக்கும்படைகளையும், வேறு பல புதிய படைகளையும் சேர்த்துக் கொண்டு வெள்ளையரை நாட்டை விட்டு ஓட்டவேண்டும் என்று எண்ணலானார்** புதுக் கோட்டையிலும், தஞ்சாவூரிலும் புதிய ஆட்களை இரகசியமாக தனது இராணுவத்தில் கான்சாகிப் சேர்த்து வந்தார்.

* 1959 மே கலைமகள், ந., சஞ்சீவி, கம்மந்தான் கான்சாகிபு பக்கம் 14

** துர்க்காதாஸ் எஸ். கே. ஸ்வாமி "தமிழ்வீரன் பூலித்தேவன்" பக்கம் 133

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சார்லஸ் காம்பெல் என்ற கும்பினியத் தளபதி தலைமையில் சென்ற படை மதுரையில் கான்சாகிபோடுபோரிட்டது. கான்சாகிப்பின் நண்பர்கள் பிரெஞ்சு தளபதி மார்ச்சர், தலைமை அமைச்சர் சீனிவாசகராஜ் ஆகியோர் கூட இருந்தே குழி பறித்து, பக்கமிருந்தே பள்ளம் தோண்டும் பணிகளில் ஈடுபட்டனர்.

தமிழகத்தின் வரலாற்றிலேயே இதுவரை நடந்திராத மாபெரும் சுதந்திரப்போர் மதுரை நகரிலே நடைபெற்றது. அந்தப் போரிலே ஆதிக்க வெறிபிடித்த வெள்ளையரும், விடுதலை ஆர்வமிக்க தமிழர்களும் (கான்சாகிப்பின் தலைமையில்) வெற்றி தோல்விக்கிடமின்றி வீராவேசத்துடன் போரிட்டனர்* வருடம் ஒன்றுக்கு மேலாகியும், போர் முடிந்தபாடில்லை.

1764 அக்டோபர் 13ம் நாள் கான்சாகிபு தொழுகையில் ஸுஜுதுக்குச் செல்லும் வேளையில் நயவஞ்சகமாகப் பிடித்து 1764 அக்டோபர் 15ல் பெரிய மாமரத்தில் தூக்கிலிடப்பட்ட போது மூச்சை அடக்கிப் பழக்கப்பட்ட அவர் இரண்டு முறை திரும்பவும் எழுந்து நின்றார். கடைசியில் அவரே சாவைத் தழுவிய போது தலையை வெட்டி திருச்சிக்கும், உடல் உறுப்புக்களை மதுரை, தஞ்சை, பாளையங்கோட்டை, திருவாங்கூர் முதலிய இடங்களுக்கும் துண்டு துண்டாக வெட்டி அனுப்பி வைத்தனர்.

ஏழைக்குடியானவரின் மகனாகப் பிறந்து எந்த சுதேசியாலும் சாதிக்க முடியாத அளவிற்கு கடும் போர் புரிந்து, துரோகத்தாலும், கயமையாலும் கான்சாகிப் என்ற சுதந்திர மலரை கசக்கிப் போட்டார்கள் கம்பெனியார்.

---

* முந்தைய நூல் பக்கம் 137

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடுதலைவீரரின் நினைவுச் சின்னமாக அவரின் அடக்கஸ்தலம் மதுரைக்கு மேற்கே இரண்டு மைல் தூரத்தில் சம்மட்டிபுரத்தில் இன்றும் இருக்கிறது* இந்த மாவீரன் பெயரால் கான்சாபுரம், குமந்தாபுரம் என்ற ஊர்கள் இன்றும் தென் தமிழகத்தில் உள்ளன.

* 1958 ஜனவரி ''மணிவிளக்கு இதழில் இந்திய ஆதிக்கத்திற்கு எதிராக முதல் முழக்கமிட்ட மாவீரர் மதுரை மாவட்டத்தின் காவலர் ''கான்சாகிபின் கடைசி நாட்கள்'' என்ற மஹதி அவர்களின் கட்டுரை பக்கம். 35

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகம்மது தம்பி யூசுப் லெப்பை

(கட்டபொம்மன் காலத்தில்)

அன்றைய நெல்லைச் சீமை பாஞ்சாலங்குறிச்சியில் 3—1—1760-இல் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தார். 2—2—1790ல் அவர் பட்டத்திற்கு வந்தார். 1793-லிருந்து கிழக்கிந்திய கும்பெனியார் தொடர்ந்து ஆறு ஆண்டு களாக கப்பம் கேட்டு வந்தார்கள். 1798-இல் ஆலன் என்ற ஆங்கிலேயர் திரும்பவும் கம்பெனியாருக்கு திறை செலுத்தக் கேட்டு பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்கு வந் தார். கலெக்டர் ஜாக்சனை கட்டபொம்மன் ராமநாத புரத்தில் சந்திக்க வேண்டுமென்று சொல்லிச் சென்றபோது ரணசிங்கனும், துரைசிங்கமும், சின்னபொம்மையாவும், சிவசுப்பிரமணிய பிள்ளையும் இது கேட்டு சீறினர், வீரர் ஊமத்துரை உறுமினார்.

24—8—1798-இல் காலகத்தி வருடம் ஆவணி மாதம் ஒன்பதாம் தேதி வியாழக்கிழமை தசமி தினத்தன்று ஜாக் சனைக்காண கட்டபொம்மனுடன் வேலாளர், வாளார், வில்லாளர் முதலிய நாலாயிர வீரர்கள் புறப்பட்டனர்*

இந்திய விடுதலை வரலாற்றில் தமிழக முஸ்லிம்களின் பங்கு என்று எழுதக்கேட்டால் வீரபாண்டிய கட்ட பொம்மனைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கிறாயே என்ற எண்ணம் எழும்;

இரண்டிற்கும் உறுதியான சம்பந்தம் இருக்கிறது என்பதைக் காண்போம். கட்டபொம்மனுடன் ஜாக்சனைக் காண இராமநாதபுரம் சென்ற 4000 படை வீரர்களைப் பற்றிய குறிப்பு வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப் பாடலில் இருக்கிறது.

---

* ஜெகவீரபாண்டியனார், பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம்- முதல் பாகம்-பக்கம் 95.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தக் கதைப்பாடல் இஸ்லாமியத் தோழர் ஒருவர் பதிப்பித்து அவர் இட்டுக்கட்டி சேர்த்திருப்பாரோ என்று எவராவது எண்ணிட வேண்டாம். அன்றைய மதுரைப் பல்கலைக்கழகம் (இன்றைய மதுரை காமராசர் பல்கலைக் கழகம்) நாட்டுப் பாடல்களைத் தொகுத்து 1971ல் வெளியீடு செய்தது. முதலாவது நாட்டுப்பாடல் வெளியீடு நூலான 'வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல்' நா. வானமாமலை அவர்கள் பதிப்பித்தது அதில் பக்கம் 33ல்.

கட்டபொம்மனுடன் இராமநாதபுரத்திற்கு ஜாக் சனைக் காணச் சென்ற படைவீரர்கள், போர்த்தள கர்த்தர் க்ளைப் பற்றி குறிப்பிடும் போது வரிசையாக சொல்லிக் கொண்டே வரும் போது

''மம்மது தம்பியும் முகம்மது தம்பியும் மார்க்க
முள்ள தம்பி வரிசையுந்தான்
தர்மகுணவான் புராமுசாயுபும் தம்பி
இசுமாலு ராவுத்தனும்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிரஞ்சீவி என்பவர் எழுதிய 'வீரபாண்டிய கட்ட பொம்மன்' நூலில் அதைப்பற்றி வரும் இடத்தில் பக்கம் 211ல்,

''மம்மது தம்பி, முகம்மது தம்பியும்,
மார்க்கமுள்ள சின்ன வரிசையும்,
தர்மகுணவான் இபுராமுசாகிபும்,
தம்பி பிசுமாலு இராவுத்தனும்''

என்று அதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அன்றைய சென்னை அரசாங்கத்தின் (இன்றைய தமிழ்நாடு) பதிப்புத் துறையினரால் ஒரியண்டல் மானுஸ்கிரீப்ட் வரிசையில் 67வது நூலாக 1960-இல் 'டி. சந்திரசேகரன்' என்ற அரசு மானுஸ்கிரீப்ட் நூலகப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாதுகாவலர் பதிப்பித்த ''கட்டபொம்மன் வரலாறு'' என்ற நூலில் பக்கம் 10ல் அதே விஷயத்தைச் சொல்லும் போது

''மகம்மதுத் தம்பி ஈசுப்பு லெப்பையும்,
மார்க்கமுள்ள குப்பை இராவுத்தனும்
தர்மகுணவானும் மாமுஞ்சாமியுந்
தம்பி இஸ்மானு ராவுத்தனும்''

என்ற வரிகளைக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு 27 பக்கங்களில் விளக்கம் எழுதிய அவரே பக்கம் 92ல்

''மகமதுதம்பி ஈசாப்பு லெப்பை குப்பராவுத்தன் இஸ்மான் இராவுத்தன்'' என்றும் சொல்லியிருக்கிறார்.

இவைகளை ஆய்ந்து பார்க்கிறபோது முகம்மது தம்பி, யூசுப் லெப்பை இரண்டும் ஒரே பெயராகவோ அல்லது தனித்தனியாகவோ இருக்க வாய்ப்புள்ளது. வரிசை என்பது சின்ன வரிசை என்று வழங்கும் பெயரைக் குறிக்கலாம். குப்ப ராவுத்தன் என்பது இப்ராகீம் இராவுத்தர் என்பது மருவி இருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். இஸ்மான் ராவுத்தன் என்பது இஸ்மாயில் ராவுத்தர் என்பதை எளிதில் எவரும் உணர்வர்.

கட்டபொம்மன் ஜாக்சனை பேட்டிகாணச் செல்லும் போது உடன்சென்ற பாதர் வெள்ளை போன்ற முக்கியமான வீரர்கள் நூறு பேருக்குள்ளாகவே அந்தப் பாடலில் பெயர்களை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள். அதில் மேற்குறிப்பிட்ட முஸ்லிம் வீரர்கள் நால்வரின் பெயரும் இடம் பெற்றிருக்கிறது.

10—9—1798-இல் ஜாக்சனை கட்டபொம்மன் சந்தித்ததும், அங்கே லெப்டினன்ட் கிளார்க் (Clarke வெட்டிக் கொல்லப்பட்டதும், இங்கு நடந்த போரில் கட்டபொம்மன் தப்பி வந்ததும், சுப்பிரமணிய பிள்ளை பிடிபட்டதும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5—9—1799-ல் பாஞ்சாலங்குறிச்சியில் திரும்பவும் போர் மூண்டதும், 16-10-1799-ல் கட்டபொம்மன் கயத்தாற்றில் கட்டைப் புளியமரத்தில் தூக்கில் தொங்கவிடப்பட்டதும் சரித்திரத்தின் பின் நிகழ்ச்சிகள்.

ஊமத்துரையும் இஸ்லாமியர்களும்

கட்டபொம்மனுக்குப்பின் செவிடும் ஊமையுமாய் பார்ப்பதற்கு நோயாளியைப்போல காட்சி அளித்த போதும், அசாதாரணமாகத் திகழ்ந்த அசாத்திய வீரரான ஊமத்துரையை (3—1—1760 - 30-11-1801) "Mookah" வாய்பேசத் தெரியாதவர் என்று இஸ்லாமியர் உருதுவில் பாசத்துடன் அழைத்த செய்தியை கர்னல் வெல்ஷ் தனது இராணுவ நினைவுகள் என்ற நூலில் முதல் பாகத்தில் (1830-இல் எழுதியது) பக்கம் 131-ல் தெரிவித்திருக் கிறார். அதிலிருந்து ஊமத்துரையுடன் பல இஸ்லாமிய சகோதரர்கள் உடனிருந்த செய்தியை உறுதிப்படுத்து கிறது. கட்டபொம்மன் மறைந்ததற்குப் பின்னும் ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் நடத்தி போராடிக் கொண்டிருந்த ஊமத்துரையுடன் முஸ்லிம்கள் உடனி ருந்தபோது அவருடன் போரில் பங்கேற்றிருப்பர் என்ப தனை சொல்லித்தான் விளங்கவைக்க வேண்டும் என்ப தில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முஹம்மது ஹசம்

(மருதுபாண்டியரின் காலத்தில் புரட்சித் திட்டங்கள்)

மதுரைப் பகுதியில் மருதுபாண்டியரும், திண்டுக்கல் திருச்சி பகுதியில் கோபால்நாயக்கரும், கோயம்புத்தூர் சேலம் பகுதியில் கனிஷாகானும், மலபாரில் கேரளவர்மாவும், மேலமைசூரில் கிருஷ்ணமநாயக்கும் வடகன்னடத்தில் துண்டாசிலாக்கும், தலைமையேற்று பிரிட்டிஷாரைத் தொடர்ந்து எதிர்க்க வேண்டுமென்று திண்டுக்கல்லில் 29—4—1800ல் கூடி முடிவு எடுத்தனர். அதில் கோயம்புத்தூரில் உள்ள பிரிட்டிஷாரின் இராணுவக் கோட்டையைத் தாக்கிடவும் முடிவு செய்யப்பட்டது. திப்புசுல்தானின் படையில் பணியாற்றிய கனிஷாகான் 4000 குதிரைப்படைகளுடன் கோயம்புத்தூருக்கு வர அப்போது அங்கே உறுதியும் அளித்தார்.

3—6—1800-இல் கோயம்புத்தூரில் இருக்கும் லெப்டினென்ட்கர்னல் மாக்கலிஸ்டர் என்ற ஆங்கிலேயரின் தலைமையிலான 5வது படைப்பிரிவினர் தங்கியுள்ள கோயம்புத்தூரைத் தாக்கிடவும், சுதந்திரக் கிளர்ச்சிப் படையின் முதல் தாக்குதலுக்கு இச்சபட்டி அமில்தார் சேக்உசைனை தலைமை தாங்கச் செய்யவும் ஆங்காங்கே பிரிட்டிஷாருடன் கொரில்லாத் தாக்குதல் நடத்திடவும், தீர்மானிக்கப்பட்டது. கி. பி. 1800 ஏப்ரல் கடைசியில் விருப்பாட்சியில் கூடி புரட்சியாளர்கள் தாக்குதலை நடத்தத் திட்டமிட்ட போது கோயம்புத்தூர் தாசில்தார் புரட்சியின் விபரம் அறிந்து தகவல் தர ஆங்கிலேயர் ஆயத்தப்படுத்தப்பட்டு ஐரோப்பிய மற்றும் ராஜபுதனப் படை வீரர்களை முக்கிய இடங்களில் தயாராக வைத்துக் கொண்டனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓசூரைச் சேர்ந்த புத்தே முகம்மதும், மற்றவர்களும் வெள்ளையரைத் தாராபுரத்தில் தாக்கினார்கள். இச்சபட்டியைச் சேர்ந்த ருனனூல்லாகான் தலைமையில் காங்கேயத்தில் வெள்ளையர்படை தாக்குதலுக்குள்ளானது. முகம்மது ஹசம் தலைமையில் கோயம்புத்தூரைத் தாக்கப் புறப்பட்டு அவர்கள் தாராபுரத்தை நெருங்கினார்கள்.

30—5—1800-இல் காப்டன் ஜோன்ஸ் தலைமையிலான படையினர் சத்தியமங்கலத்தில் புரட்சிப்படையினருடன் மோதி, வேறு வழியின்றி சுதந்திரக் கிளர்ச்சியாளர்கள் அரிப்பாளையம் மலைக்குப் பின்வாங்கினார்கள். அதே நேரத்தில்தான் திண்டுக்கல், சிவகங்கையிலிருந்து திருநெல்வேலிக்கு ஊமைத்துரைக்கு ஆதரவாகப் புரட்சிக் கூட்டத்தினர் சென்று பாளையங்கோட்டை சிறை உடைத்து மீண்டனர்.

தாராபுரம், சத்தியமங்கலம், தல்லாமுல்லா இடங்களில் பிரிட்டிஷாரின் இராணுவ முகாம்களைத் தாக்க முயன்று பிரிட்டிஷ் படைகளை மட்டும் சுதந்திரக் கிளர்ச்சியாளர்கள் தல்லாமுல்லாவில் தோல்வி காணச் செய்தனர்.

முஹம்மது ஹசம்

உண்மையான நாட்டுப்பற்றோடு, சுதந்திர தாகத்தோடு போர்க்களத்திலிருந்து முஹம்மது ஹசம் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்த சுதந்திரப் போர்த் தலைவர்களின் முக்கியக் கடிதங்களை எதிரியிடம் சிக்குவதற்கு முன்பே அவர் அழித்தெறிந்தார்.

அவரை எவ்வளவோ துன்புறுத்தியும் முகம்மது ஹசமிடமிருந்து எந்தவிதத் தகவலும் பெறமுடியவில்லை. எதிரிகளிடம் அகப்பட்டுக் கொண்ட முகம்மது ஹசம் 8-6-1800 இல் தனது கழுத்தை தானே வெட்டிக் கொண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மரணத்தை தழுவிக் கொண்டார்* என்று அரசு ஆவணங்கள் இன்றும் அந்த வீரத்திருமகனின் வரலாற்றை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்தப் புரட்சிக் கிளர்ச்சியாளர்கள் எந்தவித பாதகங்கள் ஏற்பட்டாலும், பயப்படாமல் தேசபக்திக்கு தேசத் தொண்டுக்கு துடித்தெழுந்து சேர்ந்த பச்சமுகம்மது, ரமானுல்லாகான் போன்றோர் ஈரோடு அருகே பெருந்துறை கிராமத் தலைவர் சின்னன்கவுண்டரிடம் தாங்களாகவே வலியச் சென்று படையில் சேர்ந்து கொண்டார்கள். சேலம் கலெக்டர் உத்திரவுப்படி இராணுவக் கோர்ட்டில் 42 பேர், இரண்டு பிராமணர்கள் ஓரிருவர் இந்துக்கள் மீதி அனைவரும் முஸ்லிம்கள் விசாரிக்கப்பட்டனர். மொய்தீன்கான், புத்தேமுகம்மது, கனிஷாகான், தாராபுரம் செய்யது முகம்மது, திருச்சி முகைதீன், சும்னஸ்கான், முகைதீன்கான், மான்கான், கோவை அமல்தார் ருன்னாமுஸ்தாக்கான், செய்யது இமாம், பீர்சாகிபு, சேக்மீன், சேக்அலி, முகம்மது ஹசத்தின் குலாம்பாயான ஹைதர்கான், சுமாங்கான் அலிசாகிபு ஷெலாகான், அலிசாகிபு, முத்தாசாகிபு, முகம்மதுசாகிபு, உசேன்சாகிபு, செய்யது மொய்தீன், சேக்மதார் சேக்பூதின், குலாம் உசைன்சேக்அலி, பீர்முகம்மது, குலாம்அலி, அப்துல் காதர் ஷாமங்கான், ஷலார்கான், சின்னஅப்துல்காதர், முகம்மது ஷெரீப், சேக்மீரான் மிர்குமருதீன்கான், சேக் முகம்மது டிலார்வர், பீர்முஸ்கப்பஅலி, ஆகியோர் இராணுவக் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டவர்கள். இவர்கள் அனைவரையும் 8 பேரை தாராபுரத்திலும், 7 பேரை சத்தியமங்கலத்திலும் 6 பேரை கோயம்புத்தூரிலும், மீதிப் பேர்களை பற்பல இடங்களிலுமாக மொத்தம் 42 பேர்களையும் பொது இடத்தில் கம்பெனியார் தூக்கில் போட்டார்கள். ஆனால் ஒரு கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட

* B. Hurdis, Board of Revenue, 10 June 1800, Proceedings vol. 255, PP 5576-83.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தைப் பற்றி மட்டும் தரன் வரலாற்றில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களின் இந்தத் தியாக வரலாறோ, அரசு ஆவணக் களஞ்சியங்களில் மட்டும் அடங்கிக் கிடக்கிறது*

இவர்களைப் போன்று இனந்தெரியாமல் எத்தனை எத்தனை இளம் முஸ்லிம் வீரர்கள் இத்தரையில் தம் தாய்நாட்டு விடுதலைக்கு தங்களின் உயிரைத்தாரை வார்த்தார்களோ!

* (Board of Revenue 18 September 1800, proceedings, Vol, 262, pp 8093 - 8095).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேக் உசேன்

(மருதுபாண்டியரின் மறைவிற்குப்பிந்தியவர்)

இராமநாதபுரம் அருப்புக்கோட்டைக்கு கிழக்கே 18 மைல் தூரத்தில் முக்குளத்தில் 1748-ல் உடையார்சேர்வை என்ற மொக்க பழனியப்பன் சேர்வையின் மகனாகப் பிறந்த பெரிய மருதுவும், 1753-இல் பிறந்த சின்ன மருதுவும் வீரத்திற்கும், விசுவாசத்திற்கும், நாட்டுப் பற்றுக்கும் இலக்கணமாய் விளங்கிய மானங்காத்த மருது பாண்டியர்கள் ஆவார்கள்.

இராமநாதபுரம் மறவர் சீமையை கும்பினிப் படைகள் வளைத்துக்கொண்ட போது, சிவகங்கைச் சீமையின் அதிபதியாக இருந்த முத்து வடுகநாதர் போரில் கொல்லப் பட்டதும், அவரது மனைவி வீராங்கனை வேலுநாச்சியார் மருதுசகோதரர்களுடன் திண்டுக்கல்லில் இருந்த ஹைதர் அலியிடம் அடைக்கலம் புகுந்தனர். காலப்போக்கில் ஹைதர் அலியின் உதவியுடன் திரும்பவும் சிவகங்கைச் சீமையை மருதுபாண்டியர் ஆட்சி புரியத் துவங்கினார்.

கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதற்குப் பின்னால் ஊமத்துரை சிவகங்கைச் சீமையில் அடைக்கலம் புகுந்ததும், ஆங்கிலேயர் வெகுண்டதும், பெரும் போர் நடந்ததும், கடைசியாக காளையார்கோவில் பிடிபட்டதும் ''ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டவிடாது பெருங்கேடு சூழ்ந்த சிவகங்கையை அடக்கிவிட்டோம்'' என்று சென்னை இராணுவ வரலாற்றில் மேஜர் விபர்ட் சொல்லியதும், 27—10—1801-இல் மருதுபாண்டியர்கள் தூக்கிலிடப்பட்டதும், உடலைத் திருப்பத்தூரிலும், தலையை காளையர்கோவிலிலும் அடக்கம் செய்யப் பட்டதும், இன்றும் அந்த மானங்காத்த மருதிருவரின் வீர வரலாறு வழிவழியாக தமிழகத்தில் போற்றப்பட்டு வருவதும் நாம் அறிந்த செய்திகளாகும். இந்த வீரவரலாற்றில் முஸ்லிம்களின் பங்கினைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமநாதபுரம், திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளின் கலெக்டராயிருந்த லூஷிங்டன் 24—12—1800-ல் அரசுக்கு அளித்த அறிக்கையில் மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்டதற்குப் பின்னால் தென்னாட்டில் ஓங்கி உயர்ந்து நின்ற கோட்டைகள் எல்லாம் தரைமட்டமாக்கப் பட்டதையும், தொன்று தொட்டு வாளும், வேலும் ஏந்திய வீரவாழ்வு வாழ்ந்த மற்றவர்களிடமிருந்த பல ஆயிரக்கணக்கான போர்க்கருவிகளும், பறிமுதல் செய்யப் பட்ட விபரத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

மருதுபாண்டியரைச் சேர்ந்த வீரர்களும். உறவினர்களும் வேட்டையாடப்பட்டார்கள்* பதினைந்து வயதான சின்னமருதுவின் இளையமகனான துரைசாமி என்பவரும் மற்றும் 71 பேரும் நாடு கடத்தப்பட்டதையும், அதன் பின் நடந்த சரித்திரத்தின் சோகச் சம்பவங்களையும், கற்போர் மனமும் கசிந்து உருகும் விதத்தில் கர்னல் ஜேம்ஸ் வெல்ஸ் எழுதி இலண்டனில் 18—6—1830-இல் வெளியான அந்த நூலின் முதல் வால்யும் பக்கம் 133, 135ல் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்.

மலாய்மொழியில் பாக்குத்தீவு என்று வழங்கப்பட்ட பூலோபினாங் என்ற பினாங்குத் தீவிற்கு 11—12—1802ல் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து அட்மிரல் நெல்சன் என்ற பதினைந்தாயிரம் ரூபாய்க்கு பம்பாயிலிருந்து வாடகைக்கு வரவழைக்கப்பட்ட கப்பலில் 72 வீரர்களை கைகளில் விலங்கு பூட்டி அழைத்துச் சென்று பயணத்தின் போது கொண்டு சென்ற அரிசி, பருப்பு உணவுப் பொருட்கள் காலியாகி 3 பேர் கப்பலிலே பசியால் செத்துப் போய், 75 நாட்கள் பயணத்திற்குப் பின் பினாங்குதீவின் கரையில் இறக்கி, கார்வாலிஸ் கோட்டைக்கு வெளியே வாடகைக்கு அமர்த்திய வீட்டில் அடைத்தனர். சின்ன மருதுவின் புதல்வர் முத்துவடுகு என்ற துரைசாமியுடன் சென்ற

* ந. சஞ்சீவி "மருதிருவர்" பக்கம் 164, 165.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்ற 71 சுதந்திரப் போர் கைதிகளின் பட்டியல் "Military Consultations, Vol. 307" (19-1-1803) பக்கம் 1249-ல் குறிக்கப்பட்டிருக்கிறது*

பினாங்குத்தீவிற்கு அனுப்பப்பட்ட 72 பேரில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவரது பெயர் சேக்உசேன்.

அமிர்தார் சேக்உசேன்

இச்சப்பட்டி அமிர்தார் சேக்உசேன் 1800-இல் திண்டுக்கல்லில் நடைபெற்ற சுதந்திர கிளர்ச்சியாளர்களின் கூட்டத்தில் சிறந்த தளபதி.

ஆங்கிலேயரின் கோயம்புத்தூர் கோட்டையைத் தாக்கிட இவரது தலைமையில் தான் படையினரை அனுப்புவதென்று திண்டுக்கல்லில் முடிவு செய்யப்பட்ட செய்தியை ஏற்கனவே, சொல்லப்பட்டிருக்கிறது. திண்டுக்கல் புரட்சிக்கூட்டத்தின் எழுச்சி வீரரும், சிறந்த போராளியுமான சேக்உசேன்** கோவைத் தாக்குதலுக்கு கிளம்பிட ஊரிலிருந்து தன்னுடன் நான்கைந்து வீரர்களை அழைத்துச் சென்றார். திண்டுக்கல் எழுச்சியில் பங்கேற்று போர்க்களம் சென்ற அவரை பின்னாளில் ஆங்கிலேயர் கைது செய்து பினாங்குத் தீவிற்கு அனுப்பி வைத்தனர்***

சேக்உசேன் போன்று இன்னும் எத்தனையோ முஸ்லிம் போர் வீரர்களும் தளகர்த்தர்களும், மருது பாண்டியர் படையிலும், அதற்குப் பின் ஏற்பட்ட எழுச்சியிலும், ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு மாண்டிருக்கக்கூடும் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

---

* டாக்டர். எஸ். எம். கமால் "மாவீரர் மருது பாண்டியர்" பக்கம் 182-184.

** K. Rajayyan, The First War of Independence, 1800-1801. P 274.

*** MADRAS COUNSIL, 20 Jan. 1802.
Military Consultations, Vol. 293, pp. 1318-1322.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜமேதார் ஷேக்காசீம் (1806) வேலூர் மௌலவி (1838)

(வேலூர் புரட்சியின் காலக்கட்டத்தில்)

தென்னாட்டுச் சிங்கம் ஹைதர் அலி

ஈராக்கின் பழங்காலத் தலைநகரான பாக்தாத்தில் இருந்து சிந்துவெளியில் உள்ள ஆஜ்மீரில் குடியேறிய ஹைஸனின் மகனான வலிமுகம்மதுவின் வழித்தோன்றலான, வத்தேமுகம்மதுவிற்கு 1721-இல் பிறந்தவரே ஹைதர்அலி. தென்னாட்டில் 1748 முதல் 1754 வரை சுழன்றடித்த கர்நாடகப் போர்ப் புயலின் கருவிலிருந்தே ஹைதர் அலியின் புகழ் முதிர்ச்சியுற்று வளர்ந்து தென்னக வாழ்வில் தழைக்கத்தொடங்கிற்று.*

தென்னாட்டின் போர்வாள் திப்புசுல்தான்

''வீரர்கள் சரிதை, வீழ்ந்த சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சி தரும் ஓர் சக்தி; வகை கெட்டுத் தடுமாறும் நாட்டிற்குவாழ வகை காண்பிக்கும் வழிகாட்டி. அந்தோ, நாம் இங்கு தீரர்களின் தியாகிகளின் சேவைகளை சிந்திப்பதில்லை, மதிப்பதில்லை, வீரர்தம் வாழ்வினைப் பற்றி விளம்புவதும் இல்லை நம்நாட்டு பாலபாடமும், இதற்கென அமையவும் இல்லை. ஆகவே, தான் நாம் கோழைகளின் கோமான்களாக, அச்சத்தின் ஆணிவேராக, எடுத்தார் கைப்பாவையாக இருந்து வருகின்றோம். இந்நிலை மாற வீட்டுக்கோர் வீரர்கள் சரிதை இருக்க வேண்டும்.** அந்த வீரரே தென்னாட்டின் போர்வாள் திப்புசுல்தான் என்றால் அது மிகையாகாது.

---

* கா. அப்பாத்துரை ''கன்னட நாட்டின் போர்வாள் ஹைதர்அலி'' பக்கம். 21

** டி.எஸ்.ஏ. ரசூல் ''தீரர் திப்பு'' நூலில் ஆசிரியர் குரலில் பக்கம் i,ii

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர், இஸ்லாத்தின் வீரர் மட்டுமல்ல, எக்குலத்தாரும் ஏகோபித்து விரும்பிப் போற்றத்தக்க பொதுவான மாமன்னரும் ஆவார்.

''ஆட்டு மந்தையாய் இருநூறு வருடங்கள் வாழேன் இரண்டு நாட்களாயினும், சிங்கமாய் வாழ்வேன்'' என்று ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சவால் விட்டு மார்பு காட்டி அஞ்சாது களத்தில் நின்ற தீரர் திப்பு, ஹைதர்அலிகானுக்கும், பாத்திமாபீவிக்கும், ஹிஜ்ரி 1163 துல்ஹஜ் 20-ம் தேதி சனிக்கிழமை (கி. பி. 1763) பிறந்தார்.

ஹிஜ்ரி 1213 துல்கார்த மாதம் பிறை 28ல் (1796–மே 4ல்) அந்த வீரஜோதி எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகளால் அணைக்கப்பட்டது.

டபிள்யூ. எம். கார்டன் 1799 ஜுன் 9-ம் தேதி சீரங்கப்பட்டணத்தில் இருந்து குறைந்த மதிப்பீட்டுடன் எழுதிய கடிதக்குறிப்பிலிருந்து 45, 58, 350, வராகன் தங்கம், வெள்ளி, மற்றும் பொருட்களும், 20க்கும் மேற்பட்ட நகைப்பெட்டிகள் திறக்கப்படாமலும், இராணுவத் தளவாடங்கள் மதிப்பும் சேர்க்கப் படாமலும், தங்க சிம்மாசனமும், வெள்ளி அம்பாரியும், 2000க்கும் அதிகமான பயனுள்ள நூல்களும், ஆக இப்படி மொத்தம் மூன்று கோடி வராகன் மதிப்பு திப்புவின் உடமை, வெள்ளையர்களால் கொள்ளையடித்துக் கொண்டு செல்லப்பட்டது.*

அம்மாவீரனை வீழ்த்தியதற்குப் பிறகும் விட்டு வைக்காது, திப்புவின் வீரப்பிள்ளைகள் பாத்ஹைதர் சுல்தான், முனுஉத்தீன்சுல்தான், அப்துல்காலிக் சுல்தான், முசிஉத்தின்சுல்தான், முகம்மது சுபான்சுல்தான், சுக்குருல்லா சுல்தான், குலாம் அகம்மது சுல்தான், குலாம் முகம்மது சுல்தான், சர்வார் உத்தீன் சுல்தான், முகம்மது

* சு. வழித்துணை ராமன், ''தீரன் திப்புசுல்தான்'' பக்கம் 243–250

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாசின் சுல்தான், ஜாமி உத்தீன் சுல்தான் ஆகிய பன்னிரெண்டு பேரில்* பலர் ஆங்கிலேயர்களால் கைதும் செய்யப்பட்டார்கள். அவர்கள் தங்கள் உறவினர்களுடன் வேலூர் கோட்டையில் சிறையும் வைக்கப்பட்டனர்.

இந்து மகாசபை சாவர்க்கர் அன்று சொன்னது

> 'இந்தியாவின் சுயேட்சை ஆங்கிலேயர்களால் சிறிது சிறிதாக அபகரிக்கப்பட்டு வருவதை முதன் முதலாக அறிந்து கொண்டவர்கள் புனா நானா பர்னலிஸூம், மைசூர் ஹைதர்சாகிபுமாவார். அதன்பின் தான் இதரர்களும் அவ்வுண்மையை உணர ஆரம்பித்தனர். 1806-ம் ஆண்டு மூண்ட வேலூர் சிப்பாய்களின் புரட்சியும், சுதந்திர தாகத்தையே மூலகாரணமாகக் கொண்டதாகும். பின்னர் ஏற்பட்ட முதலாவது சுதந்திர யுத்தத்திற்கு அது ஒரு ஒத்திகை போலும்''

இந்த வாசகங்கள் யாரால் சொல்லப்பட்டது தெரியுமா? பின்னாளில் இந்து மகாசபை இயக்கத்தை ஸ்தாபித்த வீரசாவர்க்கர் தனது ''எரிமலை'' அல்லது முதலாவது இந்திய சுதந்திர யுத்தம்'' என்ற நூலில் ''பிளாஸியில் செய்த பிரதிக்ஞை'' என்ற இரண்டாவது அத்தியாயத்தில் 1949-இல் ஜெயமணி ஸா. சுப்பிரமணியம் மொழி பெயர்ப்பில் பக்கம் 15-ல் கூறியுள்ளதே இது. தமிழகத்தில் நடைபெற்ற சுதந்திர யுத்தத்தின் ஒத்திகை வரலாற்றைத் தொடர்வோம்.

வேலூர் கோட்டையில் வீரர்கள்

தென்னிந்திய கிளர்ச்சியில் ஈடுபட்ட நாட்டுப் பற்றாளர்கள், தாங்கள் இழந்த வலிமையை திரும்பப் பெற்ற போது, 1806-இல் மற்றுமோர் போராட்டத்தை ஏற்படுத்தும் மிகவும் துணிகரமான, ஆனால் அப்போதைக்கு

* Mohibbul Hersen Khan, 'History of Tipu Sultan' p. 368.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறுதியான முயற்சியில் ஈடுபட்டனர். 1800-1801ம் ஆண்டின் மக்கள் கிளர்ச்சியை ஒடுக்கிய பின்னர், கிளர்ச்சியாளர்கள் வேலூரைத் தங்கள் நடவடிக்கைகளின் மையமாக்கினர். தமிழகத்தின் பல்வேறு பாளையங்களில் முறியடிக்கப்பட்ட தமிழ்நாட்டு சுதந்திரக் கிளர்ச்சியாளர்களில் எஞ்சியுள்ள வீரர்களை ஆங்கிலேயர்கள் தங்களின் அறியாமையால் வேலூர்க்கோட்டையில் வைத்திருந்தனர். 1806-ல் வேலூர் கோட்டைப் பாதுகாப்புப் படையில் ஐரோப்பிய துருப்புக்களைத் தவிர, 1801-ம் ஆண்டின் கிளர்ச்சியை ஒடுக்கிய பின்னர், திருநெல்வேலியில் திரட்டப்பட்ட இருபத்து மூன்றாம் படைப் பிரிவில் இரண்டாவது பட்டாளப் பிரிவின் அனைத்துக் கம்பெனிகளும், முதல்பட்டாளப் பிரிவின் ஆறு கம்பெனிகளும் இருந்தன.*

1500க்கும் மேற்பட்ட நம்நாட்டவரும், 379 ஐரோப்பியர்களும் அங்கு இருந்தனர். போரில் தோற்கடிக்கப்பட்டு, சொத்துக்கள் பறிமுதலாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட சுதந்திரக் கிளர்ச்சியாளர்கள், வேலூர் கோட்டையில் இருந்ததால், அது தமிழ் மற்றும் கன்னடப்பகுதியின் கிளர்ச்சிப் படையினர் சந்திக்கும் இடமாயிற்று. புரட்சி ஏற்படுவதையும், பிரிட்டிஷ் ஆதிக்கம் அழிக்கப்பட வேண்டும் என்பதையும் அவர்கள் அடிக்கடி கூடி ஆலோசித்தனர். இதில் மைசூர் வேங்கை திப்புவின் வீரப்பிள்ளைகளும், கலந்து கொண்டனர்.

1806 ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் வேலூரில் இருக்கும் படைவீரர்கள் புதுவிதத் தொப்பிகளை அணிய வேண்டுமென்று ஆங்கிலக் கம்பெனியின் படைத் தளகர்த்தர்கள் உத்திரவிட்டனர். இத்தொப்பிகள் கிழக்கிந்தியப் பாண்டு வாத்தியக்காரர்களின் குல்லாய்கள் போல் இருக்கின்றன. எனவே, நாங்கள் அவற்றை நிச்சயமாக அணிய முடியாது என்று உறுதியாக வீரர்கள் மறுத்துவிட்டனர்.

* கு. இராஜய்யன் "தமிழக வரலாறு" பக்கம் 207

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லெப்டினண்ட் கர்னல் டார்லியும், கர்னல் பான் கோர்ட்டும் இந்த நிலைமையை மேலிடத்திற்கு எடுத்துச் சொல்லிப் பார்த்தும் பலன் இல்லாது போயிற்று.

கல்நெஞ்சம் படைத்த கர்னல் அக்கினியூ கம்பெனியின் கட்டளைக்குப் பணிய மறுத்த வேலூர் சிப்பாய்களை பழிவாங்கவேண்டும் என்ற அடிப்படையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து 7—5—1806ல் எழுதிய கடிதம் உறுதிப்படுத்துகிறது.*

முஸ்லிம் வீரர் பெற்ற தொள்ளாயிரம் சவுக்கடி

உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த எண்ணங்களை மறைக்காமல் வெளியிட்ட வீரர்கள் கைக்குட்டைகளால் முக்காடிடப்பட்டுச் சென்னை கோட்டைக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். விசாரணைசெய்து வழக்கு நாடகம் முடிந்ததும் ஆங்கிலேயரின் நீதியின் பெயரால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஒரு முஸ்லிமுக்கும், ஒரு இந்துவுக்கும் முறையே தொள்ளாயிரம் சாட்டையடிகள் கொடுக்கப்பட்டன. சாட்டையடிகளால் பிழிந்து சக்கையாக்கப்பட்ட அவர்களை உத்தியோகத்தினின்றும் உதறி எறிய வேண்டும் என்றும் ஆங்கிலேயே அரசு உத்திரவிட்டது. மேலும் 19 பேருக்கு 500 சாட்டையடிகள் வழங்கப்பட்டது.**

இந்திய சுதந்திரத்திற்காக முதன் முதலாக தோளோடு தோள் நின்று தலா தொள்ளாயிரம் சாட்டையடிபட்ட அவ்விரு இந்து—முஸ்லிம் வீரர்களையும் அவர்களின் தேசீய ஒற்றுமை உணர்ச்சியையும், எண்ணும் போதெல்லாம் நம் உள்ளம் உருகுகிறது. மதத்தால் இந்துவானாலும், முஸ்லிமானாலும் தாய்நாட்டின் மானங்காக்கும் போராட்டத்தில் அனைவரும் ஒருதாய் வயிற்று மக்களே என்ற உணர்ச்சியை தட்டி எழுப்பி, விலங்குமனம்

* An Extract from the History of the Madras Army, Page 170

** த. சஞ்சீவி ''வேலூர் புரட்சி'' பக்கம் 43. 44

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படைத்த வெள்ளை வெறியர்களின் கொடுங்கோன்மைக்கு இரையான அந்த ஊர் பேர் தெரியாத வீரப்பெருமக்களின் தியாக உணர்ச்சியை தமிழகம் என்றென்றும், நன்றி உணர்ச்சியோடு நினைவில்கொண்டு போற்றுவோமாக என்று சொன்ன ந. சஞ்சீவி மேலும் இவ்வாறு தெரிவித்திருக்கிருர். டபிள்யூ. ஜே. வில்சன் என்ற அறிஞர் எழுதிய ''சென்னை இராணுவ வரலாறு'' பகுதி 3-இல் ''*தெரிவித்துள்ளபடி வேலூர்ப்படைப் பிரிவினருக்கு கும்பினி அரசாங்கம் புரிந்த கொடுமைகள் சிப்பாய்களின் உள்ளத்தில் பழி வாங்கும் உணர்ச்சியை முன்னிலும் அதிகப்படுத்தியது. வேலூர்க் கோட்டையில் நள்ளிரவு நேரங்களில் ரகசியக் கூட்டங்களும், புரட்சி வேலை செய்ய மன்றங்களும்நிறுவப் பட்டன. வேலூர் கோட்டைக்குள் இருந்தே திப்புவின் புதல்வர்கள் இதற்கு பேராதரவு தந்து கொண்டிருந்தனர். புரட்சி ஒன்று வேலூரில் வெடிக்கப் போவதாக பரவலாக பேசப்படும் நிலை வந்தது.

முஸ்லிமின் இடிமுழக்கம்

''ஆங்கில ஆட்சியே உன்
அந்திமக்காலம் நெருங்கி விட்டது''

என்று வேலூர் வீதிகளில் முஸ்லிம் பக்கிரி ஒருவர் ஓயாது முழங்கிச் சென்றார்**

ஜமேதார் ஷேக்காசீம்

இரவு நேரத்தை வேலூர் கோட்டையிலேயே கழிப்பதில் வெற்றி கண்ட வீரச்சிப்பாய்களுள் தலை சிறந்தவர் ஜமேதார் ஷேக்காசீம்.

1806 ஜூலை 9 இரவில் சொந்தக்காரணங்களுக்காக ஓய்வு எடுக்கச் செல்ல விரும்பிய கோட்டைத் தலைவாயில் காப்பாளரான வெள்ளை அதிகாரியின் விருப்பத்தை

---

* History of the Madras Army No-I III.
** ந. சஞ்சீவி ''வேலூர் புரட்சி'' பக்கம் 52, 53.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறிந்து, அவரிடம் வலியச் சென்ற ஜமேதார் ஷேக்காசீம் தானே அந்த கடமையைச் செய்வதாக பணிவாகப் பேசி, பக்குவமாக அந்தப் பொறுப்பைப் பெற்றுக் கொண்டார்.

வேலூர் புரட்சிக்குத் காரணமாக இருந்த சிப்பாய் களுள் மிகமிக முக்கியமானவரான ஜமேதார் சேக்காசீம்,* இவ்வளவு திறமையாக காரியத்தை சாதித்ததின் விளைவு மறுநாள் மூண்ட வேலூர் புரட்சிக்கு பெருந்துணையாக இருந்தது என்பதனை ந. சஞ்சீவி தெளிவாகச் சொல்லி இருக்கிறார்.

1806 ஜுலை 10 விடியற்காலை வேளையில் வேலூர் கோட்டை விடுதலை வீரர்கள் கையில். அன்று கோட்டை யில் கொந்தளிப்பு. கூடினர் கும்பனித் தளபதியர் லெப் டினன்ட் அண்ட் அட்சன்ட் ஈவிங், காப்டன் மார்க்லாசலன் தளபதிகள் மிட்சல், பேபி, ஜெனோர், சார்ஜெண்ட் பிராடி, லெப்டினென்ட் கட்க்ளிப், ஜோன்ஸ் ஆகிய எட்டு பேர் கூடி ஆலோசித்தனர். வேலூர் கோட்டையின் கொடிக் கம்பத்தில் சிவப்புத் துணியில் பச்சைக் கோடுகள் இட்டு நடுவே செங்கதிரோன் திகழ்ந்த மைசூர் திப்புவின் சீரியக் கொடி பறந்து கொண்டிருந்தது, அந்த சுதந்திரவீரர் களின் எழுச்சியின் போது.

379 வெள்ளையரில் 191 பேர் கொல்லப்பட்டனர். 45 ஆங்கிலேயரின் உடல் ஒரே கல்லறையில் அடக்கம் செய் யப்பட்டது. அருகில் இருந்த ஆற்காட்டுக்குத் தகவல் சென்றது. காப்டன் யங், லெப்டினன்ட் உட்ஹவுஸ், கர்னல் கன்னடி ஆகியோர் பெரும்படையுடன் வேலூருக்கு விரைந்து வந்தனர் எட்டு மணி நேரம் விடுதலை வீரர்கள் கையிலிருந்த வேலூர் கோட்டை அரை மணி நேரத்தில் திரும்பவும் ஆங்கிலேயர் வசமானது.

* கவிஞர் பெ. கிருட்டிணன் 'இந்திய விடுதலைக் காவியம்' பக்கம் 230.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

800க்கும் மேற்பட்ட இந்தியச் சிப்பாய்கள் படுகொலை செய்யப்பட்டனர். அப்போது வேலூரிலும், சுற்றுப்புறங்களிலும் 2222 சுதந்திர வீரர்கள் கைது செய்யப்பட்டனர்.*

வேலூரிலும், திருச்சியிலும் 600க்கும் மேற்பட்ட புரட்சி வீரர்கள் கைது செய்யப்பட்டு கைவிலங்குடன் இருந்தனர்.**

வேலூரிலிருந்து 1806 செப்டம்பர் 23ம் தேதி சென்னையில் இருந்த இராணுவப் பெருந்தலைவருக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாக புரட்சியாளர்கள் ஆறு பேர் பேய்வாய்ப் பீரங்கிகளால் பிளந்தெறியப்பட்டதையும் ஐந்து பேர் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதையும், எட்டு பேர் தூக்கிலிடப்பட்டு சாகடிக்கப்பட்டதையும், இரண்டு பேர் உத்தியோகத்திலிருந்து உதறிவிடப்பட்டதையும், பின் நாடு கடத்தப்பட்டதையும் அறிகிறோம்.

இதே காலகட்டத்தில் தான்,

1756 இல் பிறந்த தீர்த்தகிரி என்ற தீரன் சின்னமலை 1805-இல் சங்ககிரிக் கோட்டையில் தூக்கிலிடப் பட்டிருந்தார்.

1808-1809ல் திருவிதாங்கூர் சிற்றரசின் திவானாக இருந்த தளவாய் வேலுத்தம்பி ஆலப்புழையில் ஆங்கிலேயப் படையினரையும் படைத்தலைவரையும், கொன்று பகைவரின் வாளுக்கு இரையாகாமல் தனது வாளுக்கே தன்னை இரையாக்கி வீரச்சாவினை விரும்பி ஏற்றுக் கொண்டார்.

வேலூர் மௌலவியின் சுதந்திரவேட்கை

1838-ல் தன்னைத் துருக்கி நாட்டைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொண்ட ஒருவர் ஐதராபாத்திலிருந்து புறப்பட்டு கர்னூர், கடப்பை வழியாக வேலூர் வந்து

* W. J. WILSON 'History of Madras Army' p. 136
** A. F. Cox, 'North Arcot Manual'.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேர்ந்தார். அவரது பைகளில் புரட்சியைத் தூண்டவல்ல கடிதங்கள் பல இருந்தன. வெள்ளை அரசாங்கத்தினர் அவரைக் கைது செய்தனர். அதையொட்டி வேலூரில் 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் வேலூர் மௌலவி. இவர் ஆங்கிலேய ஆட்சியாளருக்கு விரோதமாகப் புத்தகம் எழுதினார், புரட்சி அனல் கக்கப் பேசினார் என்பதற்காக கைது செய்யப்பட்டார்.

துருக்கி நாட்டவர் என்று அழைக்கப் பட்டவர் முஸ்லிம் என்பதையும், வேலூர் மௌலவி தமிழக முஸ்லிம் என்பதையும், அவர்கள் 1838ல் நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலக் கம்பெனியாரை எதிர்த்து நின்று மாண்டுபோன வீர வரலாறு தமிழகத்தின் சுதந்திர சரித்திரத்தின் பக்கங்களில் இருப்பதை ந. சஞ்சீவி வேலூர் புரட்சியில் விரிவாகவே சுட்டிக்காட்டி இருக்கிறார்.

1869இல் எழுந்த கிளர்ச்சி

வேலூரின் வீரவரலாற்றில் 1869-மே 21ல் மீண்டும் சுதந்திரவீரர் கிளர்ச்சி எழும் நிலை ஏற்பட்டது. 1806-லும் 1838-லும், 1869-லும் வேலூரில் ஆங்கிலேயருக்கு எதிராக நடைபெற்ற விடுதலைப் போரில் பங்குபெற்ற ஊர் தெரியாத பெருமக்களில் எண்ணற்ற தமிழக முஸ்லிம்களும், பலியானதையும், அவர்தம் விபரங்களையும், கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

1806-இல் நடைபெற்ற வேலூர் புரட்சியில் திப்புவின் பிள்ளைகளுக்கும் பங்கு உண்டு என்று அறிந்த ஆங்கிலேயர் ஆண்டு ஒன்றுக்கு 2,24,000 பகோடா மானியம் வழங்கி அவர்களையும் கல்கத்தாவிற்கு நாடு கடத்தினார்கள். அது முதல் அங்கும், மற்ற இடங்களிலும் திப்புவின் வாரிசுகள் இன்றும் இருந்து வருகிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னை மௌலவி
அகமதுல்லாஹ் (எ) அகமதுஷா
(1857)

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக அபாயகரமான இரகசிய யுத்தம் பல வருடங்களாக நடந்து வருகிறது. இதை நடத்தினவர்கள் யார், யார் என்று தெரியாவிட்டாலும், அவர்கள் ஏராளமானவர்கள்.*

பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் ஆணிவேரையே அசைத்த, 1857-இல் நடைபெற்ற, இந்தியச் சிப்பாய்களின் இணையில்லா எழுச்சிக்கு முன்பே 1818-இல் காட்சி, மாஹித்பூர், 1843-இல் மகராஷ்பூர், மியானி 1845-இல் பிரோஜ்ஷா 1848-இல் சிலியன்வாலா கூர்ஜரம் யுத்த களங்களில் ஆங்கிலேயரை எதிர்த்து நடைபெற்ற போர்களில் எண்ணற்ற இந்தியர்கள் களப்பலியாயினர்.

1857 புரட்சி ஏன்?

வாரிசு இல்லாமல் சாகும் இந்திய மன்னர்களின் ராஜ்யத்தை பிரிட்டிஷ் இந்தியாவுடன் இணைக்கும் திட்டத்தில் 1848 - 1854க்கும், இடைப்பட்ட காலத்தில் மட்டும் பன்னிரெண்டு ராஜ்யங்கள் ஆங்கிலேயர்களால் இணைக்கப்பட்டன.

டல்ஹௌசியின் நில உரிமைக் கொள்கையினால் தக்காணப் பிரதேசத்தில் மட்டும் 20,000 ஏக்கர் நிலம் பறிமுதல் செய்யப்பட்டது. இந்தியப் படைவீரர்களின் துப்பாக்கிகளில் தோட்டாக்களைப் புகுத்துவதை சுலபமாக்க பன்றி, பசுக்கொழுப்புக்களை தடவிடச் சொல்லப் பட்டது.

---

* அசோக்மேத்தா "இந்தியாவின் முதல் புரட்சி 1857"
எஸ். எஸ். மாரிசாமி, மொழிபெயர்ப்பு நூல் 1947 பக்கம். 8

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவைகளினால் ஆத்திரமுற்ற உரிமை இழந்த இந்திய அரசர்கள், நிலம்இழந்த நிலப்பிரபுக்கள், மத உணர்வால் பாதிக்கப்பட்ட வீரர்கள், அன்னியரான ஆங்கிலேயரை விரட்டிட வேண்டுமென்ற ஆர்வத்தால் உந்தப்பட்ட நாட்டு இளைஞர்கள், கொதித்தெழுந்தனர். 1857-மே 10ல் மீரத்தில் புரட்சி துவங்கி, டில்லி, அலகாபாத், லெட்சுமணபுரி, அயோத்தி, கான்பூர், ஜான்சி, பரிலீ, குவாலியர், வடநாடெங்கும் புரட்சி கொழுந்துவிட்டெரிந்தது. புரட்சியினை அடக்கிட இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் இராணுவத்தினர் மட்டும் போதாது என்ற நிலையில் 1857-ஜூன் 18லிருந்து புரட்சி நடைபெற்ற காலக்கட்டத்தில் இங்கிலாந்திலிருந்து கப்பல் மூலம் அனுப்பப்பட்ட காலாட்படை 24,884 குதிரைப்படை-3826 பீரங்கிப்படை-2344 இது தவிர நில வழியே அனுப்பப்பட்ட பீரங்கிப்படை, அவைகளை இயக்கிடும் எஞ்சினியர்கள், நன்னம்பிக்கை முனையிலிருந்து அனுப்பட்ட 4000 பேருடன், மொத்தம் 35,599 படைவீரர்கள் இந்தியாவிற்கு வந்தனர்.*

இந்தியாவில் 1857 புரட்சியின் ஆரம்ப கட்டத்தில் இரண்டு மாதத்தில் பல லட்சக்கணக்கான துப்பாக்கிகளும், இதர ஆயுதங்களும், முஸ்லிம்களிடமும், மற்ற சுதேசிகளிடமும், விற்பனையானது.**

1857ஆம் ஆண்டில் சீரங்கப்பட்டினத்து முஸ்லிம்கள் ஒன்று கூடி டெல்லிப் புரட்சியாளர்களின் வெற்றிக்காகத் திப்புசுல்தானின் கல்லறையில் முறையாக வேண்டுதல் புரிந்தனர்.***

ஜாஜர்நவாப், பலக்பாராநவாப், பரூகாபாத்நவாப், ஆகியோர் புரட்சிக்குப் பின் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார்கள்.

---

* 1857 அக்டோபர் 30 ல் கார்ல்மார்க்ஸ் எழுதி 1857 நவம்பர் 14ல் நியூயார்க் டெயிலி டிரிப்யூன் தலையங்கத்தில் பிரசுரித்தது.

** அலெக்ஸாண்டர்டப் "இந்தியப் புரட்சி" பக்கம் 73

*** Mohamed 'SAHIFA'-I, TIPPU SULTAN, Vol. I page 29.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

24 ஷாஜாதஸ்களை 1857 நவம்பர் 17-இல் டில்லியில் தூக்கிலிட்டார்கள். 2 பேர் மன்னரின் மைத்துனர்கள், 2 பேர் மருமக்கள் பாக்கிப் பேர்களெல்லாம் மன்னரின் நெருங்கிய உறவினர்கள்.

மொகலாய அரசின் ராஜபரம்பரை பிரதிநிதியான டில்லி அரசர் பகதூர்ஷா இராணுவ நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டு ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார்.

பிரிட்டிஷாரின் அடக்குமுறைகளுக்கு அதிகம் அவதிக்குள்ளானது முஸ்லிம்கள்தான். டில்லியை ஆங்கிலேயர் திரும்பவும் மீட்ட போது 1859 வரை முஸ்லிம்களுக்கு திரும்ப வந்து குடியேற அனுமதி தரப்படவில்லை. அவர்களது வீடுகளைக்கூட ஆங்கிலேயர் பறிமுதல் செய்தார்கள். தங்கள் அசையாச் சொத்து மதிப்பில் நூற்றில் முப்பத்தைந்து பங்கினைப் போராடியதற்காக தண்டமாக விதிக்கப்பட்டது. ஆனால் இந்துக்கள் விஷயத்தில் அபராதம் 10 சதவிகிதம் தான் இருந்தது*

1857-இல் சர்க்கார் வருமானம் 15,000,000 பவுன் பற்றாக்குறையாயிற்று. நாடெங்கும் பல கஜனாக்களை புரட்சியாளர்கள் கொள்ளை அடித்ததுடன், ஆங்கிலேய அரசு சொத்துக்களை நாசமும் செய்தனர் புரட்சியை அடக்க 46,000,000 பவுன் செலவு செய்யப்பட்டது.

யுத்த களத்தில் வீழ்ந்த இந்திய சிப்பாய்கள் 30,000 பிரிட்டிஷாரோடு ஆயுதம் தாங்கி போர் செய்தவர்கள் 10,000 காயத்தாலும, கஷ்ட, நஷ்டங்களாலும், சட்டப்படி கொடுத்த தண்டனைகளாலும், இருவருட காலத்தில் மாண்ட சிப்பாய்களின் எண்ணிக்கை ஒரு லட்சம் (தாய் நாட்டின் விடுதலையை எண்ணி வீரமரணத்தை ஆரத்தழுவிய இந்தியாவின் புகழ்மணிகள் தொகை

---

* பி சி ஜோஷி "புரட்சி 1857 ஓர் ஆய்வரங்கு" பக்கம். 69

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2 லட்சத்திற்கும் மேல் இருக்கும்) வெற்றி பெற்ற வெள்ளையருக்கும் நஷ்டம் இருக்கத்தான் செய்தது*

விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்களின் பங்கிற்கும் இந்த 1857 விடுதலைப்புரட்சிக்கும் என்ன தொடர்பு?

1790-1810-க்குள்ளாக தமிழகத்தில் துடித்தெழுந்துப் போராடிய தமிழக மன்னர்களையெல்லாம் துரைத்தனத்தார் தங்களின் அதிகாரத்தால் தூக்குமரத்திற்கும், துப்பாக்கி குண்டுகளுக்கும், இரையாக்கிய போதும், விடுதலைப் பயிர் தொடர்ந்து தமிழகத்தில் துளிர்க்காமல் இல்லை என்று திடமாகச் சொல்லலாம்.

வட இந்தியாவில் சிப்பாய்கள் கிளர்ந்தெழுந்து நகரங்களை எல்லாம் விடுவித்து, எங்கும் பச்சைப் பிறைக்கொடி தூக்கினர். ஆங்காங்குள்ள மகாஜனங்களும், அதற்கு ஆதரவாயிருந்தார்கள். சென்னைக்கு அடுத்த ஸ்ரீபெரும்புதூரிலிருந்த படைவகுப்பும் பதறி எழுந்தது. பாளையங்கோட்டை வீரரும் அப்படியே**

எனவே, தென்னாட்டிலும் 1857-புரட்சியின் எதிரொலி அங்கொன்றும், இங்கொன்றுமாக இருந்தது என்பதை உறுதி செய்து கொள்ளலாம்.

இன்று அயோத்தி என்று பிரச்சனைக்குள்ளாக்கப் பட்டிருக்கும் பைசாபாத் நகரில் மௌலவி அகமதுஷாவும், டாக்கா அஜிமுல்லாகானும், இணைந்து மக்கள் வெள்ளத்தைத் திரட்டி வெள்ளையராட்சிக்கு எதிராக நடத்திய மகத்தான யுத்தத்தைத் தான், ''சிப்பாய் கலகம்'' என்று வெள்ளையர்கள் வர்ணித்ததிற்கு ஏற்ப, நாடு பூராவிலும், ஆங்கிலேயர் படையில் வேலை பார்த்த

* எல் டிராட்டர்—விக்டோரியாராணி காலத்தில் இந்தியா'' பக்கம். 1 , 89

** எம் எஸ் சுப்பிரமணிய ஐயர் ''சுதந்திரபோர்', கலைமகள் 1947 ஆகஸ்டு, பக்கம். 202

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிப்பாய்களின் கிளர்ச்சியாக நடைபெற்ற 1857 புரட்சிக்கு ''முதல் இந்திய சுதந்திரப்போர்'' என்ற பெயரைப் பெற்றுத் தந்தது.

பகதூர்ஷா, தியாகி மங்களபாண்டே, குமாரசிம்மன், ஜான்சிராணி, லெட்சுமிபாய், சிங்கமராட்டியர் தாந்தியா தோபே, நானாசாகிப், பேஹம்ஹஜரத்மகேல், குன்வார் சிங், பக்த்கான், கான்பகதூர்ஷா, பைசாபாத் மௌலவி அகம்மதுல்லா* போன்றோர் வழி நடத்தியது 1857 புரட்சி

சென்னை (பைசாபாத்) மௌலவி அகம்மதுல்லாஹ்

இந்தியாவில் அவதரித்துள்ள இணையற்ற தியாக வீரர்களில், தேசபக்தர்களில், மௌலவி அகமதுல்லாஹ்வும் ஒருவர். ஆங்கிலேயர் அபகரித்துக் கொண்ட தமது தாலுக்தாரியை மீண்டும் பெற்றே தீருவதென்று மாத்திரமல்ல தமது தேசத்தையும், அவர்களின் ஆதிக்கத்திலிருந்து மீண்டும் விடுவித்தே தீருவது என்று பிரதிக்ஞை செய்து கொண்டு அன்னியர்களைத் தமது தேசத்தில் இருந்து விரட்டுவதற்காக, வாளை உருவினார்.

அயோத்தியை ஆங்கிலேயர்கள் ஆக்கிரமித்துக் கொண்டதிலிருந்து அகமதுஷா (அகமதுல்லாஹ்) தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் தேசத்திற்காகவும், மதத்திற்காகவும், அர்ப்பணம் செய்வதென உறுதி கொண்டார்.

பின்னர் அவர் மௌலவியாகி, புரட்சிப் பிரச்சாரத்திற்காக ஹிந்துஸ்தானம் முழுவதும் யாத்திரை செய்யப் புறப்பட்டார். இந்த அரசியல் துறவி சென்ற இடமெல்லாம் ஜனங்களிடையே அதற்கு முன்னிராத மகத்தான விழிப்பு ஏற்படத் துவங்கியது. புரட்சிக் கட்சியின் அரும்பெரும் தலைவர்களையும் அவர் நேரில் கண்டு பேசி

* பிபன்சந்திரா (அமலேஷ்திரிபாதி பருண்டே) ''சுதந்திரப் போராட்டம்'' கா திரவியம் மொழிபெயர்ப்பு பக்கம் 56.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தார். அயோத்தி மக்களின் கண்ணாக இருந்தார். தனது தேகம். மனம், பேச்சு, சக்தி, எல்லாவற்றையும், உபயோகித்து தேசத்திற்காக சதா உழைத்தும், ஜனங் களுக்கு சுதந்திர உபதேசம் செய்தும், புரட்சி வலையை யும், ஒழுங்காகப் பின்னி முடித்தார். புரட்சிப் பிரசுரங்கள் ஏராளமாக எழுதி விநியோகித்தார் ஒரு கையில் வாளையும் மற்றொருகையில் பேனாவையும், ஏந்தி அவ் வீரத்தியாகி புரிந்த தொண்டிற்கு இணையே இல்லை.

மேற்சொன்ன வரிகள் அனைத்தும் இந்து மகாசபை வீரசாவர்க்கர் தனது ''எரிமலையில்'' மௌலவி அகமதுஷா அவர்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே செல்வதிலிருந்து எடுத்த ஒரு பகுதி மட்டும் தான்.

பைஜாபாத் சிறையில் தூக்குத் தண்டனை கைதியாக அடைக்கப்பட்டிருந்த மௌலவி அகமதுல்லாஹ் என்ற அகமதுஷாவை சிறைக் கதவுகளை உடைத்துபுரட்சியாளர் கள் மீட்டிச் சென்றனர். ரூபியா கோட்டையில் ஆங்கிலே யர்களுக்கும், இந்தியச் சிப்பாய்களுக்கும் கடும் போர் நடைபெற்றது.

மௌலவி அகமதுஷாவின் அரிய ஆலோசனைப்படி செயல்படாமல் மறைந்திருந்த தங்களின் முன்னே வநது கொண்டிருந்த ஆங்கிலேயரின் பீரங்கிகளை அவசரப்பட்டு மௌலவியின் படைவீரர்கள், கைப்பற்றிட தங்களைச் சுற்றியுள்ள ஆபத்தை உணர்ந்து கொண்ட ஆங்கிலேயர் விழித்துக் கொண்டு செயலில் ஈடுபட துவங்கினார்கள்.

உக்கிரமான போர் நடைபெற்றது. அங்கிருந்து அயோத்திக்கு வந்த மௌலவி அகமதுஷா அயோத்திக் கோட்டையிலிருந்த தொடை நடுங்கி ராஜா ஜகன்னாத சிங்கிற்கு தங்களது புரட்சிக்கு ஆதரவு தர கேட்டு கடிதம் கொடுத்து அனுப்பினார் துரோக சிந்தை கொண்ட அந்த ராஜா, மௌலவி அவர்களையே நேரில் பார்க்க வரச் சொன்னார். உடனே ராஜாவின் அழைப்பை ஏற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யானை மீதமர்ந்து சென்றார் மௌலவி. நகருக்குள் சென்றதும், நகர வாயிற் கதவுகள் மூடப்பட்டது. அதன் அர்த்தத்தை அறிந்து கொண்ட மௌலவி அஞ்சா நெஞ்சத்துடன் முன்னேறி தான் வந்த யானையின் மாவுத்தனுக்கு யானை கதவை முட்டி உடைக்கட்டும் என்று கட்டளையிட்டு தொடர்ந்து முன்னேற முயன்றார்.

இன்னும் ஒரே தடவை முட்டினால் போதும் கதவு தடாலென்று விழுந்துவிடும், ஆனால் அந்தோ அதற்குள் அந்த துரோக ராஜாவின் தம்பி பாவென் என்பவர், மௌலவியை குறி வைத்துச் சுடவே, அப்பெரியார் உடலில் தோட்டா பாய்ந்து வீர ஸ்வர்க்கமடைந்தார். ''இணையற்ற தேசபக்தரும், எண்ணிக்கையற்ற ஆங்கில வீரர்களை அலற அடித்தவரும், மகாவீரருமான மௌலவி அகம்மதுஷா துரோகியான ஒரு கோழையின் கையால் மரணமடைய வேண்டும் என்பது பாழும் விதியின் கட்டளை போலும்'' என்று எரிமலையில் சாவர்க்கர் எழுதுகிறார். 1858 ஜூன் முதல் வாரத்தில் இந்தப் பாவத்தை நிறைவேற்றிய பாதகர்கள், அரசின் அறிவிப்பின்படி 50,000 ரூபாய் வெகுமதியை பெற்றிட மௌலவியின் தலையை வெட்டி வெள்ளைத் துணியில் கொண்டு சென்றனர். அதனை கொத்தவாயிலில் எல்லோரும் பார்க்கும் வண்ணம் கம்பில் சொருகி காட்சிப் பொருளாக வைத்த கொடுமையினை எழுதிட கையும் மறுக்கிறதே......... ..

மௌலவி மாண்ட செய்தி பரவியது, உச்சந்தலையில் நச்சரவு தீண்டியது போல செந்தேகத்தில் செந்தேள் கொட்டியது போல துடித்தெழுந்தனர். துரோகிகளை வஞ்சம் தீர்த்திட நிஜாம் அலிகான் பிலிபட் வரை படையெடுத்தார். கான்பகதூர்கான் நாலாயிரம் படையுடன் தாக்கத் துவங்கினார். பரூகாபாத் தேசபக்தர்கள் ஐயாயிரம் பேர் போருக்குப் புறப்பட்டனர். விலாயத்ஷா மூவாயிரம் வீரர்களுடன் மோதலுக்கு இறங்கினார். நானாசாகிப்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாலாசாகிப், அலிகான் மிவாதி, முதலிய தலைவர்கள் ஐயாயிரம் சிப்பாய்களுடன், ரோஹில்கூர்திலும் அயோத்தியிலும், மகத்தான போரைத் துவக்கினர்.

ராஜாராம்பக்ஷ பகுநாத்சிங், சண்டாசிங், குலாப்சிங், போபால சிங், ஹைதுமந்தசிங், முதலிய பிரபல வீர ஜமீன்தார்களும் அயோத்தியைக் கைப்பற்ற போராடினர்.

முஸ்லிம் இளவரசர் பிரோஷ்ஷா, வீரத்தளபதி நரபதி சிம்மன், ராஜாவேணிமாதவர் ஆகியோரும் போரில் குதித்தனர்.

போரின் விபரத்தை எழுதிக்கொண்டே சென்று கொண்டிருக்கலாம் அவ்வளவு விறுவிறுப்பானது; வீரமும், வேதனையுமிக்கது.

மௌலவி அகமதுஷா சென்னையில் பிறந்தவர்

எங்கு சென்றாலும், விஷயத்திற்கு எப்படியும் வந்தாக வேண்டுமல்லவா, அதிலும் தொடர்பும் இருக்கவேண்டுமல்லவா, மௌலவி அகம்மதுஷாவின் வீர சரித்திரத்தை விளக்கிக்கொண்டே சென்றதன் காரணம் அவர்கள் பிறந்தது சென்னையில்.

> ''அவன்(ர்) பெயர் மௌலவி அகமதுஷா
> அவன்(ர்) நமது சென்னை மாகாணத்தில்
> பிறந்தவன், சுதந்திர யுத்தம் மூண்டதும்,
> வெளிக்கிளம்பிப் போர் புரிந்தான் அவன்(ர்)''

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதி 1953 இல் சென்னையிலிருந்து வெளியான ''சுதந்திர சரித்திரம்'' நூலில் பக்கம் 102.

யாரோ ஒருவர் எழுதியதனை எப்படி எற்றுக்கொண்டு அவரை சென்னையில் பிறந்தவர் என்கிறாய் என்ற கேள்வி எழும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''அயோத்தியில் நவாப் ஆட்சிக்குட்பட்டுப் பல தாலுகாக்கள் இருந்தன. அவைகளில் ஒன்று பைசாபாத். அதன் அதிபர்தான் அகம்மதுஷா. இவர் சென்னையில் ஓர் பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. அரியலூர் எல். சபாபதி எழுதிய ''இந்திய சுதந்திரப் போர்'' பக்கம் 61ல். அவரே கூறப்படுகிறது என்று தானே சொல்கிறார் என்ற வினா இங்கு எழும்.

இதோ மற்றுமொரு அசைக்க முடியாத ஆணித்தரமான ஆதாரம். ''அகம்மதுஷா சென்னையில் ஒரு பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கப்பின்ஸ் குறிப்பிடுகிறார்''.*

(எரிமலை அல்லது முதலாவது இந்திய சுதந்திர யுத்தம் வீரசாவர்க்கர் எழுதி 9—8-1946-இல் வெளியான பதிப்பில் பக்கம் 204.)

இந்த நூல் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட நூலாகும். 1857 புரட்சியைப் பற்றி அதிகாரப்பூர்வமாக எழுதப்பட்ட அந்த நூலை 1909-இல் ஹாலந்து நாட்டில் இந்திய சுதந்திரப் போராட்டம் என்ற பெயரில் முதலில் வெளியிட்டார்கள். இந்திய விடுதலைக்குப் போராடிய வெளிநாட்டு வீராங்கனை மேடம்காமா, ரஷ்யப் புரட்சி எழுத்தாளர் கார்க்கியிடம் அன்பளிப்புச் செய்த நூல் இது.

1857 புரட்சி பற்றி எழுதிய எழுத்தாளர் கப்பின்ஸ் குறிப்பிடுவதை வீரசாவர்க்கர் எழுதிக் காட்டியிருப்பதிலிருந்து மௌலவி அகம்மதுஷா சென்னையில் பிறந்தவர் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

1802-க்குள் தமிழகத்தின் மன்னர்கள் பாளையக்காரர்கள் ஆங்கிலேயரால் அடக்கப்பட்டனர். 1806,

* M R. Kappins 'An account of the Mutinies in Oudh and of the Siege Lucknow Presidency' II Edition 185:.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1808, 1809-க்குள் முழுவதுமாக தமிழகத்தில் பாளையக் காரர்களும், குறுநில மன்னர்களும் அடக்கி ஒடுக்கப்பட்ட போது பலர் நாடு கடத்தப்பட்டனர். பலர் நாடுவிட்டு நாடு ஓடி இடம் பெயர்ந்தனர். அவ்வாறு இடம் பெயர்ந் தவர்களில் மௌலவி அகம்மதுஷா குடும்பத்தினரும் இருக்க வாய்ப்பிருக்கிறது. இங்கிருந்து அவர் பைசாபாத் (இன்றைய கிழக்கு அயாத்தி) சென்று அங்கேயே நிலைத்து இருக்கலாம்.

இந்திய விடுதலைப் புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படுகிற சென்னையில் பிறந்த விடுதலைப் போர்ப்பரணி மௌலவி அகம்மதுஷா அவர்களின் சேவை இந்திய விடுதலை வரலாற்றில் தமிழக முஸ்லிம்களின் பங்கில் வைத்து எண்ணி மகிழத்தக்கது, போற்றத்தக்கது *

இந்து முஸ்லிம் துவேஷங்காட்டுவோர் வீரசாவர்க் கரின் இந்த அரிய நூலை ஒரு தடவையாவது வாசித்துப் பார்க்கட்டும் என்று வேண்டத்தக்கது.

---

* கா அப்பாத்துரை "இந்திய மக்கள் விடுதலை இயக்க வரலாறு" பக்கம் 126. இஸ்லாமிய கலைக்களஞ்சியம் நூலில் அப்துற்றகீமும், இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் நூலில் ஹாபிஸ் ஏ என் முகம்மது யூசுப்பும், மௌலவியை மதராஸி என்று குறிப் பிட்டுள்ளனர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேலம் குலாம் தஸ்தகீர் சாஹிப்

(காங்கிரசிற்கு முன்னால்)

ஆங்கிலேயர் செய்த அக்கிரமங்கள்

1858 நவம்பரில் இங்கிலாந்து ராணியின் பிரசித்திப் பெற்ற பிரகடனம் இந்தியா முழுவதும் விளம்பரம் செய்யப் பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி ஒழிந்து ராணி யின் ஆட்சி ஏற்பட்டது. எதிர்த்துப் போரிட்டவர்கள், ஆயுதங்களைக் கீழே வைத்து விடுவார்களானால் மன்னிக் கப்படுவார்கள் என்றும், மன்னர்களுக்கு வாரிசுரிமை வழங்கப்படும் என்றும், மத நம்பிக்கைகளில் அதிகாரிகள் இனி எக்காலத்திலும் தலையிட மாட்டார்கள் என்றும் வாக்குறுதிகள் பல அப்போது அளிக்கப்பட்டன.

வறுமையும், பட்டினியும், நாட்டில் நிலவிய போது 1877-ல் லிட்டன்பிரபு டில்லியில் ஆடம்பர தர்பாரைக் கூட்டினார். 1878 இல் செய்தித் தாள்களின் குரல்வளை நெறிக்கப்பட்டது, பொதுக்கூட்ட உரிமை குறைக்கப் பட்டது, ஆயுதங்களை வைத்திருக்க ஆங்கிலேயரல்லாத வருக்கு அனுமதிச்சீட்டு முறை புகுத்தப்பட்டது. ஆலை அதிபர்களுக்கு ஆதரவாக இந்தியாவில் பருத்தி ஆடைகள் இறக்குமதியின் மீதான வரி ரத்துச் செய்யப்பட்டது.

இதுபோன்ற நிலையில் தேச அளவில் சுரண்டி வந்த ஆங்கில அரசை தேசீய அளவில் முறியடிக்க அமைப்புத் தேவைப்பட்டது. அதனால் பின்னாளில் உருவானதே அகில இந்திய காங்கிரஸ் ஆகும்.

மெட்ராஸ் நேடிவ் அசோசியேசன்

கல்கத்தா தேவேந்திரநாத் தாகூரின் ஆலோசனைப் படி, சென்னை காஜுலலட்சுமி நரசுவின் ஏற்பாட்டில் சென்னை வர்த்தகர் அப்பாசாமிப்பிள்ளை தலைமையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

25—2—1852ல் கல்கத்தா பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேசனின் சென்னைக் கிளை தோன்றியது. சி. ஒய். முதலியார் தலைவராகவும், வி. ராமானுஜாசாரி செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சில மாதங்களுக்குள் கல்கத்தாவின் தொடர்பினைத் துண்டித்து மெட்ராஸ் நேடிவ் அசோசியேசன் என்னும் பெயர் பெற்றது. முக்கியமாக வரிச்சுமை பற்றி இந்த அசோசியேசனில் விவாதிக்கப் பட்டது.*

சென்னை பொது மகாஜனசபை

சென்னையில் 1878-இல் இந்து மகாசபை தோன்றியது. அதன் ஆதரவாளர்கள் சென்னை இந்துப் பத்திரிகை அலுவலகத்தில் 16—5—1884-இல் சென்னை மகாஜன சபை என்ற அரசியல் சங்கத்தைத் தோற்றுவித்தனர்.

ஹைகோர்ட் வக்கீல் பி. ரெங்கையாநாயுடு தலைவராகவும், மு. வீரராகவாச்சாரியார், பி. அனந்தாசாகுலு ஆகியோர் செயலாளர்களாகவும் அதில் பணியாற்றினார்கள். ''இந்து'' பத்திரிகையின் ஸ்தாபகர் சுப்பிரமணிய அய்யர் இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார்.

ஆண்டொன்றுக்கு ஒரு ரூபாய் உறுப்பினர் கட்டணமும், 21 வயது நிரம்பியவரும் சபையின் உறுப்பினராகலாம், படித்துப் பட்டம் பெற்ற பலர் இதில் அங்கம் வகித்தனர்.

சேலம் குலாம் தஸ்தகீர் சாகெப் (சாகிப்)

மக்களின் கோரிக்கைகளை ஆளும் அரசுக்கு அஞ்சாது எடுத்து உரைத்திடவும், பிற மாநிலங்களில் உள்ள சகோதர ஸ்தாபனங்களோடு தொடர்பு கொண்டு பணியாற்றும் சென்னை மகாஜன சபையின் 1886-1887-ம் ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினர்கள் பட்டியலில் 36 உறுப்பினர்கள்

* Tarachand, 'History of the Freedom Movement in India, vol. II p. 526.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காணப்படுகிறார்கள். சேலத்தை சேர்ந்த வழக்கறிஞரும், வர்த்தகருமான குலாம் தஸ்தகீர்சாகிப் அவர்களின் பெயர் அதில் 15வது இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.*

சங்கத்தின் முதல் மாநாடு 29-12-1884 முதல் 2-1-1885 வரையில் சென்னை பச்சையப்பன் ஹாலில் நடைபெற்றது. இதில் குலாம் தஸ்தகீர்சாகிப் அவர்கள் கலந்து கொண்டார்கள்,

1885 டிசம்பர் 23,24,25-இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது மாநாட்டிலும், குலாம் தஸ்தகீர் சாகிப் கலந்து கொண்டார். சென்னையில் 1887 டிசம்பர் 27ல் நடைபெற்ற அகில இந்திய மூன்றாவது காங்கிரஸ் மகாசபைக்கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

1853-ஆம் ஆண்டின் கிழக்கிந்திய கம்பெனியின் சாசனம் 1858-ம் ஆண்டின் பிரிட்டிஷ் மகாராணியின் பிரகடனம் இவை இரண்டின் அடிப்படைகளில் இந்தியர்களை உயர்ந்த உத்தியோகங்களில் அனுமதிக்காததையும், வாக்குத்தவறியதையும் 1885ல் இலண்டனில் பிரிட்டிஷ் வாக்காளர்களிடையே சேலம் இராமசாமி முதலியார் வழங்கிய சென்னை மகாஜன சபையின் துண்டுப்பிரசுரங்கள் வலியுறுத்தியது. அத்தோடு இந்தியக் கடன் சுமை வளர்ந்த வரலாற்றையும், இராணுவ சிவில், நிர்வாகத்தில் ஆங்கிலேயரின் மிதமிஞ்சிய செலவுகளையும் அதுகண்டித்தது.

இச்சபையானது 1884-ம் வருடத்தில் இந்நாட்டு ஜனங்களுக்கு ஆக வேண்டிய சாதகங்களைக் கவனிக்கும் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டது. இந்தச் சபையே

---

* பெ.சு மணி "கார்ல் மார்க்சின் இலக்கிய இதயம்" மகாஜன சபையின் தொடக்க வரலாறு பக்கம் 209.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னைப் பட்டணத்திற்கு ஸ்டாண்டிங் காங்கிரஸ் கமிட்டியாகவும். இருக்கிறது.*

மேலும் சென்னை மாகாணம் முழுவதற்கும், முக்கிய ஜனசங்கமாயிருக்கும் மகாஜனசபை கூட மைலாப்பூர் பிரபுக்களின் (காங்கிரசில் இயங்கிய மிதவாதிகள்) அதிகாரம் பலமடைந்தவுடனே வீழ்ச்சி கொண்டு வெகுகாலமாக உறங்கத் தலைப்பட்டிருக்கிறது''**

என்று பாரதியாரே குறிப்பிட்டிருந்தார். மாகாணம் முழுவதும் முக்கிய சங்கமமாக விளங்கிய இச்சபை பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதோர் பிரச்சனையால் பின்னாளில் தளர்ச்சியுற்றது.

எப்படியோ, முதன் முதலில் ஆளும் ஆங்கிலேயருக்கு எதிராக அறிக்கைகளையும், மக்கள் கோரிக்கைகளையும், அஞ்சாமல் எடுத்துரைத்துக் கொண்டிருந்த சென்னை மகாஜன சபையின் ஆரம்பகாலக் கட்டங்களில் சேலம் குலாம் தஸ்தகீர் சாகிப் அவர்கள் இணைந்து பணியாற்றி, தமிழக முஸ்லிம்களின் சார்பில் பங்கினைச் செலுத்தி இருப்பதை நம்மால் நன்கறிய முடிகிறது.

* 2—6—1893-ல் சுதேசமித்திரனில் வெளியான விளம்பரம்

** 23—3—1906 ல் இந்தியா பத்திரிக்கையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காங்கிரஸ் மஹா சபையில் . . .
(1906 வரை)

அகில இந்தியக் காங்கிரஸ் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பே இந்தியாவில் இந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களும் அன்னிய மதத்தவரின் ஆட்சியாளர்களான ஆங்கிலேயர்களை எதிர்த்து கிளர்ச்சியில் இறங்கத் துவங்கினர்.

அமீர்கான்

1857 புரட்சி நடவடிக்கைகளில் கலந்து கொண்ட சிலர் 1871-இல் அமீர்கான் தலைமையில் பாட்னாவில் இருந்து ரகசியமாக இயங்கினார்கள்.

இந்தியாவில் பாபர் முதல் ஔரங்கசீப் வரை முகலாய மன்னர்கள் சக்கரவர்த்திகளாகப் பட்டம் சூட்டிக் கொண்டு ஆண்ட வரலாற்றை முஸ்லிம் இளைஞர்களுக்கு எடுத்துக்கூறி, ஆங்கிலேயர்களது மத விரோதப் போக்கினைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு எதிராக புனிதப் போர் (ஜிஹாத்) நடத்திடத் தயாராகும் படி அமீர்கான் பிரச்சாரத்தை துவக்கினார். அதற்காக 1818-ஆம் ஆண்டின் பாதுகாப்புச்சட்ட விதி 3-இன் படி 1871-இல் கைது செய்யப்பட்டு, கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடத்தப்பட்டு, நாடு கடத்தப்பட்டார்.

நார்மன் கொலை வழக்கு

1871 செப்டம்பர் 20ல் அமீர்கான் வழக்கில் தீர்ப்புச் சொன்ன நீதிபதி நார்மன்மீது புரட்சி இயக்க இளைஞர் அப்துல்லாஹ் குறி வைத்துப் பாய்ந்து கொன்றார். அவருடன் ஷேர்அலி மற்றும் நால்வர் மீதும் சதி வழக்குத் தொடரப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''இந்தியப் புரட்சி இயக்கத்தவர் மீது தொடரப்பட்ட சதி வழக்குகளிலேயே அனேகமாக இதுதான் முதலாவது சதி வழக்கு''* என்பர்.

வழக்கின் தீர்ப்பில், அப்துல்லாஹ்வுக்குத் தூக்குத் தண்டனையும், ஷேர்அலி முதலியோருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. 1871 நவம்பரில் அப்துல்லாஹ் தூக்கில் தொங்கவிடப்பட்டு இஸ்லாமிய சம்பிரதாயப்படி அவரது உடலைப் புதைத்திடாமல் எரித்துவிட்ட பிரிட்டிஷ் அரசின் செயல் அந்த இயக்க இளைஞர்களின் நெஞ்சிலே கனலை மூட்டியது. அந்தமான் சிறையில் ஆயுள் தண்டனை கைதியாக இருந்த ஷேர்அலி இந்திய வைசிராய் மேயா 8-2-1872ல் தீவிற்கு விஜயம் செய்து சிறையைப் பார்வையிட்டபோது வரிப் புலிபோல பாய்ந்து தன் கரங்களாலேயே அவரது கழுத்தை நெறித்துக் கொன்றார்.

அல்லாஹ்வின் கட்டளையை நான் நிறைவேற்றி னேன் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே, என்று சொல்லிக் கொண்டே சந்தோஷமாக தூக்கு மேடை ஏறினார் ஷேர்அலி.

மகாராஷ்டிரத்தில் வாசுதேவ் பல்வந்த்பட்கேயும் (1888) மராட்டியத்தில் தாமோதர் சபேகர் (1898) வாசுதேவசபேகர் (1899) புரட்சி இயக்கப் பணிகளில் ஈடுபட்டு ஆங்கிலேயரை எதிர்த்துக் கொன்று தூக்கிலே தொங்கினார்கள். இந்த நிலையில் இவைகளை அறிந்த ஆங்கிலேயர் இவைகளை தடுத்து நிறுத்திட மாற்று ஏற்பாடாக தாங்களாக முன்வந்து காரியத்தில் இறங்கி அகில இந்தியக் காங்கிரசை தோற்றுவித்தனர்.

---

* சிவலை இளமதி ''சரித்திரத்தை மாற்றிய சதி வழக்குகள்'' பக்கம்-28.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகில இந்தியக் காங்கிரசின் தோற்றம்

இந்திய நாட்டின் விடுதலைப் போரில் பின்னாளில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவரும் அகிலஇந்தியக் காங்கிரசின் தோற்றம் பற்றி எழுதியவருமான பிரபல வரலாற்றுப் பேராசிரியர் ஆர். சி. மஜிம்தார் தமது ஆராய்ச்சி நூலில்,

> ''மக்களின் கொந்தளிப்புக்கள் வெடித்துப் புரட்சி இயக்கங்களை தோற்றுவிப்பதை தவிர்ப்பதற்காகவே காங்கிரஸை ஆலம் ஆக்டேவியன்ஹியூம் நிறுவிய தின் உண்மையான நோக்கமாகும்''*

என்றும்,

''அதற்கும் மேலாக வெளியுலகத்திற்கு அதிகம் தெரியாத ஓர் உண்மை, வைசிராயுடன் ரகசியமாகச் செய்துகொள்ளப்பட்ட ஒரு திட்டப்படி பிரிட்டிஷ் ஆட்சிக்கு பாதுகாப்பாகவும், மக்களின் கொந்தளிப்பையும், பிரிட்டிஷாருக்கு எதிரான உணர்ச்சிகளையும் வெளியிடும் சக்திகளுக்கு எதிராகவும் ஒரு கருவியாகப் பயன்பட வேண்டும் என்ற அரசாங்கக் கொள்கையின் நேர் முயற்சி யாலும், ஆதரவாலும், இந்திய தேசீய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது''.** 1885-இல் ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸின் உருவாக்கம் பற்றிய இப்படி எண்ணற்ற உண்மைகளை எழுதிக்கொண்டே செல்லலாம்.

முதல் காங்கிரஸ் சபை

பம்பாய் அசோசியேசன் ஆதரவில் பம்பாய் கோகுல் தாஸ் மஹால் சமஸ்கிருத கல்லூரியில் 1885 டிசம்பர் 28, 29 ம் தேதிகளில் அகில இந்திய காங்கிரசின் முதல் மகாசபை கூடியது. 72 பேர் பிரதிநிதியாக கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் ரகுமத்துல்லாஹ் ஸையாணியும் கலந்துகொண்டார்கள். 1886-ல் கல்கத்தா

* பெ. சு. மணி 'இந்திய தேசியத்தின் தோற்றமும், வளர்ச்சியும்' பக்கம் 526

** ரஜினி பாமிதத் ''இன்றைய இந்தியா'' எம். வி. வெங்கட்ராம் மொழி பெயர்த்த நூல் பக்கம் 386.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வில் இரண்டாவது காங்கிரஸ் சபை கூடியது. கர்னூல் அப்துல்கரீம் அதில் பிரதிநிதியாக கலந்துகொண்டார்கள்.

சென்னையில் கூடிய மூன்றாவது காங்கிரஸ் சபை (1887)

பம்பாய் அஞ்சுமான் சங்க காரியதரிசியான பக்ருதீன் தியாப்ஜி ஸாகெப் என்ற முஸ்லிம் தலைமை வகித்தார். 607 பேர் பிரதிநிதியாக கலந்துகொண்டனர். கமிட்டி உறுப்பினர் 35 பேர்களில் திப்பு சுல்தானின் வமிச வழி வந்த மீர்ஹிமாயூன்ஜா பகதூர், ஹாஜி மஹமத் அப்துல் ஷகூர்பாத்ஷா சாகிப்,** ஹாபிஸ் அப்துல்ரகீம், ஹமித்அலி ஆகியோரும் அடங்குவர். மற்றும் முல்லா ஜாபர்ஜி சாகிப் (சேலம்), குலாம் தஸ்தகீர் சாகிபு சேலம் பேட்ரியாட் பிரஸ் உரிமையாளர் கான் சாஹிப் ஷேக்மொய்தீன் சாஹிப், அப்துல்ரஷாக் ஹாஜிபாவா, ஹாஜி அப்துல்ஸலாம் பாட்சா சாகிப், முகம்மது ஹவுஸ் சாகிபு, அல்லாரக்கஜின் சாகிப், அப்துல்ரகுமான் ஹாஜி, ஹாஜி இப்ராகீம் சேட், சி. பாட்சாமேசாகிப், ஹிந்துஸ்தானி வார இதழான 'ஜராய்தார் ரோஜ்கர்' இதழின் ஆசிரியரான செய்யது முர்தஸா சாகிப், காதிரி ராவ்சாகிப் கே. அப்துல்ரகுமான் பகதூர், கே. அப்துல் ரசாக், உமர்கான் சாகிப், பீர்இப்ராகீம் சாகிப் இராவுத்தர், கான்சாகிப் சின்ன மரைக்காயர் மலுமியார், கான் சாகிப் மீராசின்னத்தம்பி மரைக்காயர், கான் சாகிப் ஜெயுனுலாப்தீன்மியா, கே. முகம்மது இமாம் மரைக்காயர், மீராமியான் மரைக் காயர், வாப்புகுண்டு மரைக்காயர், மீரா லெப்பை மலுமியார், கலிபா செய்யது மீர் முகம்மது சாகிப், கான் சாகிப் முகம்மது சிராஜ்ஜித்தீன், கான் சாகிப் முகம்மது அஜிமுத்தீன் சாகிபு, கான்சாகிப் முகம்மது அலி முகைதீன் சாகிபு, கான்சாகிப் வி. எம். முகம்மது கனி இராவுத்தர்,

** கி. வீரமணி "விடுதலைப் போரும் திராவிடர் இயக்கமும் உண்மை வரலாறு" பக்கம் 232-233.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படிக்கிபாரா சாகிப், ஹுசேன் பெய்க், ஹுசேன்கான், மீர்ஷாஹுசைன் டிபோவத்செய்யது சாகிப், காதிர்கான், காசிம்மியா சாகிப், கான்சாகிப் இப்ராகீம்சேட், கான் சாகிப் அனுகுந்தி காதிர் பாட்சா சாகிப், கான்பகதூர் அப்பாஸ் அலி சாகிப், காஜாமுகம்மது சாகிப், செய்யது அப்துல் லத்தீப் சாகிப், சாகர்ஆதம் சாகிப், அமினுதீன் சாகிப், மிர்ஜாபர் அலி சாகிப், இவர்கள் அனைவரும், சென்னை ராஜதானியிலிருந்து 3வது காங்கிரஸ் மகா சபைக்கு வந்தவர்கள். இவர்களைத் தவிர பம்பாயிலிருந்தும், வங்காளத்திலிருந்தும், பொதுவாகவும் வந்து கலந்து கொண்ட முஸ்லிம் பிரதிநிதிகள் வேறு உள்ளனர். இந்தக் காங்கிரஸ் சபைக் கூட்டத்தில் தான் தமிழ் நாட்டைச் சேர்ந்த மூக்கன் ஆசாரி முதன் முதலில் தமிழில் பேசினார்.

அலகாபாத்தில் கூடிய நான்காவது காங்கிரஸ் 1888.

டிசம்பர் 26ல் கூடியது. 1248 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சென்னையிலிருந்து சென்ற தமிழக முஸ்லிம்களில் ஓ. பத்ருத்தீன் சாகிபு, ஹோஹரி சாகிபு, அப்துல்ரகுமான் சாகிப், முகம்மது யூசுப் ஆகிய காங்கிரஸின் பிரதிநிதிகள் அடங்குவர்.

1889 டிசம்பர் 26ல் பம்பாயில் கூடிய 5-வது காங்கிரஸ்

1913 பிரதிநிதிகள் வந்திருந்தனர். மாஉசேன்ஷா, வி. முகம்மது ஷெரீப், ஏ. அஜிமுத்தீன், காஜா அக்ம்மதுல்லாகான், முகம்மது அப்துல்ஹசன், முகம்மது அப்துல்காதர், பீர்முகம்மது. முகம்மது அலி தரகனார், மிஸ்ரிகான் கலிப்கான், நவாஜிஸ் அலிகான், சிக்கார் கானா அகம்மது, முகம்மது மீரா உசைன் இராவுத்தர், செய்யது அலாவுதீன் பி. மதார், செய்யது ஷாமர்தீன், சேக்கன்னா ஆகியோர் தமிழ் நாட்டிலிருந்து சென்ற முஸ்லிம்கள் ஆவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1890-இல் கல்கத்தாவில் கூடிய ஆறாவது காங்கிரஸ்

677 பிரதிநிதிகளில் 116 பேர் முஸ்லிம்கள். அதில் தமிழ்நாட்டு முஸ்லிம்களும் அடங்குவர். ஏழாவது காங்கிரஸ் நாகபுரியில் 1891 டிசம்பர் 28-30 தேதிகளில் கூடியது. எட்டாவது காங்கிரஸ் 1892ல் அலகாபாத்தில் டிசம்பர் 28ல் கூடிய போது 925 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முகம்மது அப்துல்காதிர் சாகிப் அதில் சென்னை மாகாணப்பிரதிநிதியில் ஒருவராக கலந்து கொண்டார். 9வது கூட்டம் 1893ல் லாகூரில் நடை பெற்றது.

பத்தாவது காங்கிரஸ் மகாசபை

1894-ல் சென்னையில் கூடியது. அகில இந்தியா முழு வதிலும் இருந்து 1163 பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஜியாவுதீன் முகம்மது, ஷேக்பர்ஷத் சாகிப், பி. எம். முகம்மது மக்தூம் ராவுத்தர், செய்யது முஹம்மது சாகிப் பகதூர், கே. எப். என். நயினா முகம்மது லெவ்வை மரக் காயர், எஸ். காதர்கான், முகைதீன் இப்ராகீம் சாகிப், வி.எம். செய்யது இராவுத்தர், எஸ்.எம். முகம்மது சாகிப், சந்தாமியாசாகிப், அப்துல்கரீம் சாகிப், சுல்தான் முகைதீன் சாகிப், ஹசன்மெய்ன்ட் குலாப் சாகிப், இஸ்மாயில் பீர் உசைன், சர்வர்திவுல்காதிரி சேக்உசேன் சாகிப்ஜின், மீர்அலி ஆகிய காங்கிரஸ் முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

11வது காங்கிரஸ் மகாசபை பூனாவில் 1895-டிசம்பர் 27ல் கூடியது.

12வது காங்கிரஸ் மகாசபைக்கூட்டம் 1896 டிசம்பர் 28ல் அப்பாஸ் முகம்மது ரகுமத்துல்லாஹ் ஸயானித் தலைமையில் கல்கத்தாவில் கூடியது. சென்னை மாகாணத் திலிருந்து எஸ். உசைன்ஷெரீப், முகம்மது யாசின் சாகிப் ஆகியோர் கலந்து கொண்டனர். 13வது காங்கிரஸ் மகா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சபைக் கூட்டம் அமராவதியில் 1897 டிசம்பர் 27ல் கூடியது கலந்து கொண்டவர்களில் ஏ. அஜிமூத்தீன் சாகிப், அபு பக்கர்சாகிப், முகம்மது அக்பர்சாகிப், பட்டில் அப்துல் ரகிம்சாகிபு ஆகியோர் சென்னை மாகாண காங்கிரஸ் இயக்க முஸ்லிம் பிரதிநிதிகள் ஆவார்கள்.

சென்னையில் கூடிய 14வது காங்கிரஸ்

1898 டிசம்பர் 29, 30, 31, தேதிகளில் நடைபெற்ற கூட்டத்தில் 614 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர், அதில், எம். எம். காகா, காசிம் இராவுத்தர், அப்துல் ரகுமான் சாகிப், அப்துல் கரீம்சாகிப், சி.எம்.முகம்மது சாகிப் முகம்மது அப்துல்காதிர் சாகிப், ஈலால்ஜி சாகிப், அகல்லா சாகிப், முகம்மது ஹபிபுல்லாசாகிப், காதர்பாட்சா சாகிப், ஓ. மீராசாகிப் ஆகியோர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளி லிருந்து வந்து கலந்து கொண்ட காங்கிரஸ் முஸ்லிம்கள் ஆவார்கள். சென்னை மாகாணத்தில் அப்போது செயல் பட்ட 46 அமைப்புகளில் 5வது அமைப்பாக அஞ்சுமன் முப்த் இ இஸ்லாம் என்ற அமைப்பும் இயங்கி வந்தது.

லக்னோவில் கூடிய 15வது காங்கிரஸ்

1889ல் கூடிய காங்கிரஸ் மகாசபைக்கூட்டத்திற்கு 740 பிரதிநிதிகள் வந்திருந்தனர். இவர்களில் 300 முஸ்லிம்கள் பிரதிநிதிகளாக வந்திருந்தனர்*

லாகூரில் 1900-ல் கூடிய 16வது காங்கிரஸ்

உதீந்திரம் மதார் சாகிபும், எச். அப்துல்லத்தீப் சாகி பும் சென்னை மாகாணத்திலிருந்து சென்ற காங்கிரஸ் பிரதிநிதிகளில் முஸ்லிம்கள் ஆவார்கள்.

---

* காங்கிரஸ் மகாசபை சரித்திரம் முதல் பாகம் சென்னை சுதேச மித்திரன் லிமிடெட் (1929) பக்கம் 330

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்கத்தாவில் கூடிய 17வது காங்கிரஸ் (1901)

எப். எப். எப். அப்துஸ்சலிமான், எம். வி. உஸ்மான், எஸ். எம். முஹம்மது, அப்துல்காதிர் ஆகியோர் சென்னை மாகாணத்திலிருந்து சென்ற காங்கிரஸ் பிரதி நிதிகளில் முஸ்லிம்கள் ஆவர். 18வது கூட்டம் 1902ல் அலகாபாத்தில் நடைபெற்றது.

சென்னையில் அகில இந்திய காங்கிரஸ்

1903 டிசம்பர் 28, 29, 30, தேதிகளில் சென்னை தேனாம்பேட்டை (தேவநாயகன் பேட்டை) வசந்தத் தோட்டத்தில் நடைபெற்றது. 538 பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மகாசபைக் கூட்டத்தில் நவாப் செய்யது முகம்மது வரவேற்புரையாற்றினார். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளையும், பின்னாளில் நீதிக் கட்சியில் புகழ் பெற்ற டி. எம். நரயரும் கலந்து கொண்டனர். செய்யது திவான் அப்துல் ரசாக், உதுமான் லெப்பை மரைக்காயர் தமிழ் மாகாணப் பகுதிகளிலிருந்து வந்து கலந்து கொண்ட காங்கிரஸ் பிரதிநிதிகளில் முஸ்லிம்கள் ஆவார்கள்.

இருபதாவது காங்கிரஸ்

பம்பாயில் இளம்பிறை ஸ்தலம் என்ற மைதானத்தில் 1904-டிசம்பர் 26ல் கூடியது. 21வது கூட்டம் 1905ல் பனாரசில் கூடியது, 22வது கூட்டம் கல்கத்தாவில் 1906ல் கூடியது. தேசீயக்கவி சுப்பிரமணிய பாரதியார், நவாப் செய்யது முகம்மது ஆகியோர் தமிழ் நாட்டிலிருந்து சென்று அதில் கலந்து கொண்டனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சுதேசிக் கப்பல்' பக்கீர் முகம்மது சேட்

(வ.உ.சி யின் எழுச்சிக் காலம்)

திரைகடலோடித் திரவியம் சேர்த்த தென்னாட்டில் வெள்ளையர்கள் கப்பல் வணிகத்திற்குப் போட்டியாக "சுதேசி ஸ்டீம் நேவிகேசன்" என்ற கப்பல் கம்பெனியை 1882-ம் வருடத்திய இந்தியன் கம்பெனி சட்டப்படி 16—10—1906ல் நிறுவினார் வ. உ. சிதம்பரம் பிள்ளை (1872-1936). வெள்ளையரின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒரு சாதாரண மனிதர் கப்பல் கம்பெனி நடத்துவது என்பது அந்தக் காலத்தில் அவ்வளவு எளிதா?

"ஒவ்வொரு சுதேசாபிமானியும், இக்கம்பெனியில் பங்காளியாகி, லாபத்தை அடைந்து நமது சுதேசத்தை மேன்மையான நிலைமைக்கு கொண்டு வரும்படி பிரார்த்திக்கிறேன்"

என்று வ. உ. சிதம்பரம்பிள்ளை தூத்துக்குடியிலிருந்து 4—10—1906-இல் வேண்டுகோள் விடுத்து எழுதிய கட்டுரையில் சொல்லப்பட்டிருக்கிறது.*

ஹாஜி பக்கீர்முகம்மது சேட்

வ.உ.சிதம்பரம்பிள்ளையின் சுதேசிக் கப்பல் கம்பெனியில் இரண்டு லட்சம் ரூபாய்க்கு பங்குகளை ஹாஜி பக்கீர் முகம்மது இராவுத்தர் வாங்கினார். கப்பலோட்டிய தமிழனுக்குக் கப்பல் வாங்கப் பயன்பட்ட தொகை ஹாஜியார் அளித்தது தான்** என்று கூறப்படுகிறது. இது பற்றிய விரிவான செய்திகள் இதோ;

---

* வ.உ.சி. "சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்" கட்டுரை விவேகபானு மாத இதழ் 1906 ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், 8, 9, 10, 11 புத்தகம் பக்கம் 295

** கே. எம். காதர்மொகைதீன் 1998 செப்டம்பர் "தாருல்குர்ஆன்" கட்டுரையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பராபவ வருடம் ஆவணி மாதம் 17-ம் தேதி அதாவது 1—9—1906ல் 'இந்தியா' இதழில் ஓர் புதிய சுதேசிய புகைக் கப்பல் கம்பெனியென்று பாரதியார் குறிப்பிட்டிருப்பதைப் பார்ப்போம்.

''கம்பெனியின் நடவடிக்கைகளைப் பார்த்து வரும் பொருட்டு மெஸர்ஸ் ஏ.ஆர். ஹாஜி பக்கீர் மகமத் செயிட் அண்டு சன்ஸ் கம்பெனியார் காரியதரிசிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கம்பெனியாரது பங்குகளில் 8000 பங்குகள் ஹாஜி பக்கீர் மகமத் செயிட் அண்டு சன்ஸ் எடுத்துக்கொண்டதாகத் தெரிய வருகிறது.*

இதிலிருந்து சுதேசிக் கப்பல் கம்பெனியின் துவக்கக் காலக்கட்டத்தில் ஹாஜி பக்கீர் முகம்மது சேட் அவர்கள் கம்பெனியின் காரியதரிசியாகவும், 8000 பங்குகளை அவர்களது நிறுவனத்தாரே விலைக்கு வாங்கியதும் உறுதிப்படுத்தப்படுகிறது.

இந்தக் கம்பெனியின் பிரசிடெண்ட் மிஸ்டர் பாண்டித்துரைத் தேவர் (பாலவனத்தம் ஜமீன்தார்). மெஸர்ஸ் ஹாஜி பக்கீர் முகம்மது சேட் கம்பெனியாரே செக்ரடெரிகள், அஸிஸ்டெண்ட் செக்ரடெரியாக தூத்துக்குடி வக்கீல் மிஸ்டர் சிதம்பரம் பிள்ளை நியமிக்கப்பட்டிருக்கிறார்''**

16—10—1906-இல் பதிவு செய்யப்பட்ட அன்று கம்பெனியின் செகரட்டரி ஹாஜி பக்கீர் முகம்மது சேட் என்பது தெள்ளத் தெளிவாகிறது. தொடர்ந்து 3 11—1906-ல் வெளி வந்த இந்தியா இதழில்,

---

* மகாகவி பாரதியார் ''இந்தியா'' இதழ் 1—9—1906 பாரதி தரிசனம் முதல்பாகம் பக்கம் 216, 217

** மகாகவி பாரதியார் 20—10—1906 இந்தியா இதழில் சீனிவிசுவநாதன் தொடுத்த 'சுதேசியத்தின் வெற்றி' பக்கம் 54, 55

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டைரக்டர்கள் 15 பேரில் முதலாவதாக மெஸர்ஸ் எச். ஏ. ஆர். ஹாஜி பக்கீர் முகம்மது சேட் அன் சன்ஸ் என்றும் மிஸ்டர் முகம்மது ஹாசிம் சேட், மிஸ்டர் இஸ்மாயில்ஹாஜி அப்துல்ரகிமான்சேட் ஆகிய இருவரும், கௌரவ காரியதரிசியாக ஹாஜி. பக்கீர் முகம்மதுசேட் அன் சன்ஸ் என்றும், துணைக் காரியதரிசியாக வ. உ. சிதம்பரம் பிள்ளையும் குறிப்பிடப் பட்டுள்ளார்கள். தொடர்ந்து 29 – 12 – 1906 இந்தியா இதழில் வெளி வந்த விஷயம்இதோ :

இஸ்மாயில் ஹாஜி அப்துர்ரகிமான் சேட் அவர்களது பெயர் மட்டும் டைரக்டர்கள் வரிசையில் உள்ளது. கௌரவக் காரியதரிசி ஹாஜி பக்கீர் முகம்மது சேட் அவர் களின் பெயர் குறிப்பிடப்படவில்லை. (பின்னால் பொறுப் பிலிருந்து விலகியிருக்கக்கூடும்.)

''பாக்கியமிகுந்த பக்கிரி முகம்மதை
வாக்கின் வலியால் வசப்படச் செய்தியான்
வணிகர் பலரையும் வருத்தி அவனிலம்
துணிவோடு சுதேசிய நவாய்ச் சங்க
நன்மலர் கண்டேன்*

என்று வ. உ. சி. யே. கூறி விட்டு அதற்கு அடிக்குறிப் பாக அவரே கப்பல் கம்பெனிக்குத் துணிவுடன் முதலில் பொருள் தந்த பிரபல முஸ்லிம் வியாபாரி பக்கீர் முகம்மது இராவுத்தர் என்றும் குறிப்பிட்டுள்ளதிலிருந்து தென்னாட்டுத் திலகரான வ. உ. சி. யின் சுதேசக் கப்பல் விடும் முயற்சிக்கு மிக முக்கியப் பங்கினை ஆற்றியவர் ஹாஜி பக்கீர் முகம்மது சேட் அவர்கள் என்பது எவரும் எப்போதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

* வ. உ. சிதம்பரம் பிள்ளை 'சுயசரிதை' பக்கம், 49, 50

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

24—9—1907ல் வெளியான அறிக்கையில் சுதேசி கப்பல் கம்பெனியின் அக்கிராசனாராக (தலைவராக) பாலவநத்தம் ஜமீன்தார் திருமிகு. பொ. பாண்டித்துரைச் சாமித் தேவர் அவர்களுடன், கொழும்பில் வணிகம் செய்து வந்த ஏ. எம். செய்யத் இப்ராகீம், திண்டுக்கல் ஏ. அசனுசைன் இராவுத்தர், இராமநாதபுரம் சீனி அசனுசைன் இராவுத்தர், ஆகிய மூவரையும் சேர்த்து மொத்தம் 31 பேர் டைரக்டர்களாக இருந்தனர். கௌரவச் செயலாளராக எஸ். டி. கிருஷ்ண அய்யங்காரும், துணைக் காரியதரிசியாக வ. உ. சிதம்பரம் பிள்ளையும் ஆடிட்டராக திருநெல்வேலி வழக்கறிஞர் பி. கே. இராமய்யரும் இருந்தனர். கம்பெனி ஆபீஸ் பீச்ரோடு நான்காம் நம்பர் கட்டிடத்தில் அமைக்கப் பெற்றது.

வ. உ. சி. யின் சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு வாரிவழங்கிய முஸ்லிம்கள்

வ. உ. சிதம்பரம் பிள்ளை நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டு இராஜதுவேச வழக்கில் சிறையேகினார். சுதேசிக்கப்பல் கம்பெனி கடும் நஷ்டத்திற்குள்ளாகியது. சாலியா கப்பல் கடனிலிருந்து மீட்கப்பட்டது. இந்த நிலையில் கப்பல் கம்பெனிக்கு தமிழ்நாட்டில் உள்ளவர்கள் நிதி உதவி செய்யுங்கள் என்று 30-1-1909 இந்தியா இதழிலும், அதற்குப் பிறகும் தொடர்ந்து அறிவிப்புக்கள் வந்த வண்ணம் இருந்தன.

13—2—1909 இந்தியா இதழில் வெளியான நிதி உதவி அளித்தவர் பட்டியலில்,

யாக்கோப்சேட் இரண்டணா வழங்கியிருக்கிறார். 27—2—1909 இந்தியா இதழில் வெளியான பட்டியலில் உமர்ஹத்தா இராவுத்தர் மூன்று ரூபாயும், நூர்முகம்மது யூசுப் எட்டணாவும், வழங்கி இருக்கிறார்கள். 20-3-1909 இந்தியா இதழில் பீ. முகம்மது பாவாசா மரைக்காயர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐந்து ரூபாயும், ஐ.இப்ராகீம் இராவுத்தர் மூன்று ரூபாயும் வி.சையது இராவுத்தர், இப்ராகீம் இராவுத்தர், கா.அகமத் சாகிபு ஆகியோர் தலா எட்டணாவும், காதர்பாச்சா சாகிப் நாலணாவும், இ. முகம்மது சுலைமான் இரண்டணாவும், வழங்கியிருப்பது வெளியாகியிருக்கிறது.

இரண்டு லட்சம் ரூபாய் திரட்டிட வேண்டுமென்று 'இந்தியா' பத்திரிக்கையில் விளம்பரம் வந்தது, ஆனால் மொத்தம் வசூலானது 215 ரூபாய் பதிமூன்று காசுகள் என்றும், 21—8—1909 'இந்தியா, பத்திரிகை சுட்டிக் காட்டியிருக்கிறது. அரசின் கடுமையான அடக்குமுறை களுக்கிடையே ஏறக்குறைய வெறும் இருநூறு ரூபாயே அன்று வசூலானது, அதிலும் முஸ்லிம் தோழர்கள் மாத்திரம் நாட்டுப் பற்றுடன் பதிமூன்று ரூபாய் எட்டணா வழங்கி இருக்கிறார்கள்.

தியாகி முகம்மது யாசீன்

வ. உ. சி. கைது செய்யப்பட்டதும் நெல்லையில் எழுந்த பேரெழுச்சி, 1908 மார்ச் 13ம் நாள் விபின்சந்திர பாலரின் விடுதலை நாளைக் கொண்டாடும் பொருட்டு சுதேசியக் கடை ஒன்று சிறப்பாக அணி செய்யப்பட்டிருப் பதைக் கண்ட மாவட்டக் கலெக்டர் விஞ்சு சீறி, அந்தக் கடை ஊழியரைச் சவுக்கால் அடிக்க, எழுச்சி ஏற்பட்டது. துப்பாக்கிச்சூடும் நிகழ்ந்தது.

1908 ஏப்ரல் 26ல் நெல்லைக்குச் சென்று பார்வை யிட்டு திரும்பிய தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார், துப்பாக்கிச் சூட்டைப் பற்றி எழுதினார், சென்னையி லிருந்து வெளிவந்த 1908-மே இந்தியா பத்திரிகையில் அதுபற்றி தெரிவித்துள்ளார். அதில் திருநெல்வேலி மரண புரம் போல காட்சி அளித்ததாகத் தெரிவித்துள்ளார்.*

* ரா. அ. பத்மநாபன்—பாரதி புதையல்—இரண்டாம்பாகம் 1959 பக்கம். 158

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் நாட்டிற்காக உயிர்பலியான வர்களில் ஒருவர் முஸ்லிம்* அந்தச் சுதந்திரப் போரில் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் துப்பாக்கித் தோட்டாக் களுக்குத் தன் இன்னுயிரை இழந்த அந்த வீர முஸ்லிம் தியாகி முகம்மது யாசீன்**

1906-இல் ஆங்கிலேயக் கப்பல் கம்பெனிக்கு எதிராக கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம்பிள்ளை சுதேசக் கப்பல் கம்பெனியைத் துவங்கிடவும், தூத்துக்குடி யில் சுதந்திர வேட்கையூட்டும் கூட்டங்களை பள்ளிவாசற் பேட்டையில் முஸ்லிம்களின் ஆதரவுடன் நடத்திடவும்,*** அது தொடர்பாக எழுந்த நெல்லை எழுச்சியில் நடை பெற்ற துப்பாக்கிச் சூட்டில் முகம்மது யாசீன் என்ற முஸ்லிம் தோழர் உயிரைக் கொடுத்தும், சுதேசிக் கப்பல் கம்பெனி நலிவுற்ற போது தங்களால் இயன்ற பொருளுதவியைச் செய்தும், வடநாட்டில் திலகர் ஜொலித்த வேளையில் அவரது குரலாக தென்னாட்டில் ஒலித்து, விடுதலைப்போரை நடத்திய வ. உ. சிதம்பரம் பிள்ளையின் விடுதலைப் போர்ப்பணிக்கு உறுதுணை யாக தமிழக முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு மறைக்கவோ மறுக்கவோ முடியாத ஒன்றாகும்.

* சுதேசமித்திரன் 17—3—1908

** கே.எம். காதர்முகைதீன் 17—7—92 மறுமலர்ச்சி கட்டுரை

*** வ உ சி. 'சுயசரிதை' பக்கம் 63

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காங்கிரஸ் மகாசபையில் (1919 வரை)

(காந்திய சகாப்தம் துவக்கம்)

இருபத்தி மூன்றாவது காங்கிரஸ்

அகில இந்திய காங்கிரஸ் சூரத்தில் 1907 டிசம்பர் 26ல் கூடியது.

"நமது உரிமைகளின் பொருட்டு தீவிரமாகப் போராடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யாமல், கேவலம் காகிதத் தீர்மானங்களை மாத்திரம் நிறைவேற்றி வைப்பதையே காங்கிரஸ் மகாசபை தொழிலாக வைத்துக்கொண்டிருப்பதை அடியோடு மாற்றி, காங்கிரசை தேசீயவாதிகளின் ஸ்தாபனமாக ஆக்கிவிடவேண்டுமென்று, ஒரு கூட்டத்தார் பலமான ஏற்பாடுகளை செய்து சுறுசுறுப்புடன் தங்களது தீவிரவாதக் கட்சிக்கு பலம் சேகரித்தனர்".

சூரத்தில் மிதவாதிகளும், திலகரின் தலைமையிலான தீவிரவாதிகளும் மோதினர். செருப்புக்கள் பறந்தன, நாற்காலிகள் மட்டுமின்றி காங்கிரசும் உடைந்தது.

சென்னையில் திரும்பவும் கூடிய காங்கிரஸ்

1908 டிசம்பர் 28ல் சென்னையில் கூடிய காங்கிரஸில் 626 பிரதிநிதிகளில் 404 பேர்கள் சென்னை மாகாணத்திலிருந்து தான் வந்திருந்தார்கள். சப்ஜெக்ட் கமிட்டிக்கு, நியமிக்கப்பட்டதில் நவாப் செய்யது முகம்மது பகதூரும், தேர்ந்தெடுக்கப்பட்டதில் இப்ராகீம் நூர்தீன் மக்தூமும், முஸ்லிம்கள் ஆவர். பிரதிநிதிகளாக வந்து கலந்து கொண்டவர்களில் எப். கபர்தார், எம். ஹயாத் பாட்சா சாகிப், கே. வி. இ. முகம்மதுஅலி சாகிப் ஆகியோர் சென்னை மாகாணத்தின் காங்கிரஸ் பிரதிநிதிகளில் முஸ்லிம்கள் ஆவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

24வது காங்கிரஸ் லாகூரில் 1909-ல் கூடியது.

அலகாபாத்தில் கூடிய 25வது கூட்டம் (1910)

600 பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஹசன் அலிசாகிப், எம். ஏ. ஜின்னா தமிழ்நாட்டிலிருந்து சென்ற காங்கிரசின் பிரதிநிதிகளில் முஸ்லிம்கள் ஆவர்.

கல்கத்தாவில் கூடிய 26வது காங்கிரஸ் (1911)

செய்யது முகம்மது, அப்துல் காசீம், செய்யது ஹசன் இமாம் ஆகியோர் காங்கிரஸ் பிரதிநிதிகளில், சென்னை மாகாணத்திலிருந்து சென்ற முஸ்லிம்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

27வது கூட்டம் பங்கிப்பூர் (1912)

சென்னை நவாப் செய்யது முகம்மது பகதூர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரானார். செய்யது முகம்மது சாகிப் பகதூர் சென்னையிலிருந்து கூட்டத்திற்கு சென்ற முஸ்லிம் ஆவார்.

28வது கூட்டம் கராச்சி (1913)

சென்னை நவாப் செய்யது முகம்மது பகதூர் தலைமையில் நடைபெற்றது.

29வது கூட்டம் சென்னை (1914)

சென்னை மகாசபைக் கூட்டத்தில் வரவேற்புக் கமிட்டியில் எஸ். சுப்பிரமணிய அய்யரும், பொதுச்செயலாளர் பொறுப்பில் செய்யது முகம்மதுவும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அலுவல் சார்பில் சென்னை நவாப் செய்யது முகம்மதுவும் பணியாற்றினர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எம். ஹயாத்பாட்சா சாகிப், ஆனஞ்ஜிசாகிப், நவாப் குலாம் முகம்மது, கான்சாகிப் மிர்ஷா முகம்மது பெய்க்காசிம்பகதூர், குத்தூஸ் பாட்சாசாகிப், முகம்மது அப்துல்ஜமால்பாட்சா சாகிப், மௌலானா அப்துல் சுபான் சாகிப், முகம்மது இப்ராகீம். இன்ரஸிசாகிப், குலாம் முகைதீன்சாகிப், யாகூப்ஹசன், முகம்மது ஜியாவுதீன் சாகிப், அகம்மது அன்சாரி, ஆகிய காங்கிரஸ் பிரதிநிதிகள் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

30வது காங்கிரஸ் மகாசபை

1915-டிசம்பர் 27 ல் பம்பாயில் கூடியது. சென்னை மாகாணத்திலிருந்து சென்ற பிரதிநிதிகளில் செய்யது முகம்மது சாகிப், சி. அப்துல் ஹக்கீம் சாகிப் ஆகியோர் முஸ்லிம்கள்.

31வது காங்கிரஸ் மகாசபை

1916ல் லக்னோவில் கூடியது. சென்னை மாகாணத்திலிருந்து எம். எஸ். மம்மதி, நவாப்பீர்ஆசாத் அலிகான் பகதூர், யாகூப்ஹசன்சாகிப், பகதூர், ஆகியோர் சென்னை மாகாண முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் ஆவார்கள்.

32வது காங்கிரஸ் மகாசபை

1917 டிசம்பர் 26ல் கல்கத்தாவில் கூடியது. பொதுச் செயலாளர்களான என். சுப்பாராவும், செய்யது முகம்மதுவும், வரவு செலவு அறிக்கைகளை சமர்ப்பித்தார்கள்.

33வது காங்கிரஸ் மகாசபை

டெல்லியில் 1918 டிசம்பர் 26ல் கூடியது, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, சென்னை மாகாண உறுப்பின

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராக சென்னை யாகூப்ஹசன்சேட் தேர்ந்தெடுக்கப் பட்டார். சேலம் விஜயராகவாச்சாரியார், சி. பி. ராமசாமி ஐயர் உள்ளிட்ட மொத்தம் 14 பேர் அந்தக் கமிட்டியில் பங்கேற்றனர்*

விசேச காங்கிரஸ் சபை கூட்டம் 1918 டிசம்பர். 29

பம்பாயில் கூடிய விஷேசகாங்கிரசிற்கு ஹசன் இமாம் தலைமை தாங்கினார்.

அமிர்தரசில்கூடிய அகிலஇந்திய காங்கிரஸ் மகாசபை

1919 டிசம்பர் 27-30 நாட்களில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு மோதிலால் நேரு தலைமை தாங்கினார். டாக்டர் எம். ஏ. அன்சாரி அவர்கள் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார்கள்.

இதே காலக்கட்டத்தில் தீவிரவாத புரட்சித்தலைவர்கள் அரசின் கடும் அடக்குமுறைக்குள்ளாகி சிறைச்சாலையில் பல்லாண்டுகள் சித்திரவதை அனுபவித்து விட்டு விடுதலையாகி சோர்வுடன் இருந்தனர். (தெற்கே வ.உ. சி. யும் வடக்கே திலகரும்)

விடுதலையான தலைவர்கள்

1910ல் நடைபெற்ற காங்கிரசிற்கு தலைமை வகித்த ஜே, சந்திரவாக்கர் 1915ல் அரசியலிலிருந்து விலகினார். அதே ஆண்டில் 1901 காங்கிரசில் தலைமை தாங்கிய தீன்ஷாஎதுல்ஜிவாச்சா கண் பார்வை இழந்த நிலையில் இருந்தார். 1915 பிப்ரவரியில் கோபாலகிருஷ்ண கோகலே

* A. M. ZAIDI, Shaheoa Zaidi
The Encyclopaedia of the Indian National Congress (XXVI volumes). இருபத்தாறு பாகங்கள் கொண்ட ஆங்கில நூலில் இது போன்று அனைத்து விபரங்களும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர் காங்கிரஸ் கமிட்டி ஆபிஸில் டெல்லியில நூலகராகப் பணியாற்றியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யும், நவம்பரில் பிரோஷாமேத்தாவும் மறைந்தனர். பண்டிதமாளவியாவும், மகாகனம் சீனிவாச சாஸ்திரி யாரும் பின்னணியில் இருந்தனர். லாலாலஜபதிராய் முதல் உலகப் போர் நடைபெற்ற அந்த காலக் கட்டத்தில் அமெரிக்காவில் தங்கி வாழ்ந்து வரலானார். மிதவாதிகள் சக்தி அனேகமாக மறைந்து விட்டது. தீவிரவாதிகள் ஒன்று சேராமல் சிதறிக் கிடந்தனர். தேசத் தலைமை அரசாங்கத்திடம் போய்விடும் போல் இருந்தது. இதுவே 1915-ஆம் ஆண்டின் தேசத்தின் சூழ்நிலை*

காந்தியின் இந்திய அரசியல் பிரவேசம் (2-10-1869 — 30-1-1948)

தாதா அப்துல்லாஹ் கம்பெனியாரின் வழக்கிற்காக 1893 ஏப்ரலில் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்ற முதல் இந்திய வழக்கறிஞரான மகாத்மா காந்தி, தென்னாப் பிரிக்காவில் விடுதலைக் கிளர்ச்சியை நடத்தி பல்வேறு இன்னலுக்குள்ளாகி சத்யாக்கிரக வழியில் நடைபோட்டு விட்டு 1914 ஜூலை 18ல் இந்தியாவிற்கு வந்து சேர்ந்தார்.

இந்திய அரசியலில் நிலவிய சூன்ய சூழ்நிலையில் அவரது வருகை அவருக்கு வாய்ப்பளித்தது. வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்ட அவர், இந்திய அரசியலில் வேகமாக வளரத் துவங்கினார். தனியார் இல்லங்களில் போர்டுகளில், லட்டர் பேடுகளில் இருந்த அகில இந்திய காங்கிரஸ் சபைக்கு புத்துயிர் அளிக்க, நாட்டு விடுதலைக்கு முஸ்லிம் மக்களுடன் இணைந்து போராட ஓர் அரிய சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. கிடைத்த சந்தர்ப் பத்தை பயன்படுத்திக் கொண்டார். கிலாபத் இயக்க மும், ஒத்துழையாமையும் அதன் விளைவாகும்.

* S. Pattabi Sitaramayya 'The History of Congress' 1935 page 201-210

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிலாபத் ஒத்துழையாமை இயக்கம்
இந்து, முஸ்லிம் இணைந்து போராடுதல்

தங்களின் ஆட்சியை இழந்த பிறகு 1857 முதல் இந்திய முஸ்லிம்கள் 1906 வரை ஓர் நெருக்கடியான காலக்கட்டத்தை கடந்திருக்கிறார்கள். முஸ்லிம்களை அடக்கி நசுக்கிவிட வேண்டும் என்பது பிரிட்டிஷாரின் கொள்கையாக இருந்தது. முதலில் முஸ்லிம்கள் தங்கள் உயிர் வாழ்க்கைக்குப் போராட வேண்டியதிருந்தது. 1005 முதல் 1857 வரை 852 வருடங்களில் இத்தேசத்தின் எஜமான்களாக இருந்த முஸ்லிம் மக்கள் அபாயகரமான எதிர்காலத்தையும், பேராபத்துக்களையும் சமாளிக்க வேண்டியதிருந்தது.

சர் ஸெய்யத் அஹ்மத்கான்

அந்தக் காலக்கட்டத்தில் பரிதாபகரமான முறையிலிருந்த முஸ்லிம் குடும்பங்களைக் காப்பாற்றுவதில் மாபெரும் தொண்டாற்றியவர் சர். செய்யது அகம்மது கான். 500 பிரதிகள் நூல் அச்சிட்டு 498ஐ இங்கிலாந்தில் விநியோகித்து, ஒரு புத்தகத்தை இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவிட்டு ஒரு புத்தகத்தை தானே வைத்துக் கொண்டார்.

''1858 முதல் 1898-வது வருடம் வரை முஸ்லிம்களின் எல்லாவித அரசியல் இயக்கங்களுக்கும் சர் செய்யது அகம்மது கானே நடு நாயகமாக விளங்கி வந்தார்''*

அவர் 1886-ல் பிரிட்டிஷ் இந்தியா அஸோசியேசன், என்ற சங்கத்தை நிறுவினார். முஸ்லிம்கள் கல்வி பெற வேண்டிய அவசியத்தை விளக்கி பிரச்சாரத்தில் இறங்கிய அவர் மேற்கிந்திய முஸ்லிம் பாதுகாப்புச் சங்கம் என்ற ஓர் சபையையும் நிறுவினார்.

* முகம்மது செயின் ''முஸ்லிம் இந்தியா'' பக்கம் 31

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1893-டிசம்பர் 30ல் எம்.ஏ.ஒ. கல்லூரி முதல்வர் பெக் போன்ற தலைவர்களைக்கூட்டி முஸ்லிம்களின் கோரிக்கைகளை எடுத்துரைக்க ஓர் அரசியல் ஸ்தாபனம் ஏற்பட வேண்டுமென்ற அவசியம் குறித்து விவாதித்தார் இந்தக் காலக்கட்டத்தில் அவர் மறைந்ததும் நவாப் முஹ்ஸினுல் முல்க் தொடர்ந்து இந்தப் பணியில் இறங்கினார். அவருடன் நவாப் விகாருல் முலீக்கும் இணைந்து செயல்படத் துவங்கி 1901-ல் லட்சுமணபுரியில் ஓர் கூட்டத்தை கூட்டி அதில் விவாதித்து ஒவ்வொரு மாகாணத்திலும், ஜில்லாவிலும், நகரத்திலும், கிளை ஸ்தாபனங்களைக் கொண்ட முஸ்லிம் சங்கங்களை தோற்றுவிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

முஸ்லிம் சங்கங்கள்

முஸ்லிம்களின் அரசியல், சமூக ஸ்தாபனம் என்று அழைக்கப்பட்ட சங்கம் அலிகாரில் தோற்றுவிக்கப்பட்டு எல்லாப்பகுதி முஸ்லிம்களும் இச்சங்கத்தின் கொடியின் கீழ் கூடினார்கள். அநேக முஸ்லிம் சங்கங்கள் அமைக்கப் பட்டன. முதன் முதலில் பஞ்சாப் முஸ்லிம் லீக் அமைந்தது.

இந்தச் சூழ்நிலையில் கர்சன் பிரபுவின் வங்கப் பிரிவினை 1905ல் வந்தது.

முஸ்லிம்களின் குறைகளையும், உரிமைகளையும், நிர்ணயிக்கும் மகஜர் ஒன்று தயார் செய்வதுடன், வைசிராயிடம் தூது கோஷ்டியும் செல்ல வேண்டுமென்று நவாப் முஹ்ஸினுல்முல்க் முடிவு செய்து, அதன்படி 1906 அக்டோபர் முதல் நாள் சிம்லாவுக்கு மின்டோபிரபுவிடம் தூதுகோஷ்டியை அனுப்பி, முஸ்லிம்களுக்கு தனித்தேர்தல் தொகுதியை அது பெறுவதில் வெற்றியும் பெற்றது. இந்த சூழ்நிலையில் 1906-டிசம்பர் 30-இல் டாக்காவில் ஆயிரக்கணக்கான முஸ்லிம் பெரியவர்கள் குழுமியிருந்தனர். அங்கே முஸ்லிம் லீக் உருவானது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முஸ்லிம் லீக்

கராச்சியில் 1907 டிசம்பர் 29,30-இல் முதல் முஸ்லிம் லீக் கூட்டம் கூடியது. அதன் தொடர்ச்சியாக அலிகாரில் 1908-மார்ச் 18, 19ல் கூடியது. அதே ஆண்டில் டிசம்பர் 30, 31ல் அமிர்தரசில் 2வது கூட்டம் நடைபெற்றது 1910 ஜனவரி 29, 30 டெல்லியில் 3வது கூட்டம் நடைபெற்றது. அதே ஆண்டில் டிசம்பரில் நான்காவது கூட்டம் நாக்பூரிலும், 1912 மார்ச்சில் ஐந்தாவது கூட்டம் கல்கத்தாவிலும் ஆறாவது கூட்டம் 1913 மார்ச்சில் லக்னோ விலும், ஏழாவது கூட்டம் 1913 டிசம்பரில் ஆக்ராவிலும், 8வது கூட்டம் 1915 டிசம்பர் 1916 ஜனவரி 1 பம்பாயிலும் கூடியது

1916ல் லக்னோவில் 9வது கூட்டம் கூடியது, 10வது கூட்டம் கல்கத்தாவில், 1917 டிசம்பர் 30, 1918 ஜனவரி 1லும் கூடியது. 11வது கூட்டம் டிசம்பர் 30, 1918-இல் டெல்லியில் கூடியது. 12வது கூட்டம் அமிர்தரசில் 1919 டிசம்பர் 29, 30, 31ம் தேதிகளில் கூடியது. அதே காலத் தில் தான் அகில இந்திய காங்கிரஸ் 34வது மகாசபைக் கூட்டமும், அமிர்தரசில் அருகருகே நடந்தது.

அகில இந்திய காங்கிரசையும், அகில இந்திய முஸ்லிம் லீக்கையும் அருகருகே கொண்டு வந்த அதிசயத் திற்கு என்ன காரணம்? அரசியலில் அன்று நடைபெற்ற சம்பவங்கள் தான் என்ன?

ரௌலட் சட்டம்

1918 டிசம்பர் 17-இல் எஸ். ஏ. டி. ரௌலட் என்ற நீதிபதியின் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டி 15—4—1919ல் அரசுக்கு அளித்த அறிக்கையில் எந்த வீட்டையும் போலீசார் வாரண்டு இன்றி சோதனை யிடவும், புரட்சியாளரென்று போலீசாரால் சந்தேகிக்கப் படும் ஒருவரை வாரண்டில் கைது செய்யவும், விசேச நீதி மன்றத்தில் அவர் விசாரிக்கப்படவும், அரசு குற்றம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாட்டிய குற்றங்களை நிரூபிக்க சாட்சியம் இல்லா விடினும் தண்டனை தரவும், அதனை ரகசியமாக விசாரணை செய்திடவும், மேல் அப்பீல் எதுவும் கிடையாது என்றும், பகிர்ந்துரைத்த ரௌலட் மசோதாக்களை காந்தி கண்டித்தார். 1919 ஏப்ரல் 6ம் தேதி முதல் நாடெங்கும் ஹர்த்தால் நடைபெற்றது.

ஜாலியன் வாலாபாக் படுகொலை

1918 ஏப்ரல் 9-இல் ராமநவமி விழா அமிர்தசரசில் அமைதி ஊர்வலம் நடைபெற்ற போது, 'இந்து முஸ்லிம் கிஜே' என்று இரு சமூகத்தினரும் ஒற்றுமையுடன் சென்ற காட்சியைக் கண்டவர்களுக்கு மயிர்க்கூச் செறியச் செய்தது*

1919 ஏப்ரல் 10-டாக்டர் சைபுதீன் கிச்சலு, டாக்டர் சத்தியபாலு இருவரையும், அமிர்தசரஸ் துணைக்கமிஷன் ஓமில்லர்இர்வின் வரச் சொல்லி, தனது வீட்டில் அவர்களை கைதுசெய்து கான்ரா ஜில்லா தர்மசாலாவுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தச் செய்தி காட்டுத்தீயாக நாட்டில் பரவிட கூட்டம் கூட்டமாக மக்கள் திரண்டனர். இராணுவம் பல பகுதிகளிலிருந்து வரவழைக்கப்பட்டது. கூட்டங்கள் நடத்த அனுமதி எவருக்கும் இல்லை. கூட்டத்தின் மீது சுட்டுத் தள்ளுங்கள் என்ற உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கூட்டத்தில் கலந்து கொள்ள ஜாலியன் வாலாபாக்கில் கூடியிருந்த பல்லாயிரக் கணக்கானோர் மீது ஜெனரல் டயர் தலைமையில் குண்டுகள் தீரும்வரை 1650 தடவை தட்டுத் தள்ளினார்கள்.

டாக்டர் கிச்சலுவின் படம் வைக்கப்பட்டு, ஹன்ஸ் ராஜ் பேசிக்கொண்டிருக்க, கோபிநாத் கவிதை வாசிக்க

* ஹண்டர் கமிட்டியில் 'கான்பகதூர் காஜா யூசுப்ஷா' சாட்சியம் 1969 ஏப்ரல் 'குமரிமலர்' பக்கம் -34.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அமைதியாகக் கூட்டம் கூடி இருந்தது* கூடி இருந்த மக்கள் மீது அங்கு நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 500 அல்லது 600 பேர் சாகடிக்கப்பட்டு மைதானத்தின் உள்ளும் வெளியிலும் சிதறிக் கிடந்ததைக் கண்டடேன்**

பன்னிரெண்டு அடி உயரத்திற்குச் செத்துப் போனவர்களின் உடல்கள் குவிந்திருந்தன***

இந்தக் கோரச்சம்பவத்திற்குப் பிறகு நாட்டின் அரசியல் அரங்கில் துரிதமாக மாறுதல் ஏற்பட்டது என்பதனை விளக்கிடத் தேவையில்லை.

கிலாபத்

கிலாபத் என்ற அரபுச்சொல், பின்னால் விட்டு வைப்பது, என்று பொருள்படும். காப் என்ற வேர்ச் சொல்லினால் உருவாக்கப்பட்டது. இதன் உருதுச் சொல்லின் பொருளான 'எதிர்ப்பு' என்பது பிரபலமாகி, எதிர்ப்பு இயக்கம் என்ற உணர்ச்சிவேகப் பொருளில் கிலாபத் இயக்கம் மூண்டெழுந்தது.

* பிரதாப்சிங் காங்கிரசின் துணைக்கமிட்டியின் முன் அளித்த பேட்டி
** உயிர் தப்பிய லாலாகியான் சந்த் அளித்த பேட்டி
*** நேரில் பார்த்த முகம்மது இஸ்மாயில் பேட்டி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிலாபத்

1919

இந்திய சரித்திரத்தின் முக்கியமான காலக்கட்டம், முதல் உலகப்போர் முடிவுற்ற வேளை, தொழிலாளி துயரில், விவசாயி வேதனையில், நாடெங்கும் வேலை நிறுத்தங்கள். அந்தப் போரின் போது 1918 ஜூன் 5-ம் தேதி பிரிட்டிஷ் பிரதமமந்திரி லாயிட் ஜார்ஜும், இந்திய வைசிராயும், பிரிட்டிஷ் அரசு பழிவாங்கும் கொள்கையை மேற்கொள்ளாது என்றும், துருக்கியர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஆசியாமைனரையும், திரேசையும், துருக்கியின் கையிலிருந்து பறித்துக் கைப்பற்ற விரும்பவில்லை என்றும், இஸ்லாமியப் புண்ணிய ஸ்தலங்கள் முஸ்லிம்களின் நிர்வாகத்தின் கீழ்வைக்கப்படும் என்றும், சமாதான உடன்படிக்கையில் துருக்கியருக்குச் சாதகமான சரத்துக்கள் சேர்க்கப்படும்என்றும் அறிவித்திருந்தனர்.

ஆனால் யுத்தம் முடிந்த பின், கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் பிரிட்டிஷ் அரசு துருக்கிக்குக் கடுமையான நிபந்தனைகளை விதிக்க முற்பட்டது. துருக்கியின் ஆசியப் பகுதிகளை பிரிட்டனும், பிரான்சும், பங்கு போட்டுக் கொண்டன. அதைக் கண்டித்து இந்திய முஸ்லிம்கள் ஆவேசத்துடன் ஆர்த்தெழுந்தனர்.

> ''பிரிட்டிஷாருக்கு எதிராக உணர்ச்சி
> இந்தியாவில் ஏனைய சமூகங்களில் இருப்பதைவிட
> முஸ்லிம்களிடையே பலமாக வேரூன்றி இருக்கிறது''

என்று வங்கத்துச் சிங்கம் ''சுபாஷ்சந்திரபோஸ்'' தனது இந்தியப் போராட்டம் (1920) என்ற நூலில் குறிப்பிடுகிறார்*

---

* ஜனாப் நுஃமான் எழுதிய (1941) அலிகார் மூலத்திலிருந்து முகம்மது செயின் (1971) 'முஸ்லிம் இந்தியா' பக்கம் 164.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்திய முஸ்லிம்களுடன் இந்துக்களும் சேர்ந்து கொண்டார்கள். எனவே, கிலாபத் பிரச்சனை அகில இந்தியப் பிரச்சனையானது* ஏககாலத்தில் ரௌலட் சட்டமும், ஜாலியன் வாலாபாக் படுகொலையும், துருக்கி விஷயத்தில் பிரிட்டிஷாரின் உறுதிமொழி உதறி தள்ளப் பட்டதும் சேர்ந்து கொண்டது. நாடெங்கும் புரட்சிப் பேரலை எழுந்தது. அப்போதுதான் அமிர்தசரசில் அட்சிசன் பார்க்கில் கூடிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத் தில் அஜ்மல்கான், ஜின்னா, ஹசன்இமாம், அவரது மனைவி டாக்டர் கிச்சலு, முகம்மது அலி, சௌக்கத் அலி போன்ற தேசிய முஸ்லிம்களும், முஸ்லிம் லீகர்களும், காங்கிரசாரும் ஒரே மேடையில் அமர்ந்திருந்தனர்.

தமிழ்நாடெங்கும், பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு பஞ்சாப் படுகொலை கண்டிக்கப்பட்டது. 28—5—1920ல் ஹண்டர் கமிஷன் ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து அறிக்கை தந்த போது, அநீதிகள் இழைத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்ய வில்லை, மக்கள் ஆத்திரத்திற்குள்ளானார்கள்.

ஒத்துழையாமை இயக்கம்

அநீதிக்குப் பரிகாரம் தேட, பிரிட்டிஷாரின் போக்கினை எதிர்த்தும், மகாத்மாகாந்தி 1920 மார்ச் 19ல் துக்கதினம் கொண்டாட முடிவு செய்தார். அன்று பிரிட்டி ஷாருடன், இந்திய முஸ்லிம்களுக்குள்ள உறவு அறுபடடுப் போகும் என்று மௌலானா ஷௌகத் அலி அறிக்கை விட்டார்.

சென்னை நகரில் மௌலானா முகம்மதுஅலி தலைமை யில் சென்னை மாகாண கிலாபாத் மாநாடு நடைபெற்றது.

* மகாத்மாகாந்தி நூல்கள் ஒன்பதாம் தொகுப்பு பக்கம் 29.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிலாபத்துக்கு நிதிதிரட்டும் பொறுப்பை ராஜாஜி ஏற்றார்* அக் கான்பரன்ஸுக்கு பற்பல இடங்களிலிருந்து கணக்கற்ற முஸ்லிம்கள் வந்தனர்** காந்தி ஏற்கனவே யௌவன இந்தியா (பாலபாரதம்) பத்திரிகையில் எழுதி வெளியிட்ட கீழ்கண்ட சரத்துக்கள் தீர்மானமாக எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டன.

நல்ல ஷரத்துக்கள் நான்கு

1. அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் பட்டங்கள், கௌரவங்கள், அதிகாரச்சின்னங்கள், விருதுகள் ஆகியவைகளைப் பெறக்கூடாது. பெற்றவைகளை வாபஸ் செய்ய வேண்டும்.

2. பஞ்சாப் படுவதையைப் பற்றியும், கிலாபத் விஷயத்தைப் பற்றியும் அரசாங்கத்தார் அக்கிரமஞ் செய்திருக்கிறார்கள் என்று உண்மையாக மனதில் படுமானால் ஜாதீய மரியாதைக்காகவும், நாட்டின் நன்மைக்காகவும், போலீஸ் சிப்பந்திகளும், அதிகாரிகளும் உடனே தங்கள் வேலைகளினின்றும் விலகிக் கொள்ள வேண்டும்.

3. இராணுவத்தில் உத்தியோகம் புரியும் சிப்பாய்களும், மற்றுமுள்ள இந்தியப் படைவீரர்களும் இந்தியாவிற்கு ஏற்பட்ட சங்கடத்தை உத்தேசித்து, அவர்கள் தாங்களாகவே, தங்களது பதவிகளிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

4. அரசாங்க நிர்வாகத்திற்கு அடிப்படையாயிருக்கும் வரித்திட்டத்தை கொடுக்காமல் நிறுத்தி விட வேண்டும்.

* ம. பொ. சிவஞானம்— ''விடுதலைப்போரில் தமிழகம்'' முதல் தொகுதி பக்கம் 452

** ''ஒத்துழையாமை ஏன்?'' என்ற கணேஷ் கம்பெனியார் வெளியிட்ட நூல் பக்கம் 72, 73

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்சொன்ன நான்கு திட்டங்களில் முதல் சரத்தை மட்டும் எடுத்து பல தலைவர்களுடன் ஆலோசித்து காந்தி 1920 ஜூன் மாதத்தில் அதில் ஏழு படிகளை அமைத்தார்.

1. பட்டங்கள், சர்க்கார் நியமன அந்தஸ்த்துக்கள், கௌரவச் சின்னங்கள் இவைகளை விட்டுவிட வேண்டும்.

2. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்யும் விருந்து கச்சேரிக்குப் போகக்கூடாது. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்காக விருந்து கச்சேரி நாம் நடத்தவும் கூடாது

3. சட்டசபைகளுக்கு அபேட்சகர்களாக நிற்கக் கூடாது.

4. வக்கீல்கள் கோர்ட்டுகளிலிருந்தும் விலக வேண்டும்.

5. முஸ்லிம்களின் புண்ணியஸ்தலமான ஜஸிருயத்-உல்-ஆரப் எல்லைக்குள்ளே இருக்கும் மெஸபடோமியாவுக்கு இந்தியாவில் இருந்து வீரர்களோ அல்லது சிப்பாய்களோ போகக்கூடாது.

6. பள்ளிக்கூடத்தைவிட்டு மாணவர்கள் வெளி வர வேண்டும்.

7. இந்தியா தேசத்தில் உற்பத்தியாகும் சாமான்களைக் கொண்டு செய்யப்பட்டு வரும் சுதேசிய சாமான்களை வாங்க வேண்டும்.

இந்த அறிவிப்பிற்குப் பிறகு ஆங்கிலேய எதிர்ப்பு வலுத்தது இந்திய சுதந்திரப்போரின் அங்கமாக விளங்கிய அந்த ஒத்துழையாமை இயக்கத்தில் தமிழக முஸ்லிம்களின் பங்குபற்றி பார்ப்போம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுச்சியின் வடிவம்
யாகூப் ஹசன்

யாகூப் ஹசன்

தெஃலியிலிருந்து சென்னையில் குடியேறிய இசுலாமியக் குடும்பத்தில் பிறந்து சென்னையிலும், பின்னர் இங்கிலாந்திலும் படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் யாகூப் ஹசன். சென்னையில் வழக்கறிஞர் தொழிலிலும், அரசியலிலும், தீவிரமாக ஈடுபட்டு முஸ்லிம் லீகினராலும் காங்கிரசாராலும் தலைவரென மதிக்கப்பட்டவர்.

1916 லக்னோவில் கூடிய காங்கிரஸ் மகாசபை கூட்டத்திலும், 1917 கல்கத்தாவில் கூடிய கூட்டத்திலும் 1918 பம்பாய் சிறப்புக் கூட்டத்திலும் இவர் காங்கிரசின் பிரதிநிதியாய் கலந்து கொண்டார். அதே ஆண்டு டெல்லியில் கூடிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் தமிழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 14 கமிட்டி உறுப்பினர்களில் யாகூப் ஹசன் ஒருவர்.

1919 அமிர்தசரசில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தின்போது தமிழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டோரில் ராஜாஜி, விஜயராகவாச்சாரியார், கஸ்தூரி ரெங்கஅய்யங்கார் வரிசையில் யாகூப்ஹசன் சேட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாகத் தம் வக்கீல் தொழிலைத் துறந்தார்.*

1920 ராஜ்பூரில் (நாக்பூரில்) நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தின் போது தமிழகப் பிரதிநிதிகளாக கலந்து கொண்டவர்களில் டாக்டர் சுப்பராயன், சத்தியமூர்த்தி, டி. பிரகாசம், ராஜாஜி ஆகியோருடன் யாகூப் ஹசன் சேட்டும் முக்கிய இடத்தை வகித்தார்.

* ஹாபிஸ் ஏ என். முகம்மதுயூசுப் பாஜில் பாகவி 'நூருல் இஸ்லாம்' ஆசிரியர் எழுதிய ''இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள்'' (1969) பக்கம். 220, 221

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காங்கிரசின் பொருளாய்வுக் கமிட்டியில் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த மௌலவி அப்துல் மஜித், அப்துல் ஹமீது டமான்சேட், ராஜாஜி, யாகூப்ஹசன் சேட், திருச்சி டி. எஸ். எஸ். ராஜன், வ. வே. சு. அய்யர், அன்னி பெசன்ட் உள்ளிட்ட 29 பேர் இருந்தனர்.

அகில இந்திய காங்கிரசிலும், தமிழ்நாட்டுக் காங்கிர சிலும் தனக்கென தனி இடத்தைப் பெற்றுத் திகழ்ந்து கொண்டிருந்தார் யாகூப் ஹசன் சேட்.

தமிழ்நாடு காங்கிரஸ் மாநில அரசியல் மாநாடு

1920ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21, 22 தேதிகளில் திருநெல்வேலி நகரில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் மாநில அரசியல் மாநாடு நடைபெற்றது.

முன்னாள் அட்வகேட் ஜெனரலான எஸ். சீனிவாச அய்யங்கார் அம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். ஒத்துழையாமை இயக்கமும், கிலாபத் போராட்டமும் உச்சக்கட்டத்தில் இருந்த நேரம் அது. அன்னிபெசன்ட் டும், சர்.பி. ராமசாமி அய்யரும், மாநாட்டுக்குத் தலைமை வகித்த சீனிவாச அய்யங்காரும் மிதவாதிகள். அவர் களுடன் மிதவாதப் போக்கை ஆதரித்தவர்களான கஸ்தூரி ரெங்க அய்யங்காரும், சேலம் விஜயராகவாச்சாரியாரும், எம். கே. ஆச்சாரியாவும், எஸ். சத்தியமூர்த்தியும், வி. கே. ராமானுஜாச்சாரியும் திருநெல்வேலி அரசியல் மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் குறிப்பிடத்தக்க வர்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஒரேயடியாகப் பகைத்துக் கொள்ள வேண்டியதில்லை என்றும், அரசியல் சீர்திருத் தங்கள் தேவை என்ற அம்சத்தை வலியுறுத்தி தீர்மானம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிறைவேற்றினால் போதும் என்றும் அவர்கள் நினைத்தார்கள்*

ஆனால் அம் மாநாட்டில் கலந்து கொண்ட சி. ராஜகோபாலாச்சாரியார், டி.ஆதிநாராயணசெட்டியார், எஸ். கிருஷ்ணசாமி சர்மா, போன்ற தீவிரக்கருத்துடையவர்கள் காந்திஜியால் நடத்தப்பட்டு வரும் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்து இம்மாநாட்டில் கண்டிப்பாக தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தினார்கள், வாதாடினார்கள்.

கிலாபத் போராட்டம், முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டது என்றும், அதையும் ஒத்துழையாமை இயக்கத்துடன் சேர்த்து இந்நாட்டில் அரசியல் பிரச்சனையாக்க வேண்டாம் என்று காங்கிரஸ் கட்சியின் இந்து தலைவர்கள் பலரும் அப்போது கருதினார்கள்**

1920 ஜூலை 22-இல் காந்திஜி அவர்களாலும், மௌலானா சௌகத்அலி அவர்களாலும், நடத்தப்படும் கிலாபத் போராட்டத்தையும் ஒத்துழையாமை இயக்கத்தையும், இம்மாநாடு முழுமனதுடன் ஆதரிப்பதாகவும் சகலவிதமான ஒத்துழைப்புக்களையும் நல்கத் தயாராக இருப்பதாகவும், கூறும் அத்தீர்மானத்தை யாகூப்ஹசன் சேட் முன்மொழிந்தார். தீர்மானம் ஏகமனதாக பெரும்பான்மையினர் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

---

* ஸ்தாபனரீதியாக ஒத்துழையாமை இயக்கத்தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றியது சென்னை மாகாண காங்கிரஸ். ஆனால் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் கலந்து கொள்ள சென்ற தமிழக காங்கிரஸ் பிரதிநிதிகள் அந்த தீர்மானத்திற்கு எதிராகவே வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

** பேராசிரியர் கே. பீர்முகம்மது ''கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்'' நினைவு மலர் 1990 பக்கம் 127

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கே. டி. எம். அகம்மது இப்ராகீம்

நெல்லையில் பள்ளிக்கூட மாணவர்களாயிருந்த கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களும், கே. டி. எம். அகம்மது இப்ராகீம் அவர்களும், திருநெல்வேலி, பேட்டை, மேலப்பாளையம், போன்ற இடங்களுக்கு காங்கிரஸ் தீவிரவாதத் தலைவர்களுடன் சென்று ஆதரவு திரட்டி இளைஞர்களைத் திரளாக அழைத்துவந்து ராஜாஜி யின் தீர்மானத்தை நெல்லை மாநாட்டில் வெற்றி பெற முழுமூச்சுடன் பணியாற்றினார்கள்*

Mr. Rajagopalachari is busily engaged for the last 3 or 4 days in visiting Muhamadans and inducing them to attend the Provincial conference in large body. The president refused to commit himself to Non-Co-operation and most of the Hindu Leaders are understood to be against it, favour of the lotical results with regard to themselves and though a resolution in favour of the policy of Gandhi and Shaukat Ali, proposed by Mr. Yakoob Hasan was carried, this result is regarded as due to the exertions of C. Rajagopalachariar in bringing in a lot of Muhamadans to Vote''.**

என்ற சென்னை அரசு ஆவணக்காப்பகச் சான்றுகள் மேற் சொன்ன செய்திகளை உறுதிப்படுத்துகின்றன.

தமிழகத்தில் காந்திஜியின் முதல் அரசியல் சுற்றுப்பயணம்

டாக்டர் கலேல்காரும், மகாதேவ்தேவியும், டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனும் உடனிருக்க காந்தி 1919-ல் தமிழ்நாட்டில் முதல் அரசியல் சுற்றுப்பயணத்தை மேற் கொண்டார்.***

* 20—6—1920-இல் சமர்ப்பிக்கப்பட்ட போலீஸ் அறிக்கை

** 713 C, S. A. 235/4 Special Branch C. I. D. 1920 July 1.

*** அ. ராமசாமி ''தமிழ்நாட்டில் காந்திஜி'' பக்கம் 251

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1919 மார்ச் 24-ம் தேதி காந்தி தஞ்சாவூருக்கு வருகைதந்தார். பெசன்ட் லாட்ஜில் வி. பி. மாதவராவ் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அங்கே அவரது வருகையில் யாகூப்ஹஸன் சேட் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பாக காரியமாற்றினார்கள்.*

பின்னர் 1920 ஆகஸ்ட்டில் சௌக்கத் அலியுடன் காந்தியடிகள் தஞ்சாவூருக்கு வருகைதந்தார்கள். அரசாங்கத்திற்கு அதைப் பற்றிய செய்தி எதுவும் அறிவிக்கப்படாமல் இருந்த, அந்த சுற்றுப்பயணத்தை தடை செய்யலாமா என்ற எண்ணம் இருந்த நிலையில், அந்த சுற்றுப்பயணத்திற்கான ஏற்பாடுகளை முன்னின்று செய்தவர் யாகூப் ஹஸன்சேட்.**

16—8—1920-ல் தமிழக சுற்றுப்பயணத்திற்காக சென்னையில் வந்து இறங்கிய காந்தியை மத்திய கிலாபத் குழுத் தலைவரான கான்பகதூர் குத்தூஸ் பாட்சா சாகிப், யாகூப்ஹஸன் சேட், அப்துல்ரகீம், எஸ். கஸ்தூரிரெங்க அய்யங்கார், வ.வெ.சு. அய்யர், திரு.வி.க., இராஜாஜி மற்றும் முன்னணியினர் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வரவேற்றார்கள்.

பிறைச் சந்திரக் கொடிகள் நிறைய பறந்துகொண்டிருந்தன. பிறைச் சந்திரனும், நட்சத்திரமும் இருக்கும் சின்னம் துருக்கியின் சின்னமாகும். இது கிலாபத் இயக்கத்தை குறித்தது. சுதேசமித்திரன் ஏடு அந்த வரவேற்பை "மகாத்மாவும், மௌலானா சௌக்கத் அலியும், தேவேந்திரன் புஷ்பக விமானத்தில் இறங்கிவந்து பூலோக வாசிகளுக்கு தரிசனம் கொடுப்பதுபோல இருந்தது" என்று வர்ணித்தது.

---

* P. S. Baliga, Tanjore District Hand Book (1957) p. 101.

** Non-Co-operation and Khilafat Movements in the Madra's presidency of Confidential page 4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஹாஜி அப்துல்ரகீம் சாகிப்

சென்னை புரசைவாக்கம் சாலை 63-வது எண் கட்டிட மான சேட்கார்டன்சில் ஹாஜி அப்துல்ரகீம் சாகிப் அவர் களின் வீட்டில் விருந்தினராக காந்தியும், சௌக்கத் அலி யும் தங்கியிருந்தார்கள்.*

வேலூர் கிலாபத் குழுச்செயலாளர் ஸஹாபுடீன்

காந்தி சென்னை வருவதற்கு முன்பு அரக்கோணத்தில் மேளதாளங்களுடன் பெரிய திரளான மக்கள் வெள்ளத் தைக் கூட்டி காந்திக்கும், சௌக்கத்அலிக்கும் அன்று வரவேற்பு தந்தவர் வேலூர் கிலாபத் குழுச் செயலாளர் ஸஹாபுடீன் ஆவார்கள்.

திருவல்லிக்கேணி பொதுக்கூட்டம்

12-08-1920 மாலையில் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் கான்பகதூர் அப்துல் குத்தூஸ் பாட்சா தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. காந்தியும், சௌக்கத்அலியும் உரையாற்றினார்கள். அவர்களது உரை தீர்க்க தரிசனமாக அமைந்தது.

13—8—1920

பஞ்சாப் போராட்டம் பற்றியும், கிலாபத் இயக்கம் பற்றியும் சென்னையில் ரகசியக் கூட்டம் காந்தியின் தலைமையில் 13—08—1920 காலையில் நடைபெற்றது. வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, ஜி.ஜி. நடேசன், டி.எஸ்.எஸ். ராஜன் போன்றவர்களும், குத்தூஸ்பாட்சா சாகிப்பும். யாகூப்ஹசன்சேட்டும் கலந்து கொண்டனர்.

பகலில் திருவல்லிக்கேணி ஜும்ஆமசூதியில் முஸ்லிம் களின் கூட்டத்திலும் காந்திஜி உரையாற்றினார்.

பலர் தங்களது அரசுப் பட்டங்களையும், பதவிகளை யும் அப்போது தூக்கி எறிந்தார்கள்.

* அ. இராமசாமி ''தமிழ்நாட்டில் காந்தி' 'பக்கம் 271, 272

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆம்பூர் மாலிக் அப்துல்ரகுமான் சாஹிப்

14—8—1920-இல் காந்தியும், சௌக்கத்அலியும் ஆம்பூருக்குச் சென்றார்கள். அங்கு வடாற்காடு மாவட்ட கிலாபத் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அப்போது கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் பங்கி ஹயாத்பாட்சா சாகிப், மாலிக்அப்துல்ரகுமான் சாகிப், முகம்மதுகாசீம், எச். என். செங்கலப்பா, ஜனாப் ஆதம்கான், காசிம்கான், ரகுமான் கான் சாஹிபு, காசிம்பகதூர், மாதனூர் சந்தாமியான் சாஹிபு, கனி ஹாஜி அப்துல் ரசாக், திருப்பத்தூர் பீர்பல் நபியான் சாஹிப், வாணியம்பாடி மதாகன் சந்தமியான் சாஹிபு, நாகூரான் சம்சுதீன் சாஹிபு, திருப்பத்தூர் ஏ. கே. ரஹிமான், குலாம்மொய்தீன் ஆகியோர் தங்களது பதவிகளை தூக்கி எறிந்தார்கள்.

ஹாஜி ஜியாவுதீன் சையத் முஹமத், வேலூர் ஜாபர் உசேன், மௌலவி சையத் அஹமத், கமால் ஹையுத்தீன் ஆகியோர் வடஆற்காட்டில் ஒத்துழையாமை இயக்கத்தை ஊர் ஊராகச் சென்று வேகத்துடன் வளர்த்தனர். வேலூருக்கு ராஜாஜியும், யாகூப்ஹசன்சேட்டும் உடன் இருக்க காந்தி பயணமானார்கள். வழியில் பள்ளி கொண்டை முஸ்லிம்கள் பெரும் வரவேற்பளித்தனர். வேலூரில் ஹஸ்ராத் மக்காவில் உள்ள ரயில்வே கிரா சிங்கில் 4000 மக்களுக்கு அதிகமானோர் நின்று வரவேற்று கோட்டை மைதானத்திற்கு காந்தியை அழைத்துச் சென்று அங்கு காந்தி உரையாற்றினார். காந்தி பேசியதை தமிழில் ராஜாஜியும், இந்துஸ்தானியில் யாகூப்ஹசன்சேட்டும் மொழிபெயர்த்தார்கள். காந்தியும், சிறிது நேரம் அந்தக் கூட்டத்தில் இந்துஸ்தானியில் பேசினார். சுபேதார் பங்களாவில் இரவு தங்கி பயணத்தை தொடர்ந்தார் காந்தி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராஜகிரி அப்துல்மஜித்

15—8—1920 இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு போட்மெயிலில் காந்தியும், மௌலானா சௌக்கத்அலியும் கும்பகோணத்திற்கு 16—08—1920 காலையில் போய் சேர்ந்தனர். போர்ட்டார் நகர மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசினார்கள்.

பல்வேறு ஊர்களைச் சேர்ந்த கிலாபத் கமிட்டியார் வரவேற்பு பத்திரங்கள் வாசித்தளித்தனர். ராஜகிரி முஸ்லிம் பெருமக்கள் அளித்த கிலாபத் நிதியை அப்துல் மஜீத் கொண்டு வந்து கொடுத்தார். பண்டாரவாடை இரயில் நிலையத்திலும், முஸ்லிம்கள் காந்திஜியிடம் பண முடிப்பு தந்தனர்.

நாகூர் வழக்கறிஞர் மாலிம் சாகிப்

நாகூரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வரவேற்று காந்தியையும், சௌக்கத் அலியையும் அழைத்துச் சென்றார்கள். வழக்கறிஞர் மாலிம்சாகிப் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எண்ணற்ற முஸ்லிம் தாய்மார் களும் வந்திருந்தனர் என்றால் கூட்டத்தின் பெருமையை என்னவென்று சொல்வது!

திருச்சி வி. எஸ். முகம்மது இப்ராகிம்

இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தில் திருச்சியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. காந்தியும், மௌலானா சௌக்கத்தலியும் மேடையில் அமர்ந்தனர். திருச்சி கிலாபத் குழுச்செயலாளரான வி. எஸ். முகம்மது இப்ராகீம் தமிழிலும், டாக்டர் அப்துல் சுபான் சாகிப் இந்துஸ்தானியிலும் வரவேற்புரைகளை படித்துக் கொடுத் தனர். திண்டுக்கல் கிலாபத் குழுவின் பிரதிநிதியும், வர வேற்பு பத்திரத்தை மேடையில் அப்போது தந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அங்கிருந்து சையத் முர்த்துஜா சாகிப்புடனும், மதுரை வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப்புடனும் 18—08—1920 இரவில் கள்ளிக்கோட்டைக்கு சௌக்கத்அலியும், காந்தியும் பயணமானார்கள். அவர்களை நள்ளிரவு 3-30 மணிக்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கூடி நின்று ''அல்லாஹு அக்பர்'' ''வந்தேமாதரம்'' என்று முழக்கமிட்டு வழி அனுப்பி வைத்தனர்.

100067

20-8-1920

கள்ளிக்கோட்டை பயணத்தை முடித்து சேலம் வரும் வழியில் திருப்பூரில் சௌக்கத்அலியும், காந்தியும், வரவேற்கப்பட்டார்கள். 21-08-1920ல் சேலம் கிலாபத் மாநாட்டில் தலைவர்கள் பேசினார்கள். இந்த எழுச்சியும், மகிழ்ச்சியும் நிறைந்த சுற்றுப்பயணத்தைப் பற்றி 29-8-1920 நவஜீவனில் காந்தி சிறப்பாக எழுதியிருந்தார்.

1921 ஆகஸ்ட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்க கிலாபத் மாநாட்டில் தஞ்சாவூரில் தலைமை உரையாற்றினார் யாகூப்ஹசன்சேட். முதன்மை வாய்ந்த முக்கியத்துவம் வாய்ந்த, சிறப்புமிக்க எடுப்பான தோற்றமுடைய விஞ்சிய என்ற பொருள்படும் ''Prominent'' முஸ்லிம் தலைவர் என்று யாகூப் ஹசன் சேட்டைப் பற்றிய அப்போதைய அரசு ஆவணக் குறிப்புக்களில் காணப்படுகின்றது*

கிலாபத் புரட்சியின் போது எண்ணற்ற முஸ்லிம்கள் தங்களது நகர்மன்ற கவுன்சிலர் பதவிகளையும், கௌரவ நீதிபதி பதவிகளையும் தூக்கி எறிந்தனர்**

* G. O. No. 618, Public (Confid) dated 19 Sep. 1921.
** G. O. No. 322, Public dated 25th May 1921.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாயவரம் முஸ்லிம் மௌலவி

தீவிரமான (Virulent) கருத்துக்களைத் தாங்கியும், ஒத்துழையாமையையும், பகிஷ்கரிப்பையும், ஆதரித்தும், சுயராஜ்யக் கோரிக்கைகளும் அடங்கிய தமிழ் துண்டுப் பிரசுரங்களை மாயவரத்தில் அந்த காலக்கட்டத்தில் முஸ்லிம் மௌலவி வழங்கினார்*

தஞ்சாவூரில் 300 முதல் 500 முஸ்லிம் இளைஞர்களைக் கொண்ட அமைப்பு உருவாக்கப்பட்டு கிலாபத் இயக்கம் வேகமாக நடைபெற்று வந்தது.**

சென்னை கிலாபத்தின் நேசன்-யாகூப் ஹசன் சேட்

''ஜெகமதில் இந்தியர் சுகமுற நம்பிய (சென்னை)
திருக்கரங்குவித்து அனுதினமதகுரு
துருக்கி மன்னரின் பெயர் முழங்கிட வரு (சென்னை)
சிரமத்துடன் ஒத்துழையா விரதக்
கிரமத்தினை விட்டு அகலா வரதச் (சென்னை)
சித்தத் துணிவொடு மெத்தப் பிரபல
சத்தியக் கிரகவி ருத்திப் புரவல (சென்னை)
சேரப்பதி கள்ளிக்கோட்டையில் நம்மோர்
தீரப்படச் சிறையேற்ற அருள் பெம்மான்'' (சென்னை)

என்று மதுரகவி பாஸ்கரதாஸ் அவர்கள் பாடிய யாகூப் ஹசன் சேட் அவர்களைப் பற்றிய பழம் பாடல் தெரிவிக்கிறது.***

மாப்பிள்ளை எழுச்சி 1921

மேற்கு கடற்கரையில் மலபார், திருவிதாங்கூர், கொச்சி, தென் கன்னடம் முதலிய ஜில்லாக்களில் வாழ்ந்து வருபவர்கள் மாப்பிள்ளைகள்.

* G. O. No. 703, Public Confid. dated 2 Sep. 1922

** Non-Co-operation and Khilafat Movements in the Madras Presidency (Confidential) page. 47

*** முத்தமிழ் க்ஷேத்திர மதுரகவி பாஸ்கரதாஸ்
இந்திய தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1992 பக்கம். 18

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வர்த்தகத்திற்காக வந்த அரேபிய முஸ்லிம்கள் இங்கு திருமண உறவு கொண்டனர். இந்நாட்டுப் பெண் களை விவாகஞ் செய்து கொண்டமையால் மாப்பிள்ளை என்று அழைக்கப்பட்டார்கள்.*

கண்ணியம் என்ற பொருளைத் தரும் மஹா என்ற சொல்லோடு மகன் என்ற பொருளைத் தரும் பிள்ளை என்ற வார்த்தையையும், இணைத்து மஹாப்பிள்ளை என்றாகி, அதுவே மாப்பிள்ளையானது என்பர்**

திருங்காடி என்ற இடத்தில் ஜில்லா மாஜிஸ்டிரேட் கிலாபத் ஊழியர் சிலரை கைது செய்ய முயற்சித்தார். அதிகாரிகளின் அடக்குமுறைகளை அங்குள்ள மாப்பிள்ளை கள் எதிர்த்துப் பகிரங்கப் புரட்சி செய்ய முயன்றனர்.

மொகைதீன் கோயா கைது

மலையாளத்தில் காந்தியடிகளின் வேண்டுகோளை ஏற்று கிலாபத் பிரச்சாரத்திற்கு சென்று சாத்வீக முறையில் போராடிய மாதவநாயர் பகர்கோபால்மேனன் மொஹிதீன்கோயா, யாகூப் ஹசன் சேட், ஆகியோர் 1921 நவம்பர் 7-இல் கள்ளிக்கோட்டையில் கைது செய்யப் பட்டு, கண்ணனூர் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டனர்; இரண்டாண்டுகள் தண்டிக்கப்பட்டனர்.

''சுயராஜ்யம் இல்லாத வகையினால் இவ்விதத் துன்பத்தில் வாழுகின்றோம். ''ஜெயராஜ்ய இந்தியா சீக்கிரம் பெற இதே சித்தாந்தம் நேர்ந்ததென்றோம். சுதந்திரத்துடன் அவர் நால்வரை நமக்கே சுகமுடன் தர வந்தேமாதரத்தமுக்கே தூங்காம லெங்கும் முழங்குது

---

* கம்பம் அ. ஸதக்கத்துல்லாஹ் பாக்கவி, (தென்னாடும் இஸ்லா மும்) 1945-பக்கம். 82

** பத்மநாபமேனன் மலபார் சரித்திரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாஸ்கரப் பாங்கான சந்தர்ப்பதக் குமுக்கே'' என்று அதுபற்றி அப்போதே பாஸ்கரதாஸ் பாடியிருக்கிறார்.

1921 ஆகஸ்ட் 19ல் மூண்ட புரட்சியை அடக்கிடவும், மாப்பிள்ளைகளை சமாதானப்படுத்தி அங்கே அமைதியை நிலைநிறுத்துவதற்காகவும் செப்டம்பர் மாதம் காந்திஜி மௌலானா முகம்மது அலியுடன் புறப்பட்ட போது வால்டேர் ஸ்டேசனில் முகம்மது அலி கைது செய்யப் பட்டார். அப்போது காந்தி, மௌலானா முகம்மது அலியைக் கைது செய்ததின் மூலம் அரசாங்கம் கிலாபத்தையே கைது செய்துவிட்டது என்று ஆர்த்தெழுந்தார். அப்போது வெளியான ''முஸ்லிம் ஹெரால்டு'' முஸ்லிம் அவுட்லுக் லண்டன்'' 'முஸ்லிம் உலகம்' 'முஸ்லிம் யுனிவர் சிட்டி' கெஜட் ஆகியவைகளில் மாப்பிள்ளைமார் எழுச்சி பற்றிய செய்திகளை விரிவாகக் காணலாம். எனினும், ஓரிரு செய்திகளைச் சொல்லாமல் சென்றுவிட மனமில்லை

''அலிமுஸல்லியார் சுதந்திர ராஜாவாக அந்தப் பகுதியில் பிரகடனப் படுத்தப்பட்டார்; பச்சைக்கொடி ஏற்றப்பட்டது, ஐரோப்பியர்கள் கொலை செய்யப்பட்டார் கள். மாப்பிள்ளைகள் பலர் தலைமறைவானார்கள் என்று இண்டிபண்டெண்ட் பத்திரிகை எழுதிற்று*

பொக்காத்தூரில் (POKKOTTUR) 600 மாப்பிள்ளை மார்கள் இராணுவத்தினராலும், போலீசாராலும், கொல்லப்பட்டனர். அதே போல பட்டாம்பியில் (PATTAMBI) 500 மாப்பிள்ளைமார்கள் கொல்லப்பட்டனர் என்று 2—9—1921 இண்டிபண்டெண்ட் பத்திரிகை எழுதிற்று**

* The Independent Sep-1, 1921.

** B. M. Taunk 'Non-Cooperation Movement in Indian poltics 1919-1924 A Historical study p-106.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூட்ஸ் வண்டியில் நடந்த கொடுமை

திருருரிலிருந்து கோயம்புத்தூருக்கு நூற்றுக்கணக்கான மாப்பிள்ளைமார்களை காற்றோட்டமில்லாத கூட்ஸ் வண்டியில் ஏற்றிக் கொண்டு வண்டி எண் 77 உடன் சரக்கு ரெயில் வண்டி 171ம் இணைக்கப்பட்டு கிளம்பியது

வெப்பமும் தாகமும் வாட்ட கொடுமையைத் தாங்க முடியாமல் மாப்பிள்ளைமார்கள் குரல்கொடுத்தனர்; முழக்கமிட்டனர். சார்ஜெண்ட் A. H. ஆண்ரூஸ் அந்த வண்டியின் பக்கத்தில் இரண்டாம் வகுப்பு பெட்டியொன்றில் எதனையும் கண்டு கொள்ளாமல் பயணஞ் செய்தார்.

கூட்ஸ் வண்டி வருகிற வழியில் ஷோரனூரில் முப்பது நிமிடமும், ஒலவக் கோட்டில் பதினைந்து நிமிடமும் நின்ற போது, கூட்ஸ் வண்டியிலிருந்து குரல் கொடுத்த மாப்பிள்ளைமார்களின் அபயக்குரல் அந்த ரயில்வே பிளாட்பாரங்களில் ஒலித்தது. ஆளும்வர்க்கத்தின் போலீஸ் அந்தக் குரலை அலட்சியம் செய்தது.

111 மைல் பயணத்திற்குப் பின் போத்தனூரில் கூட்ஸ் வண்டி நின்றது; கதவுகள் திறக்கப்பட்டது; 55 பேர் பிணமாக விழுந்தார்கள். அவர்களது உயிரற்ற உடல் திருருக்கு திரும்பவும் அனுப்பப்பட்டது. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 44 பேர்களை கோயம் புத்தூருக்கு அனுப்பிடும்போது, கோவை ரயில் நிலையத்தில் ஆறு பேர் இறந்தனர். கோவை சிறைச்சாலை மருத்துவமனைக்கு எஞ்சிய மாப்பிள்ளைமார்கள் 25 பேரைக் கொண்டு செல்லும்போது வழியில் இருவர் இறந்தனர். அன்றைய பகல் பொழுதில் மேலும் நால்வர் மடிந்தனர். மறுநாள் மற்றும் இருவர் மரணமடைந்தனர். அவர்களது உடல்களெல்லாம் இஸ்லாமிய சம்பிரதாயப்படி அடக்கப்பட்டன, ஆம் அவர்கள் இஸ்லாமியரின் தியாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சரித்திரத்தில் நாட்டிற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர்*

கூட்ஸ் வண்டியில் மாப்பிள்ளை முஸ்லிம்கள் நூற்றுக் கணக்கான பேர்களை புளிமூட்டைகளைப்போல் திணித்து ஏற்றி அனுப்பி வைத்ததில் சுவாசிக்க முடியாது அனை வரும் மாண்டு போனார்கள்.** இந்த மாப்பிள்ளைமார் எழுச்சியில் மலபார் பகுதியில் பிரச்சாரம் செய்தும், அயராது உழைத்தவர் யாகூப்ஹசன்சேட் ஆவார்கள். மாப்பிள்ளைமார் எழுச்சி பற்றி அறிய 'மாப்பிள்ளாஸ் இன் மலபார்' என்ற ரொனால்டு மில்லரின் நூலிலும், K. மாதவநாயரால் மலையாளத்தில் எழுதி அவர் காலத் திற்குப் பின் அச்சுக்கு வந்த 'மாப்பிள்ளை கலாபம்' என்ற சமகால நூலாசிரியரால் அவரே கண்ட காட்சிகளை விளக்கும் நூலிலும் மேலும் பல விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

1921ல் காந்தி கைது செய்யப்படலாம் என்ற நிலைமை இருந்தது. அகமதாபாத்தில் காங்கிரஸ் செயற்குழு கூட இருந்தது. அதற்கு முன் தேர்ந்தெடுத்த சிலருடன் பம்பாயில் கூடிப் பேச காந்தி இந்தியாவில் 23 பேருக்கு சுற்றறிக்கை அனுப்பினார். அவர்களில் ஒருவர் தமிழ கத்து முஸ்லிம் யாகூப்ஹசன்.***

லாகூரில் காங்கிரசுக்குப் பிறகு நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கத்தில் முஸ்லிம்களும், தங்களால் இயன்ற மட்டும் கலந்து கொண்டிருக்கிறார்கள்'' என்று நெல்லை

---

* Deputy Superintendent of police Criminal Investigation Department of madras, Copy of a note dated 27th September 1922. South Indian History Congress university of Kerala p. 109-110.

** அபுல்ஹசன்ஷாதலி ''முஸ்லிம் லீக் சரிதை'' (1947) பக்கம் 102-103

*** அ. இராமசாமி ''தமிழ்நாட்டில் காந்தி'' பக்கம். 339

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாவட்டம் திருவைகுண்டத்தில் (தற்போது சிதம்பரனார் மாவட்டம்) நடைபெற்ற திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் களின் மகாநாட்டில் 1933ல் யாகூப் ஹசன் தலைமை உரை ஆற்றினார்.*

ஆட்சியிலிருந்து கொண்டே விடுதலைக்காக போர்

தமிழகத்தில் 1937ல் இராஜாஜி மந்திரிசபை அமைந்தது.

யாகூப் ஹசன் மராமத்து மந்திரியானார்** சட்டசபை கூடியது. ஆளுநர் எர்ஸ்சின் பிரபு தமது உரையை முடித்தார்.

அரசியல் சட்டத்தின் குறைகளை எடுத்துக்காட்டியும் அது திணிக்கப்பட்ட முறையைக் கண்டித்தும், உண்மை யான சுதந்திரத்தை வழங்க முயற்சி எடுக்குமாறு பிரிட்டிஷ் ஆட்சியைக் கோரியும், சுருக்கமான தீர்மா னத்தை அப்போது இராஜாஜி சட்டப்பேரவையில் முன் மொழிந்தார்.

மராமத்து அமைச்சர் யாகூப் ஹசன் அதனை வழி மொழிந்தார். ஆட்சியிலிருந்த போதும் விடுதலைப் போர்ப் பணி தொடர்ந்தது.

தனி நபர் சத்தியாக் கிரகப் போராட்டம் துவங்கு வதற்கு முன்பே யாகூப்ஹசன் காலமானார். என்றென்றும் நாட்டு விடுதலைக்கு அவர் ஆற்றிய சேவை நிலைத்து நிற்கக்கூடியது.

---

* 8-2-1933 "காந்தி" இதழ் பக்கம். 18

** அ. இராமசாமி "தமிழ்நாட்டில் காந்தி" பக்கம். 336

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிலாபத்தில் முஸ்லிம்கள்

காந்தியடிகள் இந்தியாவில் முதல் முதலாகத் தொடங்கிய அரசியல் போராட்டமான ஒத்துழையாமை இயக்கமானது உலக மக்களின் கவனத்தை ஈர்த்தது. தமிழ்நாடு வேறு எந்த மாநிலத்திற்கும் பின் நிற்கவில்லை என்பதை, ஏற்கனவே யாகூப்ஹசன்சேட் அவர்களைப் பற்றி சொல்லியுள்ள செய்திகள் உணர்த்தும்.

தமிழகத்தின் பிற பகுதிகளில் பல்வேறு சமயத்தினரும் பங்கெடுத்துக் கொண்ட ஒத்துழையாமை இயக்கத்திலும், தமிழக முஸ்லிம்களின் பங்கினைக் காண்போம்.

அய்யம்பேட்டை கா. அப்துல்கனி சாஹிப்

26—10—1920 செவ்வாய் கிழமை மாலை 4-00 மணிக்கு மேலப்பள்ளிவாசல் சதுக்கத்தில் அய்யம்பேட்டையில் கிலாபத் மாநாடு ஜனாப் கா. அப்துல்கனி சாகிப் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஆயிரத்திற்கும் அதிகமானோர் கூடியிருந்தனர். தஞ்சை பசுபதி என்ற பால்யன் ''முற்கால நிலைமையும் தற்கால நிலைமையும்'' என்ற பொருள் பற்றி பேசினார். பி. எஸ். வெங்கிடகிருஷ்ண பிள்ளை ''சட்டசபையும், நமது கடமையும்'' என்ற பொருளில் ஒன்றரை மணி நேரம் நீண்ட பிரசங்கம் செய்தார்.

ஜனாப் த. அ. அப்துல்மஜிது சாகிப் ''கிலாபத்தும், நாம் செய்ய வேண்டிய கடமையும்'' என்பதைப் பற்றி அரிய பெரிய உபன்னியாசம் செய்தார்.

ஜனாப் கு. இ. முகம்மது காசீம் சாகிப் கவர்ன் மெண்டின் ஆதரவு பெற்ற கலாசாலைக்கு தங்களுடைய குழந்தைகளை அனுப்பக்கூடாது என்றும், அஞ்சுமனில் அமைக்கப்பட்டிருக்கும் தேசீய கலாசாலைக்கே தங்களது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குழந்தைகளை கல்வி கற்க அனுப்ப வேண்டும் என்றும் உரையாற்றினார். ஜனாப் முகம்மது இப்ராகீம் சாகிப் ''கல்கத்தா காங்கிரசும், நமது கடமையும்'' என்பதைப் பற்றி பல மேற்கோள்களுடன் பேசி, வாக்குறுதி மாறிய பிரிட்டிஷ் அரசாங்கத்தினருடன் நாம் ஒத்துழைக்கக் கூடாது என்று பேசினார்.

தலைவர் கா. அப்துல்கனி சாகிப் தொடர்ந்து உரை யாற்றியதற்குப் பின், செயலாளர் அப்துற்றஹ்மான் சாகிபால் நன்றி கூறப்பட்டு இரவு 9 மணிக்கு மகாநாடு முடிவுற்றது. தொடர்ந்து 28ம் தேதி ஹிந்து-முஸ்லிம் களின் மகாநாட்டை கூட்டி வைக்க ஏற்பாடு நடந்து வருவ தாகவும், அப்போது தெரிவிக்கப்பட்டது.

திருச்சி ஜில்லாவில் பிரச்சார வேலை

முத்தரசநல்லூர், கம்பீர்சம்பேட்டை, நங்கவரம், திருப்பனந்துரை, ஆலூர், குளித்தலை, திருமணமேடு, மஞ்சனல்லூர், வாலாடி, அந்தனல்லூர், முதலிய கிராமங் களில் ஒத்துழையாமை உறுதிப்பத்திரத்தில் முஸ்லிம்கள் பலர் கையெழுத்திட்டனர்.

கான்சாபுரம்

25—10—1920 இரவு 7-30 மணிக்கு ஜனாப் முகம்மது ஸாலி இராவுத்தர் தலைமையில் ஹிந்து முஸ்லிம்கள் ஏராளமானோர்கள் கலந்து கொண்ட பெரிய மகாநாடு கூடிற்று. நா. ராமச்சந்திரய்யர் தேசிய கீதங்களைப் பாடினார். சட்டசபை பகிஷ்காரத்தை ஆதரித்து கையெழுத்திட்டனர் முஸ்லிம்கள்.

சந்தைப்பேட்டை

25—10—1920-இல் இவ்வூர் ஆலமரத்தடியில் மாலை 5 மணிக்கு ந. உதுமான்கனி இராவுத்தரின் தலைமையில் இந்து முஸ்லிம்கள் கூடினர். சட்டசபை பகிஷ்கரிப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கையெழுத்துச் சீட்டில் வாக்குரிமை பெற்ற முஸ்லிம்களிடம் கையெழுத்து வாங்கப்பட்டது.

ஆம்பூர்

27—10—1920 மாலை 6-30 மணிக்கு முஸ்லிம் அசோசியேசன் ஆதரவின் கீழ் அலிகார் காலேஜின் மாணவர்கள், அன்றைய ஆங்கிலேய அரசாங்கத்தினரால் அக்காலேஜிற்கு உதவியாகவரும் கிராண்டை மறுத்துவிட வேண்டும் என்று செய்திருக்கும் ஏற்பாட்டைப் பற்றி புகழ்ந்து பேசினர்.

தலைவர்களின் ஒத்துழையாமை கோரிக்கை வெற்றி பெற ஆண்டவனைப் பிரார்த்தித்து சபை கலைந்தது.

லால்குடி முகம்மது ஹயாத்கான்சாகிப்

24—10—1920-இல் டி. எஸ். ராஜு அய்யர் தலைமையில் நடைபெற்றது. பஞ்சாப் படுகொலை பற்றி டாக்டர் சாமிநாத சாஸ்திரி பேசினார். ஒத்துழையாமையைக் கைக்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, ஜனாப் முகம்மது ஹயாத்கான்சாகிப் அந்தக் கூட்டத்தில் பேசினார்கள்.

பாபுராஜபுரம் சி. அப்துல்சலாம்

சுவாமி மலையில் தேசிய மாநாடு நடைபெற்றது. பி. ராமச்சந்திரராவ் தலைமை வகித்தார். கும்பகோணம் ஆர். சக்கரவர்த்தி அய்யங்கார் பேசினார். பாபுராஜபுரம் முஸ்லிம் சங்கம் காரியதரிசி சி. அப்துல்சலாம் ''மகாத்மா காந்தியடிகளின் ஆணையாகிய ஒத்துழையாமை என்கிற போரை பொறுமை என்கிற ஆயுதம் தாங்கிப்புரிய வேண்டியதைத் தவிர, சுயராஜ்ஜியம் அடைய வேறு வழியில்லை'' என்று வீர உரை நிகழ்த்தினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரவணசமுத்திரம்

11—11—1920·இல் நெல்லை மாவட்டம் ரவண சமுத்திரத்திலும், பொட்டல்புதூரிலும், தூத்துக்குடி, டி. ஆர். மகாதேவ அய்யர் உரையுடன் இந்து முஸ்லிம் களின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சட்டசபை தேர்தல் பகிஷ்கார ஜாப்தாவில் முஸ்லிம்கள் ஆர்வத்துடன் கையெழுத்திட்டனர்.

பண்டாரவாடை மௌலவி செய்கு அப்துல்காதிர் அலிசாஹிப்

12—11—1920ல் மேலப்பள்ளிவாசல் சதுக்கத்தில் மௌலானா மௌலவி செய்கு அப்துல்காதிர் அலி சாகிபின் தலைமையில் 1500 பேர்களுக்கும் மேல் கூடியிருந்து கிலாபத் மாநாடு நடைபெற்றது. அனுமந்தாராவ், டி.ஏ, ராமச்சந்திர செட்டியார், திருவையாறு சி. சுப்பிரமணிய முதலியார் பேசினார்கள். ஆ. அப்துல் மஜிது சாகிப், எச். முகம்மது இப்ராகீம், கோ. அ. பக்கீர் முகம்மது சாகிப் ஆகியோர் நிரம்பவும் உருக்கமாக அரிய உபந்நியாசம் செய்தார்கள் என்று அப்போதைய சுதேசமித்திரன் எழுதியது.

தஞ்சாவூரில்

நடுக்கடை, திருப்பூந்துருத்தி, சண்டியூர், ராஜகிரி பகுதிகளில் ஒத்துழையாமை இயக்கப் பிரச்சாரம் நடை பெற்றது. அவைகளில் இதர காங்கிரஸ் தலைவர்களுடன் கமால்சாகிப் உற்சாகமாகக் கலந்து கொண்டார்.

மதுரையில்

10—11—1920-இல் இரண்டாவது வார்டிலும் 11—11—1920ல் 2வது தெருவிலும், பந்தடி 6வது தெரு விலும், 12—11—1920ல் மதுரை நவபத்கானா கோர்ட் தெருவிலும் கூட்டம் கூடியது. 13—11—1920ல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜே. ராமய்யர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இந்தக் காலக்கட்டங்களில் மதுரை மௌலானா சாகிப் முன்னணி வகித்தார்.

1920 அக்டோபர் 30 முதல் 1920 நவம்பர் 16 வரை வந்த சுதேசமித்திரன் இதழ்களிலிருந்து மேற்கண்ட ஒத்துழையாமை இயக்க செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம்.

கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத்

மாணாக்கர்கள், தங்களது கல்லூரிகளையும், படிப்பினையும், ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்து துறந்திட வேண்டும் என்று காந்தியடிகள் கேட்டுக் கொண்டதையடுத்து, கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பி.ஏ. பட்டப் படிப்பை தூக்கி எறிந்து தேசியப் போராட்டத்தில் இந்தக் காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் பங்கேற்றார்கள்.

சென்னையில் கிலாபத்

முகமதன் காலேஜில் படித்து வந்த மாணவர்கள் அமீர்அலி, நுஹாஜிர் (Nuhajir). அலிகார் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் படிப்பை பாதியிலேயே விட்டு விட்டு வெளியேறுவது போல, சென்னையிலும் வெளியேற மாணவர்களை அவர்கள் தூண்டினர் என்று கல்லூரி முதல்வர் டபிள்யூ. சி. டக்லஸ் 25—10—1920இல் மாகாண அரசிற்கு கடிதம் எழுதினார்.

முகம்மது நதீருல்லாஹ், முகம்மது ஜஹ"பர் அகம்மது, முகம்மது அப்துல்ரகீம் மூவரும் ஒன்று சேர்ந்து தங்களை கிலாபத் சேவகர்கள் என அழைத்துக்கொண்டு அநேக துண்டுப் பிரசுரங்களை அக்காலத்தில் வெளியிட்டு மக்களைத் தட்டி எழுப்பினர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1920 நவம்பர் 12ல் போலீஸ் அறிக்கையில் அப்துல் மஜிது ஷரர் பாஷா கம்பெனியைச் சேர்ந்த முஹம்மது வலியுல்லாஹ் பாஷா, கிடங்குத் தெருவைச் சேர்ந்த வியாபாரி ஹாஜி. அப்துல்ரகீம் முஹம்மது நத்தர் சாகிப் மாணவர்களை பள்ளிக்கூடங்களுக்கு செல்ல வேண்டாம் என்று பிரச்சாரம் செய்தார்கள் என்று தெரிவிக்கிறது,

சென்னை ஜாம் பஜாரில் 1920 அக்டோபர் 20ல் சட்ட சபை பகிஷ்கரிப்பை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் ராஜாஜி உரையாற்றினார். அக்கூட்டத்தை தலைமை யேற்று நடத்தியது சாகுல்ஹமீது.

டி. அமிருத்தீன் சாகிபு, செய்யது அப்துல் காதர் ஜிலானி, தோல் வியாபாரி ஜமால் மொகைதீன், அப்பாஸ் ஹுசைன் ஆகியோர் கான்சாகிப் பட்டத்தை தூக்கி எறிந் தனர். அவர்களுடன் ஷம்சுல்உலமா என்று ஆங்கிலே யரால் அளிக்கப்பட்ட பட்டத்தை மௌலவி ஹுசைன் சாகிப் உதறித் தள்ளினார்கள்*

ஹாஜி ஜமால் முகம்மது சாகிபின் சகோதரர் ஜமால் இப்ராகீம் சாகிப் 1920 செப்டம்பரில் கௌரவ மாஜிஸ் டிரேட் பதவியை தூக்கி எறிந்தார்.

1920 நவம்பர் 6ல் மதரஸே ஆஸம் கல்விக் கூடத்தில் பயின்ற முஹ்யித்தீன் என்ற மாணவரும், சென்னை பிரஸிடென்சி கல்லூரி மாணவர் அப்துல் ரகுமானும் கிலாபத் இயக்கத்தில் ஈடுபட்டு படிப்பை நிறுத்தி விட்டு கல்லூரிகளிலிருந்து வெளியேறினார்கள்**

---

* G. O. No. 307, Under Secretary (public) dated 01-12 1920.

** அப்போதைய போலிசாரல் மாதம் இருமுறை ஆங்கில அரசாங்கத் திற்கு சமர்ப்பிக்கப்படும் Fortnighty Report-ல் இது போன்ற தகவல்கள் காணக்கிடக்கின்றன என்பதை பேராசிரியர். கே பி. பீர்முகம்மது சாகிப் நெல்லை மாவட்ட முஸ்லிம் லீக் அலுவலகத் தில் வைத்து நேரிலே தெரிவித்தார்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னை மாகாணத்தில் யாகூப் ஹசன்

கிலாபத் இயக்கத்தை முன்னின்று நடத்தினார். அவருடன் அப்துல் மஜித் சர்க்கார், பெரியார் ஈ. வெ. ரா. டி. எஸ். எஸ். ராஜன் ஆகியோர் தீவிரத் தொண்டாற்றினர்.*

ஒத்துழையாமையின் ஒரு அம்சமான சட்டசபை தேர்தல் பகிஷ்கரிப்பில் நாடெங்கும் 50 சதவிகிதம் பேர் வாக்களிக்கவில்லை. அதில் 75 சதவிகிதம் பேர் கிராமத்தினர்; அதில் 92 சதவிகிதம்பேர் முஸ்லிம்கள். நகரத்திலும் கிராமத்திலும் சேர்த்து 25769 முஸ்லிம் வாக்காளர்களில், 3540 பேர் மட்டுமே 13.7.% வாக்களித்தனர். கிராமத்தில் மட்டும் 5373 பேரில் 428 பேர்களே, அதாவது 8% மட்டுமே வாக்களித்தனர். 92 சதவிகித முஸ்லிம்கள் அப்போதைய தேர்தலை புறக்கணித்ததை இந்து பத்திரிகை** சுட்டிக் காட்டியது.

தமிழகத்தில் ஸ்ரீரெங்கம், காஞ்சிபுரம், திருச்சி, தூத்துக்குடி, ஆற்காடு, மாயவரம், மதுரை, திண்டுக்கல் போன்ற நகரங்களில் கிலாபத் எழுச்சி கண்டது.

திருச்சியில் 10,000 மக்கள் காவேரிக் கரையில் உண்ணாவிரதம் இருக்க திரண்டனர். அதில் காந்தியின் வேண்டுகோளின்படி உறுதிமொழி எடுத்த 44 பேரில் 14 பேர் முஸ்லிம்கள்.

நெல்லையில் கூடிய மாநாட்டில் கிலாபத் தீர்மானம் ராஜாஜி, யாகூப்ஹசன் முயற்சியால் நெல்லை, பேட்டை, மேலப்பாளையம் முஸ்லிம் இளைஞர்களின் கரகோஷத்

* Hugh Owen The Indian Nationalist Movement C. 1912-22. Leadership, Organisation, and philosophy (1990) page 204.

** 18—12—1920 'Hindu' page-6.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திற்கிடையே நிறைவேறியதைத் தொடர்ந்து, அதுவே சென்னை காங்கிரஸ் கமிட்டியை பின்னாளில் கிலாபத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள காரணமாகவும் அமைந்தது.

பொருள் ஆய்வுக் கமிட்டிக்கு அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தபோது இராஜாஜி தனி ரெயிலில் 200 பேர்களை அழைத்துச் சென்றார். காந்தியின் ஆதரவாளர்களான அவர்களில் அநேகம் பேர் முஸ்லிம்கள். 7 இந்துக்களும், 6 முஸ்லிம்களும் பொருள் ஆய்வுக் கமிட்டி உறுப்பினர் ஆனார்கள். 43% உரிமையை முஸ்லிம்கள் பொருள் ஆய்வு கமிட்டியில் பெற்றனர்.*

கிலாபத், ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாக காந்தியின் புகழ் உயர்ந்தது. தங்களை சர்வ பரித் தியாகத்திற்கு தயாராக்கிக்கொண்ட எண்ணற்ற முஸ்லிம் கள் நாட்டு விடுதலைக்கு தங்களையே அர்ப்பணித்தனர். காங்கிரஸின் தொண்டர் படையை விடவும் கிலாபத் தொண்டர் படையே வலுவுடன் இருந்ததாக இந்திய அரசு ஒரு குறிப்பில் கூறியதை** நினைவில் கொள்வோம்.

காங்கிரசிற்கு புத்துயிரளித்ததுடன், நாடு தழுவிய இயக்கமாக 'காங்கிரஸ்' மாறிடவும், 'கிலாபத்' ஒத்துழையாமை இயக்கங்கள், பெரிதும் காரணமாக அமைந்தது. இதற்கு பொதுவாக இந்திய முஸ்லிம்களும், சிறப்பாகத் தமிழ்நாட்டு முஸ்லிம்களும் ஆற்றிய பங்களிப்பை வரலாற்று நடுநிலையாளர்கள் எவரும் மறுத்திட முடியாது.

---

* 10-09-1920 'Hindu' page 3
(For the Madras Voting in the plenary Session).

** டாக்டர் ம. பொ. சிவஞானம் 'விடுதலைப் போரில் தமிழகம்' முதல் தொகுதி (1982) பக்கம் 502.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீலன் சிலை உடைத்த தீரன்

1857 புரட்சியினை ஒடுக்கிட லார்டுகானிங் ஐரோப்பியத் துருப்புக்களை இங்கிலாந்தில் இருந்து வரவழைத்ததோடு, பம்பாய், ரங்கூன், சென்னை முதலிய இடங்களில் இருந்தும் ஆங்கிலேயத் துருப்புக்களை வரவழைத்தார்.

ராட்சசத்தனம் பொருந்திய கர்னல் நீலனின் (நீல்) தலைமையில் சென்னையிலிருந்து துருப்புக்கள் காசிக்கு ஜூன் மாதம் வந்தன. இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஆங்கிலேயரைத் தாக்கிய அந்தப் புரட்சியில் காசி பேரெழுச்சிமயமாகத் திகழ்ந்தது. காசியிலும், சுற்றுவட்டாரத்திலும், கிராமங்களிலும் ஆங்கிலேயர் எதிர்ப்பை அடக்கி, ஒழுங்கை நிலை நிறுத்தும் பணியில் நீலன் ஈடுபட்டார். யாதொரு பாதுகாப்புமற்ற விவசாயிகள் வாழும் கிராமங்களில் புகுந்து கண்ணில் பட்டவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்துவது, தூக்கிலிடுவது போன்ற காரியங்களில் ஈடு பட்டார். ஏழை விவசாயிகள், பிராமணர்கள், எவ்வித தீங்கும் செய்யாத முஸ்லிம்கள், கைக்குழந்தைகள், பெண்கள், கிழவர்கள், குருடர்கள், அங்கஹீனர்கள், நகர முடியாத கிழவர் என்று ஒருவர்கூட தப்பியோட முடியாமல் கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டதாக கேய், மால்லீஸன் முதலிய ஆங்கிலேய சரித்திர ஆசிரியர்களே எழுதியிருக்கின்றனர். தப்பியோட முயன்றவர்களை சுட்டு வீழ்த்தியதாக சார்லஸ் பால் எழுதியுள்ள சரித்திரத்தில் காணப்படுகிறது.

ஆங்கில சரித்திர ஆசிரியர்கள் அரைமனதுடன் குறிப்பிட்டுள்ள சிற்சில உண்மைகள் இவை.

> ''ஜெனரல் நீல் தீர்த்த வஞ்சத்தின்
> கொடுமை பற்றி எதுவும்
> எழுதாமலிருப்பதே சிறந்ததாகும்''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று வெள்ளைச் சரித்திராசிரியர்கள் உலகமறிய பகிரங்க மாகவே கூறி இருக்கிறார்கள்.*

இரத்த வெறியின் உச்சநிலை

ஜெனரல் நீலன் இத்தகைய அக்கிரமங்களைச் செய்த போது டில்லி பாதுஷாவின் பிரதிநிதியான லியாகத்அலி என்ற மௌலவி நீலனை எதிர்த்து போர் செய்தார். அந்த மௌலவியின் மருமகனார் மக்களுக்குத் தலைமைபூண்டு போர் நடத்தி ஆங்கிலேயருக்கு அச்சம் ஊட்டினார். பிடி பட்ட அவரைச் சிறை செய்தபோது மூச்சை அடக்கி வெளியே வாங்கிய அவர் தனது கட்டுக்களை அறுந்திடச் செய்ததை அறிந்த ஆங்கிலேயர் அவரை கட்டிப்பிடித்து கீழே தள்ளி மூளையைச் சிதறச் செய்தனர்.**

அடுக்கடுக்காக சவங்களைச் சுமந்து செல்லும் வண்டி கள் காலையில் இருந்து மாலைவரை மூன்று மாத காலம் ஓயாமல் சென்றுகொண்டிருந்தது என்று ''கே,' என்ற ஆங்கில சரித்திர ஆசிரியர் சொல்லியிருக்கிறார்.***

கான்பூர் ஸாபர் அலி

ஆங்கிலச் சேனாதிபதி ஹியூவீலரைச் சுட்டுக் கொன்ற தற்காக, குற்றம் சாட்டப்பட்டுஸாபர் அலி என்ற குதிரை வீரரை தூக்குத் தண்டனைக்குள்ளாக்கினார் நீலன்.

''நபிகள் நாயகமே! அடியேன் ஆண்டவன் அடிமை. நானோ நிரபராதி இது சத்தியம். எனக்கு இத்தண்டனை விதித்தவன் நீலன். வயது வந்ததும் நீலனையோ,

---

* வீர சாவர்க்கர் ''எரிமலை'' பக்கம் 151.

** எம். எஸ் சுப்பிரமணிய ஐயர் ''சுதந்திர சரித்திரம்'' பக்கம் 167, 168.

*** A ஷேக்தாவூத் ''இந்திய விடுதலைப் போரில் இஸ்லாமியர் பங்கு'' பக்கம் 48,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவன் சந்ததியையோ, என் குமாரன் பழிவாங்க வேண்டும். இதுவே என் பிரார்த்தனை'' என்று சொல்லிக்கொண்டு ஸாபர்அலி தூக்கிலே நாட்டிற்காக மாண்டார்.

மஜ்ஹர் அலி பழிதீர்த்துக்கொள்தல்

காலவெள்ளத்தில் ஆங்கிலேயப் படையிலே ஸாபர் அலியின் புதல்வர் மஜ்ஹர்அலி சேர்ந்து பணியாற்றினார். அப்போது மேஜர் நீலனின் மகனை சுட்டு வீழ்த்தி பழி தீர்த்துக்கொண்டார்.

சென்னையில் அப்போதைய ஆளுநர் தாமஸ்மன்றோ நீலனின் உறவினர். எனவே, நரவேட்டையாடிய அந் நீலனுக்கு நம் சென்னை மாநகரில் அன்றைய மவுண்ட் ரோட்டில் (இன்று அண்ணாசாலை) சிலை ஒன்று வைத்தனர் ஆங்கிலக் கும்பெனியார்.

வாளேந்திய இராமநாதபுரம் முகம்மதுசாலி

1927-இல் நாகபுரியில் நகர்மன்றத் தலைவர் ஜெனரல் மன்சர்ஷா அவாரி என்பவர் பிரிட்டிஷ் அரசு பிறப்பித்த இந்தியர்களை நிராயுதபாணிகளாக்கிய ஆயுதச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார். ஆயுதம் தாங்கிய தேசீயப்படை ஒன்றையும் வடபுலத்தில் நிறுவினார். அவரை ஆங்கிலேய அரசு கைது செய்து நான்கு ஆண்டுகள் சிறையில் பூட்டியது.

இக்கொடுமையினை எதிர்த்து நாடெங்கும் வீரர்கள் வாளேந்தி செல்லத் தலைப்பட்டனர்.

மதுரையில்

1927 ஜூலை 16ல் மேலச்சித்திரை வீதி தேசீயப் பள்ளிக் கூடத்திலிருந்து ந. சோமயாஜூலு தலைமையில் ஆயுதச் சட்டத்தை எதிர்த்து ஊர்வலம் சென்றனர். கீழ் சென்னை கே. வி. கணபதி ஐயர், இராமநாதபுரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூகம்மதுசாலி ஆகியோர் கைகளில் இரண்டரை அடி நீள முள்ள பட்டாக்கத்திகள் ஏந்தி ஊர்வலத்தில்* வந்தனர். ஊர்வல வழியில் ஆங்காங்கே நின்று ஆயுதம் தாங்கும் உரிமையையும் இருவரும் எடுத்துச் சென்றார்கள்.

ஒரு மாத காலம் முகம்மது சாலி இருபதுக்கும் மேற் பட்ட தொண்டர்களுடன், மதுரையில் வாளேந்தும் உரிமை பற்றி பிரச்சாரம் செய்து வந்தார். அரசிற்கு செய்திகள் பறந்தன. மலபார் தவிர சென்னை மாகாணத் தில் ஆயுதம் வைத்துக் கொள்ளலாம் என்று அரசு பணிந்து அறிவித்தது.

வடக்கே நடைபெற்ற நீலனின் கொடுமைகளுக்கும், மூகம்மதுசாலி வாளேந்திய வீரதீரத்திற்கும், என்ன தொடர்பு?

மண்டபம் திருமலாச்சாரியார்

புதுவையில் புகுந்த தேசபக்தர்களுக்கு அடைக்கலம் தந்த தலைவர் மண்டபம் திருமலாச்சாரியார், அவர் பஞ் சாபில் நடைபெற்ற லாரன்ஸ் உருவச்சிலையை அகற்ற நடந்த கிளர்ச்சியைப் போல, சென்னையிலும் நீலனுடைய சிலையைத் தகர்த்தெறிய ஓர் இயக்கம் நடத்த வேண்டும் என்று இந்து பத்திரிகையில் ஏற்கனவே எழுதியிருந்தார்.

மதுரை ரெ. சிதம்பரபாரதி

வ.உ.சி. யுடன் தோள் நின்ற சுப்பிரமணியசிவாவின் நெருங்கிய சீடர் மதுரை ரா. ஸ்ரீநிவாஸவரதனும், ரெ. சிதம்பரபாரதியும், பத்மாஸனி அம்மாளும் போராட்டத் திட்டத்தை வகுத்து ''தற்சமயம் சிலைக்கு காவல் இல்லை கிளர்ச்சி செய்தால் சர்க்கார் அதற்கு காவல் போட்டு விடு வார்கள், அதனாலே எப்படியும் சிலையை உடைத்தெறிய வேண்டும்'' என்று முடிவு எடுத்தனர்.

---

* ம. பொ. சிவஞானம் ''விடுதலைப்போரில் தமிழகம்'' முதல் பாகம் பக்கம்-625, 626.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தியாகத்திருவுரு முகம்மதுசாலி

எவ்விதத் தியாகத்திற்கும் தயாராயிருப்பதாக திருநெல்வேலி சுப்பராயலு நாயுடுவும், இராமநாதபுரம் முகம்மது சாலியும் முன் வந்தனர். சென்னைக்கு செல்லும் முகம்மது சாலி, சுப்பராயலு நாயுடு இருவருக்கும் பத்மாஸனி அம்மாள் தனது கைக்கொலுசை (சூடகை) அடகு வைத்து பதினைந்து ரூபாயை கொடுத்து அனுப்பினார்.

நீலன் சிலையை முதலில் உடைத்த முகம்மதுசாலி

மதுரை ஜில்லா தியாகிகள் மலரில் முகம்மதுசாலி கையில் வாளுடன் நிற்கும் புகைப்படத்தில் நீலன் சிலையை முதன் முதலாக உடைத்த முகம்மதுசாலி என்ற குறிப்பு உள்ளது* சென்னையில் நடைபெற்ற அந்த வீரப் போரின் வரலாறு இதோ;

மதுரையில் ஆயுதச்சட்ட மறுப்புச் செய்த அவ்விரு தொண்டர்களையும் அழைத்துக் கொண்டு ரெ. சிதம்பர பாரதி, சென்னை சென்று பி. வரதராஜலு நாயுடு, டி. எஸ். சொக்கலிங்கம் (பின்னாளில் தினசரி, தினமணி ஆசிரியர்) இருவரையும் கலந்தாலோசித்தனர். மூவரும் ஒரு முடிவு செய்து 1927 ஆகஸ்ட் 11 காலை 9 மணிக்கே தேசீயக்கொடி, பூமாலை, உளி, சம்மட்டி, ஏணி முதலிய வற்றுடன் தமிழ்நாடு ஆபீசிலிருந்து மவுண்ட் ரோடு சென்று சிலையை உடைக்க ஆரம்பித்தனர். சிலையில் நீலன் கையில் பிடித்திருந்த கத்தியின் உறையின் ஓர் மூலை சுமார் ஒன்றரை அடி நீளம் உள்ளது உடைத்து விடப்பட்டது. தேசீயக் கொடியை அருகே நட்டி அதற்கு மாலையிட்டார்கள். நீலனின் கொடிய செயல் குறித்து

---

* ரெ. சிதம்பர பாரதி, ரா. சீனிவாஸவரதன் மதுரை ஜில்லா தியாகிகள் மலர் 1948-பக்கம் 67.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேசத் துவங்கியதும், நூற்றுக்கணக்கானோர் கூடி விட்டனர். அதனைப் பார்த்த ஆங்கிலேயர் ஒருவர் போலீ சுக்கு தகவல் சொல்ல போலீஸ் வர முகம்மதுசாலியும், சுப்பராயலு நாயுடுவும் கைது செய்யப்பட்டார்கள். நீலன் சிலைக்கு நால்வர் காவலராகப் போடப்பட்டனர். முகம்மது சாலியும், சுப்பராயலு நாயுடுவும் எழும்பூர் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டனர். அவர்களுக்கு வக்கீல் வைத்து வாதாடப்படவில்லை. பிராஸிகுசன் (பிராக் சியூசன்) சாட்சிகளை குறுக்கு விசாரணை கூட செய்ய வில்லை என்று அரசு ஆவணங்களில் காணக்கிடப்பதை இன்றும் காணலாம்.

நீலனின் சிலையானது தாங்கள் நினைத்தபடி வெங் கலத்தினாலாவது சலவைக் கல்லினாலாவது செய்யப் பட்டிருக்கவில்லை என்றும், செம்பினாலே செய்யப் பட்டிருந்ததால் சிலையின் பாகங்கள் தான் உடைந்தன என்றும், சென்னைக்கு வந்த நாங்கள் இந்த சிலையைப் பார்த்த போது பழைய வரலாறு ஞாபகம் வந்ததால் இதை அழித்துவிட முடிவு செய்தோம் என்றும், தங்களு டைய சொந்த அபிப்பிராயத்தில் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்றும், ஆனால் அரசாங்கச் சட்டப்படி தாங்கள் குற்றவாளிகள் என்றும் கூறினர். உத்தமமான லட்சியத் தில் உந்தப்பட்ட அந்த இளைஞர்கள் இருவருக்கும் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

சிறையில் சித்ரவதை

நீலன் சிலையை உடைத்த ஒருவருக்கு அரசியல் குற்றத்திற்காக கடுங் குற்றவாளிகளுக்குத் தரப்படும் மாவரைத்தல் போன்ற கடின வேலைகள் தரப் பட்டது. அவ்வாறு செய்வது ஏன் என்று கேட்ட போது குற்றவாளி இழைத்த குற்றம் கொலைக் குற்றம் போன்றது என்று அதிகாரிகள் பதிலளித்தனர். அப்போது அங்கு கைதியாக இருந்த இந்திய விடுதலை இயக்கத்தின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரலாற்றுப் புகழ்மிக்க தோழர் அமீர்ஹைதர்கான் போன்றோரின் தலையீட்டால் அவருக்கு "சி" வகுப்பு அரசியல் கைதிகளுடன் வைக்கப்பட்டார்* என்று குறிப்பிடும் நீலன் சிலை உடைத்த தீரன் முகம்மதுசாலி ஆவார். சேதமுற்ற அந்த சிலையினை முற்றிலும் அகற்றும் போர் தொடர்ந்து சோமயாஜுலு தலைமையில் நடைபெற்றது.

ஆதம் ராவுத்தரின் புதல்வர் சென்னை முகமது சாலி ராவுத்தரும், சென்னை ராயபுரம் அப்துல் காதரின் புதல்வர் அப்துல் அஜீஸும், சென்னை ஜார்ஜ் டவுண் அப்துல் லத்தீப்பின் புதல்வரும் வளையல் வியாபாரியுமான லத்தீப் சாஹிப்பும், இராமநாதபுர மாவட்டம் இராமச்சந்திரபுரத்தைச் சேர்ந்த காதர் மஸ்தான் சாஹிபும், பண்ருட்டி முஹம்மது உசேனும் நீல்சிலை உடைப்பு போரில் பங்கேற்று தண்டனைக்குள்ளான தமிழக முஸ்லிம்கள் ஆவர்.

நீலனது சிலை அகற்றும் சத்தியாக்கிரகம் குறித்து சென்னை ராஜதானி மேலவையில் விவாதம் வந்தபோது, சென்னை நகரின் சட்டமன்ற பிரதிநிதி அமீதுகான் அவர்களும், மத்திய இஸ்லாமிய தொகுதி பசீர் அஹமது சையத்தும், மலபார் பகுதியைச் சேர்ந்த உப்பிசாய்பும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.**

சத்தியாக்கிரகம் நீண்டகாலம் நீடிக்கவில்லை, அப்போதைக்கு அது தோல்வி அடைந்தாலும், 1937-இல் காங்கிரஸ் மந்திரிசபை சென்னையில் ஆட்சிக்கு வந்ததும், முதலமைச்சர் ராஜாஜி அதனை அப்புறப்படுத்தி சென்னை அருங்காட்சியகத்தில் வைக்க உத்திரவிட்டார். ஆறு

* அமீர்ஹைதர்கான் "தென்னிந்தியாவைக் கண்டேன்" பக்கம் 132, 133.

** Proceedings of the Madras Legislative Council Volume XXXVII October 1927

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாரங்கள் நடந்த இந்த இயக்கத்தில் மொத்தம் 30 பேர் (35 வயதுள்ள பெண்ணும் அவரது 9 வயது மகளும், மற்றும் 28 பேரும்) சிறை சென்றனர்* அவர்களில் ஒருவர் முஸ்லிம் என்று காந்தி குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொய்மைக்கும், கொடுங் கோன்மைக்கும் அத்தாட்சியாக இருக்கும் இந்த நீலன் சிலை விஷயத்தில் தனது முழுச்சக்தியையும் கொண்டு எதிர்த்தாக வேண்டியது ஒவ்வொரு இந்தியனின் உண்மையான கடமை என்று அப்போது காந்தி எழுதினார்.

முகம்மதுசாலியின் குடும்பத்தினர்

இராமநாதபுரம் ஆதம் ராவுத்தரின் புதல்வராக 27—3—1900ல் பிறந்தவர் முகம்மதுசாலி. நாகபுரியின் கொடிப்போர் பர்டோலி, வரிகொடா இயக்கம், வைக்கம் சத்தியாக்கிரகம் ஆகியவற்றிற்கு இணையான நீலன் சிலை உடைப்புப் போரில் ஈடுபட்டு முதன் முதலில் நீலன் சிலையை உடைத்து, தண்டனை பெற்று ஆறுமாத காலம் பெல்லாரி சிறையில் வாடினார்.

மதுரைக்கு மேற்கே 9வது மைலில் உள்ள தோப்பூரில் மதுரை ஸ்ரீனிவாசவரதன் 10 ஏக்கர் சொந்த நிலம் வாங்கி ஆஸ்ரமம் ஒன்றை அமைத்தார். அதில் நீலன் சிலையை முதலில் பெரிய சுத்தியைக் கொண்டு உடைத்த தீரன் மதுரையின் தளநாயகருமான முகம்மதுசாலி** பள்ளிக் கூடம் நடத்தியும் ராட்டினங்களில் நூல்நூற்கச் சொல்லி யும் வேலை செய்து வந்தார். (சுதந்திரத்திற்குப் பின் திருமங்கலம் சுப்பு நிர்வாகத்தின் கீழ் பாரதி ஆஸ்ரமம் என்ற பெயரில் அது இயங்கியது)

* மகாத்மா காந்தி நூல்கள் (1961) வால்யும் 8 பக்கம் 168 நீலன்சிலை சத்தியாக்கிரகம் என்ற காந்தி எழுதிய கட்டுரையில் (யங் இந்தியா 13—10—1927)

** காங்கிரஸ் நூற்றாண்டு விழா மலர் பக்கம். 280

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமநாதபுரத்தில் இறுதிக் காலத்தில் சைக்கிள் கடை வைத்து நடத்திய முகம்மதுசாலி தனது ஐந்து புதல்வரையும், இரண்டு புதல்வியாரையும் விட்டு விட்டு 1964 மார்ச் 3ல் மறைந்தார். மதுரை பட்டரைக்காரத் தெருவில் இன்றும் அவரது வாரிசுகள் வாழ்ந்து வருகிறார்கள்*

நாட்டு விடுதலைக்கு அவர் ஆற்றிய வீரசேவைகளின் மறைக்கப்பட்ட வரலாறு தமிழகத்தின் பக்கங்களில் மீண்டும் இடம் பெறவேண்டும். அந்த வீர புருஷருக்கு நாமும், நாடும் செலுத்த வேண்டிய காணிக்கை அது.

---

* இராமநாதபுரம் நொச்சிவயல் அக்ரஹாரத் தெருவில் வாழ்ந்து வரும் சுதந்திரப் போர் தியாகி இ. காட்டுபாவா பயில்வான் அளித்த தகவல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாறாத கொள்கை தீரர் மதுரை மௌலானா சாஹிப்

உப்பு வரி

1857-ம் ஆண்டு புரட்சியின் விளைவால் ஆங்கிலேயர்களுக்கு கஜானா வறண்டிருந்தது. அதனை சரிக்கட்ட ஆண்டுக்கு ரூபாய் 200-க்கு மேற்பட்ட எல்லா வருமானங்களின்மேல் வருமானவரி விதித்தல், உப்புக்காக ஏகபோக விலை உயர்த்துதல் ஆகிய இரு திட்டங்களையும் அமுல் படுத்தலானார்கள். அரசுக்குப் பெருமளவு வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய ஒரே நுகர்பொருளாக இந்தியாவில் வாங்குவது உப்பு ஒன்றுதான். இந்தியாவில் உப்பு வரியை சட்டப்பூர்வமான முக்கியமானதொரு வருவாய்த் துறையாகக் கருதவேண்டும் என்று இந்தியா அமைச்சர் ஆர்னகல் கோமகன்* கூறினார்.

சென்னையில்

1805 ஆண்டில் உப்பு சென்னை மாகாணத்தில் அரசின் ஏகபோக பொருளாக்கப்பட்டது. உப்பின் விலை மணங்கு 9½ அணா என்று முதலில் நிர்ணயிக்கப்பட்டது. படிப்படியாக 1890-ல் ரூ. 2-11 அணா என்று உயர்ந்தது.

சர் சார்லஸ்டிரிவிகி (1859-1860)

உப்பு வரியை உயர்த்துவது அறிவுடைமையாகாது அது தலைவரி (Poll Tax) விதிப்பது போன்றதாகும். ஏழை எளிய மக்கள் இந்த வரியைத் தாங்கமுடியாமல் தவிக்கின்றார்கள் என்று எதிர்ப்பு தெரிவித்தார்.**

---

* As quoted in S. Srinivasa Raghavaiyangar Memo on the Progress of the Madras Presidency during the last Forty years of British Administration pp. 117-118.

** G. O. No. 1774 Revenue Department dated 11th June 1859 page 6-7.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியாவில் இதுகாறும் விதிக்கப்பட்டுள்ள வரிகள் அனைத்திலும் மிகவும் அநியாயமானதும், கொடுமையானதும் இந்த உப்பு வரியேயாகும் என்று சுதேசமித்திரன் கூறியுள்ளது*.

தண்டி உப்புச் சத்தியாக்கிரகம்

ஏழைகளைப் பாதிக்கின்ற உப்பு வரியை நீக்குவதற்கு அரசாங்கம் பிடிவாதமாக மறுத்து வந்ததைத் தொடர்ந்து காந்தியடிகள் 1930 மார்ச் 12-ல் 79 தொண்டர்களுடன் தண்டி என்னும் ஊருக்கு கால்நடையாகச் சென்று அங்கே கடற்கரையில் அரசாங்கத்தின் அனுமதியின்றி உப்பை எடுத்தார். இதனைப் பின்பற்றி நாடெங்கும் காங்கிரஸ் தொண்டர்கள் சத்தியாக்கிரகத்தில் இறங்கினர்.

வேதராண்யம் உப்புச் சத்தியாக்கிரகம்

35 மைல் விஸ்தீரணமுள்ள உப்பளம் உள்ள இயற்கை உப்பு மேடாய் காணப்பட்டது, என்று ஜீ ஹெமிங் ஸே கூறியிருக்கும் வேதராண்ய உப்பு வரும்படி வேதபுரிஸ்வரர் ஆலயத்தைச் சேர்ந்ததாக முதலில் இருந்தது.** பின்பு ஆங்கிலேயர்கள் அதனை தங்களின்கீழ் எடுத்துக்கொண்டனர்.

தமிழகத்தில் சக்கரவர்த்தி சி. ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் 1930 ஏப்ரல் 13-ம் நாள் தமிழ் வருடப் பிறப்பன்று திருச்சி தி. சோ. சௌ. ராஜன் வீட்டிலிருந்து வேதராண்ய உப்புச் சத்தியாக்கிரக வீரர்கள் கிளம்பினர். படை ஸ்ரீரெங்கத்தில் கே. வி. ரெங்கசாமி ஐய்யங்கார் பங்களாவில் அன்று இரவு தங்கியது.

---

* 24—1—1886 சுதேசமித்திரன் News Paper Report (Conf.) 1886 page 4.

** சுதந்திரச்சங்கு 12—4—1930

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மறுநாள் காலை பிரார்த்தனையில் ''வந்தேமாதரம்'' ஏசுவே கிருபை தாரும் என்ற கீதங்கள் பாடப்பட்டன. முஸ்லிம் தொண்டர்கள் குர்ஆனிலிருந்து வாசித்தார்கள்.*

வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது தங்கியிருந்து காலைப் பிரர்த்தனையில் முஸ்லிம் தொண்டர்கள் குர்ஆனிலிருந்து வாசித்தார்கள் என்பதிலிருந்து அந்த உப்புச் சத்தியாக்கிரகப் போரில் முஸ்லிம் தொண்டர்கள் கலந்துகொண்டனர் என்பதனை முதலில் உறுதிப்படுத்திக் கொள்வோம்.

ராஜாஜியின் சத்தியாக்கிரகக் குழுவில் திருச்செங்கோடு 9, மதுரை 24, தஞ்சை 7, திருச்சி 5, பம்பாய் தமிழர் 9, கோவை 4, இராமநாதபுரம் 12, சென்னை 11, வடாற்காடு 1, திருநெல்வேலி 15, ஸ்ரீரெங்கம் 1 ஆக மொத்தம் 98 பேர் முதற்படையில் சேர்ந்த தொண்டர்கள் ஆவர். இவர்களில் எத்தனை முஸ்லிம்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதனை அக்காலத்தில் வெளியான தமிழகப் பத்திரிகைகளை ஊன்றிப் படித்து அறிய வேண்டிய நிலையில்தான் இருக்கின்றோம். தஞ்சை அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த முஹைதீன் பாவா தம்பி மரைக்காயரின் புதல்வர் அலியார் சேட் இந்த உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றார்.

மதுரை மௌலானா சாஹிப்

ஹாஜி முகம்மது அசனுத்தீன்—மாஜான் பீவி புதல்வராக 1886-ல் மதுரையில் பிறந்தவர். உருதுவிலும், பாரசீகத்திலும் தேர்ச்சிபெற்ற மதுரை ஜனாப் ஹாஜி முகம்மது மௌலானா சாகிப் மெட்ரிகுலேசன்வரை படித்தவர். தமிழிலும், சௌராஷ்டிர பாசையிலும் நன்கு பேசுபவர். மத வைராக்கியம் உடையவர்.

* மணிக்கொடி (உத்தேசம்-1931) கொடி-8, மணி 8 பக்கம் 30-40

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1917-இல் ஹோம்ரூல் இயக்க கால முதல் சுதந்திரம் பெறும் காலம் வரையிலும் தொண்டாற்றி வந்தவர் மௌலானா சாகிப். 1921-ல் நிலக்கோட்டை தாலுகா கள்ளுக்கடை வழக்கில் மட்டப்பாறை ஐயர் பட்டாபி ராமையா ஆகியோருடன் கைது செய்யப்பட்டார்.

20—9—1921-ல் மதுரை மௌலானா சாகிபும், திண்டுக்கல் பிரதிநிதிகளும் காந்தியைத் திண்டுக்கல் வரும்படி அழைத்தனர். திண்டுக்கல் நிகழ்ச்சியை முடித்து மதுரைக்கு காந்தி வந்தபோது அப்போதுதான் முதன் முதலாக காமராசர் காந்தியை பார்க்கிறார். நிலக் கோட்டை தாலுகாவில் கள்ளுக்கடை ஏலம் போடப்பட்ட போது மதுரை மௌலானா சாகிப் மற்றும் 6 பேர் மறியல் செய்தனர். ஆனால் அரசோ, கள்ளுக்கடை மறியல் வழக்குப் போடாமல், கொள்ளை வழக்குகளை அவர்கள் மீது தொடர்ந்தது. கள்ளுக்கடை மறியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொள்வது வழக்கமாக இருந்தது. இந்த நிலையில் நாங்கள் என்ன செய்வது, என்று மதுரை மௌலானா சாகிப் காந்தியிடம் ஆலோசனை பெற்றார். இந்த சுற்றுப் பயணத்தில் தான் காந்தியடிகள் தனது மேலாடைகளைத் தூக்கி எறிந்து அரை நிர்வாணப் பக்கிரியானார். மௌலானா ஆஷாத் சுபானியும், அப்போது தனது ஆடையை இஸ்லாமிய மார்க்கம் அனுமதிக்கின்ற அளவு குறைத்துக் கொண்டார்*

பேதமைகாட்டி மக்களிடம் பிரிவினை உண்டாக்கும் பிரிட்டிஷ் சட்ட ஆட்சியாளர்களை பொதுக்கூட்டங்களில் வன்மையாக மதுரை மௌலானா கண்டித்தார்.

1921-இல் தஞ்சாவூரில் நடைபெற்ற மாகாண மாநாட்டில் பேசியதற்காக யாகூப் ஹசன் சேட் அப்துல்

* அ. இராமசாமி ''தமிழ்நாட்டில் காந்தி'' பக்கம் 352-356.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மஜித் ஷா ஆகியோருடன் இரண்டு வருட கடுங்காவல் தண்டனையடைந்து வேலூர் சிறையில் அடைக்கப் பட்டார்.

தொழிற்சங்க நடவடிக்கைகள்

மதுரையில் மகாலெட்சுமி மில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட்டார். வழக்கு முடியும் வரை வாய்ப்பூட்டு சட்டம் அவருக்குப் போடப்பட்டது. அந்த காலக்கட்டத்தில் மௌலானா சாகிப் ஆக்க வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டார்.

முகம்மது காசிம் சாகிப்

திருச்சியில் 15-7-1931ல் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ராஜாஜி தலைமையில் நடைபெற்றது. மதுரை மௌலானா சாகிப் கலந்து கொண்டார். அதில் ராஜகிரி ஜனாப் முகம்மது காசிம் சாகிப் மரணத்தை குறித்து துக்கங்காட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது*

காந்தி கைதான செய்தி கேட்டதும், மதுரையில் முதல் நாள் அ. வைத்தியநாதய்யர் கைது செய்யப்பட்டார். மறுநாள் போராட்டத்திற்கு இரண்டாவது சர்வாதி காரியாகி கூட்டங்களில் மக்களிடையே சுதந்திர முழக்கம் செய்தவர் மௌலானா சாகிப். மேங்காட்டுப்பொட்டல் என்ற ஜான்சிராணி பார்க் முன்பு பெரும் மக்கள் கூட்டத் திடையே மௌலானா சாகிப் பேசிக் கொண்டிருக்கும் போது ஆங்கிலேயே ஏகாதிபத்தியம் கூடியிருந்த மக்களை தடி கொண்டு தாக்கி விரட்டிட முயன்றது. அப்போது மௌலானா சாகிப் கைது செய்யப்பட்டார். 1932ம் வருடத் திய அந்தப் போராட்டத்தில் இரண்டு வருட கடுங்காவல் தண்டனையும் பெற்றார்.

---

* 20—7—31 "காந்தி" பக்கம் 7.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடலூர் ஜெயிலில் நடந்த மாநாடு

1932 மே 11, 12, 13, 14, தேதிகளில் கடலூரில் ஜெயிலில் தமிழ் ராஜ்யக் கைதிகள் மாநாடு நடைபெற்றது தீண்டாமை ஒழிப்பது குறித்தும், நாட்டு விடுதலை குறித்தும் ஆலோசனைகள் அதில் செய்யப்பட்டது. பி. எஸ். குமாரசாமிராஜா பி. எக்னேஞ்வரசர்மா, எஸ். எஸ். விஸ்வநாததாஸ் போன்ற தமிழகத்தி ன்முன்னணித் தலைவர்கள் அதில் பங்கேற்றனர். அதில் ஹாஜி. மௌலானா சாகிப்பும், கலந்து கொண்டார்* அந்த சிறை வாசத்தின் போது தனது துணைவியார் சுல்தான் பீவி அம்மாளும், மகள் பீவிகானும், மறைந்த செய்தியறிந்து அவர்களது இறுதி நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ளக் கூட சிறையில் இருந்து வெளியே வரமறுத்து விட்ட தீரர் மதுரை மௌலானா. 1937 மதுரைத் தாலுகா துவரிமானில் அரசியல் மாநாடு-சென்னை எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் தலைமையில் நடைபெற்றது. அதில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், ஹாஜி. முகம்மது மௌலானா சாகிப், தீவிரங்காட்டி முன்னின்று நடத்தியவர்கள் ஆவர்.

மும்முறை முனிசிபல் கவுன்சிலராகவும், 1942ல் மதுரை வைஸ்சேர்மன், சேர்மன் ஆகவும் மதுரையில் பணியாற்றிய அவர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, மதுரை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஆகியவற்றில் அங்கத்தினராகவும், தலைவராகவும் தொடர்ந்து விடுதலைப்போர் காரியங்களை திறம்பட நடத்தியிருக்கின்றார்.

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் பணியாற்றிய அவர் சுதந்திரப் பிரச்சாரத்திற்காக எங்கு அழைத்தாலும் தட்டாமல் போய் தொண்டாற்றுவார். விருதுநகரில் அவ்வப் போது நடைபெறும் கூட்டங்களில் மதுரை மௌலானா சாகிப்பின் பேச்சைக் கேட்டும், ஊர்வலத்தில் பங்கேற்றும், அன்றைய இளைஞர் ''பெருந்தலைவர் காமராஜர்''

* 9—10—32 ''காந்தி'' இதழ் பக்கம்-3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமது கடையில் திட்டம் சரி பார்த்து கணக்குக் கட்டாமல் போட்டது போட்டபடி வந்துவிடுமளவு ஈடுபாடு கொண்டிருந்திருக்கிறார்.*

கும்பகோணத்தில்

உப்புச் சத்தியாக்கிரகக் குழுவினர் கும்பகோணத்தில் தங்கியிருந்த போது ராஜபாளையம் பி. எஸ். குமாரசாமி ராஜாவும், மதுரை மௌலானா சாகிப்பும், அங்கு உடன் இருந்தனர்.** உப்புச்சத்தியாக்கிரகிகள் செல்லும் பாதையில் செம்மங்குடியில் பெரிய பந்தல், மேஜை நாற்காலிகள் போடப்பட்டு இருந்தன.

கும்பகோணம் பந்துலு ஐயர் தலைமையில் சீர்காழி சாமிநாத செட்டியார், மதுரை மௌலானா சாகிப் ஆகியோர் அங்கு உரையாற்றினார்கள்.***

நீடாமங்கலம் சீனிவாசபிள்ளை சத்திரத்தில் தொண்டர்கள் தங்கினார்கள். அங்கு நடைபெற்ற கூட்டத்தில் என். எம். கிருஷ்ணமாச்சாரியும், மதுரை ஜனாப் மௌலானா சாகிப்பும் பேசினார்கள்****

1930 ஏப்ரல் இறுதியில் உப்புச் சத்தியாக்கிரகிகள் வேதாரண்யம் சென்றதும், ராஜாஜி, சந்தானம், ருக்மணி லெட்சுமிபதி. அண்ணாமலைப்பிள்ளை ஆகியோர், வரிசையாக கைதானதும் வீர வரலாறுகள். அந்த உப்புச் சத்தியாக்கிரகப் போரில் முஸ்லிம் தொண்டர்கள் பலரும் மதுரை மௌலானா சாகிப்பும், கலந்து கொண்டு அந்த

---

* காமராஜ் வரலாறு - மு நமச்சிவாயம் பக்கம் 163, 174, 185

** ராஜாஜி-ஜி. ராமச்சந்திரன்-டி ஆர். பத்மநாபன், "வேதாரண்யம் உப்புச்சத்தியாக்கிரகச் சரித்திரம்" பக்கம். 96

*** முன் சொல்லப்பட்ட அதே நூல் பக்கம். 106

**** அதே நூல் பக்கம். 112

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலக்கட்டத்திலும் தமிழக முஸ்லிம்களின் பங்கினைச் செலுத்தியிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. 1956 ஆவடி காங்கிரஸ் மாநாட்டில் 'இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்' என்ற பட்டயத்தை இந்திய அரசாங்கம் அவருக்கு வழங்கியது. சத்தியமங்கலத்திலும், அலங்கா நல்லூரிலும் ஐந்து ஏக்கர் நிலத்தை அரசு தேசச் சேவைக் குப் பரிசாக அளித்தது. மாருத கொள்கையுடன் வாழ்ந்த மதுரை மௌலானாவின் புவிவாழ்வு 25-3-1957ல் 72வது வயதில் நிறைவுற்றது.

சென்னை உப்புச்சத்தியாக் கிரகமும் வேலூர் உபயதுல்லாவும்,

மகாத்மாகாந்தி தண்டியிலும், ராஜாஜி வேதாரண்யத் திலும், உப்புச்சத்தியாக்கிரகத்தை நடத்திய போது சென்னை இராயப்பேட்டை உதயவனம் பகுதியில் உப்புச் சத்தியாக்கிரகத்தை நடத்திட சேலம் ஏ. சுப்பிரமணியம் முயன்றார்.

1930 ஏப்ரலில் ஆந்திரகேசரி டி. பிரகாசம், சென்னை நகரப் போர்முனையில் முதல் சர்வாதிகாரியானார். கூட்டங்களுக்கு தடை போட முற்பட்ட பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தினை எதிர்த்துப் பிரச்சாரம் துவங்கியது. போலீ சார் தொண்டர்களை வேட்டையாடினார்கள். உப்புப் போரில் இனி எந்தத் தொண்டரும் பங்கு கொள்ள பயப் பட வேண்டும் என்கிற நோக்கத்தோடு கொடூரமான அடக்குமுறைகளை ஆங்கில அரசு ஏவியது. சென்னை ஹைகோர்ட் கடற்கரை அருகில் நடைபெற்ற தடியடியில் காயப்பட்ட டாக்டர். யூ. இராமாராவ் மருத்துவமனையில் காலமானார். துப்பாக்கிச் சூட்டில் வழக்கறிஞர் கோவிந்த ராஜுலு உட்பட பலர் மாண்டு போனார்கள்.

சென்னையில் நடைபெற்ற வீரமிக்க உப்புச்சத்தியாக் கிரகப்போரில்தான் தமிழ்நாட்டின் மிகச்சிறந்த பேச்சாளர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களாக விளங்கிய வேலூர் குப்புசாமி முதலியாரையும், வேலூர் உபயதுல்லாவையும், உடனே சென்னைக்கு வரும்படி சேலம் சுப்பிரமணியம் தந்திகள் அனுப்பி வரச் செய்தார்.* அவர்களும் விரைந்து வந்தனர். சென்னை உப்புச்சத்தியாக்கிரகப் போரில் வேகமாக செயலில் இறங்கிய வேலூர் உபயதுல்லாவின் பணி போற்றுதலுக் குரியதாகும்.

* எஸ். ஏ. ரகீம், ஏ. கோபண்ணா இந்திய விடுதலைப்போர் 1857-1947 பக்கம். 99.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நேதாஜியின் இராணுவத்தில்

1930 ஜனவரி 26ல் நாடெங்கும் பூரண சுதந்திர நாள் கொண்டாடப் பெற்றது. முழு விடுதலை கிடைக்கும் வரை நாடெங்கும் அமைதி வழியில் சட்ட மறுப்புப் போரில் ஈடுபட காந்தியடிகள் முடிவு எடுத்தார். உப்புச் சத்தியாக் கிரகப் போர் நடைபெற்றதைத் தொடர்ந்து காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆங்கில அரசும் காங்கிரசும் ஒத்த நிலையில் நின்று பேச்சு வார்த்தை நடத்தும் நிலை ஏற்பட்டது. பேச்சுவார்த்தைகள் பலனளிக்க வில்லை.

1931 மார்ச் 23ல் மாவீரன் பகத்சிங்கும் கூட்டாளி களும் தூக்கிலே நாட்டு விடுதலைக்காக உயிர் நீத்தனர். 1932 ஜனவரி 4ல் நாடெங்கும் சட்ட மறுப்புப் போர் துவங் கியது. தமிழகத்தில் அப்போது திருப்பூர் குமரன் கொடி காக்க உயிர் துறந்தார். சிட்டகாங்கில் ஆயுதக் கொள் ளையும் நடந்தது. காங்கிரஸ் வரி கொடா இயக்கத்தை நடத்தியது. 1935ம் ஆண்டு அரசாங்க சட்டமும், அரசி யல் வளர்ச்சியும் இடைக்கால மந்திரி சபையும், இரண் டாம் உலகப்போர் துவக்கமும் தொடர்ந்து நடைபெற்ற வரலாற்றுச் செய்திகளாகும். 1940ல் தனி நபர் சத்தியாக் கிரகம் துவக்கப்பட்டு 1941 டிசம்பரில் எல்லா சத்தியாக் கிரகிகளும் விடுதலையானார்கள்.

1942 ஆகஸ்ட் 8ல் வெள்ளையனே வெளியேறு என்ற பம்பாய் காங்கிரசின் தீர்மானப்படி நாடெங்கும் சுதந்திர கிளர்ச்சி கொழுந்துவிட்டெரியத் துவங்கியது.

மௌலான ஆஸாத் வாளேந்திப் போர் புரியவும், இந்தி யர் தயாராக வேண்டுமென்றார். அகிம்சை வழியில் நின்ற காந்தி ஆவேசம் கொண்டு பலாத்காரப் போரில் இறங்கிட சமிக்ஞை செய்தார். இந்தியாவில் 16 ரயில்கள் தடம் புரண்டன. ஐநூற்றுக்கும் மேற்பட்ட இருப்புப் பாதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள் தகர்க்கப்பட்டன. 550 தபால் ஆபீசுகளும், 250 ரயில் நிலையங்களும் அழிக்கப்பட்டன. 50 தபால் ஆபீஸ் தீக்கிரையானது. 220 தபால் ஆபீஸ் சேதமுற்றது. 70 காவல்நிலையங்கள் கொளுத்தப்பட்டன. 85 அரசாங்கக் கட்டிடங்கள் இடிக்கப்பட்டன. நாட்டில் பல பகுதியில் இராணுவத்தினர் சுதந்திரக் கிளர்ச்சியாளர்கள் மீது விமானத்திலிருந்து தாக்குதலை நடத்தினர். 10,000 பேர் கொல்லப்பட்டும், 60,000 பேர் கைதானவர்கள் என்றும் நேரு அறிவித்தார்* தமிழகத்தில் கோயம்புத்தூரில் ராணுவ தளம் அழிக்கப்பட்டது. ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தமும் நடந்தது.

வடாற்காட்டில் ஆர்பாட்டங்கள் நடைபெற்றன. வேலூரில் பணப்பாக்கத்தில் தந்தித் தொடர்பு துண்டிக்கப் பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்றனர். மதுரையில் காங்கிரஸ் தொண்டர்கள் ராணுவத்தோடு மோதினர். ராஜபாளையம், காரைக்குடி. தேவகோட்டை, பூலாங்குறிச்சி, திருவாடனை ஆகிய ஊர்களில் துப்பாக்கிச் சூடு நடந்தது.

நாடெங்கும் குழப்பம், கொந்தளிப்பு, சுதந்திர எழுச்சி அலை வீசிற்று. வீரத்தலைவர் நேதாஜி 1943-45 ஆண்டு வாக்கில் படை திரட்டிப் போராடினார். இங்கிலாந்தில் தொழிற் கட்சி அட்லி பிரிட்டிஷின் பிரதமரானார். 1945-இல் பொதுத் தேர்தலுக்கு ஆணைபிறந்தது.

1946 ஏப்ரல் 30-இல் டி. பிரகாசம் தலைமையில் அமைச்சர் குழு தமிழகத்தில் அமைக்கப்பட்டது. அது உள்கட்சி குழப்பத்தால் 1947-ல் கவிழ்ந்தது. 1947 மார்ச் 23-ல் ஓ. வி. ராமசாமி ரெட்டியார் அரசை நிறுவினார். 1947 ஆகஸ்ட் 15-இல் நாடு விடுதலை பெற்றது.

* பா. மாணிக்கவேலு "இந்திய தேசீய இயக்கத்தின் வரலாறு" பக்கம்.228-237

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டு 1950 ஜனவரி 26 இல் குடியரசு நாடாகவும் இந்தியா மாறிற்று.

இந்த கால கட்டங்களில் இந்திய விடுதலைக்கு நேதாஜி தலைமையில் ஆயுதமேந்திப் போர் புரிந்தவர்கள், மகாத்மா காந்திஜியின் தலைமையில் சத்தியாக்கிரக வழியில் போராடியவர்கள் என்று இரு பிரிவாகப் பிரித்து அவர்களில் தமிழக முஸ்லிம்களின் பங்கினைக் காண் போம்.

நேதாஜியும் தமிழக முஸ்லிம்களும்

1897 ஜனவரி 23-ல் கட்டாக்கில் பிறந்து 1913-ல் கல்கத்தாவில் படித்து, இலண்டன் சென்றுஐ. சி. எஸ். படிப்பில் தேறி, பட்டப்படிப்பை தூக்கி எறிந்து சுதந்திரப் போரில் குதித்தவர் நேதாஜி.

1927-ல் சென்னையில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் சபையில் பொதுச்செயலாளராகப் பணியாற்றி, 1938 ஹரிபுரா காங்கிரசில் தலைவராகி, 1939 திரிபுரா காங்கிரசில் காந்திஜியின் எதிர்ப்பையும் மீறி தலைவராகி, உள்கட்சி குழப்பத்தால் பதவிவிலகி, தலைமறைவானார்.

ஜெர்மனியில் ஹிட்லரைச் சந்தித்தார். டோக்கியோ சென்றார். வெளிநாடுகளில் இந்திய சுதந்திரத்திற்காக படை திரட்டினார். அயல் நாட்டு வானொலிகளில் அழைப்புவிடுத்தார். பிரதமராக தன்னையும், இராணுவப் பிரதிநிதிகளாக அஜிஸ் அகம்மது, கிஷாண்டுவாதிர், ஷாநாவஸ்கான் போன்ற அமைச்சர்களையும் சேர்த்து அறிவித்து தற்காலிக சுதத்திர இந்திய அரசாங்கத்தை 1943 அக்டோபர் 21-ல் பிரகடனப்படுத்தினார்.

20 பேர்கொண்ட சர்க்காரில் பிரதம அமைச்சராக நேதாஜியும் லெப் கர்னல் அஜிஸ் அகம்மதுவும், லெப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கர்னல் ஷாநவாஸ்கான், லெப் கர்னல் ஈனின் காதிர், கரீம்கனி, டி. எம். கான் ஆகிய ஐவர் முஸ்லிம்கள் ஆவர். எஞ்சியவர்கள் இந்து, சீக்கிய, பிற மதத்தைச் சேர்ந்தவர்கள்* ஆவர்.

பகதூர் ஷா

1857 சுதந்திரப் போரில் ஆணிவேராகத் திகழ்ந்த இவர் 1857 செப்டம்பர் 20ல் டில்லி வீழ்ந்த போது ஹட்ஸனால் கைது செய்யப்பட்டு 42 நாட்கள் விசாரணைக்குப்பின் நாடுகடத்தப்பட்டார். செங்கோட்டை சிறையில் பசியால் வாடிய இவருக்கு வந்த தட்டுக்களை திறந்து பார்த்த போது தனது புதல்வர் இருவரின் தலைகள் அதில் இருந்ததைக் கண்டும் கலங்கவில்லை. கல்கத்தாவிற்கு கொண்டு செல்லப்பட்டு, பின் 1858 டிசம்பர் 4ல் எச். எம். மெகாரா கப்பலில் ரங்கூனுக்கு கொண்டு செல்லபட்டு, அங்கு சிறையில் வைக்கப்பட்டு 1862 நவம்பர் 7ல் காலமானார்.

''நம் வீரர்களில் இருதயத்தில் நம்பிக்கையும், தேச விசுவாசமும் அணுவளவாவது இருக்கும் வரையில் இந்துஸ்தான் வாள்மிகக் கூர்மையாக இருந்து வருவதுடன் ஒரு நாள் லண்டன் வாசற்படியையும் தாக்குமென்பது நிச்சயம்'' என்று முழங்கிய பகதூர் ஷாவின் நினைவு நாளில் அவரது கல்லறையிலிருந்து நேதாஜி வீரசபதமேற்றார்.

மலேயா வாழ் இந்தியர்கள் 77 லட்சம் டாலர்களை நேதாஜியிடம் வாரிக்குவித்தனர். அப்துல்ஹபீப் என்ற செல்வந்தர் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள தம் சொத்து முழுவதையும் நேதாஜியிடம் ஒப்படைத்தார் கோடி ரூபாயை நேதாஜிடம் தந்த ரங்கூனைச் சேர்ந்த

* எஸ். ஏ. ரகீம், ''காங்கிரஸ் வைர விழா மலர்'' (1946) பக்கம் 141.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஹபீப் என்பவருக்கு* ஸேவக்-இ ஹிந்த் என்ற பதக்கம் நேதாஜியால் அளிக்கப்பட்டது**

கோடிக்கணக்கான ரூபாய்களை நேதாஜியின் இந்திய சுதந்திர சர்க்காருக்கு அள்ளித் தந்தவர்கள் முஸ்லிம்கள்.

தூய சுதந்திரத்திற்காகப் போரிடும் இந்திய வீரர்கள், இருதய ஊனம் உடையவர்கள் அல்ல அவர்களின் உறுதி உருக்குக்கும் மேற்பட்டது. இந்தியத்தின் ஈட்டிய முனை லண்டனின் ஹிருதயத்தைக் குத்திக் கிழிக்காமல் விடாது*** என்ற உள்ள உறுதியுடன் ரங்கூனை தலைமை யிடமாகக் கொண்டு இயங்கிய இந்திய தேசீய இராணுவம் பிரிட்டன், அமெரிக்க நாடுகளின் மீது யுத்தம் கொடுத் திருப்பதாக சிங்கப்பூர் ரேடியோ மூலம் 1943 அக்டோபர் 23ல் 12-55 மணிக்கு நேதாஜி அறிவித்தார்.

நேதாஜியின் இந்திய தேசீயப்படையில் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ, சைன, யூத, பௌத்தர் என்ற சாதி வேறுபாடில்லை கொள்கை வேறுபாடில்லை. பிரிவு வேறு பாடியில்லை. சோம்பலில்லை. சோர்வில்லை **** என்று போற்றப்பட்டது.

நேதாஜியின் இந்திய தேசீய இராணுவத்தில் மேஜர் ஜெனரல் ஷா நவாஸ்கான், கர்னல் ஹபீப் உர்-ரஹ்மான்,

---

* சிவலை. இளமதி ''சரித்திரத்தை மாற்றிய சதி வழக்குகள் (1932) பக்கம்-504.

வி. எஸ். நாராயணன்'' நேத்தாஜி சுபாஷ்சந்திரபோஸ் (1946) பக்கம்-155.

** கே. அருணாசலம்-ஜேய்ஹிந்த் (1946) பக்கம்-86.

*** சக்திமோஹன், 'ரத்தக்களரி (1946) நூலில், நேதாஜியின் பிரசங் கங்களும் அறிக்கைகளும், தேசீயப் புரட்சித்தலைவன் பகதூர்ஷா கல்லறையில் நேதாஜி ஆற்றிய உரை பக்கம் 79, 80.

**** தமிழன் 'யுத்த கால பர்மா' (1946) பக்கம் 149.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லெப்டினென்ட் கர்னல் அஜிஸ் அகம்மது லெப்டினென்ட் கர்னல் எம். இசட். கியானி, லெப்டினென்ட் கர்னல் எஸ்கன் காதிர், கரீம்கனி, ஓ.எம். கான், லெப்டினென்ட் கர்னல் ஷாநவாஸ், கர்னல் ரஷிக் அலி, கர்னல் எஸ்.எம். ஈசாக், லெப்டினென்ட் அஸ்ரபி மந்தல், அபிஹுசைன், லெப்டினென்ட் எஸ். எம். அலி, அப்துல் அஜிஸ், அக்கப் அலி முகம்மது அலிஷா, அல்டாப்ஹுசேன் அட்டா முகம்மது, அகம்மதுகான், ஏ. கே. மிர்ஷா, அயூப்கான், எஸ். அக்தர்அலி, முகம்மது அப்பாஸ், முகம்மது அன்வர், தாஜ் முகம்மது போன்ற எண்ணற்ற இஸ்லாமிய நாட்டுப் பற்றாளர்கள் நாட்டு விடுதலைக்காக பொங்கி எழுந்தனர்.*

1944 பிப்ரவரி 4ல் சுதந்திர இந்திய சைன்யத்தின் முதல் தாக்குதல் ஆரம்பமானது. அரைக்கான் முனையில் இந்திய வீரர்கள் பிரிட்டிஷ் துருப்புகளைத் தாக்கினார்கள். கேப்டன் ஷாநவாஸ்கான் தலைமையில் 3200 வீரர்களைக் கொண்ட சுபாஷ் படைப் பிரிவும், மற்றும் இரு பிரிவுகளும் இந்தியாவுக்குள் நுழைந்தது. அஸ்ஸாம் மாநிலத்தில் மொராய், கௌஹிமா கிராமங்கள் கைப்பற்றப்பட்டது. இம்பால் நகரை நோக்கி வீரர்கள் முன்னேறினார்கள். இந்திய தேசீய இராணுவத்தினருக்கு உணவும், மருந்தும் தண்ணீரும், சப்ளை செய்ய இயலவில்லை. அதோடு மௌண்ட் பேட்டன் இம்பாலில் அமெரிக்க பிரிட்டிஸ் வீரர்களை கொண்டு போய் குவித்தார். ஆதரவு தந்த ஐப்பானும் வீழ்ந்தது. அதோடு இந்திய தேசீய இராணுவமும் பின் வாங்கியது. நேதாஜி ஜப்பான் சென்றார். 1945 ஆகஸ்ட் 18ல் பார்மோகாதீவில் தைகோடு விமான நிலைய விபத்தில் மறைந்ததாக ஆகஸ்ட் 22ல் டோக்கியோ வானொலியும் அறிவித்தது.

ஷாநவாஸ்கான், ஷெகால், தில்லான், மோகன்சிங் போன்ற தளபதிகளையும், இந்திய தேசீய இராணுவ

* P.N. Chopra 'Role of Indian Muslims in the struggle for Freedom' page XI ii and XI iii.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீரர்களையும் கைது செய்து டெல்லி செங்கோட்டையில் விசாரணை நடைபெற்றது.

தூக்கில் தொங்கவிடப்பட்டவர்கள்

முகம்மது அப்துல்காதர் 10-9-1945ல் சென்னை ஜெயிலில் தூக்கிலிடப்பட்டார். சாகூல்ஹமீது 23 8-1945ல் டெல்லி செங்கோட்டையில் தூக்கிலிடப்பட்டார், எண்ணற்றோர் தூக்கிலிடப்பட்டார்கள். வழக்கின் முதல் எதிரியான 31 வருடம் 11 மாதம் நிரம்பிய கேப்டன் ஷாநவாஸ் கானுக்கும் மற்றைய தளபதிகளுக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. நாடெங்கும் நடைபெற்ற பெரும் கிளர்ச்சிகளால், 1946 ஜனவரி 3ல் அவர்கள் விடுதலையானார்கள்*

நேதாஜியின் இந்திய தேசீய இராணுவத்தில் எண்ணற்ற முஸ்லிம்கள் உயிர் தியாகம் புரிந்த வீர வரலாறு விவரிக்கின் பெருகுமாதலால் அதில் பங்கேற்ற தமிழக முஸ்லிம்களின் பங்கினை மட்டும் பார்ப்போம்.

மணிமொழி மௌலானா

29-1-1905ல் பள்ளப்பட்டியில் பிறந்தவர்; திருச்சியில் குடியேறியவர். மணிமொழி பத்திரிகை ஆசிரியர். படிப்பை பாதியிலேயே உதறியவர். 1941 ஆகஸ்ட் 8 முதல் 1945 ஆகஸ்ட் 15 வரை இந்தோ-சீனாவிலே இருந்து இந்திய சுதந்திரப் போரிலே பங்கேற்றவர். அவரே எம். ஜே. கலிலூர்ரகுமான் மணிமொழி மௌலானா என்று அழைக்கப்பட்ட ''எம். ஜே. கலீலூர் ரஹ்மான் பாகவி (ரஹ்) ஆவார்கள்.

இண்டிபெண்டன்ட் லீக்

இந்த விடுதலை இயக்கம் ஜனாப் ஏ. எஸ். நூருத்தீன் தலைமையில் சைகோனில் நடைபெற்று வந்தது. அதில்

* கா. திரவியம் 'டெல்லி செங்கோட்டை விசாரணை' (1946) பக்கம் 148-150

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிர்வாகக்குழு உறுப்பினராக மணிமொழி மௌலானா பணியாற்றினார். அவர்கள் நேதாஜியின் மீது மிகுந்த விருப்பமும் பாசமும் கொண்டவர்கள். ஒருநாள் ஜப்பானிய அதிகாரி ஒருவர் சைகோனில் மெஜஸ்டிக் ஹோட்டலில் உள்ள ஒரு தலைவரைக் காண மௌலானாவை அழைத்துச் சென்றார். மேஜர் ஹஸன் அந்த அறையிலிருந்து மௌலானாவை உள்ளே அழைத்துச் சென்றார். அங்கே போன போது தான் அந்த தலைவர் நேதாஜி என்று அறிந்தார். நேதாஜியை அன்று சந்தித்த எட்டு இந்தியர்களில் இவரும் ஒருவர்.

பின்னாளில் நேதாஜி மௌலானாவை ''மவ்லவி சாஹிப்'' என்றே அன்புடன் அழைப்பார். நேதாஜியின் நெருங்கிய நண்பராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் அவர் பணியாற்றினார். சைகோனில் நேதாஜி 30 நாட்கள் தங்கியபோது எல்லா பேச்சுவார்த்தைகளிலும் மணிமொழி மௌலானா கலந்து கொண்டார்.

மூன்றரை வருடங்கள் சைகோன் ரேடியோவில் விடுதலை ஆர்வத்தை தூண்டும் சொற்பொழிவுகளை செய்தார்.

சிங்கப்பூரிலிருந்து ஜவுளி வர்த்தகர் ஏ. இ. ஏ. அஜிஸ் அவர்களும் வந்து விடுதலைப் போரில் கலந்து கொண்டார்கள்.

இந்திய தேசிய இராணுவம் வீழ்ந்ததும், மிஸ்டர் பின்னி என்ற ஆங்கிலேய இராணுவ அதிகாரியிடம் அழைத்துச் செல்லப்பட்ட மணிமொழி மௌலானாவிடம் வாக்குமூலமும் பெறப்பட்டது.

ஆஜாத் ஹிந்த் சர்க்காரில் மந்திரியாகப் பணியாற்றிய மு. கரீம் கனியுடன் மலாயா நண்பன் என்ற தினசரியில் துணை ஆசிரியராகப் பணியாற்றி பல ஊர்களில் சொற்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொழிவாற்றி, 1946 டிசம்பர் 5ல் ரஜிலா என்ற கப்பலில் சென்னை வந்தார்கள். வீடு சென்றார்கள். தாயார் இறந்து இரண்டு வருடங்கள் ஆகிய செய்தியை அப்போது அறிந்தார்கள்.* நேதாஜியின் படை வரிசையில் நாட்டு விடுதலைக்கு வீட்டையும் மறந்து தியாகம் செய்தவர் மணிமொழி மௌலானா.

உபைதுல்லாஹ் டான்ஜீ டத்தோ

தஞ்சை மாவட்டம் இராஜகிரியில் 18—6—1918ல் வர்த்தகக் குடும்பத்தில் பிறந்தவர்.

''எனக்கு அச்சமில்லை. எனக்கு ஓர் இதயம் உண்டு. அதன் வலிமையிலே நான் நம்பிக்கை வைத்துள்ளேன்'' என்ற ஷேக்ஸ்பியரின் கருத்தில் திளைத்த இவர் நேதாஜி யின் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்து வானொலி அமைப்பாளராக பணிபுரிந்தார். தேச விரோத வழக்குத் தொடரப்பட்டு கைது செய்யப்பட்ட இவரை பிரபல வழக் கறிஞர் கே. எப். நரிமன் வாதாடி இரண்டு மாதங்களில் விடுதலையும் பெற்றுத் தந்தார்.

அறிஞர் கரீம்கனி

1907 இளையான்குடியை அடுத்துள்ள சோத்துக்குடி யில் பிறந்தார். ''ரங்கூன் டெய்லி நியூஸ்'' பத்திரிகையில் நிருபராகப் பணியாற்றிய இவர் நேதாஜியின் தற்காலிக சுதந்திர அரசில் அமைச்சராகப் பணியாற்றினார். பிரிட்டி ஷாரால் நாடு கடத்தப்பட்டு தமது இறுதிக் காலத்தை கராச்சியில் கழித்தார்.

---

* மவ்லானா எம். ஜே. கலீலுர் ரஹ்மான் பாகவி (ரஹ்) ''சுதந்திரப் போரில் என் பங்கு'' (இது மணிவிளக்கு இதழிலும் பிரசுரமாகி யுள்ளது.) அல்பாகியாத் நூற்றாண்டு விழா மலர் 1974 பக். 40-49

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம் என்ற அழகாபுரி ஊரைச் சேர்ந்தவர்கள் பலர் நேதாஜியின் இராணுவத்தில் பணியாற்றியுள்ளனர்.*

இப்படி தமிழ்நாடெங்குமிருந்து இந்த இராணுவத்தில் ஆயுதம் ஏந்தி நாட்டு விடுதலைக்காகப் போராடிய முஸ்லிம் வீரர்கள் பட்டியல் இதோ.

இளையாங்குடி அரசனார் அம்பலத்தின் மகனார் இன்ஸ்டிரக்டர் அப்துல்கபூர், மேலூர் ஹசன் மகனார் அப்துல்கமீது, சோழசக்கரநல்லூர் (மாயூரம்) சுலைமானின் புதல்வர் அப்துல்ஜப்பார், சக்கநெல்லி (சிவகங்கை) அல்லாபிச்சையின் புதல்வர் சிப்பாய் அப்துல் காதர், கல்லூரணி (சிவகங்கை) மஸ்தான் இராவுத்தர் மகன் அப்துல்காதர், பட்டுக்கோட்டை முகைதீன் பாவா வின் மகன் அப்துல் காதர் (பிரச்சாரப் பிரிவு), திருப் பத்தூர் தாலுகா காந்திநகரில் வாழ்ந்த கைம்பெண் முகம்மதா பீவியின் கணவர் சிப்பாய் அப்துல்லா என்ற அப்துல் ரசாக், தர்மபுரி காவேரிப்பட்டணம் அரங்க ஷாவின் புதல்வர் அப்துல் மஜீத், குரும்பள்ளி (தர்மபுரி) யில் 1895-ல் பிறந்து சிப்பாயாகப் பணியாற்றிய அப்துல் மஜீத், கன்னத்தான்பட்டி (இராமநாதபுரம்) நூர் இராவுத் தரின் புதல்வர் அப்துல்முத்தலிப், திருச்சி ஜில்லா லெப்பை குடிக்காடு கிழக்குத் தெருவில் 1894-ல் பிறந்த சிப்பாய் இ. ஏ. எஸ். அப்துல் சலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பிறந்து நேதாஜியின் கொரில்லாப் படைப்பிரிவு ஏ. எச். எப். 2355/இன் 3/8ல் செகண்ட் லெப்டினென்டாகப் பணியாற்றிய நயினா முகம்மதுவின் புதல்வர் எஸ். எம். என். அப்துல் வகாப், கொரில்லாப் படைப்பிரிவு யூனிட் 50১557-ல் சிப்பாயாகப் பணியாற்றிய திருவிடச்சேரி (நன்னிலம்) எம். யூசுப்பின்

* எம். ஆர். எம். அப்துல் ரகீம் "இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்" தொகுதி. 1 பக்கம் 487

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதல்வர்அப்துல் வகாப், மானாமதுரை சேக்முகம்மதுவின் புதல்வர் சிப்பாய் அப்துல்வாசித், ஐந்தாவது கொரில்லா ரெஜிமெண்டில் யூனிட் எண். 20789-ல் பணியாற்றிய திருப்பத்தூர் முகய்யதீன் பிச்சையின் புதல்வர் அபுபக்கர். ஒன்பதாவது கொரில்லா ரெஜிமெண்டில் யூனிட் 71321-ல் பணியாற்றிய இராமநாதபுரம் அத்தியூத்து அப்துலின் புதல்வர் அபுபக்கர். பண்ருட்டி பக்கிரிப்பாளையம் முகையதீன் சாகிப்பின் புதல்வர் அகம்மதுகான் சாகிப், சென்னை பெரம்பூர் முகைதீன் இராவுத்தரின் புதல்வர் எம். கே. எம். அமீர்ஹம்சா.

இராமநாதபுரம் திருப்பத்தூரில் அப்துல்காதரின் மகனாகப் பிறந்து ஆஸாத் ஹிந்த் படைப் பிரிவில் பணியாற்றிய தாஜீத்தீன். சென்னை செங்குன்றம் முகம்மது யூசுப்பின் புதல்வர் ஹவில்தார் இ. கே. கனி. முதல் கொரில்லாப் படைப் பிரிவில் 55025 எண் யூனிட்டில் சிப்பாய் ஆக பணியாற்றிய சென்னை பீர்முகம்மதுவின் புதல்வர் ஹபீத். லாலாகுண்டா சென்னை வண்ணார் பேட்டை காதர் நவாஸ்கானின் புதல்வராகப் பிறந்த ஹவில்தார் ஹயாத்கான். திருச்சி பெரம்பலூர் கல்லலூரில் 1896-ல் பிறந்து சிப்பாயாகப் பணியாற்றிய எம். கே. ஹயாத்கான். 9-வது கொரில்லாப்படை 90760 எண் யூனிட்டில் பணியாற்றிய இராமநாதபுரம், புதுவலசை அப்துல்ஹமீதுவின் புதல்வர் இப்ராகீம். பரமக்குடி பார்த்திபனூர் சிக்கந்தர் மஸ்தானின் புதல்வர் சிப்பாய் இப்ராகீம். பாணான்குடி (ராமநாதபுரம்) செய்யது இப்ராகீமின் புதல்வர் சிப்பாய் இப்ராகீம். இராமநாதபுரம் அத்தியூத்து சீனி மீரான் கனியின் புதல்வர் சிப்பாய் இப்ராம்ஷா.

16—4—1920 இல் சென்னையில் பிறந்த சிப்பாய் ஜாபர்நஸீம், சிங்கமங்கலம் (திருவாடனை) ஆர். என். இப்ராகீமின் புதல்வர் சிப்பாய் ஆர். என். இ. ஜெயினுல் லாப்தீன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரமக்குடி பார்த்திபனூரைச் சேர்ந்த மொய்தீன் பிச்சையின் புதல்வர் கட்சி மைதீன், இராமநாதபுரம் திருப்பத்தூர் அப்துல் இராவுத்தரின் புதல்வர் சிப்பாய் காதர்பாட்சா.

இராமநாதபுரம் புதுவலசை அப்துல் ஜப்பாரின் புதல்வர் சிப்பாய் முஹம்மது டால்கன்.

தஞ்சாவூர் துறைக்காடு கே. சேக்தாவூது புதல்வர் பிரச்சாரப் பிரிவில் பணியாற்றிய முஹம்மது தாவூது.

அறந்தாங்கி ஷேக்காதிர் இராவுத்தர் புதல்வர் சிப்பாய் முகம்மதுஷெரீப்.

திருச்சி வரகனேரி ஷேக்தாவூதுவின் புதல்வர், 219 கொரில்லாப்பிரிவு 61675 எண் யூனிட்டில் சிப்பாயாக பணியாற்றிய முஹம்மது சுல்தான். சென்னை வடபழனி சாலிக்கிராமத்தைச் சேர்ந்த அபுபக்கரின் புதல்வர் முதல் இன்பேன்ட்ரி படைப்பிரிவின் நாயக் முகம்மது யூசுப்.

அன்றைய நெல்லை மாவட்டம், இன்றைய சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடியைச் சேர்ந்த சிப்பாய் சி. கே. முகம்மது.

சிவகங்கை கல்லூரணியைச் சேர்ந்த மத்ரஸாவின் புதல்வர் சிப்பாய் முஹம்மது, சிவகங்கை முகம்மது மீரா வின் புதல்வர் இந்திய தேசிய இராணுவ வீரர் முகம்மது இப்ராகீம்.

சென்னை அப்துல் அஜியின் புதல்வர் 7வது கொரில்லாப்படை 56297 எண் பிரிவில் பணியாற்றிய சிப்பாய் கிளார்க் முகம்மது உமர். மதுரை கண்ணு இராவுத்தரின் புதல்வர் சிப்பாய் முகைதீன் பீர்.

பட்டுக்கோட்டை அம்மன் சத்திரம் செந்தாழை முகம்மது மஸ்தானின் புதல்வர் சிப்பாய் முகம்மது மீராசா.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமநாதபுரம் திருப்பத்தூர் பீர்முகம்மது இராவுத்தரின் புதல்வர் 3வது கொரில்லாப் பிரிவில் 1226 எண் ரெஜிமெண்டில் பணியாற்றிய சிப்பாய் பீர்முகம்மது.

கும்பகோணம் முகம்மது ஜீயின் புதல்வர் சிப்பாய் ரகுமத்துல்லா. குடியாத்தம் கே.வி. குப்பம் ரஹ்மத்துல்லா ஷெரீப்பின் புதல்வர் முதல் பட்டாள எஞ்சினியரிங் கம்பெனி ஜெர்மன் அணியில் சி. ரெஜிமெண்ட் எண். 2460ல் சிப்பாயாகப் பணியாற்றிய ரெஜிமுல்லா.

கிருஷ்ணகிரியில் 188ல் பிறந்து சிப்பாயாகப் பணியாற்றிய சாபுசாகிப், இராமநாதபுரம் குப்பாய் இராவுத்தரின் புதல்வர் சிப்பாய் செய்யது கனி, வடாற்காடு பறங்கிப்பேட்டை பாட்சாவின் புதல்வர் 2வது கொரில்லாப் படை 24201 எண் ரெஜிமெண்டில் சிப்பாயாகப் பணியாற்றிய ஷாபுதீன், இராமநாதபுரம் அல்லாபிச்சையின் புதல்வர் சிப்பாய் ஷேக்தாவூது, மன்னார்குடி நயினாமுகம்மதுவின் புதல்வர் சிப்பாய் சிக்கந்தர். கம்பத்தில் 1921ல் பிறந்து இளம் வயதில் இந்திய தேசிய இராணுவத்தில் நாயக் ஆகப் பணிபுரிந்த சிக்கந்தர்.

முதுகுளத்தூர் நயினாமுகம்மதுவின் புதல்வர் சிப்பாய் சுலைமான். கும்பகோணம் இப்ராகீம் இராவுத்தரின் புதல்வர் சிப்பாய் சுல்தான்.* இப்படி அரசு ஆவணங்களில் காணக் கிடைக்கும் கட்டித் தங்கங்களைத் தவிர எண்ணற்றோர் அப்போது நடைபெற்ற போரில் பலியாகி மறைந்திருக்கலாம். பலரது தியாக வாழ்வு சரித்திரத்தில் இடம் பெறாமலே போய் இருக்கலாம்.

''தந்தை இரண்டு லட்சம் நாட்டு விடுதலைக்கு தருகிறாரா இதோ நானும் வீரத்தலைவர் நேதாஜிக்கு அவர் கழுத்திலிருந்த பூமாலையை மூன்று இலட்சம் ரூபாய்க்கு

* தமிழக அரசு 1978ல் வெளியிட்டுள்ள WHO'S WHO OF FREEDOM FIGHTERS Vol. III page. 159 to 447

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டு விடுதலைக்காக வாங்கிக் கொள்கிறேன் என்று ஏலம் எடுத்தவர் இந்திய தேசிய இராணுவப் படையில் பணியாற்றிய எம். கே. எம். அமீர்ஹம்ஸா. எட்டு லட்சம் ரூபாய் நிதி திரட்டிக் கொடுத்தும், விலை உயர்ந்த மோதிரத்தையும் நேதாஜியிடம் அளித்த அவர் 1945ல் கைது செய்யப்பட்டு ரங்கூன் மத்திய சிறையில் வாடி விடுதலையானவர்.* பர்மாவில் இருந்த அவரது நகைக் கடையையும், ஜவுளிக்கடையையும் ஆங்கிலேய அரசு தேசிய மயமாக்கியது. பெருஞ் செல்வந்தரான அவர் சென்னையில் பென்ஷன் பெற்று தனது தியாக வாழ்வை இன்று கழித்துக்கொண்டிருக்கிறார்.**

காந்தியின் சத்தியாக்கிரக வழியில் போராடிய கூட்டத்தில் கணக்கற்ற இஸ்லாமியர் பங்கேற்றிருப்பதைப் போல நேதாஜியின் துப்பாக்கி ஏந்திய வீரப் போர்க் களத்திலும் தாய்நாட்டு விடுதலைக்கு தன்னுயிரை ஈந்த தமிழக முஸ்லிம்களின் பங்கு சரித்திரத்தில் நிலைத்து நிற்கக்கூடியதாகும்.

* எம். கே. எம். அமீர்ஹம்சா பேட்டி 15-11-92 துக்ளக் பக்கம். 31

** 21-5-1993ல் சென்னையில் நூலாசிரியர், பெருமைக்குரிய அமீர் ஹம்சா அவர்களை நேரில் சந்தித்து தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அண்ணல் காந்தியின் அறப்போரிலே

மதுரை பத்தொன்பது பேர்

வடஇந்தியாவில் தான் சட்டமறுப்பு போர் நடக்கின்றது; தென்னகத்தில் இல்லையென்று மத்திய சட்டசபையில் கேள்வி எழுந்தது. ''ஏன் இல்லை'' மதுரையில் 19 தொண்டர்கள் மறியலில் கைதாகியிருக்கிறார்கள் என்று பதில் சொன்னார்கள்.

பத்தொன்பது பேரில் பத்துபேர் முஸ்லிம்கள் கலந்து கொண்ட அந்த மறியல் பற்றிய விபரம் இதோ :

சுல்தான் பகுதாதி

1922 ஜனவரி 25ல் கோரிப்பாளையம் கள்ளுக்கடை மறியலில் 19 பேர் கைதானார்கள். மதுரை யூசுப்சாகிப், ரா. முகையதீன்பீர், காதர்பிச்சை, மதுரை அப்துல்காதர், மதுரை க.வரிசை முகையதீன், மு.இப்ராகீம், இஸ்மாயில், அபதுல்ரகுமான், திருமங்கலம் முஹம்மது இப்ராகீம், இராமநாதபுரம் சுல்தான் பகுதாதி ஆகிய பத்து பேர் முஸ்லிம்கள்.

இராமநாதபுரம் திருப்பத்தூரைச் சேர்ந்த சுல்தான் 1918ல் யுத்தக்கடைசியில் பாக்தாத் போய் வந்ததால் தனது பெயரை பகுதாதி என்று வைத்துக் கொண்டவர், இவரே இந்தத் தொண்டர்களின் தலைமைப் பொறுப்பை அன்று ஏற்றவர். மதுரை கொல்லன்பட்டறைத் தெருவில் முஸ்லிம் வாலிபர்கள் பலர் கள்ளுக்கடை மறியலில் சிறை செல்ல இவரது அரும் உழைப்பே காரணம். திருநெல்வேலி பேட்டையைச் சேர்ந்த முகம்மது இஸ்மாயில், மதுரையில் ஷாப்பில் வேலை பார்த்தவர். சைக்கிள் மோட்டார் தொழிலில் ஈடுபட்டிருந்தவர் முகையதீன் பீர். கிலாபத் இயக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கத்தில் பங்கேற்று தேசியத்தில் உற்சாகமாகப் பணியாற்றிய யூசுப் சாகிப், மதுரையில் கொல்லம்பட்டறையை வைத்திருந்தவர். சதா நூல் நூற்றுக்கொண்டே இருக்கும் இப்ராகீம் சாகிப்; தேசீய கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் எல்லாம் இவரை காணலாம், என்ற அளவிற்கு ஆர்வமுள்ளவர். பூட்டுச்சாவி வேலைகளில் தேர்ச்சி பெற்ற மதுரை வரிசை முகையதீன். ஒருவருடனும், அதிகமாகப் பேசாமல், உண்மையான உழைப்பையும், தனது வேலையில் கண்ணுங்கருத்துமாய் இருந்தவர் மதுரை அப்துல் ரகுமான். எவர் காரியத்திலும் அனாவசியமாகத் தலையிடாத மதுரை இப்ராகீம் உள்ளிட்ட 19 தொண்டர்கள் 26—1—1922 காலையில் மதுரை கலெக்டர் ஆபீசுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஐ.பி.சி. 143, 145, 341 பிரிவுகளில் படி தண்டிக்கப்பட்டு ஒரு வருட கடுங்காவலும், ரூ. 100 அபராதமும், அதனைக்கட்டத் தவறினால் மேலும் 3 மாதங்கள் கடுங்காவல் தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த 19 தொண்டர்கள் தான் தமிழ்நாட்டில் சிறை சென்ற முதற் தொண்டர் படைக்கூட்டம் அதில் பத்து பேர் தமிழக முஸ்லிம்கள்* இவர்கள் திருச்சி மத்திய சிறைச்சாலையிலும், பின்னர் அங்கிருந்து கடலூர் சிறையிலும் 15 மாதங்கள் நாட்டு விடுதலைக்காக வாடி, விடுதலையானார்கள்.

நாகபுரி கொடிப்போர்

1923ல் ஜெனரல் மன்சர்ஷா சுவாரி கொடிப் போராட்டத்தைத் துவக்கினார். நாகபுரியில் சிவில் லைன் பக்கம் தேசீயக் கொடியைக் கொண்டு போகக்கூடாது என்று ஆங்கில அதிகாரிகள் ஆட்சேபித்தனர். அதனை எதிர்த்து

* ரெ. சிதம்பரபாரதி, ரா. சீனிவாசவரதன் "மதுரை ஜில்லா தியாகிகள் மலர்" (1948) பக்கம் 16,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போராட்டம் நடைபெற்றது. நாடெங்கும் இருந்து தொண்டர்கள் தேசீயக் கொடியை ஏந்தியவாறு நாகபுரிக்குச் சென்றனர். சந்தனம், ஊதுவத்தி வியாபாரியான மதுரை கே. ஆதம் சாகிப் நிலக்கோட்டை மறியலில் 1923-ல் சிறை சென்றவர். அவர் நாகபுரி கொடிப்போரில் ஈடுபட்டு வார்தா சிறையில் 3 மாதங்கள் நாட்டு விடுதலைக்காக வாடினார்.

திண்டுக்கல் பி. முஹையதீன்கான், சென்னை அ. அப்துல்லத்தீப், சென்னை எம். டி. அக்பர் அலி ஆகியோர் நாகபுரி கொடிப்போரில் ஈடுபட்டு ஓராண்டு நாகபுரி சிறையில் நாட்டு விடுதலைக்காக வாடினார்கள். சென்னை மு. அப்துல் லத்தீப், சென்னை அ. அப்துல் ரகீம் இருவருக்கும் (ஏழு மாதங்களும்), சென்னை ஆ. சேக்பாவா மதுரை கே. பாபு சாகிபும், (ஆறு மாதங்களும்), இப்படி எண்ணற்ற தமிழக முஸ்லிம்கள் அந்த போரில் கலந்து கொண்டு நாகபுரியில் சிறை சென்றவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள். இந்திய விடுதலைப் போரில் இவை போன்ற நிகழ்ச்சிகளை விவரித்துக்கொண்டே சென்றால், பெருகுமென்பதால், முக்கிய சம்பவங்களையும், முக்கிய மானவர்களைப் பற்றியும் சுருக்கமாக கோர்வைப்படுத்தப் படுகிறது.

''நாட்டின் விடுதலைக்காகச் சிறை சென்றவர்களிலும், உயிர்ப்பலியானவர்களிலும் முஸ்லிம்கள் தாம் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். அவர்களுடைய மக்கள் தொகை விகிதாச்சாரத்தைவிட விடுதலைப் போராட்டத்தில் உயிர் துறந்த முஸ்லிம்களின் விகிதாச்சாரம் அதிகமாகவே இருந்தது''.* என்பதை நினைவுறுத்தி தொடர்கிறேன்.

தாவூத்ஷா

1885 மார்ச் 29-ல் பிறந்தவர். கும்பகோணம் நேட்டிவ் ஹைஸ்கூலில் படித்தபோது இவரது பள்ளித்தோழர்

* 1975 டிசம்பர் 29 இல்லஸ்ட்ரேட் வீக்லி ஆப் இந்தியா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கணிதமேதை ராமானுஜம். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் எழுத்தராகி, படிப்படியாக சப்மாஜிஸ்டிரேட் ஆனார். காந்தியடிகள் அறிவித்து 1920-ல் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்க விடுதலைப் போரில் பங்கேற்க தமது சப்மாஜிஸ்டிரேட் பதவியை தூக்கி எறிந்தவர் கும்பகோணத்தை அடுத்த நாச்சியார் கோவில் தாவூத்ஷா. தனது சொந்த ஊரில் ''முஸ்லிம் சங்கம்'' நிறுவினார். தத்துவ இஸ்லாம் என்ற மாத இதழை வெளியிட்டார். இதுவே 1922-ல் ''தாருல் இஸ்லாம்'' என்ற பெயருடன் வெளிவரலாயிற்று.* டாக்டர் இராதா கிருஷ்ணனிடம் தத்துவம் பயின்ற இவர் நாற்பதாண்டுகள் தாருல் இஸ்லாம் பத்திரிகையை நடத்தினார்.** இந்த இதழ் இஸ்லாமியத் தமிழ் இதழ்கள் வரலாற்றில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது.***

நாட்டு விடுதலைக்குப் பாடுபட 19—10—1931-ல் என். தண்டபாணி பிள்ளையை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த தேசபக்தன் இதழின் திறப்பு விழாவில் பங்கேற்று அச்சகத்தை திறந்துவைத்தவர் இவரே. இவருடைய படத்துடன், அச்செய்தி அந்த இதழில் வெளியாகியுள்ளது.**** காங்கிரஸ் கட்சியிலிருந்து கொண்டு சென்னை மாநகராட்சியில் ஆல்டர்மேனாக பணியாற்றிய இவர், பின்னாளில் காங்கிரசிலிருந்து விலகினார்.

---

* இரா. கோதண்டபாணி—''இதழியல்'' நூலில் ''தேசீய இயக்க இதழ்கள்'' என்ற தலைப்பில் பக்கம் 83.

** பேராசிரியர் - மு. அப்துல்கரீம் ''இஸ்லாமும் தமிழும்'' பக்கம் 256.

*** தை. கா. காதர்கனி — இஸ்லாமியத் தமிழ் இதழ்கள் கட்டுரையில் டாக்டர் எஸ். அப்துல்ரகுமான், டாக்டர் சே, மு. மு. முஹமதலி பதிப்பித்த கருத்தரங்கக்கோவை ஐந்தாம் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு மலரில் பக்கம் 101

**** 19—10—1931 தேசபக்தன் பக்கம் 7, 11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

30—12—1938-ல் சுயமரியாதை மாநாட்டில் கலந்து கொண்டார்.* பின்னர் முஸ்லிம் லீகில் பணியாற்றி னார். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய இவரை ''கம்பராமாயண சாயுபு'' என்றும் அழைப்பர். 1963ல் தமிழ் எழுத்தாளர் சங்க கேடயம் பெற்ற இவர் 1969 பிப்ரவரி 24 திங்கள்கிழமை சென்னையில் காலமானார். கிலாபத் இயக்கத்திலும், காங்கிரசிலும் இருந்து இந்த நாட்டு விடுதலைக்கு அரும்பணியாற்றிய இவர் ''தமிழ் முஸ்லிம் மறுமலர்ச்சித் தந்தை''என்று அழைக்கப்பட்டவர்.

பீ அம்மாவும் தமிழக முஸ்லிம்களும்

1853ல் பிறந்த ஆபாதிபானு சாகிப்பா என்ற பீ அம்மா தான் புகழ்மிக்க அலிசகோதரர்களின் தாயார் ஆவார். தனது பிள்ளைகள் இனி ஆங்கிலேய அரசை எதிர்த்து செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்று உறுதிப் பிரமா ணம் எழுதித் தந்தால் அவர்களை விடுதலை செய்வோம் என்று பிரிட்டிஷார் கூறிய போது ''தளர்வுற்ற என் கைகளாலேயே அவர்களின் கழுத்தை நெறித்துக் கொல் வேனே தவிர, உங்களது பேராசையை நிறைவேற்றச் சம் மதியேன்'' என்று வீரமுழக்கமிட்டவர் பீ அம்மா.

நெல்லை மாவட்டம், தென்காசி மற்றும், பேட்டை பகுதிக்கு வந்தார்கள். அவருடன் திருச்சி முர்தஸாஹலரத் அவர்களும் வந்திருந்தார். தென்காசி செய்யது குருக்கள் பள்ளிவாசல் மைதானத்தில் நடைபெற்ற கிலாபத் பொதுக்கூட்டத்தில் பீ அம்மாவின் உருது சொற் பொழிவை திருச்சி முர்தஸாசாகிப் தமிழில் மொழிபெயர்த் தார். மு. ந. அப்துர்ரகிமான் சாகிபும், மு. ந முகம்மது சாகிபும் தென்காசியில் அந்தப் போரின் போது தீவிரமாகச் செயல்பட்டனர்.

---

* நீதிக்கட்சி 75வது ஆண்டு பவளவிழா (1916—1991) மலர் பக்கம் 51, 52.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகம்மது அலியின் துணைவியார் பேகம் சாகிபாவும், இவரும் புர்கா அணிந்து கிலாபத் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு வலம் வந்தனர். அவர்களது தமிழக சுற்றுப் பயணத்தில் டோலிகட்டி ஆசனம் அமைத்து பீ அம்மாளை பல இடங்களுக்கும் தூக்கிச் சென்றார்கள். தமிழக மக்கள் மத்தியில் வலம் வந்த பீ அம்மாள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக மக்களை கிளர்ந்தெழுமாறு முழங்கினார்.

கதர்

அன்னை பீயம்மா தனது கையால் நெய்த ஆடையை மௌலானா முகம்மது அலி காந்திஜிக்குப் போர்த்தி "கௌரவமாக (கதராக) ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றதிலிருந்து தான் கதர் என்ற பெயரே ஏற்பட்டது, அதற்கு காரணமான அந்த மாதர்குலமாணிக்கம் இளையாங்குடிக்கு வந்த போது, சாரட் வண்டியில் அவர்களை இருக்கச்செய்து குதிரைகளை அவிழ்த்து விட்டுவிட்டு தாங்களே வடம் போட்டு அந்த சாரட் வண்டியை இளைஞர்கள் இழுத்து வந்தார்கள்.

இளையான்குடி முஸ்லிம் மக்கள் அவர் வீர உரை கேட்டு நாட்டு விடுதலைக்காக வீட்டுப் பணத்தையும், பெட்டி நகைகளையும் வாரிக்குவித்தார்கள்* அவர்கள் நாட்டு விடுதலைக்கு முப்பது இலட்சம் ரூபாயை அந்தக் காலக்கட்டத்தில் திரட்டித் தந்தார்கள்.

1924இல் தனது 72வது வயதில் இயற்கை எய்தினார். அவர்களின் தமிழக சுற்றுப்பயணத்தில் எண்ணற்ற தமிழக முஸ்லிம்கள் தங்களது பங்கினைச் செலுத்தி வள்ளண்மைத் தன்மையுடன் வாரிய வழங்கிய வீர வரலாறு நிலைத்து நிற்கக்கூடியது.

---

* இ.கா. காதர்கனி "மௌலானா முகம்மது அலி ஜௌஹர் வாழ்க்கைச் சுருக்கம்" பக்கம்-13.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மு. ந. அப்துர்ரஹ்மான் சாகிப்

1889 ஜுன் 28ல் நத்தர்பாபா இராவுத்தர், ஆமீனா பீவி புதல்வராக தென்காசியில் பிறந்தார். முதல் தென்காசி பஞ்சாயத்துத் தலைவர் (இப்போது நகரசபை ஆகும்) அவரும் அவரது சகோதரர் மு ந. முகம்மது சாகிபும்* அந்நியத் துணி பகிஷ்காரத்தில் முன்னணியில் நின்றனர். மக்களை கதராடைகளை உடுத்தும் படி வற்புறுத்திய இவர்கள் கதராடைகளை அணிந்தனர்; இலவசமாக கதராடைகளை வழங்கினர். அந்நியப் பொருட்களான பட்டு, வெல்வெட்டு போன்றவைகளை பல இடங்களில் தீயிட்டு கொளுத்தினார்கள். இவரது தந்தையார் 1922ல் காலமான போது அவரது அடக்கத்தில் கலந்து கொள்ள வந்த முஸ்லிம் பெரியவர்கள் அணிந்திருந்த வெல்வட் தொப்பி, அந்நியத் துணிகளை வாங்கி எரித்தனர். இவர்களது வீட்டிலேயே கதர் துணி தயாரிக்க தறிகளை அமைத்தும், ஏனையோர் தறி அமைக்க உதவியும் செய்தார்கள். பல வீடுகளுக்கு கைராட்டினங்களைச் செய்து கொடுத்தார்கள் வீட்டில் உள்ளவர்கள் கதர் நெய்திட கற்றுக்கொள்ளவும் சொன்னார்கள்**

கம்பம் பீர்முகம்மது புலவர்

கலெக்டரும் கடவுளல்ல; அடிமைப்
போலீஸ் கான்ஸ்டபிள் எமனுமல்ல,
அல்லா ரசூலுல்லா இத்
தொல்லைகள் அகலுவதும் எந்நாளோ?
இப்பொல்லாத பேய்களெல்லாம்
இங்கிலாந்து போவதும் எந்நாளோ?

என்று இலட்சிய கீதம் இசைத்த கம்பம் பீர்முகம்மது புலவர்*** ஆரம்பத்தில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டராக

* திரு நபி சரித்திரத்தை தமிழில் எழுதிய ஆசிரியர் இவர்.

** ஏ. கே. ரிபாயி "சமுதாய நீரோட்டத்தில் சங்கமம்" தென்காசி மு ந. அ. அவர்களின் வாழ்க்கை வரலாறு பக்கம் 35-37.

*** கல்லிடைக்குறிச்சியில் பன்னூல் ஆசிரியர் டீ யெம் பி. அவர்களை நூலாசிரியர் 13—2—92ல் சந்தித்த போது அன்னார் தெரிவித்த தகவல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை ஆண்டிப்பட்டியில் பணியாற்றினார். சிறந்த கால்பந்தாட்ட வீரர். நாட்டுப் பற்று மிக்க இவர் கால் பந்தை உதைப்பதைப் போல தனது உத்தியோகத்தையும் உதறித் தள்ளினார்.

''பீர்முகம்மது அண்ணல் செய்யும்
பிரசங்கம் செவிக்கு அமிர்தம்
ஊர்க்கு உழைக்க இவ்வுலகில்
உடலெடுத்த பூங்குமுதம்
பெயர் வாய்ந்த சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகமும்
பெருமையாய் வகித்த தீரன்.
உயர்வான தமிழ்தனில் பிரக்யாதியும் பெற்ற
உத்தமமுள்ள மாரன்.
உண்மை உடைய கணியன்
உரித்து மிகுந்த புணியன்
ஒத்துழையாமையெனும் தத்துவமதை
இத்தரையில் நடத்திய தரன்
காசினியோர்புகழும் கம்பம் நகர்தனிலே
களிப்புடன் வசிக்கும் யோகன்
மாசுமறுவில்லாத தேச பக்தர் மீதிற் பா
மஞ்சரி வரைந்த யூகன்''* என்று போற்றப்பட்டவர்.

''அணிவீர் கதருடை வாங்கி—எல்லோருமே
அணிவீர் இதமுடனே
துணிவோடு சீமைத்துணிகளை விலக்கிச்
சுத்த சுதேசியம் தோன்றிடத்துலக்கி
பீடையைத் தொலைக்கும் ஆடையை விலக்கு
பெற்றுக்கொள்வீர் உங்கள் பெருமையும் நிலைக்கும்''

என்று கதர் உடைபற்றி பீர்முகம்மது புலவரின் பாடலில் அவரின் அளவிட இயலா விடுதலை வேட்கை விஞ்சி நிற்பதைக் காண முடிகிறது.

* உத்தமபாளையம் ப. காமாட்சி பிள்ளை 1926ல் எழுதி மதுரை மு கிருஷ்ணபிள்ளை வெளியிட்ட ''இந்து தேசாபிமானிகள் இனிய ரமணியகீதம்'' நூலில் 59வது பாடல் 54வது பக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1923ல் அன்னியத் துணி பகிஷ்கரிப்பு போரில் கம்பத்தில் ஜவுளி வியாபாரிகளையெல்லாம் கூட்டி அன்னியத் துணிகளை தாங்கள் எவரும் விற்பதில்லை என்று சத்தியம் வாங்கும் வரையில் சத்தியாக்கிரகம் நடத்திய சாதனையாளர் பீர்முஹம்மது புலவர்.

1928ல் கம்பத்தில் பேரூராட்சி நிலையத்திற்கு அருகில் வாசகசாலை ஒன்றை ஏற்படுத்தினார். அங்கு வரும் மக்களிடம் தனது எழுச்சிமிக்க பாடல்களை பாடிக் காட்டியும், காந்தியின் போதனைகளுக்கு விளக்கம் கொடுத்தும் வருவார். உடற்பயிற்சி, சிலம்பம், நாடகப் பயிற்சி ஆகியவைகளை வாலிபர்களுக்கு கற்றுக் கொடுத்தும்வந்தார். ''சாந்தமும், பொறுமையும் தனி வடிதாகி மாந்தரை ஆட்கொள்ள வந்த வீவேகி'' என்று காந்தியடிகளைக் குறித்து இவர் எழுதிய பாடல்கள் என்றும் நினைவில் நிற்கும். இவர் இயற்றிய தேசிய கீதங்கள் பிரசித்தமானவை. இவரது பாடல்களைப் பாடாத தேச ஊழியர்கள் கிடையாது. தமிழில் சிறந்த புலமை பெற்ற இவர் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் சிறை சென்றுள்ளார். காங்கிரஸ் நிர்வாகத்தில் நாட்டு விடுதலைக்கு திறம்பட பதவி வகித்துள்ளார்.* பாமஞ்சரி காந்திமாலிகை, முத்தண்ணா ஆகிய நூல்களை எழுதியும், திரைப்படத் துறையில் 1934ல் கிருஷ்ணா-அர்ஜுனா படத்தை டைரக்ட் செய்தும், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற இவர் 1945 ஜூலை 13 வெள்ளிக்கிழமை ஜும்ஆ பாங்கொலி கேட்டவாறே மறைந்தார். அவரது துணைவியாருக்கு அரசு சுதந்திர தியாகி பென்சனை பின்னாளில் வழங்கியது.

கா. சி. முகம்மது இஸ்மாயில்

1919ல் கம்பம் பீர்முகம்மதுப் பாவலரின் முழக்கங்களில் ஈர்க்கப்பட்டு தேசப்பணியில் தன்னை இணைத்துக் கொண்

* ரெ. சிதம்பரபாரதி – ரா. சீனிவாசவரதன் "மதுரை ஜில்லா தியாகிகள் மலர்" (1948) பக்கம். 135

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டவர் கா. சி. முகம்மது இஸ்மாயில். கதர் தொப்பி அணிந்து சென்றதால் கல்லூரியிலிருந்து விலக்கப்பட்டார். 1923ல் சின்னமனூரில் நடந்த மகாநாட்டில் காங்கிரஸ் தொண்டர் படைத் தலைவராக கதராடைஅணிந்து செயல் பட்டார். 1936ல் காங்கிரஸ் திட்டங்களுக்கு உழைத்தார். 1940ல் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி உபதலைவரானார். 1941 மார்ச்29ல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் போடிநாயக்க னூரில் விநாயகர் கோவில் முன்பு யுத்த எதிர்ப்பு கோஷ மிட்ட இவரை உத்தமபாளையம் சப்இன்ஸ்பெக்டர் கைது செய்து உசிலம்பட்டி கொண்டு சென்று 6—4—1941ல் 6 மாதக் கடுங்காவலும் ரூ500 அபராதமும் விதிக்கப்பெற்று, போலீஸ் லாக்கப்பிலும், மதுரை சிறையிலும், அலிப்பூர் சிறையிலும் வாடினார்.

''கிறுக்கனுங்கூடக் கதருடை கண்டால்

கிழித்திடாப் பாளையத்தில்.........'' என்று புலவர் ஒருவர் இவர் புகழ் பாடியதிலிருந்து சுதந்திர வேட்கை உத்தமபாளையத்தில் எவ்வளவு மிகுதியாக இருந்ததென் பதையும், அதற்கு கா. சி. முகம்மது இஸ்மாயில் அவர் களின் தேச விடுதலைப் பணியும் மகத்தானது என்பதனை யும் எளிதில் உணரமுடிகிறது.

கான் முகம்மது

12—4—1899ல் பழனி ஆயக்குடியில் ஹுஸைன் இராவுத்தர், பவுன்தாய் புதல்வராகப் பிறந்தவர் கான் முகம்மது. ஏல விவசாயிகளின் சங்கப் பிரதிநிதியாகப் பணி யாற்றியவர். கம்பம் பீர்முஹம்மது பாவலரிடம் தொடர்பு கொண்டு பாடல்கள் பாடிக்காட்டுவார். தேசாபிமானி யான இவர் 1969 ஜனவரி 24ல் மறைந்தார்.

---

* கே. சி. எம். அவர்கள்மீது பிள்ளைத்தமிழ் பாடியவர் புலவர் ஆரிது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஹாஜி ஜமால்முகம்மது சாகிப்

''நான் வெற்றுக் காகிதத்தில் கையெழுத்துப் போட்டுத் தருகிறேன். இந்து—முஸ்லிம் ஒற்றுமை பற்றி நீங்களும் ஜமால் முகம்மதுவும் என்ன முடிவு செய்கிறீர்களோ, அது எனக்குச் சம்மதம்'' என்று ஆகாகானிடம் கூறினார் காந்திஜி.

காந்திஜியின் நம்பிக்கையை இந்த அளவு பெற்றிருந்த ஜமால்முகம்மது சாகிப்தான் லண்டனில் காந்தி-ஆகாகான் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தவர். இந்திய சட்டசபையின் உறுப்பினராகப் பணியாற்றியவர் * 1931ல் வட்ட மேஜை மகாநாட்டில் பிரதிநிதியாகச்சென்றார். இவரது நடவடிக்கைகளைத் துப்பறிவதற்காகவே, ஒரு காவல்துறை அதிகாரி இவர் கடையில் பணியாளராக வேலைக்குச் சேர்ந்து தம் முயற்சி பலிக்காமல் வெளியேறினார். 18 பென்ஸ் விகிதம் போலித்தனமானது சர்க்கார் மேலும் மேலும் முட்டாள்தனம் செய்வதை விடவில்லை. வரியைக்கூட்டிக் கொண்டே போகிறார்கள், இது மிகவும் அக்கிரமம்'' என்று ஆங்கில அரசின் போக்கை எதிர்த்து கட்டுரைகள் பல எழுதியவர்**

1933 இல் காந்தி உண்ணாவிரதம் இருந்த போது அதனை புனராலோசனை செய்யும்படி தந்தி கொடுத்தார். கிலாபத் இயக்கத்தின் போது எழுந்த ''ஜாமியாவிற்கு'' சென்னையில் பெருந்தொகை திரட்டிக் கொடுத்த பண்பாளர்.*** ஹாஜி ஜமால் முகம்மது சாகிப் 1936ல் காங்கிரசில் வகுப்புவாதம் வளரவே, காங்கிரசிலிருந்து வெளியேறினார். அவர்களது அரும்பணி இந்திய விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்களின் பங்கில் மெச்சத் தகுந்தது.

* 1—10—1931 காந்தி இதழில் பக்கம் 264

** 15—10—31 காந்தி இதழில் ''18 பென் சால்வந்தவினை'' ஸ்ரீஜமால் முகம்மது சாகிப் எழுதிய கட்டுரை பக்கம் 307

*** 8—5—33 சுதந்திரசங்கு பக்கம்-340

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காயிதேமில்லத்

''தாயகம் மீது படையெடுத்து வருவோர் முஸ்லிம் களாயினும் முறியடித்து துரத்தும் பரம்பரை நாங்கள்'' என்று முழங்கிய காயிதேமில்லத்தின் தேசப்பற்றினை யார் குறை கூறினாலும்சரி, அப்படிக் கூறுபவர்களை மனநோய் மருத்துவமனைக்குத்தான் அனுப்ப வேண்டும் என்று தொழிலாளர் தலைவர் ஏ. எஸ். கே. அய்யங்கார் போன் றோரால் போற்றப்பட்டவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிப்.

மாணவராக இருந்த போதே தன்னுடைய இளைய சகோதரர் கே. டி. எம். அகம்மது இபுராகீம் சாகிப்* அவர் களின் ஒத்துழைப்போடு முஸ்லிம் இளைஞர் அமைப்பு ஒன்றை திருநெல்வேலி பேட்டையில் துவக்கி முஸ்லிம் களிடையே தேசீய உணர்வை ஊட்டினார். பால்ய முஸ்லிம் சங்கத்தில் பஸ்லுத்தீன், சாகுல்ஹமீது, வெ. கா. பீர்முஹம்மது, கா. முஹம்மதுஷம்சுத்தீன், த. மு. முகம்மதுகனி போன்றோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். இச்சங்கத்தில் மௌலானா சவுக்கத் அலி அவர்களும், அவர்களது தாயாரான பீ அம்மா அவர்களும் வருகை தந்து உரையாற்றி இருக்கிறார்கள்**

ஈரோடு மகாநாடு

1920 இல் மஜ்லிஸுல் உலமாவின் மூன்றாவது மாநாடு ஈரோட்டில் நடைபெற்றது. மௌலானா முகம்மதலி மௌலானா சௌக்கத் அலி, அபுல்கலாம்ஆஜாத், ஹக்கீம் அஜ்மல்கான், சவுத்திரி கலிகுஸ்ஸமான் ஆகிய பல தலை வர்கள் வந்திருந்தனர். இத்தலைவர்கள் ஈரோட்டில் தந்தை பெரியார் (ஈ. வெ. ராமசாமி நாயக்கர்) இல்லத்

* 1920ல் நெல்லையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஒத்துழை யாமை இயக்கத் தீர்மானத்தை நிறைவேற்ற முன் நின்றவர்.

** ஏ. கே. ரிபாயி ''கல்மின்காவலர்'' பக்கம் 163.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தில் தங்கியிருந்தனர். அப்போது பெரியார் அவர்கள் தனது குடும்பத்தினரிடம் மகாத்மாகாந்திக்கு உலகம் அடக்கம், அந்த மகாத்மா இந்த மவ்லானாமுகம்மதலி அவர்களின் சட்டைப் பையில் இருக்கிறார்'' என்று குறிப்பிட்டார்கள்.

இந்தப் பயணத்தில் தான் காயிதேமில்லத் அவர்கள் மௌலானா முகம்மதலி, மௌலானா சௌக்கத்அலி சகோதரர்களைச் சந்தித்தார்கள்.

கிலாபத், ஒத்துழையாமை இயக்கங்களில் காந்தியின் வேண்டுகோளையும், மௌலானா முகம்மது அலியின் அறிவிப்பையும் ஏற்று நாடெங்கும் பல்லாயிரக்கணக்கில் முஸ்லிம்களும், இந்துக்களும் ஈடுபட்டனர். அப்போது சி ஆர். தாஸ், இராஜாஜி போன்றோரின் பேச்சிலே கவர்ந்து இழுக்கப்பட்ட காயிதேமில்லத் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் பி. ஏ. படிப்பை தூக்கி எறிந்து சுதந்திரப் போரில் குதித்தார்.

ஆங்கில வல்லரசின் பிரித்தாளும் போக்கை எதிர்த்து கிளர்ந்தெழுந்து சிம்மக்குரல் எழுப்பிய இரட்டையர்கள் மௌலானா முஹம்மது அலி அவர்களும், சௌக்கத் அலி அவர்களும் பிரகடனப்படுத்திய கிலாபத் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு அரும் பணியாற்றியவர் காயிதேமில்லத். அவரது திருமணத்தின் போதும்* கதராடையே அணிந்தார். கதராடை அணிந்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை, ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து படிப்பை பாதியில் விட்டதையும், பணியாற்றியதையும் காயிதேமில்லத் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.**

---

* செய்துங்கநல்லூர் மதனீ 1957 ஜுன் முஸ்லிம் முரசில் எழுதிய கட்டுரையில் 4—6—1962 உரிமைக்குரல் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் நினைவுமலர் 1990 பக்கம் 168, 169

** 6—3—1947 மதறாஸ் சட்டசபையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் காயிதேமில்லத் பேசியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தம் மாமனார் ஜமால் முகம்மதுவின் தோல் கம்பெனியில் பணியாற்றிய போதும், பார்ட்னராக இருந்த காலங்களிலும் காயிதேமில்லத் அவர்கள் கடையில் அமர்ந்திருக்கும் வேளையில் ஆங்கில ஆட்சியாளர்கள் யுத்த நிவாரண நிதி கேட்டு வருவார்கள்.

அப்போது பிற பங்காளிகள் தான் செக்குகள் எதுவும் வழங்குவார்களே தவிர, அப்படி வழங்கும் இந்த செக்குகளில் கூட ஒருபோதும் காயிதேமில்லத் கையெழுத்திட்டதில்லை; அவ்வளவு தூரம் தேசியப் பற்று உடையவர். சென்ட்ரல் ரயில்நிலையத்தில் வந்து இறங்கும் வடஇந்திய தலைவர்களான மௌலானா முகம்மதலி, சௌக்கத்அலி, டாக்டர் அன்சாரி, ஹக்கீம் அஜ்மல்கான், டாக்டர் ஜாகிர் உசைன் போன்ற தலைவர்களை வரவேற்கச் செல்லும் போது அந்த தலைவர்கள் காயிதேமில்லத் மீது காட்டிய பற்றையும், மதிப்பையும் நானே நேரில் பார்த்திருக்கிறேன் என்று கம்பெனியில் 1928 முதல் 1959 வரை மானேஜராகப் பணிபுரிந்த கே.டி.சடகோபன் அய்யங்கார் தெரிவித்துள்ள தகவலில் இருந்து அறிய முடிகிறது.

திருநெல்வேலி பேட்டை பள்ளிவாயிலின் முன்பு காயிதே மில்லத்தும் அவருடைய நண்பர்களும், வெளிநாட்டுப் பொருட்கள் புறக்கணிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு வெளிநாட்டுத் துணிகளை எரித்தனர்.

1936ல் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, ஜமால் முகம்மது போட்டியிட்ட தேர்தலில் சென்னையில் வகுப்புவாதம் விளையாடியதால், காங்கிரசிலிருந்து விலகினாலும் முஸ்லிம் லீகராக நாட்டு விடுதலைக்குத் தொடர்ந்து பாடுபட்டவர் காயிதேமில்லத்.

இந்தியாவின் முதல் சுதந்திர தின விழாவில் முஸ்லிம்களை ஆர்வத்தோடு பங்கேற்க வேண்டுகோள் விடுத்ததுடன், தானும் தேசியக்கொடியை சட்டையில் அணிந்து விழாவில் கலந்து கொண்டவர் காயிதேமில்லத்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்திய சுதந்திரத்திற்கு அயராது உழைத்த காந்தி யடிகளை வாழ்த்திய தீர்மானத்தை சென்னை சட்டசபை யில் எதிர்க்கட்சித் தலைவராக காயிதேமில்லத் வழி மொழிந்து 1947 செப்டம்பர் 15ல் ஆற்றிய உரை அவரது தேசப்பற்றையும், சுதந்திர எண்ணத்தையும் இன்றும் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறது.

1962 அக்டோபரில் சீனப்போரில், இந்தியாவுக்காக தமது ஒரே மகனை போருக்கு அனுப்பத் தயார் என்று வீர அறிவிப்பு செய்ததுடன், பாராளுமன்ற சம்பளத்தின் ஒரு பகுதியை நாட்டின் யுத்த நிதிக்குத் தந்தவர் காயிதே மில்லத்.

5—4—1972ல் இறைவன் நாட்டப்படி இவ்வுலகை விட்டு மறையும் வரை அவர் நாட்டுக்காக ஆற்றிய தொண்டைப் பாராட்டி நாகை காயிதேமில்லத் மாவட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

ராணிப்பேட்டை முகம்மது சுலைமான்

1942 ஆகஸ்ட் புரட்சியில் அருணா ஆஷப்அலியின் வீரமுழக்கம் நாடெங்கும் நடந்தது. காந்தி, நேரு, மற்றும் முன்னணி தலைவர்கள் சிறையில், அப்போது காமராஜர் தானும் கைது செய்யப்படலாம் என்பதை உணர்ந்து வெளியே சில நாட்கள் இருந்து ஆகஸ்ட் போராட்ட முயற்சிகளை மாவட்ட வாரியாக ஏற்பாடு செய்த பின்னரே கைதாக வேண்டும் என்று தனக்குத் தானே தீர்மானம் செய்து கொண்டார். அந்த வேளையில் காமராசருக்கு பெரிதும் உதவியவர் முகம்மது சுலைமான்*

அரசின் அடக்குமுறை, சுதந்திரப் போராட்ட வீரர்கள் மீது வெறியோடு பாய்ந்த போது தலைமறைவாக இருந்து

* சாவி 'சிவகாமியின் செல்வன்' பக்கம் 40
முருகதனுஷ்கோடி 'காமராஜ் ஓர் சரித்திரம்' (1975) பக்கம் 65 முதல் 68 வரை.
ஆக்கூர் அனந்தாச்சாரி 'அரசியல் நினைவு அலைகள்' பக்கம் 110-111

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டு இப்போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த காமராஜருக்கு தனது இல்லத்தில் அடைக்கலம் தந்து உத வியர், ஆட்சியாளரின் எந்தத் தண்டனைகளுக்கும் அஞ்சாத நெஞ்சம் கொண்ட ராணிப்பேட்டையைச் சேர்ந்த முகம்மது சுலைமான்.

கவிஞர் கா. மு. ஷெரீப்

11—9—1914 இல் தஞ்சை மாவட்டம் அபிவிருத் தீஸ்வரத்தில் காதர்ஷா இராவுத்தர் முகம்மது பாத்து அம்மாள் தம்பதியருக்கு ஒரே மகனாகப் பிறந்தவர் கா. மு. ஷெரீப்*

அடிமை இந்திய மண்ணில் பிறந்து விடுதலைக்குப் பாடுபட்டு உழைத்து விடுதலை பெற்ற பாரதத் திரு நாட்டில் வாழ்ந்து வருகின்ற பேறு பெற்ற ஓர் ஒப்பற்ற இஸ்லாமியக் கவிஞர். கா. மு. ஷெரீப். 5 முதல் 15 வயது வரையில் அரபி மொழியைக் முறையாகக் கற்றவர். சிறந்த கவிஞர். 1942ல் நடைபெற்ற ''வெள்ளையனே வெளி யேறு'' போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். வேளுக்குடி தொண்டன் பிரசுராலயத்திலிருந்து 1946ல் ''ஒளி'' என்ற கவிதைத் தொகுப்பில் ''ஆத்திரம் கொள்'' என்ற தலைப்பில் அவர் எழுதிய கவிதை இதோ :

''தோள்கள் விம்முது தசையுந் துடிக்குது
சுதந்திரம் என்றவுடன் — கொலை
வாள் கொண்டு தாக்கினாற் போன்றே இருக்குது
அடிமையென நினைத்தால் — இதை
ஆள்பவன் சிந்திக்க வீணாய் மறுக்கிறான்
அதிகாரத் தன்மையினால் — புவி
ஆள்வதற்காக நாம் ஆத்திரங் கொண்டிடல்
அறமும் முறையுமாம்''

இவருடைய சுதந்திர தாகத்திற்கு இக்கவிதை ஒன்றே போதும்**

* மது. ச. விமலானந்தம் ''தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்''

** ந. சஞ்சீவி ,இந்திய விடுதலையும், தமிழ் இலக்கியமும்' சென்னைப் பல்கலைக் கழகம்–1974 பக்கம் 430–431.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சதாவதானி செய்குதம்பிப் பாவலர்

காங்கிரஸ் இயக்கத்தை நாஞ்சில் நாட்டில் தொடங்கிய தலைவர்கள் மூவரில் ஒருவர் செய்குதம்பிப்பாவலர் காந்தியின் போதனை ஏற்றார். கதர் அணிந்தார். 1924ல் இரவிபுதூர் என்னும் இடத்தில் டாக்டர். எம். இ. நாயுடு வ.வே.சு. ஐயர், செய்குதம்பிப்பாவலர் கலந்து கொண்ட தேசீயப் பொதுக் கூட்டம். அந்தக்கூட்டத்தில் "திருமணத்தின் போது கட்டுவதும் புத்தாடை; பிணத்தைப் பொதிவதும் புத்தாடை. ஆனால் அது மில் துணி, திருமணத்தின் போது மில் துணி கட்டுவது வழக்கமில்லை. கோடித்துணி கட்டுபவன் மணமகன், மில்துணி கட்டுபவன் பிணமகன் நீங்கள் மணமக்களா? பிணமக்களா? நீங்கள் கதர் அணியப் போவதற்கு அறிகுறியாக உங்களது பிணஆடையை எடுத்தெறியுங்கள்'' என்று பாவலர் பேசினார்.

ஏரியின் திடலில் எரியின் கோலம்

துணிமலை உருவாயிற்று. தீ மூட்டப்பட்டது. நீரற்று விரிந்து பரந்து கிடந்த ஏரியின் திடலில் எழுப்பப்பட்ட எரியின் கோலம் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது* அதிலிருந்து தனது வாழ்நாளில் கதராடையைத் தவிர வேறு ஆடையினை அவர்கள் அணிந்ததில்லை** கள்ளைக் குடியாதே, ஐயா நீ கள்ளைக்குடியாதே'' என்ற பாவலரின் மதுவிலக்குப் பிரச்சாரப் பாடல் பிரசித்திப் பெற்றது.

''1937 ஆம் ஆண்டில் என நினைக்கின்றேன். பாவலர் அவர்கள் நாகர்கோவில் நகராண்மைக்கழகத் திடலில் காங்கிரஸ் பிரச்சாரம் செய்தார்கள். நல்ல தமிழில்விடுதலையின் மேன்மையைக்குறிப்பிட்டு காந்தியடிகளின் பெருமை

* வித்வான் செ. சதாசிவம் "நான் கண்ட பாவலர்'' செய்குதம்பி நினைவு மலர் பக்கம் 43, 44

** செய்குதம்பி பாவலர் நினைவு மலர் 1961 பக்கம் 19

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யை விளக்கினார்கள். அவர் அன்று செய்த வீர முழக்கத்தால் எழுச்சியுற்ற சிறுவர்களில் நானும் ஒருவன்* என்று தஞ்சாவூர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவி வகித்த டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியன் தெரிவித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டு தலைவர் ப. ஜீவானந்தம் போன்ற எண்ணற்ற இளைஞர்களை விடுதலை வாழ்வில் குதித்திட வைத்த பாவலர் பொதுக்கூட்டமொன்றில் பேசிக் கொண்டிருந்த போது கருங்கல்லால் எறிந்தார்கள். ''இதோ அந்நிய ஆதிக்கத்தின் புதை குழிக்கு முதற்கல் கிடைத்து விட்டது'' என்று சொல்லி அதனை ஏலம் விட்டு அந்த நிதியை காங்கிரசுக்குத் தந்தார்**

மின்னொளி இல்லாத பொன்னொளி இல்லம்

1937 தேர்தலில் பாளையங்கோட்டையில் காங்கிரஸ் வேட்பாளராக நின்ற செய்குமன்சூருக்கு ''மஞ்சள் பெட்டி மங்கலப் பெட்டி; வெள்ளைப் பெட்டி வெறும் பெட்டி'' என்று பேசி காங்கிரசின் வெற்றிக்கு கடுமையாக உழைத்தார். சுதந்திரப் போரில் ஈடுபட்டு அந்நியராட்சியை எதிர்த்து வருகிறார் பாவலர் என்பதால், ஊருக்கெல்லாம் ஒளியூட்டிய மின்சாரம், அந்நிய அரசுக்கு விசுவாசம் காட்டி வந்த ஓர் தனி நபரின் ஒட்டுமொத்த விநியோக உரிமை காரணமாக பாவலரின் வீட்டுக்கு கிடைக்கவே இல்லை. சுதந்திர சூரியன் உதயமான பின்னரே பாவலர் இல்லம் மின்னொளி கண்டது. நாட்டு விடுதலைக்கு முஸ்லிம்கள் செய்த அளப்பரிய தியாகத்தினை நடுநிலையாளர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக.

---

* கே.பி.செய்குதம்பி ''சதாவதானி செய்குதம்பி பாவலர்'' பக்கம் 113.

** யதார்த்தவாதி 'விடுதலைப்போராட்ட வீரர்' கட்டுரையில் முன் கூறிய நூலில் பக்கம் 223, 224.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாஜிஸ்டிரேட் அப்பாஸ் அலிகான்

1940 அக்டோபர் 17ல் காந்தியின் தலைமையின் கீழ் பேச்சுரிமை போர் ஆரம்பமாயிற்று. 1940 டிசம்பர் 3ல் பேச்சுரிமை போரில் கலந்து கொண்டு ராஜாஜி சென்னையில் கைதானார். அன்றே சென்னை பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் முன்னால் வழக்கு விசாரணைக்கு வந்தது. ராஜாஜி கைதியாய் கோர்ட்டில் பிரவேசிக்கும் போது மாஜிஸ்டிரேட் உணர்ச்சிமிகுந்தவராய் தர்ம சங்கடமான நிலைமையில் பகவத்கீதையின் முதல் அத்தியாயம் 29, 30வது சுலோகங்களையும், 2வது அத்தியாயம் 47வது சுலோகத்தையும், சொன்னார். அதன் சாரம் இதோ:

''என் அவயவங்கள் வெலவெலக்கின்றன. வாய் உளறுகின்றது, உடல் நடுங்குகின்றது, மயிர் சிலிர்க்கின்றது, காண்டீபம் கையில் இருந்து நழுவுகின்றது, உடலில் எரிச்சல் உண்டாகிறது, மனம் பிரமிக்கின்றது, என்னால் நிற்க முடியவில்லை'', ''தொழில் செய்யத்தான் உனக்கு அதிகாரம் உண்டு, அதன் பலன்களில் எப்போதுமே உனக்கு அதிகாரம் இல்லை, செயலின் பலனைக் கருதாதே, தொழில் செய்யாமலும் இராதே'' என்பதை கூறி, தம் கடமையைச் செய்த ஜனாப் அப்பாஸ் அலிகான் ராஜாஜிக்கு சட்டப்படி ஒரு வருட வெறுங்காவல் தண்டனை அளித்தார். அப்போது ராஜாஜியைப் பார்த்து அப்பாஸ் அலிகான் சொன்னார் ''நீங்கள் விரைவில் விடுதலை அடைந்து மீண்டும் பிரதம மந்திரி பதவி வகித்தால் என்னைவிட மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்'' என்று பகிரங்கமாக நீதிமன்றத்தில் வாழ்த்து தெரிவித்தார்* வெள்ளையர் ஆட்சியில் தம் பதவியைப் பற்றி கவலைப்படாமல் பகிரங்கமாக சுதந்திரத்திற்காக போராடிய ஒரு தலைவருக்கு வாழ்த்துச் சொன்ன அப்பாஸ் அலிகானின் தேசபக்தி குறிப்பிடத்தக்க சிறப்புடையது தானே.

* ஆக்கூர் அனந்தாச்சாரி ''ராஜாஜி'' (1941) பக்கம் 34, 35.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பசீர் அமீத் சையதும் ஹமீத் கானும்

1931 ஜனவரி 9 வெள்ளிக்கிழமை விடியற்காலை கிடங்குத் தெரு, ஜார்ஜ்டவுண் பக்கம் அன்னியத்துணி பகிஷ்கரிப்பு போர் தீரர் சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. ஏராளமான கூட்டம் கூடியது. போலீஸ் உதவி கமிஷனர் ராவ்பகதூர் அனந்தாச்சாரியார் இரண்டு லாரிகள் நிறைய ஆயுதம் தாங்கிய போலீசாருடன் நுழைந்தார்.

கூட்டத்தை கலைக்க தடியடி பிரயோகிக்கப்பட்டது. 70 வயது முஸ்லிம் தடியடிக்குள்ளானார். ஜும்ஆ தொழுகைக்குப்பின் முஸ்லிம் நண்பர்களும் வந்தனர். பிற்பகல் 2 மணிக்கு சத்தியமூர்த்தி கைது செய்யப்பட்டார். சென்னை இரண்டாவது பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் ஸ்ரீ ஹரிராவ்நாயுடு முன்பாக விசாரணைக்கு 10-1-1931ல் கொண்டுவரப்பட்டார். கோர்ட்டில் 'காந்திக்கு ஜே' என்ற முழக்கம் பலமாக இருந்தது. ஜனாப் பசீர்அமீத் சையத், ஹமீத்கான் ஆகிய தேசிய முஸ்லிம்களும், எம். பக்தவத்சலமும் அன்று கோர்ட்டுக்கு வந்திருந்தனர்.*

ஷாபி முஹம்மது

1940 டிசம்பர் 13ல் சென்னையில் தியாகராயநகர் தணிகாசலம் செட்டித்தெரு 14 நம்பர் சத்தியமூர்த்தியின் சொந்த பங்களாவான சுர்ராவிற்கு எதிரில் காலை 10 மணிக்கு சத்தியாக்கிரகப் போராட்டம் என்ற செய்தி நகரெங்கும் பரவியது. வீட்டின் அருகில் போடப்பட்டிருந்த மேடையில் ஏறி சத்தியமூர்த்தி ''யுத்தத்திற்கு நீங்கள் எவருமே உதவி செய்யக்கூடாது'' என்று பொது மக்களைப் பார்த்துப் பேசினார். அவரை போலீஸ் கமிஷனர் கைது செய்தார். எழும்பூர் கோர்ட்டிற்கு கொண்டு செல்லப்பட்டார்.

---

* ஏகமி ''தீரர் சத்தியமூர்த்தி'' பக்கம் 150-152

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருந்தலைவர் காமராஜரும், ஷாபி மகம்மதுவும் மற்றும் பலரும் கோர்ட்டிற்கு வந்திருந்தனர். நீதிமன்றத்தில் ஒன்பது மாத வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார் சத்தியமூர்த்தி.

சத்தியமூர்த்தியின் வாழ்வில் தொடர்புடைய ஜனாப் பசீர்அமீத் சையதும், ஹமீத்கானும், ஷாபி மகம்மதுவும் இந்திய விடுதலைப்போரில் கலந்து கொண்ட தமிழக முஸ்லிம்கள் ஆவர்.

வேலூர் வி. எம். உபயத்துல்லா

வேலூரில் பாக்கு மாளிகை மதார் பாட்சா சாஹிபின் புதல்வராக 2–5–1905ல் பிறந்தவர் வி. எம். உபயத்துல்லா.

சென்னை சட்டசபையில் கவர்னர் அமரும் இடத்திலுள்ள படுதாவில் ஒரு கைத்துப்பாக்கி, மூன்று உபயோகப்படுத்திய தோட்டாக்களும், மூன்று உபயோகப்படுத்தப்படாத தோட்டாக்களுடன் 16—3—1933ல் கண்டுபிடிக்கப்பட்டது. உடனே தமிழ் நாடெங்கும் சுதந்திரப் போரில் தீவிரம் காட்டி வரும் தொண்டர்களின் இல்லங்கள், சென்னை, திருச்சி, மதுரை, சேலம் நகரங்களில் போலீசாரின் சோதனைக்குள்ளானது.

17—3—1933ல் விருதுநகரில் காமராஜரின் வீட்டில் சோதனை நடைபெற்றது. அப்போது தான் அவரது நெருங்கிய நண்பரான வேலூர் வி. எம். உபயத்துல்லா சாகிப் வீட்டையும் போலீசார் ஆயுதங்கள், துப்பாக்கிகள் இருக்கின்றனவா என்று சோதனையிட்டனர்.* இதிலிருந்து எவ்வளவு தீவிரமாக விடுதலைப்போரில் வி. எம். உபயத்துல்லா செயல்பட்டிருப்பார் என்பதனை உணர்ந்து கொள்ளலாம்.

---

* 24—3—1933 "காந்தி" இதழ் பக்கம். 173

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை மகாநாட்டில்

3—12—1935ல் மதுரை மேலூர் தாலுகா அரசியல் மாநாடு கீழையூரில் நடைபெற்றது.* 2வது மாநாடு மேலூரிலும், 3வது மாநாடு வல்லாளப்பட்டியிலும் நடந்தது. நான்காவது மாநாடு மதுரை மாவட்டம், நாவினிப் பட்டியில் நடைபெற்றது. அந்த மகாநாட்டிற்கு வேலூர் வி. எம். உபயத்துல்லா தலைமை தாங்கினார்.**

சென்னை உப்புச் சத்தியாக்கிரகத்திற்கு மிகச் சிறந்த பேச்சாளரான வேலூர் உபயதுல்லாவை சென்னை வரும்படி சேலம் சுப்பிரமணியம் தந்தி அனுப்பினார்.*** சாமி சண்முகானந்த அடிகள் தலைமையில் கோடையிடி குப்புசாமி முதலியார் மற்றும் நூற்றுக்கணக்கான தொண்டர்களுடன் பாதயாத்திரையாக புறப்பட்டுச் சென்ற வேலூர் உபயத்துல்லா, சென்னையை அடைந்து அங்கு சென்று உப்புச் சத்தியாக்கிரகப் போரில் பங்கேற்றார்.

தனது வாழ்நாளில் 68 மாதங்கள் நாக்பூர், அம்ரோதி அலிப்புரம், கோவை, வேலூர், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், சிறைகளில் விடுதலைக்காக வாடிய உபயத்துல்லா கிலாபத் இயக்கத்திலும், நாகபுரி கொடிப் போரிலும் பங்கேற்றவர்.****

அவர் வேலூரில் காந்தி சங்கத்தை அமைத்தார். காரமும், வீரமும், நயமும், நையாண்டியும் நிறைந்து உருது கலந்த தமிழில் அழகுற உரையாற்றும் இவரையும், கோடையிடி

* தமிழகத்தில் காங்கிரஸ் மாளிகை முதலில் கட்டப்பட்ட ஊர் இதுதான்

** ந. சோமயாஜுலு "மதுரை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு" (1980) பக்கம். 463

*** காங்கிரஸ் நூற்றாண்டு விழா மலர் தமிழ்நாடு பக்கம் 128.

**** WHO's WHO OF FREEDOM FIGHTERS (TAMIL NADU) 1973 Vol; II Page 81.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குப்புசாமி முதலியாரையும் 'வேலூர் இரட்டையர்' என்றே அழைப்பர். 'கொக்கு பறக்கு தடி பாப்பா, வெள்ளை கொக்கு பறக்கு தடி பாப்பா' என்று ஆங்கிலேயர்களைக் குறித்து எழுச்சிப் பாடல் பாடிய புகழ் பெற்ற நாடக நடிகர் எஸ். எஸ். விஸ்வநாததாஸ் அவர்களை வேலூருக்கு அழைத்துச் சென்று தேசிய எழுச்சி நாடகங்களையும் நடத்தினரர்.

ஆகஸ்ட் புரட்சியில்

1942 ஆகஸ்ட் புரட்சியின் போது நாடெங்கும் பல்லாயிரக்கணக்கில் தொண்டர்கள் சிறைப்பட்டனர். காமராஜர் பம்பாயிலிருந்து திரும்பி வந்து ராணிப்பேட்டை முகம்மது சுலைமான் இல்லத்தில் தங்கியிருந்தார். பின்பு தமிழகமெங்கும் சுற்றினார். தலைமறைவாகத்திரிந்த அவர், தான் கைதாவதற்கு மூன்று நாட்களுக்கு முன் வேலூரில் ஆகஸ்ட் கிளர்ச்சியை நடைபெற வழி வகுத்தார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத்தலைவரும் தலைசிறந்த தேசீய முஸ்லிமுமான வேலூர் வி. எம். உபயத்துல்லா அவர்களை தமக்குப்பின் தமிழ்நாட்டின் சர்வாதிகாரியாக நியமித்தார் காமராஜர்*

வேலூர் வி. கே. குப்புசாமி, ஜீவரத்தினம் ஆகியோர் துணையுடன், வி. எம். உபயத்துல்லா சட்ட மறுப்பு இயக்கத்தை சில நாட்கள் வேலூரிலும், இதர பகுதிகளிலும் நடத்தினார். இதன் பின் வி. எம். உபயத்துல்லா ஏராளமானவர்களுடன் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டார் வேலூர் நகர்மன்ற உறுப்பினராகவும், வடஆற்காடு ஜில்லா போர்டு உபதலைவராகவும் பணியாற்றி காமராசரின் வலதுகரமாகத் திகழ்ந்த வேலூர் வி. எம். உபயத்துல்லா இந்த நாட்டு விடுதலைக்கு ஆற்றிய சேவை இத்தரையில் சுதந்திர வரலாறு உள்ள வரை

* ம. பொ சிவஞானம் "விடுதலைப்போரில் தமிழகம்" இரண்டாம் தொகுதி பக்கம் 457

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலைத்து நிற்கக் கூடியதாகும். வேலூரில் 'உபயத்துல்லா பேருந்து நிலையம்' அவர் பெயரால் அமைந்துள்ளது. 22—2—1958ல் காலமானாலும் அவர் புகழ் இன்றும் நிலைத்து நிற்கிறது.

விருதுநகர் அப்துல் ரகுமான்

காமராஜர் 1922ம் ஆண்டில் காங்கிரஸ் பிரச்சாரத் திற்கு மக்களின் ஆதரவை திரட்டிய வேளை. ரயில் நிலை யங்களிலும், பொது இடங்களிலும், கடை வீதிகளிலும் உண்டியல் ஏந்தி நிதி வசூலித்து காங்கிரஸ் கூட்டங் களைக் கூட்டி தேசப்பணியில் ஈடுபட்ட வேளை. விருது நகரைச் சுற்றியுள்ள ஊர்களில் எல்லாம் கூட்டங்களை கூட்டி அதில் கலந்து கொள்வார். மாலை 6 மணிக்கு விருதுநகரிலிருந்து கிளம்பி அருகில் உள்ள கிராமங்களுக் குச் செல்வார். கூட்டம் நடைபெறும் கிராமத்தில் அப்துல் ரகுமான் என்ற சுதந்திரப் பாடல்களை நன்றாகப் பாடும் பாடகரை மேடையிலே ஏறி பாடச் சொல்வார்கள்; அப்துல் ரகுமான் சுதந்திர கீதங்களை ஆவேசத்துடன் பாடுவார். அப்துல்ரகுமானின் குரல் உச்சகட்டத்திற்கு ஏற ஏற கூட் டம் களைகட்டும், பாட்டு முடியும் போது உணர்ச்சி வெள் ளத்தில் மிதக்கும் மக்களை நோக்கி ''மகாத்மா காந்திக்கு'' என்று காமராசர் உரக்கக்குரல் கொடுப்பார் ''ஜே'' என்ற குரல் கூட்டத்திலிருந்து ஒருமித்து வரும். சுதந்திர தாகத்தை வளர்க்கும் இக்கூட்டங்களை முடித்து கொண்டு இரவு 1 மணிக்கு விருதுநகருக்குத் திரும்புவார்* அப்துல் ரகுமான் போன்ற எண்ணற்ற முஸ்லிம் பாடகர்கள் காங் கிரஸ் மேடைகளில் சுதந்திர கீதங்களை இசைத்திருக்கி றார்கள்.

---

* முருகதனுஷ்கோடி ''காமராஜர் ஒரு சரித்திரம்'' பக்கம் 22

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சையதுமுர்த்தஸா ஹஸரத்

திருச்சியில் பிறந்து அலிகாருக்குக் கல்வி பயிலச் சென்ற சையது முர்த்தஸா ஹஸரத் "தஹ்தீபுல்அஃக்லாக்" என்ற பத்திரிகையில் வந்த தேசப்பற்றுமிக்க கட்டுரைகளைப் படித்துத்தேசியப்போரில் ஈடுபடத் தம்படிப்பையே பாதியில் உதறிவிட்டு நாட்டுப் பணியில் குதித்தார். 1887ல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையில் பங்கேற்றார். கிலாபத் இயக்கத்தில் தீவிரப்பணியாற்றினார். தமிழ்நாட்டின் 11 மாவட்டங்களின் பிரதிநிதியாக டில்லி சட்டசபைக்கு முஸ்லிம்களுக்குரிய தென்சென்னையிலிருந்து சுயராஜ்ய கட்சியின் சார்பில் காங்கிரஸ் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1926 பிப்ரவரி 16ல் எல்லைப்புற மாகாண மக்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டுமென்ற மசோதாவை தாக்கல் செய்தார். 1926 மார்ச் 18ல் இதனை ஆதரித்து ஜின்னா சாகிப் பேசினார்.

அசாமைச் சேர்ந்த அகம்மது அலிகான், ஆக்ரா எல். கே. ஹைதர், ரோஹில்கண்ட் மௌலவி முகம்மது யாகூப் மற்றும் பல முஸ்லிம் உறுப்பினர்கள் சையது முர்த்திஸா சாகிப்பின் தீர்மானத்தை அப்படியே ஆதரித்தார்கள்* மோதிலால் நேருவும், மதன் மோகன் மாளவியாவும் இத் தீர்மானத்தை எதிர்த்தனர். இந்தியர்கள் அனைவரும் அனுபவிக்கும் உரிமைகளை எல்லைப்புற மாகாணத்து மக்களும், பலுசிஸ்தானப்பகுதி மக்களும் ஏன் அனுபவிக்கக் கூடாது என்று கேட்ட சையது முர்த்தஸா ஹஸரத் மத்திய சட்ட சபையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.**

மலபார் சுதந்திர எழுச்சியால் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையிலே தூக்கிலிடப்பட்ட சுதந்திர வீரர்களின்

---

* மனோரஞ்சன் ஜா "சுதந்திரப்போராட்டமும், மத்திய சட்டசபையும்" பக்கம் 122, 128

** இந்து முஸ்லிம் கருத்துமோதல் அப்போதே துவங்கியது எனலாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சடலங்களை, நாட்டு விடுதலைக்காக தன்னை அர்ப் பணித்து பணியாற்றிய சையது முர்த்தஸா ஹலரத், தானே தலைமை தாங்கிச் சென்று அந்தச் சடலங்களைப் பெற்று திருச்சி காஜாமலை பகுதிகளில் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். இன்றும் காஜாமலை பகுதிகளில் உள்ள கபர்ஸ்தான்கள் அந்த வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அப்போது கோவை ஜெயிலிலும், சேலம் ஜெயிலிலும் மாப்பிள்ளைகள் நூற்றுக்கணக்கில் தூக்கில் தொங்க விடப்பட்டனர்.*

அலி சகோதரர்களின் தாயாரின் தமிழக விஜயத்தில் உடன் சென்று அவர்களது பேச்சை மொழிபெயர்த்து மக்கள் மத்தியில் சுதந்திர தாகத்தை ஏற்படுத்தியவர்.

பல ஆண்டுகள் மத்திய சட்டசபையில் உறுப்பினராகப் பணியாற்றி நாட்டு விடுதலைக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அந்த நல்லவர் 1949 நவம்பர் 6ல் தனது 86வது வயதில் காலமானார்.

எஸ். ஏ. ரகீம்

1913ல் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் பிறந்த எஸ். ஏ. ரகீம் தனது 19வது வயதில் காங்கிரஸ் இயக்கத் தில் முழுமையாக தன்னை இணைத்து தீரர் எஸ். சத்திய மூர்த்தி அவர்களின் ஊக்கத்தால் மாவட்ட அளவில் விரை விலேயே பிரபலமானார்.

உணர்ச்சிப் பெருக்கோடு புதிய விஷயங்களை மேடை யில் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர். 1938ல் நன்னிலம் தாலுகா அரசியல் மாநாடு தேரியூரில் நடைபெற்றது. அதில் தலைமையுரை ஆற்றிவிட்டு மாலை பொதுக் கூட்டத்தில் பேசச் சென்ற போது ஒரவாஞ்சேரியில் கொலை வெறித் தாக்குதலுக்குள்ளானார்.

* நெல்லை மௌலானா மௌலவி அபுல்ஹசன் ஷாதலி ஹஸ்ரத் நூரிய்யி பாகவி நூலாசிரியரிடம் நேரில் தெரிவித்த தகவல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரிவினை எதிர்ப்பு தென்னிந்திய மாநாடு

1942ல் தென்னிந்தியாவில் பிரிவினை எதிர்ப்பு மாநாட்டை* கும்பகோணத்தில் கூட்டினார். கே. எம். ஷெரீப் வரவேற்பு கமிட்டியில் தலைவராக இருந்தார். மௌலானா உபயத்துல்லா சிந்தி, எம். ஒய். ஷெரீப் ஹாஜி முகம்மது, மௌலானா மௌலவி சையத்முர்துஜா, கோவை அப்துல்ரகீம், வலங்கைமான் அப்துல்சத்தார், வேலூர் வி. எம். உபயத்துல்லா, மௌலானா அப்துல் ஹக்கீம் சகோதரர்கள் உட்பட எண்ணற்ற முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.

சின்னாளப்பட்டி மாநாடு

திண்டுக்கல்லை அடுத்த சின்னாளப்பட்டியில் பாகிஸ் தான் பிரிவினையை எதிர்த்து மாநாடு நடைபெற்றது. அதில் எஸ். ஏ. ரகீம் தலைமை உரையாற்றினார். 25—4—1942 'இந்து' இதழ் 'தமிழகத்திலிருந்து வந்த முதல் எதிர்ப்புக்குரல்' என்று அப்போது பிரசுரித்தது.

1942ல் பாகிஸ்தான் பிரிவினையை இராஜாஜி ஆதரித்த போது அதனை எதிர்த்து 'ஓட்டைப்படகு' என்ற நூலை எஸ்.ஏ. ரகீம் எழுதினார். "கும்பகோணம் என்றால் எஸ்.ஏ. ரஹீம் ஞாபகம் வருகிறது. எஸ்.ஏ. ரகீம் என்றால் கும்பகோணத்தின் ஞாபகம் வருகிறது'' என்று காந்தி பூங்காவில் சத்தியமூர்த்தி பேசினார் என்றால் தனது 29வது வயதில் எந்த அளவுக்கு நாட்டு விடுதலைக்கு தொண் டாற்றினார் என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

தியாகத்தின் சின்னமாகவும், உயர்ந்த லட்சியவாதி யாகவும் விளங்கிய எஸ்.ஏ. ரகீம் திருவாடானை போராட் டத்தில் 1942ல் சிறைசென்ற புரட்சி வீரர்களின் குடும்பங்

* Anti Seperation Conference of Southern India

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்கு பாரததேவி என். ராமரத்தினம், குமாரவேலு சொக்கலிங்கம் செட்டியார் ஆகியோருடன் சேர்ந்து நிதி திரட்டி உதவி செய்தார்* 'இறந்தபிணமும் இவரது பேச்சைக் கேட்டு உயர்பெற்று எழும்' என்ற அளவிற்கு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பல்வேறு கூட்டங் களில் எழுச்சி உரையாற்றிய எஸ் ஏ. ரகீம் வெள்ளையரின் வாய்ப்பூட்டுச் சட்டத்தால் கைது செய்யப்பட்டு திருச்சி, கடலூர், அலிப்புரம், பெல்லாரி, ஷிமோகா முதலிய சிறை களில் வாடினார்** ''இந்தியா என் வீடு'' ''விடுதலை முழக் கம்'' ''வழிகாட்டிய உத்தமர்'' ''புத்தர் அடிச்சுவட்டில்'' ''மாவீரன் வரலாறு'' ''கொடியின் கதை'' போன்ற நாட்டு விடுதலை குறித்த நல்ல நூல்களை எழுதிய எஸ். ஏ. ரகீம் 1985ம் ஆண்டுவாக்கில் காலமானார்.

கரூர் நன்னாசாகேப்

உறுதியான கொள்கையாலும் அப்பழுக்கற்ற தேசிய வாதியாகவும் பணியாற்றியவர். விடுதலைப் போரின் போது தன் மனைவியுடன் சிறைசெல்ல முயன்ற போது அங்கே சப் கலெக்டராக இருந்த ஹாசன் என்பவர் 'உங்கள் மனைவி முஸ்லிம் பெண்ணாக இருந்தும் இப்படிச் செய்யலாமா?' முஸ்லிம் சகோதரிகள் சாதாரணமாக 'கோஷா' அணிந்து வரும் போது அரசியல் போரில் ஈடுபட்டு சிறைக்குச் செல்வது சரியாகுமா? என்று கேட்டார்.

''தேசம் வெள்ளையரிடம் அடிமைப்பட்டு கிடக்கிற போது எனது மனைவி என்னுடன் சிறைக்கு வருவதில் தயக்கமில்லை'' என்று தெளிவுபடுத்தி தனது மனைவி யுடன் சிறைபுகுந்தவர்.

---

* சிவலை இளமதி ''வரலாறு படைத்த வழக்குகள்'' பக்கம் 203

** எஸ் ஏ ரஹீம் ஏ. கோபண்ணா — இந்திய விடுதலைப்போர் வரலாற்றுச்சுருக்கம் 1857—1947'' பக்கம் 10--17

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போராட்டத்தின் போது போலீசாரின் மிருகவெறித் தாக்குதலுக்குள்ளாகி இவருடைய இறுதிக்காலத்தில் தலையும், கைகளும் நரம்புத்தளர்ச்சியால் ஆடிக்கொண்டேயிருந்தது*

பியாரி பீவி

கரூர் நன்னாசாஹிபின் துணைவியார். 1932ல் காங்கிஸில் சேர்ந்து, 1940ல் தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதாகி கடலூர்' வேலூர் பெண்கள் சிறையில் வாடியவர்.

மஹதி

சையது அகம்மது என்ற மஹதி 1907 மே 4-ல் மதுரையில் சையத் அஷ்ரஃப், அன்னை அஜீஸா ஆகியோரின் புதல்வராகத் தோன்றியவர். உருது ஆசிரியராகப் பணியாற்றி 'தீன் துன்யா' 'ஜமீந்தார்', 'பாரதி' பத்திரிகைகளில் கட்டுரை, கதைகள் எழுதியவர். 1933 இல் 'வெடிகுண்டு' என்ற பெயரில் பத்திரிகையைத் துவக்கிய இவரது தீவிரப் போக்கைக்கண்டு அரசு அடக்குமுறைகளை ஏவியது. 'சிட்டிகெஜட்', 'நவயுகம்', 'இஸ்லாமிய சோலை' ஆகிய பத்திரிகைகளை நடத்தியவர்.

ருஷ்யப் புரட்சி, மாவீரர் கான் சாகிப், முதல் சுதந்திர வீரர் குஞ்சாலி மரைக்காயர் போன்ற வீர வரலாறுகளை எழுதியவர். நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்டு பணியாற்றிய இவரது புதல்வர்தான் கவிஞர் அப்துல் ரகுமான் ஆவார்.

ஹாஜி கருத்த இராவுத்தர்

1888-ல் உத்தமபாளையத்தில் பீர்க்குட்டி அம்மாள், செந்தல் இராவுத்தர் தம்பதியரின் புதல்வராக விவசாயக்

* தேசத்தலைவர் கோவிந்தவல்லபபந்திற்கும் இதே மாதிரி தான் நிலைமை ஏற்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடும்பத்தில் பிறந்தவர் முகம்மது மீரான் இராவுத்தர் என்ற ஹாஜி கருத்த இராவுத்தர். அண்ணாரைப் பற்றி உத்தமபாளையம் காமாட்சி பிள்ளை எழுதிய பாடல் இதோ :

கதர்பூண்டிடும் சுந்தரபூமன் இந்த
அங்கண் மாநிலமெங்குமே பிர
சங்கமே செயும் திங்கள் மாமுகன்
அன்பர் யாவரும் பண்புடன் கொண்டாடும்
அருமை மிகுந்த குணாளன் நல்ல
பொறுமையுடைய தயாளன்
தேசுலாவிய தொண்டர் படைதனில்
சேர்ந்துழைக்கும் விசுவாசர் நாளும்
மாந்தர் மகிழுமுல்லாசன் மிகு
தேட்டமான கைராட்டினந்தனை
நாட்டிலே தினமாட்டிடுங் கரன்
தீமையாகிய லாகிரி சேர்ப்போரைச்
சீர்திருத்தம் செய்த தூயன்*

கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், பள்ளி வாசல்கள் பல அமைத்த இந்தப் பெரியவர் ஏழை எளிய மக்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாகவும், இஷாஅத்துல் இஸ்லாம் சபையின் தலைவராகவும் பணியாற்றியவர்.

நாட்டு விடுதலைக்கு தொண்டர் படையிலும், மது விலக்குப் பிரச்சாரத்திலும், கைராட்டினம் சுற்றுவதிலும், இப்படி காந்திய வழியில் நல்ல தொண்டாற்றிய தீரர். 1958 ஆகஸ்ட் 6-ல் மறைந்தார்.

திண்டுக்கல் ஆ. கா. அப்துல்ஹமீது பாகவி

26—11—1876-ல் சேலம் ஆத்தூரில் பிறந்த இவர், ஹாஜி காதிர் முஹ்யத்தீன் இராவுத்தர் அவர்களின்

* இந்து தேசாபிமானிகள் ''இனிய ரமணிய கீதம்'' (1926) பக். 53.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதல்வராவார். கிலாபத் இயக்கமும், ஒத்துழையாமை இயக்கமும் உச்ச கட்டத்திலிருந்தபோது திண்டுக்கல் நகரை தலைமையாகக் கொண்டு அதன் பொதுச்செயலாள ராகப் பணிபுரிந்தார். திருக்குர்ஆனை முதன் முதலில் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டவர். கதர் அணியாத முஸ்லிம்களின் திருமணத்திற்கு செல்வதில்லை என்று தீவிரவாதக் கொள்கை கொண்டவர். கிலாபத், ஒத்துழை யாமை இயக்கத்தில் பெரும் பங்கேற்றார். மதுரை டவுண் ஹாலில் ராஜாஜி தலைமையில் நடந்த மதுவிலக்கு பொதுக்கூட்டத்தில் இரண்டு மணி நேரம் விறுகொண்டு இவர் பேசியதற்குப்பின் வேறு எந்தப் பேச்சாளரும் பேசு வதற்கு பொருள் இல்லை என்ற நிலையை உருவாக்கிய வர். சிறப்பாக பேசும் ஆற்றலாளரான இவர் மௌலானா அபுல்கலாம் ஆசாத்தின் தமிழக வருகையின் போது அவர் களின் உருது சொற்பொழிவை தீந்தமிழில் மொழி பெயர்த் தவர். ஈரோட்டில் நடைபெற்ற கிலாபத் மாநாட்டிலும் கலந்து கொண்டவர்* இவரது இயற்கை மதம் நூலுக்கு ஈ. வெ. ரா. முன்னுரை எழுதியுள்ளார். 1955 ஜுன் 23ல் காரைக்காலில் காலமானார். சிராஜுல்மில்லத் அப்துஸ் ஸமது சாகிப்பின் தந்தையார் இவரே.

சி. அப்துல்ஹகீம் நவாப்

1863ல் வடஆற்காடு கீழ் விஷாரத்தில் பிறந்த இவர் அகில இந்திய காங்கிரசுக்கு பெரிதும் பண உதவி செய்த வர். காந்தியடிகள் சென்னை வந்த போது காங்கிரஸ் நிதிக்கு அவரிடமே நேரில் நிதியளித்தவர். அகில இந்திய காங்கிரஸ் மகாசபை காக்கிநாடாவில் கூடிய போது அதன் செலவில் பெரும்பாலானவற்றை ஏற்றுக் கொண்ட வர் இவரே. 1938ல் ஹஜ் பயணத்திற்காக காலரா ஊசி போட்ட போது காய்ச்சல் ஏற்பட்டு மறைந்த இவர் வாழ் நாளில் 40 லட்சம் ரூபாய் சம்பாதித்து 35 லட்சம் ரூபாயை

* ஏ. ஷேக்தாவூத் "இந்திய விடுதலைப்போரில் இஸ்லாமியர் பங்கு" பக்கம். 65, 66.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காங்கிரஸ் இயக்கத்திற்கும், ஏழை எளிய மக்களுக்கும், தானம் செய்ததினால் தான் இவர் மறைந்த போது "தர்மம் குடை சாய்ந்தது" என்று சுதேசமித்திரனும், "தென்னிந் தியாவின் வணிகமன்னர் காலமானார்" என்று முதற் பக்கத்தில் "இந்து" நாளிதழும், "கலியுகக் கர்ணன் மறைந்து விட்டார்" என்று ராஜாஜியும் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

அல்லாமா நஹ்வி செய்யது அகம்மது மௌலானா

அல்ஹிதாயா, கமருஸ்ஸமான், காலச்சந்திரன் ஆகிய இதழ்களின் ஆசிரியரான அல்லாமா நஹ்வி சையது அகம்மது மௌலானா தேசீய இயக்கத்தில் ஈர்க்கப்பட்டு கதராடை அணிந்து சுதந்திரப் பிரச்சாரம் செய்தார். தனது அல்ஹிதாயா பத்திரிகை மூலம் தேச விடுதலைக்கு வழிகளை அறிவித்தார். இவர் மீது சினங்கொண்ட ஆங்கி லேயே அரசாங்கம் இவரை சிறையில் தள்ளியது. 1948ல் சுதந்திர இந்தியாவில் மரணத்தை தழுவினார்*

டி. எம். காதர்பாட்சா

எஸ். விஸ்வநாதன், செங்கோட்டை கிட்டப்பா, கே. பி. சுந்தரம்பாள், டி. எம். காதர்பாட்சா, போன்ற எண்ணற்றோர் ஸ்பெஷல் நாடக மேடைகளில் தனிப் பாடல்களாக தேசியப் பாடல்களைப் போலீஸ் அடக்கு முறைகளுக்கும், சிறைத்தண்டனைகளுக்கும் கூட துணிந்து பாடிப்பாடி தேசபக்தியை வளர்த்தவர்கள்**

* எம். ஆர். எம். அப்துற்றகீம் "இஸ்லாமிய கலைக்களஞ்சியம்" தொகுதி 1. பக்கம். 172.

** காங்கிரஸ் நூற்றாண்டு விழா மலர் தமிழ்நாடு பக்கம். 260.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டு விடுதலைக்காக மக்கள் மத்தியில் பாடல்களைப் பாடிய கூத்துக் கவிஞர்களின் பங்கிலும்* தமிழக முஸ்லிம் ஆன உறையூர்** டி. எம். காதர்பாட்சாவின் பங்கு சரித்திரத்தில் நிலைத்து நிற்கக்கூடியது. ஆர்மோனியம் வாசிப்பதில் எஸ். வி. வாசுதேவநாயர், கே. எஸ். தேவுடு, உறையூர் டி. எம். காதர்பாட்சா ஆகியோர் அன்றைக்கு பிரபலமானவர்கள். தேசபக்தி பாடல்களை மேடையிலிருந்து பாடாமல் இறங்கமாட்டார் டி. எம். காதர்பாட்சா.

அப்துர் ரஸ்ஸாக்

'சயாஸீ ஊரஸ்ஸாத்' என்று பர்மியர்களால் அழைக்கப்பட்ட தமிழக முஸ்லிம் ஆன அப்துர் ரஸ்ஸாக்

''இது எனக்குச் சொந்தமான
என்னுடைய தாய் நாடு என்று
தனக்கேதான் கூறிக் கொள்ளாத
செத்துப்போன ஆன்மாவைப் பெற்றுள்ள
ஒருமனிதனும், உயிர்வாழ்கின்றானோ?''

என்ற சர் வால்டர் ஸ்காட் கவிதையை அடிக்கடி முழங்கிய வண்ணம், 1920-ல் ரங்கூனில் கல்லூரி மாணவர்களின் ஆங்கிலேய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முக்கியப் பங்கு வகித்தார். மாந்தலேயில் தேசியப் பள்ளியைத் துவக்கி மாணவர்களிடம் தேசிய உணர்ச்சியை உருவாக்கினார்.

1947-ல் பர்மிய அமைச்சரானார். அதே ஆண்டு ஜூலை 17-ல் நடந்த கோரமான துப்பாக்கிச்சூட்டில் பலியானார். இரங்கூனில் நினைவுச் சின்னம் இன்றும் அவருக்கு உள்ளது. பர்மிய மொழியில் அவரது வாழ்க்கை வரலாறும் வெளிவந்திருக்கிறது.

---

* G. O, No. 21, (Pub) dated 6—1—1933.

** கொலம்பியா கிராமபோன், சங்கீதம், பாகம் 20 நாகை. சரவண முதலியார் தொகுத்தது பக். 97.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை அலியார்

மதுரை கொல்லன்பட்டரையைச் சேர்ந்த அலியார் 'சுதந்திரதாகம்' 'தாய் வீடு' 'தாய் நாடு' 'தியாக உள்ளம்' 'நவ இந்தியா' ஆகிய தேசபக்தி நாடகங்களை மதுரை மாவட்ட முழுவதும் நடத்தியவர்.

பர்மா அப்துல்ரஹிமான்

பர்மாவைத் தாயகமாகக்கொண்ட அப்துல்ரஹிமான் என்பவர், மதுரைப் பகுதியில் குடியேறி தேசபக்தி நாடகங்களில் நடித்தவர்.

மதுரை ஏ. பி. மொய்தீன்

'சுதந்திர முரசு' 'விலாவர் ஜரினா' என்ற தேசபக்தி நிறைந்த நாடகங்களில் தோன்றி நடித்தவர். 'மதனகான சபா' உறுப்பினரான மதுரை ஏ. பி. மொய்தீன்.

மதுரை விக்டோரியா ஹாலில் நடைபெற்ற அவரது நாடகங்கள் சுதந்திர எழுச்சியை அந்தக் காலத்தில் பெரிதும் தூண்டியது.

சென்னை எஸ். எஸ். சாப்ஜான்

பெண் வேடத்தில் நாடகத்தில் நடித்துப் புகழ்பெற்றவர் ஸ்தீரிபார்ட் எஸ். எஸ். சாப்ஜான்.

நாடகத்தின் இடையிடையே கேட்போர் உள்ளம் கசியும் விதமாக தேசபக்திப் பாடல்களைப் பாடியவர். திருச்சி தங்கமுத்து தாஸ் எழுதிய 'பஞ்சாப் பகவத் சிங்கம் பக்திமான தங்கம்' என்ற பாடலை இவர் பாடுகிறபோது கூட்டத்திலிருந்து 'ஒன்ஸ்மோர்' (மறுபடியும் ஒருதரம்) என்கிற அளவிற்கு மக்களிடம் செல்வாக்குப்பெற்ற தேசிய நாடகக் கலைஞர் இவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜி எம். பஷீர்

முஸ்லிம் கதாநாயகர் என்ற சிறப்புப் பெயர்பெற்று ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையையும் சுதந்திரதாகத்தையும் ஊட்டுமளவில் 'ராம்-ரஹீம்' என்ற தமிழ் திரைப்படத்தை 1946-ல் தயாரித்தவர் ஜி. எம். பஷீர்.

ஏ. ஏ. ரவூப்

வடஆற்காடு ஆம்பூரில் பிறந்த ஆங்கில எழுத்தாளரான ஏ. ஏ. ரவூப் காந்தியிடம் கடிதத் தொடர்பு கொண்டிருந்தவர், 'MEET Mr. JINNAH, "NEHRU THE MAN" "நேரு என்னும் மேரு" என்ற நூல்களை எழுதிய இவர் 1975ல் காலமானார்.

ஷைகு அப்துல் காதிர் ஆலீம் சாஹிபு

1885 இராமநாதபுரம் நம்புதாளையில் பிறந்து, நெய்னாமுகம்மது ஆலீம் சாஹிபிடம் கல்வி பயின்ற இவர் கிலாபத் இயக்கப் போரில் பெரும் தொண்டாற்றினார். 1955ல் காலமானார்.

முகம்மது முஸ்தபா இராவுத்தர் - அப்துல்லத்தீப் சாகிப்

"திருநெல்வேலி சீமை துணி பகிஷ்காரத்தில் முன்னணியில் நிற்பதை கண்டு நாம் சந்தோசிக்கிறோம், ஜி. சுடலைமுத்துப் பிள்ளை சீமைத் துணி வரவழைத்தார் இதையறிந்த மற்ற கடைக்காரர்கள் 16—6—1931ல் நெல்லையில் கடை அடைப்பு நடத்தினர். பின்பு அவரும் வருந்தி மன்னிப்புக் கேட்டார். ஸ்ரீமான்கள் முகம்மது முஸ்தபா இராவுத்தர், பெருமாள்கோனார், அப்துல்லத்தீப் சாகிப், விஸ்வநாதம்பிள்ளை, திரவியம்பிள்ளை ஆகியவர்களின் தேசபக்தியையும், ஊக்கத்தையும், பாராட்டுகிறோம். திருநெல்வேலி தனது பழைய பெருமையை நிலைநாட்டிவிட்டது *எப்போதும் சீமைத்துணிகளை

* 22—6—1931 டி எஸ். சொக்கலிங்கம் நடத்திய "காந்தி" இதழ் பக்கம். 2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விற்காமல் சுதேசித்துணிகளையே விற்போம் என்று சுதந்திர உணர்வில் செயல்பட்டவர்களில் முகம்மது முஸ்தபா இராவுத்தரும், அப்துல்லத்தீப் சாகிப்பும் அன்றைய நெல்லை பிரபல ஜவுளி வியாபாரிகள் ஆவர். இனி எழுதப்போகும் இந்திய சரித்திரத்தில் உங்கள் திருநாமங்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதை மறவாதீர்கள் ஞாபகத்தில் வையுங்கள்'' என்று* காந்தி பத்திரிகை இவர்களைப் பற்றி அப்போது எழுதியிருக்கிறது.

சையது முகம்மது

1890ல் ராமநாதபுரம் தொண்டியில் பீர்முகம்மது சுலைகாபீவி தம்பதியருக்கு பிறந்த இவர் இலங்கை சென்று பெரும் வணிகரானார். ஊர் திரும்பி ஊராட்சி மன்றத்தலைவராகவும். தேசப்பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர், வெள்ளையரை எதிர்த்து கான் சாகிப் பட்டத்தை தூக்கி எறிந்தார்.

முஹ்யீத்தீன் இப்ராகீம்

''கண்ணியத்தின் மொத்த உருவம்'' என்று காமராசரால் போற்றப்பெற்ற ''பி. ஏ. காக்கா'' என்று அழைக்கப்பட்ட முஹ்யித்தீன் இப்ராகீம் 1908ல் காயல் பட்டணத்தில் பிறந்தார். 'நடமாடும் நூல்நிலையம்' என்று அறிஞர் அண்ணாவாலும், 'மனிதப்புனிதர்' என்று ப. ஜீவானந்தத்தாலும் பாராட்டப் பெற்ற தலைவர்களுக்கெல்லாம் தலைவரான தேசத்தொண்டர் முஹ்யீத்தீன் இப்ராகீம் விடுதலைப் போராட்ட வீரர்களில் முன்னணியிடம் பெற்றவர். இவர் 1971 ஜனவரி 8ல் மறைந்தார்.

---

* 25—6—1931 'காந்தி' பக்கம் 11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை மேலூர் ஏ.ந.வ. முகையதீன் அப்துல்காதிர்

1919 முதல் 1930 வரை மதுரை நகரின் தெருச் சந்துகளிலும் தெருக்களிலும் தானே எழுதிய பாடல்களை சுயமாகப் பாடுவார். உணர்ச்சி பொங்கிடப் பேசுவார். தேச பக்தியை ஊட்டிய இவர் தமிழ்ப் பண்டிதர்.

தேசீய கீதங்கள் பல பாடியும், பிரசுரித்துள்ளார்.

அக்காலத்தில் மதக் கட்டுப்பாடான கோஷா முறையை நீக்கி தனது மனைவியுடன் தெருத் தெருவாய் தேசிய கீதங்கள் பாடிவருவார். தமிழ்நாடு பூராவும் சுற்றி தேச பக்தி உண்டாகும்படி உணர்ச்சி ததும்ப பேசியும், பாடியும் தேச ஊழியம் செய்தவர்.

கிலாபத் இயக்கத்திலும், கள்ளுக்கடை மறியலிலும் பங்கேற்று 1930ம் ஆண்டுக்குள் நாட்டு விடுதலைக்காக இரண்டுமுறை சிறை சென்றவர். மேலூரில் ஜவுளிக்கடை வைத்து வணிகம் செய்தவர்.

மதுரை ஈசன் பிரிண்டிங் ஒர்க்ஸில் ஸ்ரீமகாத்மா காந்திஜி அவர்களைப்பற்றி 'தேசவினியோக சிந்து முதல் பாகம்' என்றும் இதுபோன்ற பல தேச விடுதலைப் பாடல்களை தானே எழுதி, பதிப்பித்து ஊர் ஊராகச் சென்று பாடி மக்களை எழுச்சி கொள்ளச் செய்த இந்த செயல் வீரரின் சேவை சிறப்பாக போற்றத்தக்கது.

புலவர் ஆபீதீன்

முஹம்மது ஹுசைன் சுல்தான்கனி தம்பதியரின் புதல்வராக லாகூரில் 1916ல் பிறந்தவர் புலவர் ஆபீதீன்.

மலையாளக்கரைதனிலே இரத்த ஆற்று ஓட்டம்
மாப்பிள்ளைமார் சேவைகளை நினைவுபடுத்திக் காட்டும்
கலையாக சுதந்திரத்தை காத்தது எம் கூட்டம்
கையை நெஞ்சில் வைத்து கூற என்ன வாட்டம்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொன்னகரம் டில்லியிலே பகதூர்ஷா ஆண்டான்
பொறுமையோடு சுதந்திரமே பெரிதனவே கண்டான்
தன்மானப்பிள்ளைகளைப் பலியிடவும் துணிந்தான்
தள்ளாத வயதிலவன் பர்மாவிலே மாண்டான்
பற்றுமிக்க பரம்பரையில் ஹைதரலி பிறந்தான்
பாரகமே மெச்சும்படி நாட்டுத்தொண்டு செய்தான்
வெற்றிமுரசு கொட்டி முதலில் வீரன் திப்பு எழுந்தான்
வெள்ளையனை விரட்ட எண்ணிப் போர்க்களத்தில் மடிந்தான்

என்ற வீர வரிகளை வடித்துக்காட்டி, இந்திய விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம் பெருங்குடி மக்களை வீறிட்டெழச் செய்து, ஈட்டிமுனையில் நிறுத்தியபோதும் ஈமான் இழக்க மாட்டோம் காட்டிக்கொடுக்கும் கயவர் தம்மை கனவிலும் விடமாட்டோம் என்று மார்தட்டி கிளம்பச் செய்த விடு தலைப் போராட்ட வீரர் புலவர் ஆபீதீன் 1966ல் நாகூரில் காலமானார்.

கான்பகதூர் ஸர் ஏ.கே.ஜி. அஹமது தம்பி மரைக்காயர்

நாகப்பட்டினத்தில் 1878ல் பிறந்தவர். 1919ல் மதராஸ் சட்டசபை உறுப்பினர். முஸ்லிம்களுக்கு பெரு நாள் போன்ற விசேஷங்களுக்கு விடுமுறை நாள் உரிமையை வாங்கித் தந்தவர்.

1918ல் தமிழ்நாட்டில் ஸர் பட்டம் பெற்ற ஒரே முஸ்லிம்.

மாப்பிள்ளைகளுக்கு அடைக்கலம் கொடுத்தவர்

புரட்சியில் கலந்து கொண்ட மாப்பிள்ளை குடியிருந் தால் அந்த கிராமம் முழுவதற்கும் கூட்டு அபராதங்கள் முதலாவது மாப்பிள்ளை அவுட் ரேஞ் சட்டத்தால் விதிக் கப்படும். 'மாப்பிள்ளை' கத்தி எதுவும் வைத்திருக்கக் கூடாது என்று இரண்டாவது மாப்பிள்ளை கத்திச் சட்டம் சொல்கிறது. திருரங்காடியில் இன்றளவும் துப்பாக்கி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குண்டுகள் பள்ளிவாசல் தூண்களில் பதிந்திருக்கும் அளவில் ஆறுமாதம் நடைபெற்ற மாப்பிள்ளை எழுச்சியில் பங்கேற்ற முஸ்லிம்கள் சிலரை குற்றம் சாட்டி வெளியேற்றியது ஆங்கிலேய அரசு. அவர்களில் சிலருக்கு ஆதரவு அளித்து மறுவாழ்வு வழங்கியவர் ஏ. கே. ஜி. அஹ்மது தம்பி மரைக்காயர். அந்த மாப்பிள்ளை முஸ்லிம்களின் சந்ததியினர் இன்றும் நாகைப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர்.* 1924 பிப்ரவரி 12ல் மறைந்தார்.

தளபதி திருப்பூர் எ. எம். முஹைதீன்

திருப்பூர் முஸ்லிம் தெருவில் 1910ல் பிறந்தவர். 1929 முதல் 1933 வரை நாட்டு விடுதலைக்காக காங்கிரஸ் பேரியக்கத்தில் அரும்பணியாற்றியவர்.**

இடிமுழக்கமென மேடைகளில் முழங்கிடும் இவர் தமிழகத்தில் சுயமரியாதை இயக்கத் தலைவர்களுடன் மிகுந்த தொடர்பு கொண்டவர். சென்னை துறைமுகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்.***

'புத்துலகம்' மாத இதழை நடத்தியவர். 1983 பிப்ரவரி 22ல் மறைந்தார்.

வேலாயுதம்பாளையம் எப். எம். பாஜான்

பள்ளிப் பருவத்தில் எட்வர்டு மன்னருக்கு வாழ்த்துக் கூறும் பாடலைப் பாட மறுத்தவர் எப். எம். பாஜான். இவரது தங்கை தேசியப் போராட்டத்தில் சிறை சென்ற பியாரி பீவி. அவரது கணவரே கரூர் நன்னா சாஹிப். அவரது தம்பி பாபா சாஹிப் என்று இவர்கள் குடும்பமே நாட்டு விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டது.

---

* அவரது பெயரர் ஜி. அஹ்மது எழுதிய கட்டுரை 'புனித ரமலான் அறிவு மலர்' 1974 அக்டோபர் பக்கம் 87

** 'இஸ்லாமிய கலைக்களஞ்சியம்' மறுமலர்ச்சி 10வது ஆண்டு மலர் (1961) பக்கம் 501

*** 'காயிதே மில்லத்' எட்டாம் ஆண்டு சிறப்பு மலர் பக்கம் (1986) 258

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகஸ்ட் புரட்சியில் தலைமறைவு இயக்கப் பணிகளில் எஸ். ஏ. ரஹீம் பணியாற்றிய போது திருச்சி - கோவை மார்க்கமாகச் செல்லும் ரயிலை நொய்யல் - புகளூர் இடையில் கவிழ்த்திட டைனமிட்டு வைத்தவர் எப்.எம்.பாஜான். திட்டத்திற்கு மாறாக குட்ஸ் ரெயில் வந்து சேதத்திற்குள்ளாகியது. போலீசார் வலை வீசி தேடினர். எப்.எம். பாஜான் கைது செய்யப்பட்டார். வேலூர் சிறையில் வி. எம். உபயத்துல்லாவுடன் இவரும் சிறையில் அடைக்கப்பட்டார்.

வேலாயுதம்பாளையத்தில் 'நேரு வாலிபர் சங்கம்' அமைத்தும், கதர்ப் பிரச்சாரப் பணிகளிலும் ஈடுபட்டவர் எப்.எம்.பாஜான். 1939ல் திருச்சி மாவட்ட அரசியல் மாநாட்டை சிறப்பாக நடத்திட காரியமாற்றினார். அந்த மாநாட்டில் நாமக்கல் கவிஞரும், கரூர் நன்னா சாஹிபும், திண்டுக்கல் அப்துல் சத்தாரும், குடந்தை S. A. ரஹீமும் கலந்து கொண்டனர்.

பஷீர் அகமத்சையத்

1930ல் தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகக்குழு வேலூரில் டவுண் ஹாலில் கூடிற்று. கூட்டத்தில் வேதாரண்ய உப்புச்சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ராஜாஜியை தலைமை ஏற்கச் செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது. அந்தக்கூட்டத்தில் பசீர் அகமத் சையத் கலந்து கொண்டார். அங்கு ஆங்கிலத்தில் ஓர் அரிய சொற்பொழிவை நிகழ்த்தினார்.

சென்னையில் நடக்கும் பொதுக்கூட்டங்களில் நல்ல தமிழில் அழகாக சொற்பொழிவாற்றுபவர் பசீர் அகமது சையத். தம் சொற்பொழிவின் முடிவில் காந்தியடிகள் பாரத நாட்டை காப்பாற்ற வந்தவர் என்பதற்கு பகவத் கீதையில் 2 சுலோகங்களை வடமொழி உச்சரிப்புடன் (யதா யதாசி .. ஸம்பவாமி யுகே) அறம் தேயும் பொழுதெல்லாம் மறம் தலையெடுக்கும் பொழுதெல்லாம், என்னையே நான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படைத்துக்கொள்வேன். நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும், அறந்தனை நிறுத்தவும் யுகந்தோறும் பிறக்கின்றேன். கண்ணணே காந்தியடிகளாக அவதரித்திருக்கிறார் என்று பசீர் அகம்மது சையத் தம் சொற்பொழிவை முடிப்பார்* இவரைப்போன்று எத்தனை முஸ்லிம்கள் சுதந்திர கீதங்களை தமிழ்நாட்டு மேடைகளில் ஒலித்திருக்கிறார்கள்.

கா. மு அகமது மீரான்

உத்தமபாளையம் தமிழ் இலக்கிய மன்றத்தலைவர் கா. சி. முகம்மது இஸ்மாயில் அவர்கள், இவருடைய பெரிய தகப்பனாரின் புதல்வர் கா. மு. அஹம்மது மீரான் 1931ல் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி யை கோவில்பட்டியில் சந்தித்தார்.

தேசத்திற்குழைத்து தேய்ந்த வள்ளல் வ.உ.சி.வறுமையில் வாடுவதைக் கண்டார். அவர் இல்லத்தில் குவிந்திருந்த புத்தகங்கள், சிலவற்றை தாமே எடுத்துக் கொண்டு போய் அவற்றிற்காக ஐந்நூறு ரூபாயை மணியார்டர் மூலம் அனுப்பிவைத்தார். அந்தப்பணம் சரியான சமயத்தில் வந்தது, தங்களுக்கு மிக்க வந்தனம். தங்கள் நலத்தையும், குடும்ப நலத்தையும் நாடுகிறேன் என்று வ.உ.சிதம்பரம்பிள்ளை 16—11—1931ல் கோவில்பட்டியில் இருந்து அகமது மீரானுக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதியிருக்கிறார்** தேசபக்தருக்கு உதவிய அஹமது மீரானின் தேச பக்தியையும், சுதந்திர வேட்கையையும் என்னவென்று சொல்வது?

---

* ஆக்கூர் அனந்தாச்சாரியார் ''அரசியல்நினைவு அலைகள்'' பக்கம் 33, 34

** ஆ. ரா. வெங்கடாசலபதி ''வ. உ. சி. கடிதங்கள்'' பக்கம் 110

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காஜாமியான் ராவுத்தர்

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியை நிறுவிய இவர் இந்திய சுதந்திரப்போரில் கதர் ஆலையை 50000 ரூபாயில் நிறுவி சுதேசி இயக்கம் வளர உதவினார். ஏராளமான பொருள் இழப்பை நாட்டு விடுதலைக்காக ஏற்றுக் கொண்ட நல் மகனார் இவர்.

கிலாபத் இயக்கப் போரில் கலிபுல்லாஹ் சாஹிபு, என். எஸ். இப்ராஹிம் ராவுத்தர், எம். கே. முஹம்மது இப்ராகிம் சாகிபு ஆகியோர் திருச்சியில் முன்னணியில் நின்றனர்.

தென்காசி சி. நா. ந. செய்யது முகம்மது காசிம்

அன்னிய துணி எரிப்பு சத்தியாகிரகத்தில் 1930-32ல் அலிகார் ஜெயிலில் வாடியவர். 1942ல் வெள்ளையனே வெளியேறு இயக்கப் போரில் கலந்துகொண்டவர். 1953ல் காலமானார்.*

காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர்

கீழக்கரை தேங்காய்பட்டணத்தைச் சார்ந்த முஹம்மது அபுபக்கர் மரைக்காயர் புதல்வராக 1888ல் மதுரையில் பிறந்தவர். காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர் பர்மா காங்கிரசிலும், கிலாபத்திலும் ஒத்துழையாமை இயக்கத்திலும் தீவிரமாகப் பணியாற்றிய இவர் வேல்ஸ் இளவரசர் பர்மாவுக்கு வந்தபோது இலங்கைக்கு அரசாங்கத்தாரால் நாடு கடத்தப்பட்டார். டாக்டர் அன்சாரியுடனும், அலி சகோதரர்களிடமும் தொடர்பு கொண்டவர். 1938ல் தாயகம் திரும்பி 1975ல் காலமானார்.

* தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, சென்னை 12—6—1958ல் அளித்த சான்றிதழில்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மீ. இ. முஹம்மது அப்துல் காதர் சாஹிபு

இஸ்மாயில் கனி என்பவருக்கு ஹிஜ்ரி 1286ல் தென்காசியில் பிறந்த சமூகச் சீர்திருத்தவாதியான மி.இ. முஹம்மது அப்துல்காதிர் சாகிபு கிலாபத் இயக்கப் போரில் கலந்து கொண்டவர். தென்காசிகாசி விஸ்வநாதர் ஆலயத்தின் முன்பு நடைபெற்ற அந்நியத் துணி எரிப்புப் போரில் 1921ல் கலந்து கொண்டார். 1924ல் 'முஸல்மான்' என்ற பத்திரிகையை தென்காசியில் துவக்கி நடத்தினார்.

காதிர் முகையதீன் மரைக்காயர்

1888ல் மதுரையில் பிறந்து, பர்மா காங்கிரசில் பணியாற்றியவர். கிலாபத் ஒத்துழையாமை இயக்கங்களில் பங்கேற்றவர். 'நூருல்ஹக்' மாத இதழை நடத்திய சுதந்திரப் போராட்ட வீரரான இவர் 1975ல் காலமானார்.

அப்துல் ஹமீது கான்

1892ல் பிறந்த இவர், 1924ல் சென்னை நகரசபை உறுப்பினராகவும், சட்டசபை உறுப்பினராகவும் இருந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகச் செயலாற்றினார். 8—5—32ல் கைது செய்யப்பட்ட போது சென்னையில் கம்யூனிஸ்ட் கட்சி வளர்ச்சிக்கு மூலகர்த்தாவாக விளங்கிய இந்தியப் புரட்சி வீரர் அமீர்ஹைதர் கானிடமிருந்து ஆங்கிலேய அரசின் போலீசாரால் எடுத்துக் கொள்ளப்பட்ட புத்தகங்களைத் திருப்பித் தருமாறு 15—3—33ல் சென்னை சட்டசபையில் அப்துல் ஹமீது கான் கேள்வி எழுப்பினார்.

இது கோர்ட்டார் முடிவு செய்ய வேண்டிய விஷயம் என்று சட்டசபையில் தெரிவிக்கப்பட்டது. சுதந்திரப் போராட்ட வீரர் அமீர்ஹைதர்கானுக்காக சென்னை சட்டசபையில் குரல் கொடுத்தவர் அப்துல்ஹமீதுகான்.*

* G. O. No. 346 Public 28—4—1933

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1932ல் சென்னை மேயராகவும், 1946-1950 வரை எம்.எல்.ஏ. ஆகவும், சென்னை சர்வகலாசாலை செனட் மெம்பராகவும் பணியாற்றியவர் இவர்.

பசீர் அகமது சையத்

1900ல் பிறந்த வழக்கறிஞரான இவர் 1931ல் காங் கிரசில் இணைந்து தாய்நாட்டு விடுதலைக்காகப் பாடு பட்டு தமிழ்நாடு காங்கிரஸ் காரியதரிசியாகவும் பணியாற் றினார். 1946-1947ல் சட்டமன்ற உறுப்பினராகவும் 1949ல் ஹைகோர்ட் நீதிபதியாகவும் இருந்த இவரே சென்னை நியூ காலேஜை நிறுவியவர்.

சிவாவின் சீடர் முகமது அலி

வீரமுரசு சுப்பிரமணிய சிவா, வ.உ.சி.யுடன் சிறை சென்று திரும்பி, தொடர்ந்து நாட்டு விடுதலைக்குப் பாடு பட்டு வந்தார். சேலம் பாப்பாரப்பட்டி பாரதபுரத்தில் பாரதாஸ்ரமத்தை அமைத்தார். இந்து முஸ்லிம் ஒற்று மையைப் பேணுவதில் நாட்டங்கொண்டு பணியாற்றி னார்.* குறிப்பிடத்தகுந்த சிவாவின் சீடர்களில் சிதம்பர பாரதி போன்ற பலரில் முகம்மது அலியும் ஒருவர்.** சுப்பிரமணிய சிவாவிற்கு கள்ளுக்கடை மறியலில் மதுரை யில் உதவியாக நின்றவர் முகமதலி.

பி. என். அப்துல் கபீர்

1888ல் தாராபுரத்தில் பிறந்த ஆசு கவியான இவர் வில்லுப்பாட்டுக்கள் மூலம் தேசப்பற்றை வளர்த்து கிலா பத்தில் கலந்து கொண்டார். இவரது வில்லுப்பாட்டு மெட்டைத்தான் பின்னாளில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பின்பற்றிப் பாடினார்.

---

* 21—2—1924 நவசக்தி
** பெ. சு. மணி 'வீரமுரசு சுப்பிரமணிய சிவா' பக்கம். 186

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பண்டிட் அப்துல் மஜீது

1897 ஜனவரி 7ல் முகம்மது தம்பி, மைமூன் அம்மாள் பெற்றோருக்கு இராமநாதபுரம் பனைக்குளத்தில் பிறந்த இவர் தமிழ் அறிவு மிக்கவர். நவசக்தி அலுவலகம் சென்று திரு. வி. கல்யாணசுந்தரனாருடன் தமிழ் பற்றியும், சுதந்திரவேட்கை குறித்தும் விவாதித்து வந்த இவர் கிலாபத் போரில் பங்கேற்றவர்.

அமானி ஹஸரத்

1893 ஜூலை 23ல் இராயவேலூரை அடுத்த பள்ளிகொண்டாவில் ஹாஜி மௌலானா அப்துர்ரஹீம் புதல்வராகப் பிறந்தார். கிலாபத் இயக்கத்தில் தீவிரப்பணியாற்றினார். 1958ல் 'ஷைகுல் மில்லத்' என்ற பட்டம் காயிதே மில்லத் அவர்களால் அன்னாருக்கு வழங்கப்பட்டது.

ஜலில்கான், அப்துல் ஹகீம்

1921ல் சென்னையில் பக்கிங்காம் கர்னாடிக் மில்லில் மிகப்பெரிய வேலைநிறுத்தம் நடந்தது. இதனை சென்னை காங்கிரஸ் கமிட்டியும், கிலாபத் கமிட்டியும் நடத்தியது. தேசத் தொண்டர் திரு. வி. க. வை வில்லிங்டன் நாடு கடத்தப் போகிறார் என்ற செய்தி காட்டுத் தீ போல பரவியது.

4—7—1921ல் லார்டு வில்லிங்டன் நாட்டு விடுதலைக்கான தொழிலாளர் வேலைநிறுத்தம் சம்பந்தமாக சர்க்கரை செட்டியார், இ. என். அய்யர். ஜலீல்கான், அப்துல்ஹகீம் ஆகிய நால்வரையும் திரு. வி. க. வையும் அழைத்துப் பேசினார்.*

மாப்பிள்ளை எழுச்சி நடந்தபோது, சென்னையில் பக்கிங்காம் மில்லில் வேலைநிறுத்தம் ஆறுமாதத்திற்கு

* B. M. TAUNK 'Non-Co-operation Movement in Indian Politics' Page 101

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேல் நடந்தது. ஆங்கிலேயருக்கு எதிராக நடந்த போராட்டத்தில் ஜலீல்கான், அப்துல் ஹகீம் கலந்து கொண்டனர்* என்பதிலிருந்து அந்த தேசிய எழுச்சிப் போரிலும், தமிழக முஸ்லிம்களின் பங்கு உறுதிப்படுத்தப்படுகிறது.

ஈஸிம்ஸா

யூசுப்சாஹிப் என்ற ஈஸிம்ஸா வலங்கைமானில் பிறந்தவர். ரங்கூனில் 'கல்வி' என்ற பத்திரிகையை நடத்தியவர். சிறந்த தேசபக்தர். எப்போதும் கதராடை உடுத்துபவர். 1941ல் தாயகம் திரும்பி 1949ல் காலமானார்.

கலீபுல்லாஹ்

தானிய வணிகர் பிச்சை ராவுத்தரின் புதல்வராக 1888ல் திருச்சியில் பிறந்து, மாவட்டத்தில் முதல் முஸ்லிம் பி.ஏ. பட்டதாரியான முஹம்மது இப்ராஹிம் கலிபுல்லாஹ் கிலாபத் இயக்கத்தில் பங்கு கொண்டவர். சென்னை சட்டசபையில் உறுப்பினராக பணியாற்றியவர். 1950ல் காலமானார்.

காந்தியடிகளின் சுற்றுப்பயணங்களில்

விடுதலைப் போரில் ஈடுபட்டுப் பலமுறை அண்ணல் காந்தியடிகள் தமிழக சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார். அப்பயணங்களை முறையாகத் திட்டமிட்டு நடத்தி உடன் சென்று, உதவிகள் புரிந்து, உபசரித்துத் தாங்களும் அவர் பணியில் பங்கு பெற்ற முஸ்லிம் பெருமக்கள் பலராவர்.

21–5–1915 - மாலை 6 மணிக்கு சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் திறந்த வெளி மைதானத்

* கி. வீரமணி, விடுதலைப்போரும், திராவிடர் இயக்கமும் உண்மை வரலாறு' பக்கம் 469 (திரு. வி. க. வின் நூலிலிருந்து மேற்கோள் காட்டியபடி)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தில் காந்தியும், கஸ்தூரிபாய் காந்தியும் வந்திருந்தனர். அவர்களுக்கு பாராட்டு உபசரிப்பு நடந்தது. குலாம் முகம்மதுமுஜாஹிர், நவாப் செய்யது முகம்மது, லீக்கின் செக்கரட்டரி யாகூப் உசேன் ஆகியோர் அன்றைய கூட்டத்தில் கலந்துகொண்ட முஸ்லிம்கள்,* 'ஏழைக ளுக்கு இரங்கும் லோகோபகாரியான மஹா புருஷனே'' என்று காந்தியை மக்கள் துதித்தபோது அங்கு நின்ற வண்டிக்கார முஹமதியனும் அவ்வாறே செய்தான்**

23—9—1921ல் காந்தி தென்மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தார். மதுரகவி பாஸ்கரதாஸ் ''காந்தி ஓர் பரம ஏழை சந்நியாசி'' என்ற புகழ் மிக்க பாடலை அப் போது தான் பாடினார். திருநெல்வேலியில் கைலாச புரத்தில், தாமிரபரணி ஆற்றங்கரையில் 20000 மக்கள் கூடினர். கூட்டத்திற்குச் தலைமை தாங்கியவர் பேட்டை பெருவணிகர் எஸ். கே. ஷேக் இப்ராஹிம் சாகிப்.**

திருச்சி கான்பகதூர் பி. கலிபுல்லாசாகிப்

19—9—21ல் காந்தி திருச்சிக்கு வந்தார். திருச்சி நகரசபைத் தலைவர் பி. கலிபுல்லாசாகிப் திருச்சியில் காந்திக்கு வரவேற்பு பத்திரம் நகராட்சி சார்பில் அளித் தார். நகராட்சி உறுப்பினர் மௌலவி. சையத் முர்த்துஜா சாஹிப் ஆங்கில வரவேற்புரையை இந்தக் கூட்டத்தில் படித்தார்.

7—3—1925ல் காந்தி சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வந்திறங்கிய போது ''காந்திஜிக்கு ஜே'' ''அல்லாஹு அக்பர்'' என்ற முழக்கங்கள் எழுந்தன. திருவல்லிக்கேணி கடற்கரையில் காந்தி பேசினார்.

* 28—4—1915 சுதேசமித்திரன் (குமரி மலர் 1975 அக்டோபர் மலர் 32, இதழ் 7)

** கே. டி. சீனிவாசன் சுதேசமித்திரனில் எழுதிய கட்டுரை

*** அ. இராமசாமி, ''தமிழ்நாட்டில் காந்தி'' பக்கம் 364.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிலாபத் குழுவின் சார்பில் ஜனாப் எஸ். ஏ. ஷாபிமுகம்மது கலந்து கொண்டார். அந்த சுற்றுப் பயணத்தின் போது திருப்பூர் நகராட்சியில் முஸ்லிம்கள் வரவேற்பு பத்திரம் அளித்தனர்.

சென்னை கான்பகதூர் உஸ்மான் சாகிப்

சென்னை நகரசபைத் தலைவராகப் பணியாற்றியவர் கான்பகதூர் உஸ்மான். 1925ல் வைக்கம் செல்லும் வழியில் சென்னையில் தங்கியிருந்த காந்தியடிகளுக்கு, சென்னை நகரசபையார் கான்பகதூர் உஸ்மான் சாஹிப் தலைமையில் வரவேற்பளித்தனர். வாழ்த்துப் பத்திரம் வழங்கினார்கள்.* அவர்களை வரவேற்றபோது எடுத்த புகைப்படமும் முழுப்பக்கத்தில் அந்த நூலில் பிரசுரமாகியிருக்கிறது**.

16—9—1927ல் காந்தி தஞ்சாவூருக்கு வந்தபோது சந்தித்த தேச அபிமானிகளில் சையத் தாஜ்தீன் ஒருவர்.

2—10—1927ல் முதன் முதலாக காந்தி விருதுநகர் ராமமூர்த்தி சாலையில், விசாலமான திடலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார். இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் விருதுநகரில் நல்லுறவு நிலவியதை காந்தி பாராட்டினார். அப்போதைய நகர்மன்றத் தலைவர் பி. என். ஏ. முகமது இப்ராகிம்.***

21—12—1933ல் காந்தி அரிஜன யாத்திரைக்கு வந்தபோது அருந்ததியபுரத்தில் வரவேற்பளிக்கப்பட்டது. அதன்பிறகு கடப்பை ரங்கையச்செட்டி தெருவில் ராமகிருஷ்ண பக்த ஜனசபை சார்பில் நடந்த வரவேற்பில் ஜனாப் ஷாபிமுகம்மது உபச்சாரப் பத்திரம் அளித்தார்.

---

* எஸ். அம்புஜம்மாள் மகாத்மாகாந்தி நினைவு மாலை (1944) பக்கம். 21.

** முன்சொல்லிய நூல் பக்கம் 28.

*** அ. இராமசாமி ''தமிழ்நாட்டில் காந்தி'' பக்கம்-555

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

24—1—1934ல் நெல்லை நகராட்சி மன்ற மார்க்கெட்டில் காந்தி பேசினார். நெல்லை நகராட்சி மன்ற துணைத்தலைவர் வி. எம். எஸ். முகமது முஸ்தபா இராவுத்தர் வரவேற்பு பத்திரம் வழங்கினார். இந்த சுற்றுப் பயணத்தில்தான் காந்தி அரிஜனங்கள் குற்றாலத்தில் குளிக்க அனுமதிக்கப்படாததைக் கண்டித்து தானும் குளிக்காமல் திரும்பிச் சென்றார். அந்தச் சுற்றுப் பயணத்தில் தூத்துக்குடிக்கு செல்லும் வழியில் ஸ்ரீவைகுண்டம் யூனியன் போர்டு தலைவர் பாட்சா சாகிப் தூத்துக்குடியில் நடைபெற்றக் கூட்டத்தில் காந்தியிடம் பணமுடிப்பு அளித்தார்.

8—2—1934ல் வத்தலக்குண்டில் முஸ்லிம்கள் காந்தியிடம் நிதியளித்தனர். கே. எஸ். அப்துல்காதர் ராவுத்தரின் தாராள உள்ளத்தை காந்தி பாராட்டினார். உத்தமபாளையத்தில் பெரிய சையத் ராவுத்தர் புளியந்தோப்பில் காந்திக்கு வரவேற்பளிக்கப்பட்டது. கம்பத்தில் யூனியன் போர்டு கட்டிடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முஸ்லிம்கள் உற்சாகத்துடன் காந்தியை வரவேற்றனர். பஞ்சாயத்து சார்பான வரவேற்புரையை எம். எஸ். சாகுல்ஹமீது வாசித்தளித்தார்.

கம்பம் அப்துல் ரஹ்மான்

1934ல் கம்பத்தில் காந்தியடிகள் வந்தபோது சி. எ. அப்துல்ரஹ்மான் இல்லத்தில் தங்கினார். கம்பம் பீர்முகம்மது பாவலரும், சையது ராவுத்தரும், உலவை சாஹிபும், செய்யது கான் இராவுத்தரும் அப்போது ஆற்றிய பணிவிடைகள் சொல்லிலடங்காது. திருச்சி, புத்தூரில் முஸ்லிம்கள் சார்பாக வரவேற்புபத்திரம் அளிக்கப்பட்டது. 18-2-1934ல் வேலூரில் மாவட்டக்கழக அலுவலகத்திற்குச் சென்றார். அங்கு மாவட்டக்கழகத் தலைவர் ஜனாப் சி. அப்துல்ஹக்கீம் அவரை வரவேற்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்போது சி. அப்துல்ஹக்கீம் மட்டுமே இருநூறு ரூபாயை காந்தியிடம் வழங்கினார். 12—1—1937ல் காந்தியின் ஆலய வழிபாட்டு சுற்றுப்பயணத்தின் போது கொடைக் கானல் ரோடு ரயில்நிலையத்தில் கோம்பை மனிதாபி மானி சங்கச் செயலாளர் சாகுல்ஹமீது மாலையிட்டு வரவேற்றார். காந்தியின் கடைசி தமிழக சுற்றுப் பயணத்தில் 26—1—1946ல் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு சென்று காந்தி திரும்பியதும் முஸ்லிம் தூதுக்குழு சந்தித்தது. தலைவர் அல்லாபிச்சை, அப்துல்ஹக்கீம், கே. வி. நூருதீன் சாகிப், போய்து மௌலவி சாகிப், கே. ஏ. இப்ராகீம் சாகிப், கே. கே. அப்துர்ரகுமான் சாகிப், கே. மொய்து சாகிப், பி. பி. உமர்கோயா, ஹாஜி சி. உமர் ஆகியோர் அடங்கிய தேசீய முஸ்லிம் தூதுக்குழு சந்தித்துப் பேசியது. பிரபல பாடகி எம். எஸ். சுப்புலட்சுமி யும் அன்று தான் காந்தியை சந்தித்தார்; பஜனைப் பாடல்களும் பாடினார். 28—1—1946ல் திருமதி. யாகூப் ஹாசன் காந்தியைச் சந்தித்தார். அவரிடம், யாகூப் ஹாசன் குர்ஆனைப்பற்றி எழுதிய நூல் ஒன்றை காந்தி கேட்டார்.

காந்தி பத்திரிகையில் காணப்படும் தமிழக முஸ்லிம்கள்

சென்னை சுதேசி ஸ்டோர் சொந்தக்காரர்களான சீமான்கள் கே. செல்லாராம், நூர்மல் இருவரும், தங்களது கடைகளில் பகத்சிங் படம் வைத்து விற்றதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது 18-1 அச்சுச் சட்டப்படி வழக்கும் தொடரப்பட்டது*

தேச விடுதலையில் நாட்டங்கொண்ட தமிழக முஸ்லிம் கள் பலரைப் பற்றிய விபரங்கள் அன்றைய காந்தி இதழில் வெளியாகியுள்ளது. அதன் விபரம் இதோ,

திருச்சி எஸ். பி. எஸ். ஏ. எஸ். முகம்மது சாகிப் திருப்பூர் அப்துல்ரசீத்** எம். எஸ். எம். தோழர் நிதி

* 10-3—33 'காந்தி' பக்கம் 127.
** 23-12—1932 'காந்தி' பக்கம் 264,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழங்கிய எஸ். அப்துல் முத்தலிப்பு* கே. டி. காதர்பாட்சா சாஹிப், எஸ். சையத் முகம்மது** திருப்பூர் கே. எம். ஷேக்சாய்பு, ஒர்க்ஷாப் டிரைவர் திருச்சி. கே. அப்துல் மாலிக், ஏ. குத்புதீன்சாகிப், உறையூர் எம். சேக்பாபா கயத்தாறு கே. காதர்மீரான், எம். ஏ. அப்துல்காதர், திருநெல்வேலி பி. எம். மதார், தென்காசி எஸ். முகம்மது முஸ்தபா, ஷெயிக்முகம்மது சாகிப்*** மானாமதுரை டி. எஸ். செய்யது காசீம், நாகூர் மு. யூ. நவாபு சாய்பு மரைக்காயர்**** கல்லிடைக்குறிச்சியில் கரிக்கடை நடத்தி வந்த தேசாபிமானி எஸ். எம். அப்துல்லா சாகிப்***** அதிராம்பட்டினம் செக்கடித் தெருவில் வாழ்ந்த செ. ந. முகம்மது அபுபக்கர்****** அதிராம்பட்டிணம் நடுத் தெரு செய்குதம்பி மரைக்காயர், மானாமதுரை பஞ்சாயத்து போர்டு தலைவர் எம். மஸ்தான் கனி அம்பலம்******* அடியக்கமங்கலம் ''பாவலர் வில்லா'' எஸ். புருஹானுத் தீன், ரங்கூன் நவீன கதா புத்தக சாலை, மாண்டகொமரி தெரு, எம் அப்துல் மஜீத்******** சென்னை திருவல்லிக் கேணி எல்லிஸ் ரோடு டர்னர் மீயான்ஜான், வந்தவாசி கதர் காதர்மீரான், மரைக்காயர் தெரு கே. ஓ. எ. தாவூத் மரைக்காயர், பூந்தமல்லி வெற்றிலை பாக்கு கடை முகம்மது கனி சாகிப், ராஜமகேந்திரவரம் கின்னிங் பேட்டை லால்சாகிப் வீடு ''சிக்கந்தர்பாட்சா'' திருவெண்ணெய்நல்லூர் பாக்ஸ் பீடிக்கடை தாதாசாகிப், பல்லாவரம் குலாம் தஸ்தகிர் சாகிப், நீடாடாவோல், மேல் கோதாவரியில் சோடாக்கடை நடத்திய

*	25—12—1932	'காந்தி'	பக்கம்.	272.
**	30—12—1932	,,	,,	288.
***	15—2—1933	,,	,,	47.
****	17—2—1933	,,	,,	55.
*****	29—3—1933	,,	,,	187.
******	31—3—1933	,,	,	195.
*******	12—4—1933	,,	,,	238.
********	14—4—1933	,,	,,	248.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேக் இப்ராகீம் ஷெரீப், 30 பந்தர் தெரு, சென்னையில் சி. அப்துல் லத்தீப் கம்பெனியில் பணிபுரிந்த முகம்மது இப்ராகீம், வடாற்காடு பெரியனாம் பேட்டை அமினா தெரு, அமினா அப்துல்ரஹீம். சென்னை பெரியமேடு 62, சைடன் ஹாம்ரோட் ஆலங்காயம் சையது மூசா கம்பெனி டிரைவர் அப்துல்சுபான் சாகிப். நாயுடு பேட்டை கடை வியாபாரம் பி. முகம்மதுகான். பறங்கிப்பேட்டை அத்தர் வியாபாரம் சேக்அப்துல்ரகீம்* சென்னை-20, ஜௌஹர் ஹுசைன் தெரு மீர்சாகிப், பேட்டை குலாம் கௌஸ் சாகிப், குடியாத்தம் அஸளைப் பேட்டை கே. அப்துல் ரஹிம் சாகிப், ராபர்ட்ஸன்பெட்மார்க்கட் பீடி வியாபாரம் அப்துல் சர்தார் சாகிப், சிதம்பரம் தங்கம் வெள்ளி, வியாபாரம் ஜி. அப்துல் சுபஹான் சாகிப், மேல்விஷாரம், கீழண்டை பஜார்ஷாப்புக்கடை டி. அப்துல் சுக்கூர், சென்னை-13 சைடன்ஹாம் ரோடு, பெரியமேடு முத்துமுகம்மத் ஆஜாம் சாகிப்** என்று தொடர்ந்து கொண்டே செல்லும் பட்டியலில் தேசாபிமானம் கொண்ட தமிழக முஸ்லிம்களில் இவர்கள் சிலர்.

சுதந்திரச்சங்கு இதழில் வெளிவந்த சுதந்திரச் செய்திகளில் முஸ்லிம்கள்

சென்னை மாகாணத்தில் நவம்பர் மாதத்தில் சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாக தண்டிக்கப்பட்டவர்கள் 124 பேர், சிறையில் இருப்பவர்கள் 1415 பேர்.

நாமக்கல் தொண்டர் அப்துல்கபூர் சாகிப், மகாத்மா காந்தியின் உபவாஸ விஷயமாக நாட்டு விடுதலைக் கோஷங்களுடன் ஊர்வலம் சென்றதற்காக அவருக்கு 6 வார சிறைத்தண்டனையும், ரூபாய் 25 அபராதமும் விதிக்கப்பட்டது.*** வேலை நிறுத்தம் செய்துவரும்

* 8—5—33 காந்தி பக்கம் 311
** 7—5—33 காந்தி பக்கம் 227
*** 15—12—32 சுதந்திரச் சங்கு பக்கம் 8

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எம்.எஸ்.எம். தொழிலாளர் நிதிக்கு கரூர் அசன் சாய்பு* நிதி அனுப்பினார். சென்னையில் சிலோன்போட் மெயிலை நிறுத்தி தேசவிடுதலைக்கான துண்டுப்பிரசுரம் வழங்கியதற்காக அப்துல்ஹமீத் என்பவர் கைதானார்** தேச விடுதலைக்காக நடைபெற்ற போராட்டத்தில் சென்னையில் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தியதாக மௌலானா அப்துல் காதர் என்பவருக்கு 5 மாத சிறைத்தண்டனையும், ரூபாய் 20 அபராதமும் விதிக்கப்பட்டது***

தேசபக்தனில் வந்த செய்திகளில் தேசபக்த முஸ்லிம்கள்

மதுரையின் இரண்டாவது சர்வாதிகாரியான மௌலானா சாகேப்பிற்கு இரண்டு வருடம் கடுங்காவல் **** காந்திஜியின் ஆருயிர் தோழர் தர்சனா உப்பளத்தை முற்றுகை செய்த வீரர் இமாம் சாகேப் அப்துல் காதர்*****

அப்துல்ரகீம்

டெல்லி சட்டசபையில் சர்ஹரிசிங் ஹவரின் அடக்குமுறைக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து, சர்க்காரின் அடக்குமுறையைக் கண்டித்து பேசினார்******

தென் தேசத்தில் பலர் கைதியாகுதல்

திருமங்கலத்தைச் சேர்ந்த காதர் மொய்தீன் இராவுத்தர் துண்டுப்பிரசுரங்களை வழங்கியதற்காக ஒருவருட கடுங்காவல் தண்டனை பெற்றார். அதே குற்றத்திற்காக தஞ்சைக்கு அருகில் உள்ள கண்டியூர்வாசியான ராஜா முகம்மதுவிற்கு ஐந்து மாதமும் 50 ரூபாயும் தண்டனை*******

---

* 02-01-1933 சுதந்திரச்சங்கு பக்கம் 8

** சங்குசுப்பிரமணியனின் "சுதந்திரச்சங்கு" 13 2-1933 இதழ் பக்கம் 64

*** 27-2-1933 சுதந்திரச்சங்கு பக்கம் 112

**** 9-1-1932 என். தண்டபாணிபிள்ளையின் தேசபக்தன் வாரம்முறை இதழ் பக்கம் 8

***** 14-12-1931 தேசபக்தன் பக்கம் 2

****** தேசபக்தன் 6-2-1932 பக்கம் 2, 3

******* 8-2-33 தேசபக்தன் பக்கம்7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாமக்கல்லில் யூனியன் போர்டு பிரசிடெண்டான ஜனாப் மகமத்உஸ்மான் சாகிப்பும், மற்றொருவரும் கைதானார்கள். ''ஊழியன்'' பத்திரிகை அதிபர் ராய சொக்கலிங்கமும் கைது செய்யப்பட்டார்*

தேசாபிமானமிக்கவரும், தக்கலையைச் சேர்ந்தவருமான எம். கே. பக்ருத்தீன், சிங்கப்பூரிலிருந்து கொண்டு தேசபக்தன் இதழ்களில் கவிதைகள் எழுதினார்** தஞ்சை பாபநாசத்தில் சட்டமறுப்பு இயக்க சர்வாதிகாரி அமிருதலிங்க முதலியார் மறியல் செய்த குற்றத்திற்காக 6 மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றார். அவருக்கடுத்ததாக ஜனாப் அப்துல்மஜித்சாகிப் சர்வாதிகாரியாக போராட்டத்தில் இறங்குவார் என்று தேசபக்தனில்*** செய்தி வெளியாகியுள்ளது.

ஹாஜா ஷெரீப்

காந்தியடிகளிடமிருந்து வரும் தகவல்களை சென்னை நகரப்பிரமுகர்களிடம் கொண்டு போய் சேர்க்கும் அந்தரங்கப் பணியாளராய் திறமையுடன் செயல்பட்டவர் ஹாஜாஷெரிப்

பம்பாயில் உடல் நலமின்றி காந்தி இருந்த போது அவருக்குத் தேவைப்பட்ட மருந்தொன்று சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருந்தது. நடப்பதோ வெள்ளையர் ஆட்சி. அந்த மருந்தை வாங்கி அனுப்பிட பெரும் முயற்சி எடுத்து, வெற்றி பெற்று இரவோடு இரவாக பம்பாய்க்கு விமானத்தில் அனுப்பி வைத்து காந்தியின் உயிரைக் காத்தவர் சிண்டியா கம்பெனி சென்னை ஏஜெண்ட் ஹாஜா ஷெரீப்****

---

* 14-1-1932 தேசபக்தன் பக்கம் 6

** 1-2-1932 ,, ,, 2

*** 22-2-1932 ,, ,, 7

**** ஆனந்த விகடனில் 'இவரைப்பற்றி' என்ற பகுதியில் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு அவரே அளித்த பேட்டியில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்நாட்டில் சட்டமறுப்பு

நாகப்பட்டணத்தில் சென்ற வாரமத்தியில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி காங்கிரஸ் கொள்கைகளை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்று பிரசங்கம் செய்து கைதியான ஸ்தல சர்வாதிகாரியான லட்சுமண நாயுடுவும், நாகூர் நவாப்சாகிப் மரைக்காயரும், தலா 7 மாதக் கடுங்காவலும், சி. வகுப்புச்சிறைவாச தண்டனையும் பெற்றனர்*

வரலாற்று ஏடுகளின் வைர வரிகளில் இடம் பெறத் தக்கவர்களான இவர்கள் பற்றிய செய்திகள் இவ்வாறு அந்தக் காலக்கட்டத்திலேயே செய்திகளாகி உள்ளன.

வாணியம்பாடி முஸ்லிம்கள்

ஆங்கிலேயப் படைத்தலைவரை ஹைதர்அலி கைது செய்து சிறைபிடித்த பெருமையைக் கொண்டது வாணியம்பாடி. 1857ல் நடைபெற்ற சுதந்திரப் போரில் அனாதைகளானவர்களுக்கு ஆதரவளிக்கும் முறையில் அனாதை இல்லத்தை ஏற்படுத்தியதோடு, 'அல்யதாமா' என்ற இதழையும் துவக்கிய இவ்வூர் முஸ்லிம்களின் கிலாபத் இயக்க காலப் பணிகள் அளவிடற்பாலது. தங்கள் ஊரில் கிலாபத் கருத்தரங்கை நடத்தியதோடு, நஸீர், குஸ்ஸாரை ஷோகான் என்னும் உருது நாளிதழ்களையும் முஹம்மதியமித்திரன் என்ற தமிழ் நாளிதழையும் நடத்தினர்.**

தென்காசியில் தேசிய முஸ்லிம் சங்கம்

7—3—1937ல் தென்காசியில் தேசிய முஸ்லிம் சங்கம் அமைக்கப்பட்டது. இந்திய விடுதலைக்காகவும், இந்து

---

* 14-3-1932 தேசபக்தன் பக்கம் 7

** எம். ஆர். எம். அப்துற்றகீம் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் மூன்றாம் தொகுதி பக். 838.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் அது எண்ணற்ற இன்னல்களை அனுபவித்துள்ளது.

ஏ. எம். அகம்மது மீரான் சாகிப்

நெல்லை ஜில்லா போர்டிலும், காங்கிரஸ் கமிட்டியில் உபதலைவராகவும், வழக்கறிஞராகவும் பணியாற்றியவர். சேர்மென் முதலாளி என்று அழைக்கப்படுபவர், தென்காசி முனிசிபல் சேர்மனாக இருந்தவர். கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டவர் ஏ. எம். அகமது மீரான் சாகிப். அவர் மௌலவி ஹாபிஸ் பட்டம் பெற்றவர். அவர்களுடன் எண்ணற்ற முஸ்லிம்களும், தென்காசியில் தேச விடுதலைக்காகப் பணியாற்றினார்கள். யக்னேஸ்வரசர்மா டி. எஸ். சொக்கலிங்கம், சோமயாஜுலு ஆகியோருடன் தொடர்பு கொண்ட இவருடன் அந்தக் காலக்கட்டத்தில் முகைதீன் பிள்ளை இராவுத்தர், முகையதீன் இராவுத்தர், தென்காசி வடகரை பாசி இராவுத்தர், முகையதீன் பிச்சை ராவுத்தர் போன்றவர்கள் முக்கியமானவர்கள். அந்தக் காலக்கட்டத்தில் நான் சிறிய பையன் என்று தென்காசி கே. முகம்மது முஸ்தபா கமால் சாகிப் கூறினார்* தமிழகம் முழுவதிலும், முக்கிய நகரங்களில் தேசிய முஸ்லிம் சங்கம் 1937ம் ஆண்டு வாக்கில் அமைக்கப்பட்டது. அதனைப் பற்றி எழுதினால் விரியும் என்பதால் சான்றுக்காக ஒன்று மட்டும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் சுதந்திரப் போரில் ஈடுபட்ட செம்மல்கள் பலர் பற்றிய குறிப்புக்களை மாவட்ட வாரியாகக் காண்போம்.

சென்னை மாவட்டம்

சென்னை இராயபுரத்தைச் சேர்ந்த அ. அப்துல் அஜீஸ், நீலன் சிலை சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு 15 நாட்கள் சென்னை சிறையில் வாடியவர்.

---

* 44, செய்யது மசூதி தெரு, தென்காசியில் வாழ்ந்து வரும் அன்னாரிடம் நூலாசிரியர் நேரில் கேட்டறிந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்நாட்டில் சட்டமறுப்பு

நாகப்பட்டணத்தில் சென்ற வாரமத்தியில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி காங்கிரஸ் கொள்கைகளை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்று பிரசங்கம் செய்து கைதியான ஸ்தல சர்வாதிகாரியான லட்சுமண நாயுடுவும், நாகூர் நவாப்சாகிப் மரைக்காயரும், தலா 7 மாதக் கடுங்காவலும், சி. வகுப்புச்சிறைவாச தண்டனையும் பெற்றனர்*

வரலாற்று ஏடுகளின் வைர வரிகளில் இடம் பெறத் தக்கவர்களான இவர்கள் பற்றிய செய்திகள் இவ்வாறு அந்தக் காலக்கட்டத்திலேயே செய்திகளாகி உள்ளன.

வாணியம்பாடி முஸ்லிம்கள்

ஆங்கிலேயப் படைத்தலைவரை ஹைதர்அலி கைது செய்து சிறைபிடித்த பெருமையைக்கொண்டது வாணியம்பாடி. 1857ல் நடைபெற்ற சுதந்திரப் போரில் அனாதைகளானவர்களுக்கு ஆதரவளிக்கும் முறையில் அனாதை இல்லத்தை ஏற்படுத்தியதோடு, 'அல்யதாமா' என்ற இதழையும் துவக்கிய இவ்வூர் முஸ்லிம்களின் கிலாபத் இயக்க காலப் பணிகள் அளவிடற்பாலது. தங்கள் ஊரில் கிலாபத் கருத்தரங்கை நடத்தியதோடு, நஸீர், குஸ்ஸாரை ஷோகான் என்னும் உருது நாளிதழ்களையும் முஹம்மதியமித்திரன் என்ற தமிழ் நாளிதழையும் நடத்தினர்.**

தென்காசியில் தேசிய முஸ்லிம் சங்கம்

7—3—1937ல் தென்காசியில் தேசிய முஸ்லிம் சங்கம் அமைக்கப்பட்டது. இந்திய விடுதலைக்காகவும், இந்து

* 14-3-1932 தேசபக்தன் பக்கம் 7

** எம். ஆர். எம். அப்துற்றகீம் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் மூன்றாம் தொகுதி பக். 838.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் அது எண்ணற்ற இன்னல் களை அனுபவித்துள்ளது.

ஏ. எம். அகம்மது மீரான் சாகிப்

நெல்லை ஜில்லா போர்டிலும், காங்கிரஸ் கமிட்டியில் உபதலைவராகவும், வழக்கறிஞராகவும் பணியாற்றியவர். சேர்மென் முதலாளி என்று அழைக்கப்படுபவர், தென்காசி முனிசிபல் சேர்மனாக இருந்தவர். கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டவர் ஏ. எம். அகமது மீரான் சாகிப். அவர் மௌலவி ஹாபிஸ் பட்டம் பெற்றவர். அவர் களுடன் எண்ணற்ற முஸ்லிம்களும், தென்காசியில் தேச விடுதலைக்காகப் பணியாற்றினார்கள். யக்னேஸ்வரசர்மா டி. எஸ். சொக்கலிங்கம், சோமயாஜுலு ஆகியோருடன் தொடர்பு கொண்ட இவருடன் அந்தக் காலக்கட்டத்தில் முகைதீன் பிள்ளை இராவுத்தர், முகையதீன் இராவுத்தர், தென்காசி வடகரை பாசி இராவுத்தர், முகையதீன் பிச்சை ராவுத்தர் போன்றவர்கள் முக்கியமானவர்கள். அந்தக் காலக்கட்டத்தில் நான் சிறிய பையன் என்று தென்காசி கே. முகம்மது முஸ்தபா கமால் சாகிப் கூறினார்* தமிழகம் முழுவதிலும், முக்கிய நகரங்களில் தேசிய முஸ்லிம் சங்கம் 1937ம் ஆண்டு வாக்கில் அமைக்கப்பட்டது. அதனைப் பற்றி எழுதினால் விரியும் என்பதால் சான்றுக்காக ஒன்று மட்டும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் சுதந்திரப் போரில் ஈடுபட்ட செம்மல்கள் பலர் பற்றிய குறிப்புக்களை மாவட்ட வாரியாகக் காண்போம்.

சென்னை மாவட்டம்

சென்னை இராயபுரத்தைச் சேர்ந்த அ. அப்துல் அஜீஸ், நீலன் சிலை சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு 15 நாட்கள் சென்னை சிறையில் வாடியவர்.

---

* 44, செய்யது மசூதி தெரு, தென்காசியில் வாழ்ந்து வரும் அன்னா ரிடம் நூலாசிரியர் நேரில் கேட்டறிந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னை அ. அப்துல்லத்தீப் பாரூக் சென்னை பல்லாவரத்தில் இவரது பெயரால் தெரு இன்றும் உள்ளது. 1921ல் ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டு 6 மாதம் கடலூர் சிறையில் வாடியவர். சென்னை மாகாண சட்ட சபை உறுப்பினராக இருந்தார்.

சென்னை எஸ். எம். ஏ. அக்பர் யுத்தகால எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கேற்று 1941ல் பாதுகாப்புச் சட்டப் படி கைதாகி வேலூர் ஜெயிலில் 4½ மாதங்கள் வாடினார்.

சென்னை அ. அப்துல்கபூர் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்று 6 மாதம் சென்னை சிறையில் விடுதலைக்காக வாடினார்.

பார்க்டவுண் மு. அப்துல் ஜலால் நபி தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு ஒன்றரை வருடம் பெல்லாரி சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

மு. அப்துல்ஜனாப், பத்திரிகையாளர்; பார்க் டவுணைச் சேர்ந்தவர். 1941ல் தனி நபர் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டு அலிப்புரம் சிறையில் ஒன்றரை வருடங்கள் விடுதலைக்காக வாடியவர்.

சென்னை பாவா இப்ராகீம் சாகிப் சட்டமறுப்பு இயக் கத்தில் ஈடுபட்டு ஆறு மாதம் அலிப்புரம் சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

சென்னை மௌண்ட் ரோடு (அண்ணாசாலை) தாயார் சாகிப் தெரு எல். எம். எஸ். குலாம்அகம்மது ஒத்துழை யாமை இயக்கத்தில் பங்கேற்று 9 மாதங்கள் சென்னை மத்திய சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

செங்கற்பட்டு கே. ஏ. ஹமீதுகான் ஒத்துழையாமை இயக்கத்திலும், சட்ட மறுப்புப் போரிலும் பங்கேற்று சிறைத் தண்டனையடைந்தவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னை புதுப்பேட்டை எஸ். எம். இமாம் காசீம் சாகிப். 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று 18 மாதம் சென்னை சிறையில் வாடியவர்.

சென்னை வி. எம். ஏ. காதீர் 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று சென்னை சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

இராயப்பேட்டை ஹாஜி. அப்துல்ரகுமான் ஒத்துழையாமைப் போரில் பங்கேற்று சிறை சென்றவர்.

திருவல்லிக்கேணி ஹாஜி. முகம்மது அப்துல்ரகுமான் (1870–1949) 1921ல் ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தில் பங்கேற்று சென்னை சிறையில் ஓராண்டு விடுதலைக்காக வாடியவர்.

சென்னை லத்தீப் ஆப்கானி ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று வேலூர் சிறையில் விடுதலைக்கு வாடியவர்.

முத்தியாலுபேட்டை ஜார்ஜ் டவுண் அ. லத்தீப் சாஹிப், நீலன் சிலை சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று 1927ல் ஒரு வாரம், சென்னை சிறையில் வாடியவர்.

ஆயிரம் விளக்கு செ. முத்தலி பாட்சா, தையற்கலைஞரான இவர் 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று 15 மாதங்கள் அலிப்புரம் சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

சென்னை முஹம்மது இப்ராகீம் 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று பாதுகாப்புச் சட்டப்படி கைதாகி 8 மாதங்கள் 2 வாரம் சென்னை சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

சென்னை மீர்குலாம் அலி, 1942 ஆகஸ்ட் புரட்சியில் 18 மாதங்கள் சென்னை சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னை வணிகர் முகம்மது கௌது சாகிப், ஒத்துழை யாமை இயக்கத்தில் பங்கேற்று கடலூர் சிறையில் 6 மாதங்கள் விடுதலைக்காக வாடியவர்.

சென்னை முகம்மது ஹுசைன் ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று ஒரு வாரம் சென்னை சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

சென்னை முகம்மது சாலி இராவுத்தர், நீல் சிலை சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு 3 மாதங்கள் சென்னை சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

சென்னை முகம்மது அமீர்அலி சாகிப், ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றவர். குல்தஸ்தா-இன்-ரஜாக்கர் என்ற உருது துண்டுப்பிரசுரங்களை வழங்கியதால் 124. ஏ. பிரிவில் வழக்குத் தொடரப்பட்டு, விடுதலைக்காக சிறை சென்றவர்.

சென்னை பி. எம். முகம்மது இஸ்மாயில் இராவுத்தர் தனி நபர் சத்தியாக்கிரகத்திலும், ஆகஸ்ட் புரட்சியிலும், பங்கேற்று 6 மாதங்கள் பெல்லாரி, அலிப்புரம் சிறைகளில் விடுதலைக்காக வாடியவர்.

சென்னை ஷேக் இமாம், சென்னை சட்டசபையில் பேசப்பட்டவர் இவர். சட்ட மறுப்புப்போரில் பங்கேற்று சென்னை சிறையில் வாடிய ஷேக் இமாமை வ. உ. சி. யைப் போல செக்கை இழுக்கச் சொல்லி துன்புறுத்தப்பட்டு சிறை அதிகாரிகளால் அடித்து வீழ்த்தப்பட்டவர்.

கோவை பெரியார் மாவட்டங்கள்

ஈரோடு சே. அப்துல்கனி, ஒத்துழையாமை இயக்கத்தில் கோவை மத்திய சிறையில் ஒரு மாதம் வாடியவர்.

ஒண்டிப்புதூர் கு. அப்துல்மஜித், 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று கண்ணனூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர் சிறப்பு ஜெயிலில் $15\frac{1}{2}$ மாதங்கள் இருந்தவர். வைக்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போராட்டத்தில் கலந்து கொள்ள ஈ. வெ. ரா. பெரியார் சென்ற போது அவருடன் கோயம்புத்தூரிலிருந்து தேச பக்தர் அப்துல்ரஹிம் அவர்களும் சென்றார்கள்*

கோயம்புத்தூர் ஏ. கே. அப்துல்ரகீம் 1900ல் பிறந்தவர். 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று 8 மாதம் 7 நாட்கள் வேலூர் சிறையில் வாடியவர்.

மேட்டுப்பாளையம் அப்துல்ரகீம் 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று கோவை, வேலூர், தஞ்சாவூர் சிறையில் 25 மாதங்கள் வாடியவர், நகர்மன்ற துணைத்தலைவராகப் பணியாற்றியவர்.

பொள்ளாச்சி ப. அப்துல்ரகுமான் 1932ல் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்று திருச்சி சிறையில் இரண்டு வருடங்கள் வாடியவர்.

ஈரோடு எம். இ. அப்துல்ரஹிமான் சாகிப், 1942 ஆகஸ்ட் புரட்சியில் ஈடுபட்டு அலிப்புரம் சிறையில் ஆறு மாதம் வாடியவர்.

கோவை பட்டு நூல்காரத் தெரு ம. அப்துல் ரகுமான், 1930ல் கள்ளுக்கடை மறியலில் கலந்துகொண்டு அலிப்புரம் சிறையில் 4 மாதங்கள் வாடியவர்.

ஈரோடு க. அப்துல்ரசாக், ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு கோவைச் சிறையில் ஒரு மாதம் வாடியவர்.

மேட்டுப்பாளையம் அ. அப்துல்ஸலாம் ஆசாத் 1936லும். 1942 ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கேற்று கோவை வேலூர், அலிப்புரம், பெல்லாரி, தஞ்சாவூர் சிறையில் ஒரு வருடம் இரண்டு மாதங்கள் இருந்தவர்.

---

* 'DALIT VOICE' December 1-15, 1992 Vol. 12, No. 2 Page 21.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோயம்புத்தூர் கா. அப்துல்சுபான் 1936ல் இயக்கத்திலும், 1941ல் தனி நபர் சத்தியாக்கிரகத்திலும் பங்கேற்று கோவையிலும், அலிப்புரம் சிறையிலும் ஆறு மாதம் வாடியவர். நகர காங்கிரஸ் கமிட்டி துணைத்தலைவராக இருந்தவர்.

ஈரோடு அ. அப்துல்வகாப், ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று ஒரு மாதம் 188 ஐ. பி. சி. படி தண்டிக்கப்பட்டு கோவைச் சிறையில் வாடியவர்.

ச. அப்துல்வகாப், உப்புச் சத்தியாக்கிரகப்போரில் கலந்து கொண்டு 5 மாதங்கள் கோவையிலும் கண்ணனூரிலும் சிறையில் வாடிய இவர், 21/308 கோவை தியாகி குமரன் தெருவில் வாழ்ந்தவர்.

திருப்பூர் செ. அக்பர், 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று அலிப்புரம் சிறையில் 3 மாதம் வாடியவர்.

ஈரோடு மு. இப்ராகீம், ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டு 1 மாதம் கோவைச் சிறையில் வாடியவர்.

திருப்பூரில் பெரிய பஜார் தெருவைச் சேர்ந்த செ. இப்ராகீம் கனி, 1939, 1942 புரட்சிகளில் ஈடுபட்டு அலிப்புரம் சிறையில் 6 மாதம் வாடியவர்.

ஈரோடு அ. காதர்பாட்சா, ஒத்துழையாமைப்போரில் கலந்து கொண்டு ஒரு மாதம் கோவை சிறையில் வாடியவர், பல்லடத்தில் 1908ல் பிறந்த காதர்பாட்சா படித்தறிந்தவர். 1922 கிலாபத் இயக்கத்திலும், 1930 கள்ளுக்கடை மறியலிலும், கலந்து கொண்டவர்.

திருப்பூர். எஸ். ஏ. காதர், 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று அலிப்புரம் சிறையில் 18 மாதங்கள் வாடியவர்.

ஈரோடு ஹி, காதர்உசேன், ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு 1 மாதம் கோவைச் சிறையில் வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோயம்புத்தூர் ஹயூம்சாகிப், 1932ல் இயக்கப் போராட்டங்களிலும், 1941ல் தனி நபர் சத்தியாக்கிரகத்திலும் ஈடுபட்டு சென்னை சிறையில் ஒன்றரை மாதம் வாடியவர்.

சத்தியமங்கலம் கா. காதர்முகையதீன், கள்ளுக்கடை மறியலிலும், அந்நியத்துணி எதிர்ப்பிலும், கலந்து கொண்டு 4 மாதம் கோவை, வேலூர், சிறையில் வாடியவர்.

உடுமலைப்பேட்டை அ. முகம்மது, 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் ஈடுபட்டு பத்து மாதம் 14 நாட்கள் அலிப்புரம் சிறையில் வாடியவர்.

உடுமலைப்பேட்டை கனியூர் மு. முகம்மது, 1930ல் உப்புச்சத்தியாக்கிரகத்திலும், கள்ளுக்கடை மறியலிலும், கலந்து கொண்டு ஆறு மாதம் திருச்சி சிறையில் வாடியவர்

ஈரோடு ப. முகம்மது அப்துல்லா, ஒத்துழையாமைப் போரில் பங்கேற்று ஒரு மாதம் இரண்டு வாரம் கோவைச் சிறையில் சிறைவாச மேற்றவர்.

அ. முகம்மது அப்துல்ரசீத் 1942 ஆகஸ்ட் புரட்சியில் ஈடுபட்டவர்; கற்றறிந்தவர். பொள்ளாச்சி நாச்சிமுத்து கவுண்டர் தெருவைச் சேர்ந்த இவரது தேச விடுதலைப் பணி சிறப்பிற்குரியது.

ஈரோடு முகம்மது அனீப், 1921ல் ஒத்துழையாமைப் போரிலும், கள்ளுக்கடை மறியலிலும் ஈடுபட்டு 3 மாதம் கோவைச் சிறையில் வாடியவர்.

ஈரோடு அ.முகம்மது ஹுசைன், 1921ல் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு 2 மாதம் கோவைச் சிறையில் வாடியவர்.

ஈரோடு சே. முகம்மது ஹுசைன் ஒத்துழையாமைப் போரில் 2 மாதம் கோவைச் சிறையில் வாடியவர். தந்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரியார், தங்கபெருமாள் பிள்ளை, ஈஸ்வரன் ஆகியோருடன் சேர்ந்து கதர், மதுவிலக்கு திட்டங்களில் ஈடுபட்டு சுதந்திரப் போரில் பங்கேற்றவர்.

கோவை அ. முகம்மது யூசுப் (1901—1963), 1929ல் அந்நியத்துணி எரிப்புப் போரிலும், தொடர்ந்து உப்புச் சத்தியாக்கிரகத்திலும் பங்கேற்று 6 மாதம் கோவைச் சிறையில் வாடியவர்.

ஈரோடு கா.ஹுசைன் சாகிப், ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று 3மாதம் கோவைச்சிறையில் வாடியவர்.

காசிம் சாகிபு (கோயம்புத்தூர்) சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்று ஒரு வருடம் கோவைச் சிறையில் வாடியவர்.

மேட்டுப்பாளையம் கா. பக்கிரிசாகிப், சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்று ஒரு மாதம் கோவைச் சிறையில் வாடியவர்.

ஈரோடு த. பக்கிரிசாகிப், 1930 உப்புச்சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு ஒரு வருடம் கோவைச் சிறையில் வாடியவர்.

மேட்டுப்பாளையம் கே.ஏ.ரசாக் சாகிப், 1933ல் இயக்கத்தில் தீவிரம் காட்டி, 1941ல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று ஆறு மாதம் அவினாசி, மேட்டுப்பாளையம் சிறையில் வாடியவர்.

திருப்பூர் செ. செய்யது காதர், 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று 15 மாதம் அலிப்புரம் சிறையில் வாடியவர்.

கோவை அன்னூர் சே. சேக்சேர்வர்வசீர், 1928 ல் பங்கேற்று, 1930ல் உப்புச்சத்தியாக்கிரகத்தில் சிறையேகி ஒரு வருடம் திருச்சி சிறையில் வாடியவர்.

செங்கற்பட்டு மாவட்டம்

காஞ்சிபுரம் கே.எம். பாட்சாசாகிப், தனிநபர் சத்தியாக்கிரகம் சென்னை சிறையில் ஒரு மாதம் இருந்தவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சே. மௌலானா அப்துல்காதர் சாகிப், உப்புச்சத்தியாக் கிரகத்திலும், சட்டமறுப்பு இயக்கத்திலும் 6 மாதம் சிறையேகி சென்னை, அலிப்புரம் சிறையில் வாடியவர்.

ஜெ. செய்யது தாஜிதீன் சாகிப், 77 பட்டைத்தெரு கருங்குழி மதுராந்தகம் தாலுகாவினைச் சேர்ந்தவர். 1941, 1942 இயக்கங்களில் கலந்து கொண்டு வேலூர், சென்னை, தஞ்சை ஆகிய சிறைகளில் இரண்டு வருடம் மூன்று மாதம் வாடியவர்.

கன்னியாகுமரி மாவட்டம்

நாகர்கோவில் கோட்டாறு, அரிப்புத்தெருவில் பிறந்தவர் எம்.கே. சேகுஅப்துல்ரகீம். ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றவர். சட்ட மறுப்பு இயக்கத்தில் போராடி ஆறு மாதம் திருவனந்தபுரம் சிறையில் வாடியவர்.

தர்மபுரி மாவட்டம்

ஹோசூர் தாலுகா, பாகலூரில் 1919ல் பிறந்த பாட்சா சாஹிப் 1936ல் இயக்கத்தில் பங்கேற்றவர், தனி நபர் சத்தியாகிரகத்திலும், ஆகஸ்ட் பரட்சியிலும் ஈடுபட்டு 3 நாட்கள் ஒசூர் சிறையில் வாடினார்.

பழையபேட்டை கிருஷ்ணகிரி ப. முகம்மது இப்ராகீம் சாகிப், ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு வேலூர் சிறையில் ஒருமாதம் வாடியவர்.

இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் தேவர்மாவட்டங்கள்

மு. அப்துல்காதர் முகைதீன் திருவில்லிப்புத்தூர் தாலுகா இராமச்சந்திரபுரம் சுந்தரபாண்டியபுரத்தைச் சேர்ந்தவர். கிலாபத்திலும், ஒத்துழையாமைப் போரிலும், கலந்து கொண்டு ஆறு மாதம் மதுரை, திருச்சி சிறையில் நாட்டு விடுதலைக்கு வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாம்பூர் (பரமக்குடி) அப்துல்லா தாஜு, ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று மதுரை, கண்ணனூர் சிறையில் ஓராண்டு விடுதலைக்காக வாடியவர்.

விருதுநகர் ஏ. அப்துல்ரகுமான், கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு மதுரை திருச்சி சிறையில் ஓராண்டு நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

மு. முகையதீன் பிச்சை அம்பலம் அந்நியத்துணி எரிப்புப் போரிலும், உப்புச் சத்தியாக்கிரகத்திலும், கள்ளுக் கடை மறியலிலும், கலந்து கொண்டு திருச்சி, கடலூர், சேலம் சிறைகளிலும் திருப்பத்தூர் சப் ஜெயிலிலும் ஒரு வருடம், ஒருமாதம் ஏழு நாட்கள் நாட்டிற்காக வாடியவர்.

இளையான்குடி நா. சின்னத்தம்பி

இளையான்குடி சாலையூர் வடக்குத் தெருவைச் சேர்ந்தவர் நா. சின்னத்தம்பி. 1930ல் கள்ளுக்கடை மறியலிலும், அந்நியத்துணி எரிப்புப் போரிலும், பங்கேற்றவர். இராமநாதபுரம், திருப்பத்தூரைச் சேர்ந்த அப்துல்கரீம் சாகிப்பின் புதல்வரான "CH)TTAI" ஆக்ஸ்ட் புரட்சியில் பங்கேற்று ஆண்டொன்று திருச்சி சிறையில் ஆங்கிலேயே ஆட்சியை எதிர்த்து வாடியவர்.

இராமநாதபுரம் திருப்பத்தூர் சந்தை தோப்புத் தெரு எம். தாவூது, கள்ளுக்கடை மறியலிலும், அந்நியத்துணி எரிப்பிலும், உப்புச் சத்தியாக்கிரகத்திலும், தனி நபர் சத்தியாக்கிரகத்திலும் பங்கேற்று ஒரு வருடம் மதுரை சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

தேவகோட்டை ஹுசைன் இராவுத்தர்

ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று பாதுகாப்புச் சட்டப்படி அலிப்புரம் சிறையில் மூன்று வருடங்களுக்கு பதினைந்து நாட்கள் மட்டுமே குறைவாக இருந்து நாட்டு விடுதலைக் காக வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழகத்தில் தேவகோட்டை தீரமிக்கப் போர்க்கள மாக ஆகஸ்ட் புரட்சியின் போது இருந்தது. அந்த வீர வரலாற்றை விவரிக்கின் பெருகும்.

சிவகங்கை இ. இப்ராகீம், ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று மதுரை, அலிப்புரம் சிறையில் 2½ வருடங் களுக்கும் மேல் விடுதலைக்காக வாடியவர். நகர இளைஞர் காங்கிரசில் செயலாளராகப் பணியாற்றியவர்.

ஆர்யகுடி (காரைக்குடி) கா. இப்ராகீம்

கள்ளுக்கடை மறியலில் கலந்து சிறை சென்றவர் சிவகங்கை மூ. இப்ராகீம். ஆக்ஸ்ட் புரட்சியில் பங்கேற்று அலிப்புரம் சிறையில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக் கப்பட்டு 5 மாதம் 9 நாட்கள் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

சிவகங்கை லெப்பைத் தெரு எஸ். இப்ராகீம் கனி ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று மதுரை, அலிப்புரம் சிறையில் 8 மாதங்கள் விடுதலைக்காக வாடியவர்.

திருப்பத்தூர் ம. இப்ராகீம் முஹம்மது, ஆகஸ்ட் புரட் சியில் பங்கேற்று அலிப்புரம் சிறையில் 4 மாதம் விடுதலைக் காக வாடியவர்.

திருப்பத்தூர் பெரியபள்ளிவாசல்தெரு அ. இப்ராகீம்ஷா அந்நியத்துணி எரிப்புப் போரில் பங்கேற்று ஒரு வருடம் திருச்சி சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

வேனிப்பட்டணம், பாசிப்பட்டறைத் தெரு, சி இப்ராகீம் கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு மதுரை, கடலூர், திருச்சி சிறையில் ஒரு வருடம் விடுதலைக்காக வாடியவர்.

பார்த்திபனூர் எஸ். எம். இஸ்மாயில், கள்ளுக்கடை மறியலிலும், அந்நியத்துணி எரிப்புப்போரிலும் பங்கேற்று ஒரு வருடம் மதுரை சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேப்டன் கே. எஸ். இஸ்மாயில், வேனிப்பட்டணம் கொல்லம்பட்டறையைச் சேர்ந்தவர். கள்ளுக்கடை மறியலில் கலந்துகொண்டு திருச்சி, கடலூர் சிறையில் ஒரு வருடம் வாடியவர்.

இராமநாதபுரம் ஆலங்குளம் தபால் ஆபீஸ் தெருவைச் சேர்ந்த மு. ஜெயினுலாப்தீன், தனிநபர் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு ஒன்பது மாதங்கள் அலிப்புரம் சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

எஸ். டி. காதர் முகைதீன், ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று பெல்லாரி சிறையில் மூன்று வருடங்கள் நாட்டு விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். வெள்ளையன் ஊரணி கிராமம், தேவகோட்டை பகுதியைச் சேர்ந்தவர்.

வேனிப்பட்டணம் எஸ். எம். காசிம், நீலன் சிலை சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு கைதாகி பாளையங்கோட்டையிலும், சென்னையிலும் ஓராண்டுக்கும் மேல் நாட்டு விடுதலைக்கு சிறையில் வாடியவர்,

தேவகோட்டை வாழை இலை வியாபாரியான காதர்மொய்தீன், அந்நியத்துணி எரிப்புப் போரில் கலந்து, ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று பாதுகாப்புச் சட்டத்தில் சிறைசென்று மதுரை, அலிப்புரம் சிறையில் ஐந்தாண்டுகள் தன்னையே நாட்டுக்காக அர்ப்பணித்துக்கொண்ட தியாகி ஆவார்.

இளையான்குடி (பரமக்குடி) இ. மஜீத், தனி நபர் சத்தியாக்கிரகத்திலும், ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கேற்றவர்.

ராமநாதபுரம், ஆலங்குளம் அ.மீராஉசைன், தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மூன்று மாதங்கள் அலிப்புரம் சிறையில் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மண்டபம் அ. மீரான் சாகிப், ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று அலிப்புரம் சிறையில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இரண்டு மாதம் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

சி.முஹம்மது பாச்சா இராவுத்தர், தனி நபர் சத்தியாக் கிரகத்திலும், ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கேற்றவர். இளையான்குடி புதூரைச் சேர்ந்தவர்.

மண்டபம் மு. முகம்மது ஹனிபா ஆகஸ்ட் புரட்சியில் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு மதுரை சிறை யில் இரண்டு மாதங்கள் நாட்டு விடுதலைக்காக வாடி யவர்.

முகமதியர்பட்டணம், தேவகோட்டை முகம்மது உசைன், ஆகஸ்ட் புரட்சியில் அதிதீவிரங்காட்டி நான்காண்டுகள் அலிப்புரம், மதுரை சிறையில் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

தேவகோட்டை வாவாசேர்வைத் தெரு முகம்மது இப்ராகீம், ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர்.

ம. முகம்மது இப்ராகீம், அந்நியத்துணி எரிப்புப் போரிலும், தனி நபர் சத்தியாக்கிரகத்திலும், ஆகஸ்ட் புரட்சியிலும் கலந்து கொண்டு ஆறு மாதங்கள் பாது காப்புச் சட்டத்தில் அலிப்புரம் சிறையில் வாடிய இவர் குன்றக்குடியைச் சேர்ந்தவர்.

இராமநாதபுரம் திருப்பத்தூர் சே. முகம்மது இப்ராகீம் கள்ளுக்கடை மறியலில் கலந்து கடலூர், திருச்சி சிறை களில் ஒரு வருடம் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

தேவிப்பட்டணம் பொத்தவயல் கா. முகம்மது இஸ்மாயில், ஆகஸ்ட் புரட்சியில் கலந்து கொண்டு 7 மாதங் கள் வேலூர் சிறையில் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

சிவகங்கை பா. முகம்மது காசீம், தனி நபர் சத்தியாக் கிரகத்தில் பங்கேற்று பாதுகாப்புச் சட்டத்தில் ஒரு வருடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2 மாதம் 25 நாட்கள் அலிப்புரம் சிறையில் நாட்டு விடுதலைக்கு வாடியவர்.

இளையான்குடி வடக்குத்தெரு வி. கே. எம். முகம்மது காசீம், ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர். திருவில்லிப் புத்தூர் நந்தவனம்பட்டித் தெரு கா. முகம்மது முகைதீன் என்ற அத்ரஸா ஒத்துழையாமைப் போரிலும், அந்நியத் துணி எரிப்பிலும் கலந்து கொண்டவர்.

திருப்பத்தூர் சின்னபள்ளிவாசல் தெரு, உ. முகைதீன் பிச்சை இராவுத்தர், ஒத்துழையாமை இயக்கத்திலும், கள்ளுக்கடை மறியலிலும் கலந்து திருப்பத்தூர், திருச்சி சிறையில் ஒரு வருடம் ஒரு வாரம் நாட்டு விடுதலைக்காக தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

மண்டபம் இ. முகம்மது யூசுப், 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று இரண்டு மாதம் மதுரைச் சிறையில் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

திருப்பத்தூர் அ. முஸம்மல் மஸ்தான் இராவுத்தர் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு மதுரை சிறையில் ஓராண்டு வாடியவர்.

சிவகங்கை அ. முத்தலிப்பு. தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு 4 மாதங்கள் பாதுகாப்புச் சட்டத்தில் அலிப்புரம் சிறையில் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

இராமநாதபுரம் பூலாங்குறிச்சி செ. நாகூர்கனி இராவுத்தர், ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று அலிப்புரம் சிறையில் அன்னை தாயகத்தின் விடுதலைக்காக 28 மாதங்கள் அடைப்பட்டுக் கிடந்தவர்.

இராமநாதபுரம் குலாக்கச்சேரி ச. நூர்முகம்மது மரக்காயர், சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்று பெல்லாரி சிறையில் 9 மாதங்கள் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அருப்புக்கோட்டை காரியாப்பட்டி என். சின்னத்தா இராவுத்தர், கள்ளுக்கடை மறியலில் கலந்து சாத்தூர், சிவகங்கை, அருப்புக்கோட்டை, பெங்களூர் சிறையில் ஒரு மாதம் மூன்று நாட்கள் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

ஜோசியா இராவுத்தரின் புதல்வரான தாவூத் இராவுத்தர், ஒத்துழையாமைப் போரில் கலந்து கொண்டு திருச்சி சிறையில் ஒரு வருடம் வாடிய இவர் காரைக் குடியைச் சேர்ந்தவர்.

திருப்பத்தூர் பீ. இப்ராகீம் இராவுத்தர், ஒத்துழை யாமை இயக்கத்தில் கலந்து கொண்டு ஒரு வருடம் மதுரை சிறையில் நாட்டுக்காக வாடியவர்.

திருப்பத்தூர் முஸ்லிம் தெரு, காசி இராவுத்தர், அந்நி யத்துணி எரிப்புப்போரில் பங்கேற்று ஒரு வருடம் மதுரை சிறையில் நாட்டுக்காக வாடியவர்.

தேவகோட்டை நா. மீராமுகைதீன் இராவுத்தர் ஆகஸ்ட் புரட்சியில பங்கேற்று, பாதுகாப்புச்சட்டத்தில் கைதாகி, பத்து மாதங்கள் அலிப்புரம் சிறையில் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

திருப்பத்தூர் சி. முகம்மது இஸ்மாயில் இராவுத்தர் நாட்டு விடுதலைக்காக ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு ஒருவருடம் கடலூர், திருச்சி சிறையில் வாடியவர்.

இராமநாதபுரம் அம்பலக்காரத்தெரு கா. முகம்மது மஸ்தான் இராவுத்தர், கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு ஒரு வருடம் மதுரை ஜெயிலில் வாடியவர்.

திருப்பத்தூர் முகைதீன் பிச்சை இராவுத்தர், கள்ளுக் கடை மறியலில் ஈடுபட்டு திருச்சி சிறையில் ஒரு வருடம் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அருப்புக்கோட்டை காரியாபட்டி பி. நாகூர்கனி இராவுத்தர், தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றவர். திருப்பத்தூர் சேக் இஸ்மாயில் இராவுத்தர் அந்நியத்துணி எரிப்பில் கலந்து கொண்டு திருச்சி சிறையில் ஒன்றரை வருடம் நாட்டுவிடுதலைக்காக வாடியவர்.

ராமேஸ்வரம் மு. செம்தல் இராவுத்தர், சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டு சென்னை, ராஜமுந்திரி சிறையில் மூன்றுமாதங்கள் வாடியவர்.

இராமநாதபுரம் கொல்லம்பட்டறைத்தெரு இ. செய்யது இராவுத்தர், சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டவர். தனி நபர் சத்தியாக்கிரகத்திலும், கலந்து ஒரு வருடம் திருச்சி, அலிப்புரம் சிறையில் வாடியவர்.

இராமநாதபுரம் வேனிப்பட்டணம் உ. செய்யது இராவுத்தர், கள்ளுக்கடை மறியலிலும், தனிநபர் சத்தியாகிரகத்திலும் கலந்து அலிப்புரம் சிறையில் எட்டு மாதங்கள் வாடியவர்.

திருப்பத்தூர் க. செய்யது வாவா இராவுத்தர், கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு திருச்சி, கடலூர் சிறையில் ஒரு வருடம் நாட்டுக்காக வாடியவர்.

இராமநாதபுரம் இப்ராகீம் சாகிப், உப்புசத்தியாக்கிரகத்திலும், தனிநபர் சத்தியாக்கிரகத்திலும் பங்கேற்று ஆறுமாதம் சிறைபுகுத்தவர்.

இராஜபாளையம் சி. வாவாமுகையதீன், சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டு ஆறு மாதம் அலிப்புரம் சிறையில் வாடியவர்.

செ. சுல்தான், கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டும், அந்நியத்துணி எரிப்பில் போராடியும், ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றும் சிறை சென்றவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரமக்குடி தாலுகா காங்கிரஸ் செயலாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

திருப்பத்தூர் எம். பகோடி சுல்தான், ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு ஒரு வருடம் பெல்லாரி சிறையில் நாட்டுக்காக வாடியவர்.

சாத்தூர் செ. செய்யது அப்துல்லா ஒத்துழையாமைப் போரில் பங்கேற்று ஒரு வருடம் கடலூர் சிறையில் சுதந்திரத்திற்காக வாடியவர்

சிவகங்கை செய்யது முகைதீன், ஆகஸ்ட் புரட்சியில் கலந்து பாதுகாப்புச் சட்டத்தில் அலிப்புரம் சிறையில் ஓராண்டு சுதந்திரத்திற்காக வாடியவர்.

இராமநாதபுரம் எம். ஷேம்தால் இராவுத்தர், சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்துகொண்டு மூன்று மாதங்கள் சென்னை சிறையில் வாடியவர்.

சிவகங்கை ஆஸாத் ரோட்டில் வாழ்ந்த இ. சேக் முகம்மது தாவூது, கள்ளுக்கடை மறியலிலும், அந்நியத் துணி எரிப்பிலும் கலந்துகொண்டவர்.

இராமநாதபுரம் எஸ். ஏ. ஷேக் சுல்தான், ஆகஸ்ட் புரட்சியில் கலந்துகொண்டு, திருவாடானை சப் ஜெயிலிலும், இராமநாதபுரம், பரமக்குடி ஜெயிலிலும் 3 மாதங்கள் நாட்டுக்காக வாடியவர்.

மண்டபம் மு. ஷேக் அப்துல்காதர், ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று பாதுகாப்புச் சட்டத்தில் மதுரை சிறையில் இரண்டு மாதங்கள் நாட்டுக்காக வாடியவர்.

விருதுநகர் கே. சிக்கந்தர் ஒத்துழையாமைப் போரிலும், அந்நியத்துணி எரிப்பிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமச்சந்திரபுரம் இ. காதர்மஸ்தான் சாகிப், நீலன் சிலை சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு திருச்சி சிறையில் 4 மாதங்கள் நாட்டுக்காக வாடினார்.

சிவகாசி காதர் முகையதீன் சாகிப், உப்புச் சத்தியாக்கிரகத்திலும், கள்ளுக்கடை மறியலிலும், அந்நியத்துணி எரிப்பிலும் கலந்துகொண்டு ஆறு மாதம் மதுரை ஜெயிலில் இருந்தவர்.

ரெயில் மறியல் விஷாரம் முஹம்மது யஹியா

நாட்டாம்கார் அப்துல் ஹகீம், பி. முகம்மது ஆஸம், குப்புரத்தின நாயுடு, காசிநாத முதலியார், நாகரத்தின முதலியார், கிருஷ்ணன், பி. அப்துல் அஜீஸ் ஆகியோருடன் சுதந்திர போராட்டங்களில் ஈடுபட்டவர் விஷாரம் முஹம்மதுயஹியா

கள்ளுக்கடை மறியல், அன்னியத் துணி எரிப்பு போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டு, ரெயில் தண்டவாளத்தில் படுத்து ரெயில் மறியல் செய்து ஆங்கிலேயருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர் இவர்.

இவரது உடலெல்லாம் பிரம்படிகளும், சாட்டையடிகளும் பட்டதழும்புகள். வேலூர், கடலூர் சிறையில் மூன்று ஆண்டுகள் வாடியவர்.

1936 ல் வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்து சென்னை சட்ட சபைக்குள் நுழைவது என்ற காங்கிரஸ் மகாசபை முடிவையேற்று வி. ஜி. இராஜமாணிக்க முதலியார் வக்தாபாளையம் முகைதீன், ந. சண்முகம் உட்பட ஐம்பது பேருடன் நடைபயணமாக சென்னைக்குச் சென்று சட்ட சபைக்குள் நுழைய முயன்று கைதாகி சிறை சென்றார்கள். ஜில்லா போர்டு உறுப்பினராகவும், பெஞ்ச் மாஜிஸ்திரேட்டாகவும் பணியாற்றிய இவருக்கு, சுதந்திர இந்தியாவில் அவரது தேசச் சேவையினைப் பாராட்டி மத்திய அரசு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சலுகைகளையும், ஐந்து ஏக்கர் நிலத்தையும் அளித்த போது 'விலை மதிக்க முடியாத சுதந்திரப் போராட்டத்திற்கு எந்த ஒரு விலையும் வேண்டாம்' என்று அரசின் சலுகையினை மறுத்த ஒப்பற்ற தியாகி இவர்*

திருப்பத்தூர் பெரிய பஜார் தெருவில் டிங்கர் ஷாப் நடத்திய என். பி. பீர்சாகிப் ஒத்துழையாமை இயக்கத்திலும், அந்நியத்துணி எரிப்பிலும், கள்ளுக்கடை மறியலிலும் கலந்து கொண்டவர். இராமநாதபுரம் வடக்குத் தெரு, கா. சாகுல்ஹமீது அந்நியத்துணி எரிப்பிலும், கள்ளுக்கடை மறியலிலும் கலந்து கொண்டவர்.

செய்கு அப்துல் காதிர் ஆலிம் சாகிப் இராமநாதபுரம் நம்பு தாழையில் 1885-ல் பிறந்தவர். கிலாபத் போரில் கலந்து கொண்டவர். 1955ல் காலமானார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பிறந்த பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர். அவரது தாயார் அவர் பிறந்ததும் இறந்த நிலையில், அவருக்குத் தாய்ப்பால் ஊட்டி வளர்த்த சாந்த்பீவி என்ற இஸ்லாமியத் தாயாரும், நாட்டு விடுதலைக்காக உழைத்த திருமகனுக்கு உதவியவர் என்றால் மிகையாகாது. அந்த வீரத்தாயை தனது இறுதிகாலம் வரையில் போற்றியவர் பசும்பொன் தேவர் திருமகனார்**

வாலூர் அப்துல் கபூர் சாஹிப்

காந்தியடிகளின் அறைகூவலை ஏற்று ஆங்கிலேயப் பள்ளி செல்லமறுத்து, வேலூர் சிறையில் மூன்று மாதம் வாடியவர் வாலூர் அப்துல் கபூர் சாஹிப். 21 வயதில் கள்ளுக்கடை மறியலில் கலந்து சிறைசென்ற சிறந்த

* வேலூர் 'மாலை முரசு' ஆம்பூர் நகர வளர்ச்சி மலர் 28-7. 1993 பக்கம் 8

** பண்டித ரத்னா என்.ஏ. வேலாயுதம் ''தீவிரவாதி முதல் ஆண்டு மலர் (1972) பக்கம் 53

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேடைப் பேச்சாளரான இவர், ஒரு மாதம் வேலூர் சிறையிலும், 11 மாதங்கள் கடலூர் சிறையிலும் வாடியவர். சிறையில் இருந்தபோது கிருஷ்ணசாமி சர்மா, வேலூர் வி. எம். உபயத்துல்லா ஆகியோரின் நெருங்கிய நண்பரானார். அரசியலைவிட்டு விலகிவிடு, 'கிரீன் ஸ்டோர்' என்ற கடையை நடத்து என்று தாய் தந்தையர் கெஞ்சிய போதும் இவர் ஒய்ந்திருக்காமல் நாட்டு விடுதலைக்கென தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

பதவிகளுக்கு ஆசைப்படாத இவரை மாவட்ட காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி ரெட்டியார் வற்புறுத்தி ஜில்லா போர்டு உறுப்பினராக்கினார்.

வேலூர் நகரசபையில் சோமசுந்தர ஐயர் தலைவராக இருந்தபோது இவர் துணைத் தலைவரானார். அப்போது வேலூரில் காந்தி பூங்கா அமைத்தும், அறிஞர் அண்ணா அவர்களை அழைத்துவந்து காந்தி சிலையை திறந்து வைத்திடவும் முழு முயற்சியில் ஈடுபட்ட இவர் பெருந் தலைவர் காமராஜரின் நல்ல நண்பருமாவார்.

வடாற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவரையார் மாவட்டங்கள்

வேலூரைச் சேர்ந்த அ. அப்துல்சலாம், பீடி உற்பத்தியாளர். 1941ல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பாதுகாப்புச் சட்டப்படி கைதாகி அலிப்புரம் சிறையில் $3\frac{1}{2}$ மாதம் விடுதலைக்காக வாடியவர்.

தனிநபர் சத்தியாக்கிரகத்தில் தண்டனைக்குள்ளாகி நாட்டு விடுதலைக்காக அலிப்புரம் சிறையில் நான்கு மாதங்கள் வாடியவர் அப்துல் அஜிஸ் புதல்வர் வேலூர் வணிகர் அப்துல்ரஷீத்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்துல் சுக்கூரின் புதல்வர் அப்துல்ரஷீத், வேலூரில் எண்ணெ வணிகர். தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று 15½ மாதங்கள் அலிப்புரம் சிறையில் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

வேலூர் அப்துல் ஜப்பார் சாகிப், தனிநபர் சத்தியாக் கிரகத்தில் பங்கேற்று ஒரு மாதம் அலிப்புரம் சிறையில் விடுதலைக்காக் வாடியவர். கண்ணமங்கலம் ஆ. அப்துல்காதர் சாகிப், ஒத்துழையாமை இயக்கப் போரில் பங்கேற்று கடலூர் சிறையில் நாட்டு விடுதலைக்காக ஓராண்டு வாடியவர்.

வேலூர் மு. அப்துல்லா பாட்சா சாகிப், ஒத்துழை யாமை இயக்கப் போரில் பங்கேற்று வேலூர், கடலூர் சிறைகளில் ஓராண்டு வாடியவர்.

வேலூர் அப்துல் மாலிக் சாஹிப், தனி நபர் சத்தியாக் கிரகத்தில் பங்கேற்று ஒரு மாதம் அலிப்புரம் சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

வேலூர் காதர் ஷெரீப், தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று அலிப்புரம் சிறையில் நான்கு மாதங்கள் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

வேலூர் செ. செய்யது இப்ராகீம் என்ற செய்யது அலி, தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று ஒரு மாதம் அலிப்புரம் சிறையில் வாடியவர்.

வேலூர் மௌலவி முகம்மது சாகிப், 26—8—1921ல் ஒத்துழையாமை இயக்கப் போரில் அரசுக்கு எதிராக மக்களை ஆர்த்தெழச் செய்யும் விதத்தில் ஆற்றிய வீர உரைக்காக ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டு தண்டிக் கப்பட்டவர்.

வேலூர் ராமநாயக்கன் பாளையம் மு. முகம்மது சித்தீக், போர் எதிர்ப்புப் பிரச்சாரத்தில் 1941ல் ஈடுபட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாதுகாப்புச் சட்டத்தில் கைதாகி அலிப்புரம் சிறையில் மூன்று மாதம் வாடியவர்.

வடஆற்காடு ஆம்பூர் வி. முகம்மது சக்கரியா, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று 98 நாட்கள் வேலூர் சிறையில் அன்னியராட்சியை அகற்ற அடைபட்டு கிடந்தவர்.

அரக்கோணம் கா. முகைதீன், 1941ல் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பாதுகாப்புச் சட்டப்படி கைதாகி அலிப்புரம் சிறையில் ஒரு வருடம் விடுதலைக்காக வாடியவர்.

வடஆற்காடு ஆம்பூர் வி. முகைதீன், ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று வேலூர் சிறையில் 98 நாட்கள் வாடியவர்.

தாருவன் பேட்டை மௌலானா சஹாப்புத்தீன்சாஹிப் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பாதுகாப்புச் சட்டத்தில் கைதாகி மூன்றரை மாதங்கள் அலிப்புரம் சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

தாருவன் பேட்டை நானா அப்துல் சமது, தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று பாதுகாப்புச் சட்டப்படி கைதாகி மூன்றரை மாதங்கள் அலிப்புரம் சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

செங்கம் இஸ்லாமியர்தெரு பத்ருல் முகம்மது கான் சாஹிபு, தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று, அலிப்புரம் சிறையில் 4 மாதம் 18 நாட்கள் விடுதலைக்காக வாடியவர்.

ஹாஜி நூருதின்தெரு, நூருலியா பேட்டை ஆம்பூரைச் சேர்ந்த படேகான் முகம்மது கௌஸ்சாஹிப், ஒத்துழையாமை இயக்கப் போரில் பங்கேற்று கடலூர், வேலூர் சிறையில் விடுதலைக்காக ஓராண்டு வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருப்பத்தூர் பா. அப்துல் வஹாப் சாஹிப், ஒத்துழை யாமை இயக்கத்தில் கலந்து ஏழு மாதங்கள் வேலூர் சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

வேலத்தைச் சேர்ந்த அ. காதர்பாட்சா சாஹிப், கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு வேலூர் சிறை யில் மூன்று மாதங்கள் விடுதலைக்காக வாடியவர்.

வாணியம்பாடி சந்தைப் பேட்டை எம். ஏ. அப்துல் மதார், தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஓராண்டு தண்டனை ஏற்று ராஜமுந்திரி சிறையில் வாடியவர்.

வாணியம்பாடி கோட்டை, ஹாஜி தெரு, பா. பாட்சா, 1937 ல் விடுதலைப் போரில் பங்கேற்றவர். தனி நபர் சத்தியாக்கிரகத்திலும், ஆகஸ்ட் புரட்சியிலும் கலந்து கொண்டு சென்னை, பெல்லாரி சிறையில் ஐந்து மாதங்கள் வாடியவர்.

வந்தவாசி சன்னதி தெருவைச் சேர்ந்த கே. எம். பாட்சா, சட்ட மறுப்பு இயக்கத்திலும், ஆகஸ்ட் புரட்சி யிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

வடஆற்காடு மும்மணியில் தந்திக் கம்பிகளை அறுத் தெரிந்து நாட்டுவிடுதலைக் களத்தில் வீரப் பணியாற்றிய வர் பாச்சா சாஹிப்.

திருவண்ணாமலை அ.அப்துல் ஜாபர், விவசாயியான இவர் விடுதலைப் போரில் 1935 ல் குதித்து, தனிநபர் சத்தியாக்கிரகத்தில் 1941 ல் பங்கேற்று, 18 மாதம் பாது காப்புச்சட்டப்படி தண்டனை ஏற்று கோவை, பெல்லாரி, அலிப்புரம் சிறையில் வாடியவர்.

திருவண்ணாமலை எல்லாக்குடித் தெருவில் வாழ்ந்த முகம்மது ஷெரீப்பின் புதல்வர் அப்துல்லா ஷெரீப். ஒத்து ழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு இரண்டு ஆண்டுகள் வேலூர் சிறையில் வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவண்ணாமலை கா. அப்துல்சுபான் சாகிப், 1918ல் விடுதலைப் போரில் வீரங்காட்டியவர். கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு வேலூர் சிறையில் இரண்டு வருடங்கள் வாடியவர். திருவண்ணாமலை ஜானிசாகிப் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று வேலூர் மத்திய சிறையில் விடுதலைக்காக மூன்று மாதங்கள் சித்திரவதை களை அனுபவித்தவர்.

திருவண்ணாமலை அ. அப்துல்சுக்கூர் சாகிப், அந்நியத்துணி எதிர்ப்பு (1920—21) இயக்கத்தில் பங்கேற்று ஆறு மாதங்கள் வேலூர் சிறையில் விடுதலைக் காக வாடியவர்.

திருவண்ணாமலை யாகூப் சாகிப், 1921ல் ஒத்துழை யாமைப் போரில் பங்கேற்று இரண்டாண்டுகள் வேலூர் சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்

திருநெல்வேலி பேட்டை முஹம்மது நயினார் பள்ளி வாசல் தெருவில் 1909ல் பிறந்த வி. கே. அப்துல்ஹமீது 1929 போராட்டத்திலும், மதுரையில் கள்ளுக்கடை மறியலில் 1931லும் கலந்து கொண்டு சிறை சென்றவர் திருநெல்வேலி நகர்மன்ற துணைத்தலைவராக இருந் தவர். 1—6—1959ல் காலமானார்.

காதர்முகைதீன் நயினார் இராவுத்தர் புதல்வராக 1904ல் பிறந்த அப்துல்ஹமீது முகம்மது ஒத்துழையாமைப் போரில் கலந்து கொண்டு 3 மாதம் 10 நாட்கள் திருச்சி சிறைச்சாலையில் வாடியவர்.

செங்கோட்டை மேலூரைச்சேர்ந்த சாகுல்ஹமீதுவின் புதல்வராக 1907ல் பிறந்த அப்துல்மஜித் 1927 போராட்டங் களிலும், சட்ட மறுப்பு இயக்கப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகம்மது இஸ்மாயில் புதல்வராக 3—7—1904ல் 175 நடுப்பேட்டைத் தெரு தென்காசியில் பிறந்த அப்துல்சலாம் படித்தறிந்தவர். 1922ல் அந்நியத்துணி எதிர்ப்பு போரிலும், நாக்பூர் கொடிப் போரிலும் கலந்து கொண்டு ஒரு வருடத்திற்கு மேல் நாக்பூர் சிறையில் வாடியவர்.

திருநெல்வேலி பேட்டை ரகுமானியா பள்ளிவாசல் சன்னதி தெருவில் வாழ்ந்த அப்துல்ஹமீதுவின் புதல்வராக 1900ல் பிறந்த முகம்மது இப்ராகீம் 1922 போராட்டத்தில் கலந்து கொண்டு கடலூர் சிறையில் ஆண்டொன்றுக்கும் மேல் வாடியவர்.

திருநெல்வேலி பேட்டை ரகுமானியா பள்ளிவாசல் மேலத் தெருவைச் சேர்ந்த முகம்மது இஸ்மாயில் 1897ல் பிறந்தவர். 1921 போராட்டத்திலும், நாக்பூர் கொடிப் போரிலும் கலந்து கொண்டு ஆறு மாதம் நாக்பூர் சிறையில் வாடியவர்.

கடையநல்லூர் எஸ். எம். அப்துல்மஜீத் சுதந்திர தமிழகத்தில் மந்திரியாக இருந்தவர். இவரது குடும்பம் நாட்டு விடுதலைக்காக நல்ல தொண்டாற்றியிருக்கிறது.

தென்காசி எஸ். எல். எஸ். முஹம்மது முகையதீன், 1941ல் போர் எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு 6 மாதம் சிறைதண்டனை பெற்றவர்.

திருநெல்வேலி எம். முகையதீன் இப்ராகீம் மரைக்காயர், 1894ல் பிறந்தவர். கற்றறிந்தவர். 1921 ஒத்துழையாமைப் போரிலும், 1922, 23ல் கள்ளுக்கடை மறியலிலும் கலந்து கொண்டு திருச்சி சிறையில் வாடியவர்.

25-11-1923ல் பிறந்த தூத்துக்குடி 47, ஜெயலானி தெருவைச் சேர்ந்த முகையதீன் ஷெரீப் கற்றறிந்தவர். 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தென்காசி தாலுகா விசுவநாதபுரத்தைச் *சேர்ந்த முகம்மது உசைன் புதல்வராக 1915ல் பிறந்த நாகூரப்பா இராவுத்தர் கல்வி பயின்றவர். 1936ல் கள்ளுக்கடை மறியலும், அந்நியத்துணி எதிர்ப்புப் போரிலும் கலந்து கொண்டவர்** வெள்ளை இராவுத்தரின் பிள்ளையாக 1906ல் தென்காசியில் பிறந்த சாஹித் 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று வேலூரிலும், தஞ்சாவூர் சிறப்பு ஜெயிலிலும் 7½ மாதங்கள் வாடியவர்.

முகையதீன் மியான் இராவுத்தரின் புதல்வரான முகையதீன் இப்ராகீம் மரைக்காயர் திருநெல்வேலி பேட்டையைச் சேர்ந்தவர். 1922 சுதந்திரப் போராட்டத்தில் ஆறுமாதம் தண்டனை அடைந்து சிறை சென்றவர்.

செய்யது மீராசாகிப் புதல்வராக 1918ல் பிறந்த பணகுடி செய்யது அகம்மது கபீர் 1942 ஆகஸ்ட் போரில் கலந்து கொண்டு அலிப்புரம் ஜெயிலில் 3½ மாதங்கள் வாடியவர்.

திருநெல்வேலியில் 11—7—1914ல் பிறந்த செய்யது ஜலால், எஸ். எஸ். எல். சி. வரை படித்தவர். 1932ல் கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டவர். சட்டமறுப்பு அந்நியத் துணி எதிர்ப்பு, தனிநபர் சத்தியாகிரகம் ஆகியவற்றில் பங்கேற்று பாளையங்கோட்டை சிறைச்சாலையில் 6 மாதம் வாடியவர்.

மேலப்பாளையம் வி.எஸ்.டி. முகம்மது இப்ராகீம்

1942ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் மேலப்பாளையம் காங்கிரஸ் கமிட்டி சார்பில் தன் பங்களாவில் இரகசியமாக கே. பி. மஷ்ருவாலா வெளியிட்ட கிராம சுதந்திர பிரகடனத்தை சைக்ளோஸ்டைல் செய்து

* நூலாசிரியர் பிறந்த ஊர் இது.

** Who is who of Freedom Fighters Tamil Nadu Vol.III P. 102

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விநியோகம் செய்தார். ரிசர்வ் போலீசின் தடியடியால் மயக்கமடைந்த எம். ஆர். உலகநாதனுக்குத் துணிந்து சிகிச்சை அளித்தவர். நகர காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும், ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உதவித்தலைவராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும், திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும், மேலப்பாளையம் நகர்மன்றத் தலைவராகவும், பணியாற்றிய இவரது தேசீய சேவை நிலைத்துநிற்கக் கூடியது*

செய்குதம்பி பாவலரால் ''கோவை'' பாடப்பெற்ற இவரது தந்தையார் சம்சுதாசீன் தரகனார் கிலாபத் போரில் தீவிரங்காட்டியவர்.

பணகுடி அம்ஜிமியான் சாஹிப்

1926ல் நெல்லை மாவட்டத்தில் சுதந்திரப் போரில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டவர்களில் நான்குநேரித் தாலுகாவில் (தற்போது இராதாபுரம் தாலுகா) பணகுடி அம்ஜிமியான் சாஹிப் இராதாபுரம் தாலுகா கள்ளிகுளம் முகைதீன் ஆகியோர் முன்னணியில் நின்றவர்கள்.** நான்குநேரி தாலுகா காங்கிரஸ் கமிட்டியில் தீவிரப்பணியாற்றி தேசியப் பிரச்சாரம் அரசின் அடக்குமுறையை எதிர்த்து வெற்றிகரமாக நடைபெற கள்ளிகுளம் முகைதீன் துணிச்சலான செயல்களில் இறங்கியவர். அவரது அஞ்சாத பணி மெச்சத்தகுந்தது.

நீலகிரி மாவட்டம்

யூசுப் மெஹ்ரலி 1942 போராட்டத்திற்கு குய்ட் இண்டியா (Quit-India) என்று ஆங்கிலத்தில் எழுதித் தந்தார். அதுவே வெள்ளையனே வெளியேறு என்ற

* ந. சோமயாஜுலு நெல்லை மாவட்ட சுதந்திர போராட்ட வரலாறு பக்கம் 366

** ந சோமயாஜுலு ''நெல்லை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு'' பக். 302

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தென்காசி தாலுகா விசுவநாதபுரத்தைச் *சேர்ந்த முகம்மது உசைன் புதல்வராக 1915ல் பிறந்த நாகூரப்பா இராவுத்தர் கல்வி பயின்றவர். 1936ல் கள்ளுக்கடை மறியலும், அந்நியத்துணி எதிர்ப்புப் போரிலும் கலந்து கொண்டவர்** வெள்ளை இராவுத்தரின் பிள்ளையாக 1906ல் தென்காசியில் பிறந்த சாஹித் 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று வேலூரிலும், தஞ்சாவூர் சிறப்பு ஜெயிலிலும் 7½ மாதங்கள் வாடியவர்.

முகையதீன் மியான் இராவுத்தரின் புதல்வரான முகையதீன் இப்ராகீம் மரைக்காயர் திருநெல்வேலி பேட்டையைச் சேர்ந்தவர். 1922 சுதந்திரப் போராட்டத்தில் ஆறுமாதம் தண்டனை அடைந்து சிறை சென்றவர்.

செய்யது மீராசாகிப் புதல்வராக 1918ல் பிறந்த பணகுடி செய்யது அகம்மது கபீர் 1942 ஆகஸ்ட் போரில் கலந்து கொண்டு அலிப்புரம் ஜெயிலில் 3½ மாதங்கள் வாடியவர்.

திருநெல்வேலியில் 11—7—1914ல் பிறந்த செய்யது ஜலால், எஸ். எஸ். எல். சி. வரை படித்தவர். 1932ல் கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டவர். சட்டமறுப்பு அந்நியத் துணி எதிர்ப்பு, தனிநபர் சத்தியாகிரகம் ஆகியவற்றில் பங்கேற்று பாளையங்கோட்டை சிறைச்சாலையில் 6 மாதம் வாடியவர்.

மேலப்பாளையம் வி.எஸ்.டி. முகம்மது இப்ராகீம்

1942ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் மேலப்பாளையம் காங்கிரஸ் கமிட்டி சார்பில் தன் பங்களாவில் இரகசியமாக கே. பி. மஷ்ருவாலா வெளியிட்ட கிராம சுதந்திர பிரகடனத்தை சைக்ளோஸ்டைல் செய்து

* நூலாசிரியர் பிறந்த ஊர் இது.

** Who is who of Freedom Fighters Tamil Nadu Vol.III P. 102

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விநியோகம் செய்தார். ரிசர்வ் போலீசின் தடியடியால் மயக்கமடைந்த எம். ஆர். உலகநாதனுக்குத் துணிந்து சிகிச்சை அளித்தவர். நகர காங்கிரஸ் கமிட்டி தலைவ ராகவும், ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உதவித்தலைவராக வும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும், திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும், மேலப் பாளையம் நகர்மன்றத் தலைவராகவும், பணியாற்றிய இவரது தேசிய சேவை நிலைத்துநிற்கக் கூடியது*

செய்குதம்பி பாவலரால் ''கோவை'' பாடப்பெற்ற இவரது தந்தையார் சம்சுதாசீன் தரகனார் கிலாபத் போரில் தீவிரங்காட்டியவர்.

பணகுடி அம்ஜிமியான் சாஹிப்

1926ல் நெல்லை மாவட்டத்தில் சுதந்திரப் போரில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டவர்களில் நான்குநேரித் தாலுகாவில் (தற்போது இராதாபுரம் தாலுகா) பணகுடி அம்ஜிமியான் சாஹிப் இராதாபுரம் தாலுகா கள்ளிகுளம் முகைதீன் ஆகியோர் முன்னணியில் நின்றவர்கள்.** நான்குநேரி தாலுகா காங்கிரஸ் கமிட்டியில் தீவிரப்பணி யாற்றி தேசியப் பிரச்சாரம் அரசின் அடக்குமுறையை எதிர்த்து வெற்றிகரமாக நடைபெற கள்ளிகுளம் முகைதீன் துணிச்சலான செயல்களில் இறங்கியவர். அவரது அஞ்சாத பணி மெச்சத்தகுந்தது.

நீலகிரி மாவட்டம்

யூசுப் மெஹ்ரலி 1942 போராட்டத்திற்கு குய்ட் இண்டியா (Quit-India) என்று ஆங்கிலத்தில் எழுதித் தந்தார். அதுவே வெள்ளையனே வெளியேறு என்ற

---

* ந. சோமயாஜுலு நெல்லை மாவட்ட சுதந்திர போராட்ட வரலாறு பக்கம் 366

** ந சோமயாஜுலு ''நெல்லை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு'' பக். 302

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோஷமாயிற்று.* 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று 10 நாள் சிறைத்தண்டனை அல்லது 5 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டவர். நீலகிரி மாவட்டம் அரவன்காடைச் சேர்ந்த கே. அப்துல் அஜிஸ்.

உதகமண்டலம் முகம்மது மாலியின் புதல்வர் ஜமீன் உசேன் 1937ல் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று பெல்லாரி சிறையில் 6 மாதம் வாடியவர். உதகமண்டலம் பாபாசாகிப்பின் புதல்வர் மூசா ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று அலிப்புரம் சிறையில் 3 மாதம் வாடியவர்.

இஸ்மாயில் சாகிப்பின் புதல்வர் மூசா உப்புச்சத்தியாக்கிரகப் போரிலும், கள்ளுக்கடை மறியலிலும், அந்நியத் துணி எரிப்பிலும், ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கேற்றவர். குன்னூரைச் சேர்ந்த இவர் திருச்சி, பெல்லாரி சிறைகளில் 6 மாதங்கள் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

புதுக்கோட்டை மாவட்டம்

செய்யது மீரான் லெப்பையின் புதல்வராக 1913ல் பிறந்தவர் வி. கே. எஸ். முஹமத் மொஹிதீன். புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரைச் சேர்ந்தவர். 1941ல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று திருச்சி சிறையில் இரண்டு மாதங்களும், 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலும், தீவிரப்பங்கேற்று அலிப்புரம் சிறையில் ஒரு வருடமும் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

சிதம்பரனார் மாவட்டம்

காயல்பட்டணம் சம்சுதீன், ஒத்துழையாமை, சட்ட மறுப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டவர். சாத்தான் குளம் எஸ்.எம்.சேகப்பா, எஸ்.எம்.மொய்தீன் ஆகியோர்

* 'Bombay and the Congress Movement' என்ற நூலில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சத்தியாக்கிரக போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர்கள்.* யுத்த எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து சிறை சென்றார்கள்.

காயல்பட்டணம் ரெட்ஸ்டார் சங்கம்

தேசீய உணர்வு உள்ள காயல்பட்டணம் ரெட்ஸ்டார் சங்கம் மார்க்கப் பற்றும், மனிதாபிமான சேவையும் நிரம்பப் பெற்றது. 9—7—1936 ல் பண்டித ஜவகர்லால் நேரு தனது கைப்பட இந்த சங்கத்திற்கு அலகாபாத் ஆனந்த பவனத்திலிருந்து கடிதம் எழுதியிருக்கிறார்**

8—12—1890ல் முகைதீன் பிச்சை சாகிப் புதல்வராக திருச்செந்தூர் தாலுகாவில் பிறந்த ஆதம் சாகிப், சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டு திருச்செந்தூர் சப்ஜெயிலில் 3 மாதங்கள் வாடியவர்.

6—2—1904ல் பக்கீர் முகைதீன் மகனாகப் பிறந்த புகாரி 1940ல் போராட்டங்களில் இறங்கி ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று திருச்சி அலிப்புரம் சிறையில் ஓராண்டு வாடியவர். சிதம்பரனார் மாவட்டம் உடன்குடி சுல்தான்புரம், வடக்குத் தெருவில் வாழ்ந்த இவர் 20—2—1960ல் காலமானார்.

லோன் துரை கொலையும், தேசத் தொண்டர்கள் குடும்பத்திற்கு உதவிய முஸ்லிம்களும்

1942ல் ஆகஸ்ட் புரட்சியில் வடநாட்டில் எழுந்த போராட்டத் தீவிரத்திற்கு தென்னாடு எந்தவிதத்திலும்

---

* நெல்லை மாவட்ட காங்கிரஸ் நூற்றாண்டுவிழா சிறப்பு மலர்(1985) (தியாகி ஆ சு. பெஞ்சமின் எழுதிய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்டம் என்ற கட்டுரையில்)

** காயல்பட்டணம் தேர்வுநிலை பேருராட்சி நூற்றாண்டு நினைவு சிறப்பு மலர் 1990.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறைந்ததில்லை என்பதை நிரூபித்துக்காட்டும் வகையில் 1942 செப்டம்பர் 19ல் குலசேகரப்பட்டணம் உப்பளத்தில் தேசத் தொண்டர்கள் கூடி சால்ட் உதவி இன்ஸ்பெக்டர் டபிள்யூ. லோன் துரையை குத்திக் கொலை செய்தனர். தேசத் தொண்டர்களை போலீஸ் வேட்டையாடியது. அவர்களது குடும்பத்தினர் போலீசின் அடக்குமுறைகளுக்குள்ளாயினர். வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டு தேடப்பட்ட வி. மந்திரக்கோனாரின் தாய்க்கும், சகோதரிக்கும் அவயம் அளித்து பாதுகாத்தவர்கள் முஸ்லிம்கள்.*

சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் ஜனாப் காதர்பாட்சா

சுதந்திர எழுச்சிப் போரில் போலீசை கடுமையாகத் தாக்கிப் பேசும் நாகர்கோவில் தேசபக்தர் சி. பி. இளங்கோ மீது ஆத்திரங்கொண்ட போலீஸ் காவல்துறையினரால் போலீஸ் டைரியை திருடியதாக வழக்குத் தொடரப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார். நெல்லை தேசபக்தர் ந. சோமயாஜுலு கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளையிடம் இதைப் பற்றி தெரிவித்தார். வழக்கறிஞரான வ. உ. சி. சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் ஜனாப் காதர் பாட்சா சாகிப்பிடம் நேரில் சென்று சொல்லி தேச பக்தர் இளங்கோவிற்கு எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் பாதுகாத்தார்.**

வ. உ. சி. யின் பரிவையும், தேச பக்தருக்காக இரங்கி உதவிய சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் ஜனாப் காதர் பாட்சாவின் தேசாபிமானமும், இதனால் நன்கு புலனாகிறது.

* குலசேகரப்பட்டணம் கொலை வழக்கு என்ற வி. மந்திரம் எழுதிய கட்டுரை நெல்லை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு நூலில் பக். 811.

** ந. சோமயாஜுலு "நெல்லை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு" பக். 109, (1977.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருச்சி மாவட்டம்

திருச்சி பெரிய சௌராஷ்டிரத் தெருவைச் சேர்ந்த மஸ்தான்சாகிப்பின் புதல்வர் அப்துல்அஜிஸ் படிப்பறிந்தவர். உப்புச் சத்தியாக்கிரகம் கள்ளுக்கடை மறியல், ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று ஐ. பி. சி. 145ன்படி கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை சிறுவர் ஜெயிலில் 2 ஆண்டுகள் வாடியவர், திருச்சி அப்துல்சத்தாரின் புதல்வராக 1904ல் பிறந்த அப்துல்கரீம் ஒத்துழையாமை இயக்கப் போரில் தனது 18வது வயதில் கலந்து கொண்டு திருச்சி சிறையில்ஒரு மாதம் வாடியவர்.

திருச்சி அப்துல்வகாப் சாகிப் புதல்வராக 1903ல் பிறந்து ஒத்துழையாமை இயக்கப் போரில் கலந்து 3 மாதம் சிறையிருந்தவர் அப்துல்கரீம். அலியா இராவுத்தரின் புதல்வராக 1898ல் பிறந்து கிலாபத் இயக்கத்திலும் கள்ளுக்கடை மறியலிலும், நாக்பூர் கொடிப்போரிலும் கலந்து கொண்டு, நாக்பூர் அகோலா ஜெயிலில் 6 மாதங்கள் அடைபட்டுக் கிடந்தவர் திருச்சி அப்துல்காதர். முகம்மது உன்னி சாகிப்பின் புதல்வராக 1900ல் பிறந்து ஒத்துழையாமைப் போரில் கலந்து கொண்டு திருச்சி சிறையில் இரண்டு மாதம் வாடியவர் அப்துல்ரகீம்.

1901ல் முகம்மது இராவுத்தரின் புதல்வராக பிறந்து ஒத்துழையாமைப் போரில் 3 மாதம் திருச்சி சிறையேகியவர்பாலக்கரை அப்துல்ரகுமான்.

1890ல் ஏ. கே. சலாமின் மகனாகப் பிறந்து கிலாபத்தில் பங்கேற்று 1922ல் திருச்சி சிறையில் ஒரு மாதம் வாடியவர். பாலக்கரை அப்துல் சமது நாகபுரி கொடிப் போரில் கலந்து 9 மாதம் சிறை தண்டனைக்குள்ளானவர். அப்துல்காதரின் புதல்வர் 1901ல் பிறந்த திருச்சி அப்துல் சத்தார். செந்தூரன் சாகிப்பின் புதல்வராக 1905ல் பிறந்த அப்துல்வகாப் 1930 சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்று இருவரும் 6 மாதம் சிறையில் வாடியவர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

24—12—1921ல் முகமது அலியின் மகனாகப் பிறந்த பஜான்அலி படித்தறிந்தவர். 1942 ஆக்ஸ்ட் புரட்சியில் பங்கேற்று வேலூர் சிறையில் 49 நாட்கள் அடைபட்டுக் கிடந்த இவர் 12 முகமதியர் தெரு கரூர் நகரவாசியாவார்.

குலாம் தஸ்தகீரின் புதல்வர் குலாம்காதர் 1909ல் பிறந்தவர். 1930, 1931ம் ஆண்டின் சட்ட மறுப்பு இயக்கப் போரில் பங்கேற்று, ஐ. பி. சி. 126 பிரிவின் படி வழக்குத் தொடரப்பட்டு, 20 மாதங்கள் 15 நாட்கள் பெல்லாரி சிறையில் வாடிய இவர் அரியலூரைச் சேர்ந்தவர்.

கரூரில் 1917ல் பிறந்த, படித்தறிந்த குலாம்முகம்மது 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர்.

1902ல் அப்துல்காதரின் புதல்வராகப் பிறந்த குலாம் முஹய்யதின் ஒத்துழையாமை இயக்கப் போரில் பங்கேற்று 145 ஐ. பி. சி. பிரிவின்படி வழக்கு தொடரப்பட்டு திருச்சி சிறையில் ஓராண்டு வாடியவர்.

15—3—1904ல் திருச்சியில் அப்துல்காதரின் புதல்வராகப் பிறந்த காஜாமொய்தீன் 1922 கிலாபத் போரிலும், கள்ளுக்கடை மறியலிலும் கலந்து கொண்டு 38 நாட்கள் திருச்சி சிறை புகுந்தவர்.

கே. எம். ஹமீதுகான் 1898 பிப்ரவரியில் பிறந்தவர். படித்தறிந்தவர். ஒத்துழையாமை இயக்கப் போரிலும், தன்னாட்சி இயக்கத்திலும், சட்ட மறுப்பு இயக்கத்திலும் பங்கேற்றவர். பத்திரிகைகளின் அவசரச் சட்டத்தின் கீழ் சிறை சென்றவர். கடலூரில் கைது செய்யப்பட்டு சென்னை சிறையில் அடைக்கப்பட்டவர். பிரதேச காங்கிரஸ் கமிட்டியிலும் உறுப்பினராகவும், மாவட்ட காங்கிரஸ் கமிட்டியில் செயலாளராகவும், பணியாற்றிய இவர் வாலிமஹால் தெரு, தெப்பக்குளம் திருச்சியைச் சேர்ந்தவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1903ல் பிறந்த நாதர்ஷாவின் புதல்வர் இஸ்மாயில் ஒத்துழையாமை இயக்கப் போரிலும், திருச்சி இஸ்மாயில் கான் ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கேற்று சிறையில் வாடிய வர்கள்.

6,வியான் காதர் தெரு, பீமாநகர் திருச்சியைச் சேர்ந்த அப்துல் கரிமீன் துணைவியாரான மரியம்பீவி நாக்பூர் கொடிப்போரில் கலந்து கொண்டு, ஐ.பி.சி. 109, 188 பிரிவின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு, கடலூர் சிறையில் ஆறுமாதம் அடைக்கப்பட்டார். போராட்டத்தில் கலந்து கொண்டு போற்றுதலுக்குரிய புகழைப் பெற்ற வீரப் பெண்மணி இவர்.

மக்காசாஹிப்பின் மகன் முகம்மது அப்பாஸ் 1902ல் பிறந்தவர். 1921ல் ஒத்துழையாமை இயக்கப் போரில் கலந்து கொண்டு திருச்சியில் வாடிய இவர் பாலக்கரை யைச்சேர்ந்தவர்.

அசவருராவுத்தர் புதல்வர் முகம்மதுஹுசைன் 1921 ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு ஓராண்டு திருச்சி சிறையில் இருந்தார்.

1890ல் முகம்மது சாகிப் புதல்வராகப் பிறந்த முகமது இப்ராகிம் ஒத்துழையாமை இயக்கப் போரில் கலந்து கொண்டு 6 மாதம் பெல்லாரி சிறையில் வாடியவர்.

ஜெயிலுத்தீன் புதல்வரான முகமது காசிம் 1906ல் பிறந்தவர் படித்தறிந்தவர். 14வது வயதில் கிலாபத் போரிலும், அதனைத் தொடர்ந்து கதர் பிரச்சாரத்திலும், கள்ளுக்கடை மறியலிலும் கலந்து கொண்ட இவர் மஜித் தெரு, காட்டுப்புத்தூர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

1924ல் பிறந்த முகம்மதுகான், 1942 போராட்டத்தில் இந்திய பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு, சென்னை சிறையில் மூன்று மாதம் வாடிய இவர் முசிறி யைச் சேர்ந்தவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1903ல் செய்யது ராவுத்தரின் புதல்வராகப் பிறந்த முகம்மது மைதீன் ஒத்துழையாமை இயக்கப் போரில் ஈடுபட்டு 3 மாதம் திருச்சி சிறை புகுந்தவர்.

முகம்மது அலியின் புதல்வராக 1904ல் பிறந்த முகமது சாலியா 1922 போராட்டத்தில் கலந்து 2 மாதம் திருச்சி சிறையில் வாடியவர்.

சர்தார் ராவுத்தரின் புதல்வர் முகம்மது சுலைமான் 1898ல் பிறந்து கிலாபத் ஒத்துழையாமையில் கலந்து ஆறுமாதம் சிறையேகிய இவர் பாலக்கரையைச் சேர்ந்தவர்.

ஷயாகான் ராவுத்தரின் புதல்வராக 1900 ல் பிறந்த முஹய்யதீன் இப்ராகிம் ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டு மூன்றுமாதம் திருச்சி சிறையில் வாடியவர்.

காதர் இஸ்மாயில் இராவுத்தர் புதல்வர் மூசா இராவுத்தர் 1916 ல் பிறந்தவர். சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்று 5 மாதம் பெல்லாரி சிறையில் வாடிய இவர் திருச்சி மாவட்டத்துக்காரர்.

1882ல் சுலைமான் இராவுத்தரின் பிள்ளையாகப் பிறந்த பக்கீர் முகம்மது இராவுத்தர் திருச்சியில் 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று பெல்லாரி சிறையில் ஓராண்டு வாடியவர். 1880ல் பிறந்த தங்கமீரான் இராவுத்தர் 1922 ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டு மதுரை, திருச்சி, கடலூர் சிறையில் இரண்டரை வருடங்கள் வாடிய இவர் பாலக்கரையைச் சேர்ந்தவர்.

காதர் பாட்சா சாகிப்பின் பிள்ளையாக 1894ல் பிறந்த குத்புதீன் சாகிப் ஒத்துழையாமைப் போரில் ஓராண்டு திருச்சி சிறையில் வாடியவர். ஒத்துழையாமைப் போரில் மூன்று மாதம் திருச்சி சிறையில் வாடிய மக்தூம் சாகிப் 1902ல் காதர் முகையதீன் சாகிப்பின் பிள்ளையாகப் பிறந்தவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்ராகீம் சாகிப்பின் பிள்ளையாக 1900ல் பிறந்த சேக்தாவூது சாகிப் ஒத்துழையாமைப் போரில் மூன்று மாதம் திருச்சி சிறையில் வாடியவர். ஜமீன் சாகிப்பின் புதல்வராக 1903ல் பிறந்த நானா சாகிப் 1920, 1943 போராட்டங்களில்சிறை பிடிக்கப்பட்டு ஆண்டுக் கணக்கில் திருச்சி, அலிப்புரம், வேலூர், தஞ்சாவூர் சிறையில்வாடிய வர், கரூர் காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும், நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய இவர் 8, மூலக்கொள்ளித் தெரு, தென்னூர், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். 1963ல் மறைந்தார்.

கரூர் ரஹ்மத் பீவியின் கணவர் ஜே. நானா சாகிப் 1930, 1941 போராட்டங்களில் கலந்து கொண்டு, திருச்சி சிறையில் ஆறு மாதம் வாடியவர். 1901ல் முகம்மது இராவுத்தரின் புதல்வராக பிறந்த நூர்முகம்மது ஒத்துழை யாமை இயக்கப் போரில் கலந்து திருச்சி சிறையேகியவர்

1894ல் பக்கீர் முகய்யதீனின் பிள்ளையாக பிறந்தவர் பக்கீர்முகம்மது. 1921ல் ஒத்துழையாமை இயக்கப்போரில் கலந்து கொண்டு இரண்டு மாதங்கள் திருச்சி சிறையில் வாடியவர்.

1923ல் அமீர்கான் சாகிப்பின் பிள்ளையாக பிறந்த ரஹிமான் படித்தறிந்தவர். 1942ல் வெள்ளையனே வெளி யேறு இயக்கத்தில் கலந்து கொண்டு ஓராண்டு சிறையும், 300 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டு, அபராதம் கட்டாமல் மேலும் 3 மாதங்கள் தண்டனை அனுபவித்து அலிப்புரம் ஜெயிலில் இருந்து 15 மாதங்கள் கழித்து விடுதலையான இவர் கரூர் வேலாயுதம் பாளையத்தைச் சேர்ந்தவர்.

இப்ராகீம் இராவுத்தரின் புதல்வர் கரீம் இராவுத்தர் 1898ல் பிறந்தவர். ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டு 6 மாதங்கள் கடலூர் சிறையில் வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஹுசைன் முகம்மது இராவுத்தர் புதல்வராக 1897ல் பிறந்த காசிம் என்ற பானா இராவுத்தர் ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டு ஆறு மாதங்கள் சிறையில் வாடியவர்.

1902-ல் முகம்மது முகைதீன் பிள்ளையாகப் பிறந்த ஷம்சு ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டு ஒரு மாதம் திருச்சி சிறையில் வாடியவர். திவான் இராவுத்தரின் புதல்வராக 1903-ல் பிறந்த சேக் அப்துல்காதரும், முகையதீன் இராவுத்தரின் புதல்வராக 1903-ல் பிறந்த சேக்முகம்மதுவும் ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டு ஓராண்டு திருச்சி சிறையில் வாடியவர்கள்.

1899-ல் பிறந்த செய்யது பசுலுல்லா, 3-ஏ, மீரான் போட்லயன் தெரு, திருச்சியைச் சேர்ந்தவர். ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டு 3 மாதம் சிறையில் இருந்தவர். 1874-ல் செய்யது தஸ்தகீரின் புதல்வராகப் பிறந்த செய்யது உசேன், நாக்பூர் கொடிப்போரில் கலந்து கொண்டு ஒரு வருடம் சிறையில் வாடியவர்.

சர்தார் கானின் புதல்வராக 1893-ல் பிறந்த உஸ்மான்கான் நாக்பூர் கொடிப்போரில் கலந்துகொண்டு ஒரு வருடம் சிறையில் வாடினார். கே. வாஜிதீன் 1921ல் வெளிநாட்டுத் துணி எரிப்புப் போரிலும், 1930 உப்புச் சத்தியாக்கிரகத்திலும் கலந்து கொண்டு சிறை புகுந்தார். 32, பாபு ரோடு திருச்சியைச் சேர்ந்தவர்.

(அன்றைய) மதுரை மாவட்டம்

அப்துல்சுபான் சாகிப், 15—6—1916 மதுரை எட்வர்ட் லைப்ரரி ஹாலில் சென்னை மாகாண காங்கிரசின் 22-வது மாநாடு கூடியது. மாநாட்டில் கேசவ பிள்ளை தலைமை வகித்தார். அன்னிபெசன்ட் கலந்துகொண்டார். அப்துல் சுபான் சாகிப் பங்கேற்றார்.*

* 17—5—1916 சுதேசமித்திரன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தியாகி இப்ராகீம், பழனி 33, கோட்டை மேட்டுத் தெருவில் வாழ்ந்தவர். 1942 ஆகஸ்ட் புரட்சியில் 15 நாள் சிறையேகியவர். 1943ல் கோவை பேரூரில் நடைபெற்ற கோவை ஜில்லா மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர், ஒன்றரை மாதம் சிறையில் இருந்தபின் அவினாசி மாஜிஸ்டிரேட்டால் 6 மாதம் தண்டனைபெற்று நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

மதுரை இ. அமீத் சாகிப், 1921, 22ல் விடுதலை இயக்கங்களில் ஈடுபட்டு திருச்சி, கடலூர் சிறையில் ஒரு வருடம் வாடியவர்.

திண்டுக்கல் ஜாகிரிலி சாகிப், 1932ல் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்று திருச்சி பெல்லாரி சிறையில் ஒரு வருடம் வாடியவர்.

மதுரை முகம்மது இஸ்மாயில் சாகிப், ஒத்துழையாமை இயக்கத்தில் 1922-ல் கைதாகி ஒரு வருடம் மதுரை சிறையில் வாடியவர்.

எம். எஸ். பாபு சாகிப், பெரியகுளம் கீழவடகரை முஸ்லிம் தெருவில் வாழ்ந்தவர். 1922ல் நாகபுரி கொடிப் போரில் பங்கேற்று ஒரு வருடம் தண்டனை அனுபவித்தவர். மதுரை முகம்மது அப்பாஸ், மதுரை சி. முகம்மது இஸ்மாயில், மதுரை அ. முகம்மதுகரீம், ஆகியோர் ஒத்துழையாமை இயக்கத்திலும், 1922ல் போராட்டங்களிலும் கலந்து கொண்டு மதுரை சிறையில் ஒரு வருடம் விடுதலைக்காக வாடியவர்கள்.

மதுரை மு. முகம்மது மீரா இராவுத்தரின் ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தில் 3 மாதம் சிறை புகுந்தவர். கம்பம் மீரான்கான் இராவுத்தர் புதல்வரான பீர் முகம்மது. 1941ல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று 6 மாதம் அலிப்புரம் சிறையில் வாடியவர். மதுரை மேலூர் சி. உமறுப்புலவர் இராவுத்தர் 1922ல் இயக்கத்திலும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள்ளுக்கடை மறியலிலும், ஈடுபட்டு மதுரை சிறையில் 3 மாதம் வாடியவர். ஒண்டியூர் டி. கே. அப்துல்காதிர் சாகிப், 1932ல் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு மதுரையில் 2 மாதம் சிறையில் வாடியவர்.

திருமங்கலம் ஆசீக்பாட்சா இராவுத்தர் உப்புச்சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு திருச்சி சிறையில் 6 மாதம் வாடியவர். பேரையூர் எஸ். கே. சின்னசேக் அப்துல்காதர் 1932 கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு மதுரை திருச்சி சிறையில் 2 மாதம் வாடியவர். மதுரை மேலூர் எஸ். எச். எ. ரெஹ்மான் காங்கிரஸ் செயலாளர், உப்புச்சத்தியாக்கிரகப் போரில் பங்கேற்றவர். பழனித்தாலுகா தியாகிகள் பி. எம். முகம்மது இஸ்மாயில், ஏ. முகம்மது இபுராகீம், எஸ். சையது முஸ்தபா மணியக்காரர், நாட்டு விடுதலைக்கு முக்கியப் பணியாற்றிய பழனியைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஆவார்கள்.

பி. எம். முகம்மது இஸ்மாயில், 1922ல் இருந்து நிலக்கோட்டையில் 11 வருடம் அச்சகம் வைத்து நடத்தியவர். 1922ல் இருந்தே காங்கிரஸ் உறுதிமொழியில் கையெழுத்துச் செய்து ஊழியராகச் செயல்பட்டு வருபவர். நிலக்கோட்டையில் விவேகானந்தா வாசக சாலையை நிறுவியர். 1938ல் பழனி நகரசபையில் உறுப்பினரானார், 1941ல் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் மதுரை பெல்லாரி அலிப்புரம் சிறையில்வாடிய இவரது சேவை மகத்தானது. 1923ல் இருத்து காங்கிரஸ் தீவிரவாதியாக இருந்து சிறை சென்ற பழனி தேசபக்தர் இப்ராகீம், 1932 முதல் தீவிர காங்கிரஸ் வாதியாக இருந்து சிறை சென்ற பழனி கே. ஷெரீப். 1942ல் ஆகஸ்ட் புரட்சியில் அபூர்வமான வேலை செய்து ஒரு வருடம் தண்டிக்கப்பட்ட இஸ்மாயில் வன்னியர் வலசை ஊரைச் சேர்ந்தவர்.

கம்பம் டி. சையத் மகம்மது மாகாண காங்கிரசில் நிர்வாகப் பதவிகளில் இருந்தவர். முழுநேர தேசபக்தர். நல்ல

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரசங்கி. தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு பத்து வாரம் சிறைத் தண்டனை பெற்றவர்.

கம்பம் புதுப்பட்டி கே. அல்லாப்பிச்சை 1921 முதல் காங்கிரஸ் வேலைகளில் ஈடுபட்டு தொண்டாற்றியவர். 1938—1942 வரை மதுரை ஜில்லா போர்டு காங்கிரஸ் உறுப்பினர். 1930-ஆம் வருடம் முதல் தம் ஊரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நன்மைகள் புரிந்த நாட்டு விடுதலைப் போரில் பணியாற்றிய நல்லவர்.

தியாகி அப்துல்ரஹீம் சாஹிப்

நாகர்கோயிலிலிருந்து திருநெல்வேலிக்கு பஸ் சர்வீஸ் ஆரம்பித்த 'முஸ்லிம் மோட்டார் சர்வீஸ்' கம்பெனியின் பங்குதாரர் தியாகி அப்துல் ரஹீம் சாஹிப். கள்ளுக்கடை மறியலிலும், அந்நியத்துணியை எதிர்த்து ஜவுளிக்கடை மறியலிலும் பங்கேற்றவர். வைக்கம் போராட்டத்திலும் கலந்து கொண்டவர்.

நாங்குநேரி தாலுகா வடக்கன்குளம் கிராமத்திலிருந்து அரசின் தடையை மீறி சங்கு கணேசன் என்பவர் நடத்தி வந்த 'சுதந்திரச் சங்கு' என்ற தேசிய இதழை, போலீசாரின் கண்களில் மண்ணைத் தூவி, தனது முஸ்லிம் மோட்டார் சர்வீஸ் பஸ்ஸில் நாகர்கோவில் பகுதிக்குக் கொண்டு வந்து தேச பக்தர்களுக்கு விநியோகித்து விடுதலைப் போரில் ஆர்வம் காட்டியவர்.

மகாத்மா காந்தியின் நெல்லை மாவட்ட சுற்றுப் பயணத்தின் போது தனது பழைய போர்டு காரில், காந்தியை இருக்கச் செய்து தானே நாகர்கோவிலுக்கு காரை ஓட்டி வந்தவர் இவர்.

திருவிதாங்கூர் பகுதிகளில் ஓணம் பண்டிகைக்கு முன் கதர்த் துணிகளை சுமந்து பட்டி தொட்டியெங்கும் வக்கீல் நீலகண்டன், ராமசாமி பணிக்கர், படேல் சுந்தரம்பிள்ளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகியோருடன் தானும் சென்று சுதந்திரப் பாடல்களைப் பாடி கதர்த் துணியை விற்றவர் தியாகி அப்துல் ரஹீம் சாகிப்.*

திண்டுக்கல் சு. அப்துல்ரகீம்

1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று 9 மாதம் அலிப் புரம் சிறையில் வாடியவர். மு அப்துல்ரகுமான். 1932ல் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு ஒரு வருடம் வேலூர் ஜெயிலில் வாடியவர். பழனி தாலுகா கே. எஸ். அப்துல் ரசாக். 1921ல் இயக்கத்திலும் 1928ல் சைமன் கமிஷன் பகிஷ்கரிப்பிலும், 1942ல் புரட்சியிலும் பங்கேற்றவர். உத்தமபாளையம் சி. முகம்மது இஸ்மாயில் 1940ல் தனி நபர் சத்தியாக்கிரகத்திலும், 1942ல் ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கேற்று அலிப்புரம் சிறையில் ஆறு மாதங்கள் விடுதலைக் காக வாடியவர். பழனி எம். பி. இஸ்மாயில் 1941ல் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றவர். மதுரை முகம்மது இஸ்மாயில் ஒத்துழையாமை இயக்கத்தில் 15 மாதம் சிறை புகுந்தவர். மதுரை முஹம்மது மீரான் 1922ல் கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு வேலூர் ஜெயிலில் ஒன்றே கால் வருடம் வாடியவர். மதுரை மேலூர் கா. முகம்மது முத்தலீப் 1920ல் இயக்கத்தில் சேர்ந்து 1932ல் கள்ளுக்கடை மறியலில் கலந்து 11 மாதம் கடலூர் சிறையில் விடுதலைக்காக வாடியவர். மதுரை சி. பாவா முகையதீன் 1930ல் உப்புச்சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று திருச்சி கோவை சிறைகளில் ஆறு மாதங்கள் நாட்டு விடுதலைக்காக வாடியவர். வத்தலக்குண்டு (1920ல்) பிரபல காண்ட்ராக்டர் சிக்கந்தர் இராவுத்தர் தேசிய இயக்கத்தில் பங்கெடுத்து பல ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு கதர்துணிகளைவாங்கி மக்களுக்கு வழங்குவார். இவரது மாளிகை தேசியப்பாசறையாக விளங்கியது.

* 'அல்அமீன்' செப்டம்பர் 1993 இதழில் 'தியாகி அப்துல் ரஹீம் சாகிப்' பற்றி பட்டேல் சுந்தரம் பிள்ளை எழுதிய கட்டுரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவரது புதல்வர்கள் கே. எஸ். அப்துல்காதர், கே. எஸ். அப்துல்அஜிஸ் ஆகியோர் தீவிர தேசியவாதிகள். 1936ல் மட்டப்பாறையில் சுதந்திர எழுச்சிக்காக மாநாடு நடைபெற கே. எஸ். அப்துல்அஜிஸ் அரும்பணியாற்றினார். 1941ல் தனி நபர் சத்தியாக்கிரகத்திலும் 1942ல் ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கேற்றவர்.

கே. எஸ். அப்துல்காதர்

1934ல் காந்தியின் விஜயத்தில் அரிஜன நிதிக்கு பெரு நிதி வழங்கியவர். 1937ல் சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர் 1941ல் சத்தியாக்கிரகப்போரில் ஓராண்டு சிறையில் வாடியவர். மதுரை ஜில்லா போர்டு தலைவராகப் பணியாற்றியவர். 1938ல் இருந்து பல ஆண்டுகள் மாகாண காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினராகப் பணியாற்றிய இவரது தேச விடுதலைத் தொண்டு அனைவராலும் பாராட்டத்தக்கது. நிலக்கோட்டைத் தாலுகா காங்கிரஸ் காரியதரிசியாக 1936ல் இருந்து 1946 வரை பணியாற்றிய வத்தலக்குண்டு அப்துல்ரஹ்மான் 1941ம் வருட இயக்கத்தில் நாட்டு விடுதலைக்காக சிறை சென்றவர். வத்தலக்குண்டு அப்துல்ரகீமும், நாட்டு விடுதலைக்காக பணியாற்றிய நல்ல தொண்டர் ஆவார். மதுரை மு. அப்பாஸ் இராவுத்தர் கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டார். 1923ல் அந்நியத்துணி எதிர்ப்புப் போரிலும், உப்புச் சத்தியாக்கிரகத்திலும் பங்கேற்று திருச்சி சிறையில் ஒரு வருடம் வாடியவர். மதுரை கா. அப்துல்கமீது இராவுத்தர் ஒத்துழையாமையிலும், 1922ல் போராட்டத்திலும் பங்கேற்று திருச்சி கடலூர் சிறையில் 15 மாதம் வாடினார். திண்டுக்கல் மு. முகம்மது இராவுத்தர் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு கடலூர் சிறையில் வாடியவர். போடிநாயக்கனூர் முகம்மதுசாலியாஹ் 1941ல் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று சென்னை சிறையில் 3 மாதம் வாடியவர். மதுரை இ. முகம்மது யூசுப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1922ல் போராட்டத்தில் கலந்து கொண்டு திருச்சி, கடலூர் சிறையில் பதினைந்து மாதங்கள் இன்னலை அனுபவித்தார்.

கோம்பை என். எம். எஸ். எம். மரைக்காயர், 1930ல் நாட்டு விடுதலைப் போரில் சிறை சென்றவர். கோம்பை ஹாஜி. எஸ். எஸ். மரைக்காயர் நாட்டு விடுதலையில் நாட்டங் கொண்டு பணியாற்றியவர். திருமங்கலம் தாலுகா நானார்கனி இராவுத்தரின் புதல்வரான என். மீராமொய் தீன் 1942ல் ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று அலிப்புரசிறையில் வாடியவர். மதுரை மாவட்டம் கே. அப்துல்கரீம் 1933ல் சட்டமறுப்புப் போரில் கைதாகி திருச்சி சிறையில் வாடியவர். காசிம் மொய்தீன் இராவுத்தர் புதல்வர் முகம்மது முத்தலிப்பு சாய்பு 1921ல் காங்கிரசில் சேர்ந்து 1922ல் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார். 26-1-1922 முதல் 25—4—1923 வரை ஒரு வருடம் மூன்று மாதம் மதுரை கடலூர் சிறையில் வாடிய இவர் மதுரை மேலூர் தாலுகா காங்கிரஸ் கமிட்டியில் பொருளாளராகவும், உபதலைவராகவும் இருந்தார். தோல் வியாபாரியான இவர் தேசப்பற்று மிகுந்தவர். மதுரை மாவட்டம் எஸ். எல். எஸ். முகம்மதுமொய்தீன் 1942ல் புரட்சியில் பங்கேற்று 6 மாதம் அலிப்புரம் சிறையில் வாடியவர்.

ஹாஜி. சையது சம்சுதீன் சாகிப், மதுரை நகரில் தேசீயப் போராட்டத்தில் பங்கேற்ற முஸ்லீம்களில் குறிப்பிடத் தகுந்தவர். 1918ல் ஹோம் ரூல் கிளர்ச்சிக் காலத்தில் தீவிரத் தொண்டாற்றியவர். விடுதலைப் பிரச்சாரக் கூட்டங்கள் பலவற்றிற்குத் தலைமை தாங்கியவர். மௌலானா சாகிபுடன் இணைபிரியாமல் தொண்டாற்றிய இவர் திறம்படப் பேசுவதில் வல்லவர்.

சையது இஸ்மாயில், ஹாஜி. செய்யது சம்சுதீன் சாகிப்பின் புதல்வர். இவர் 1930-ம் ஆண்டுமுதல் தேசீய விடுதலைப் போரில் திறம்பட பணியாற்றியவர். சம்சியா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரஸ் உரிமையாளர் 'இந்தியன்' என்ற வாரப் பத்திரிகையை மதுரையில்நடத்தியவர். நல்ல பேச்சாளர். நாட்டு விடுதலையில் நாட்டங் கொண்டு நாளும் உழைத்தவர்.

மதுரை பாவா இப்ராகீம், தனது ஆடையை மூவர்ண கொடியால் அலங்கரித்துக் கொள்ளும் இவரைப் பார்த்தால் பைத்தியக்காரரைப் போலத் தோன்றும். உண்மையான காங்கிரஸ் பக்தரான இவர் நாட்டு விடுதலை பிரச்சாரம் நடைபெறும் கூட்டங்களில் அனைத்திலும் தவறாமல் கலந்து கொள்வார். 1930ம் வருடத்தில் போராட்டத்தில் ஈடுபட்டு ஒரு வருடம் சிறை சென்றவர்.

போடிநாயக்கனூர் புலவர் இராவுத்தர் என்ற சையது மீராவு இராவுத்தர், கே. சாகுல்ஹமீது, ஆசிரியர் கான் முகம்மதுபுலவர், எஸ். சுல்தான் இராவுத்தர், கே. முகம்மது சாலியா, கே. முகம்மது இப்ராகீம், வி. உசேன் கான் தேச விடுதலைக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். பண்ணைக்காடு ஏ. எஸ். இபுராகீம் தேசீய விடுதலையில் ஈடுபட்டவர். திருமங்கலம் தாலுகா இப்ராகீம் காதர், முகைதீன் நயினா இராவுத்தர், வெள்ளையத்தா இராவுததர் கிலாபத் இயக்க காலத்தில் நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள். பேரையூர் அப்துல் காதர் நாட்டு விடுதலைப் போரில் மறியல் செய்து ஒரு மாத தண்டனையும், 100 ரூபாய் அபராதமும் பெற்றவர். பேரையூர் லாடக்காரர் வீர முகையதீன் சாகிப், கள்ளுக்கடை மறியலில் 4 மாத சிறைத்தண்டனை ஏற்றவர். மதுரை ஜில்லாவாசியான உதுமால் இராவுத்தர் புதல்வர் இப்ராகிம்ஷா தேச விடுதலைப்போரில் தீவிரப்பங்காற்றியவர்.

மதுரை ஜில்லாவாசியான உசேன் இராவுத்தர் தேச விடுதலைப்போரில் ஈடுபட்டவர். நகர்மன்ற காங்கிரஸ் உறுப்பினராகப் பணியாற்றியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நத்தம் சாகுல்ஹமீது, செல்வாக்கு நிரம்பிய குடும்பத்தைச் சேர்ந்த இவர் காங்கிரஸ் பிரச்சாரத்தை கிராமம் தவறாமல் செய்தவர். தேசீய விடுதலைக்காக காந்தியப் பற்றுடன் காங்கிரஸ் நிர்வாகத்தில் திறம்பட வேலை செய்ததுடன், பண உதவிகளும் அளித்தவர். குலாம் மொகைதீன். 1962ல் பழனி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றியவர்; சுதந்திரப்போரில் தனது தந்தையாருடன் கலந்து கொண்டவர்.

திண்டுக்கல் எம். எஸ். அப்துல்சத்தார், 1920ல் காங்கிரசில் சேர்ந்தார். தாலுகா, நகர, ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும், மாகாணத்திலும், அகில இந்தியாவிலும், காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினராகவும் இருந்தவர். 1940ல் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு ஒரு வருட கடுங்காவல் தண்டனையும் 500 ரூபாய் அபராதமும் அடைந்தார். 1942ல் ஆகஸ்ட் போராட்டத்தில் வேலூர், தஞ்சாவூர், கண்ணனூர் சிறையில் பாதுகாப்புக் கைதியாக நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

திண்டுக்கல் மைதீன் சாகிப், 1920ல் இரண்டு கள்ளுக் கடைகளில் மறியல்செய்து இரண்டு மாத தண்டனை பெற்றவர். நாகபுரி கொடிப் போராட்டத்திற்கும் சென்றவர்.

கா. தங்கமீரான் சாகிப், 1920ல் திண்டுக்கல்லில் 144 தடை சட்டத்தை மீறியதாக 6 மாத கடுங்காவல் தண்டனையும், சிறை விதிகளை மீறியதற்காக ஒரு வருட தண்டனையும், அடைந்தவர். நெடுங்காலம் தமிழ் நாட்டில் சுதந்திரப் பிரச்சாரம் செய்தவர்.

அப்துல் அஜிஸ், 1932ல் தடியடிபட்டு போலீஸ் லாக்கப்பில் அடைக்கப்பட்டுக் கிடந்த சுதந்திரப் போர் வீரர் அப்துல்அஜிஸ் திண்டுக்கல்லைச் சேர்ந்தவர்.

குலாம் தஸ்தகீரி, 1930ல் தீவிர சுதந்திரப் போர்வீரர் காங்கிரஸ் கமிட்டியில் அங்கம் வகித்த இவர் திண்டுக்கல் தாலுகாவைச் சேர்ந்தவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆர். நாகூர்பிச்சை, தேசீய முஸ்லிம் இளைஞர் திண்டுக்கல் நகர காங்கிரஸ் செயலாளராக பணியாற்றிய தோடு இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் தேச விடுதலைக்கும் பணியாற்றியவர்.

திண்டுக்கல் எஸ். எஸ். எஸ். அப்துல் ரஹிம், தீவிர காங்கிரஸ் வாதி, காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினராகவும் பொருளாளராகவும் பணியாற்றிய இவர் 1942ல் ஆகஸ்ட் புரட்சியில் ஓராண்டு சிறையும் 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டு தண்டனைக்கு உள்ளானார்.

திண்டுக்கல் மீரா ஒலி, 1930ல் கைது செய்யப்பட்டு போலீசாரால் தடியடிக்குள்ளாகி சித்திரவதை செய்யப் பட்டு ஒரு வாரம் தண்டனை அடைந்தவர்.

உத்தமபாளையம் கொந்தால்கான் ராவுத்தர் சே. முகம்மது மீரா ராவுத்தர் ஆகியோர் நாட்டு விடுதலைக்கு பணியாற்றி சிறை சென்றவர்கள்.

காசிம்மரைக்காயர், 1921ல் மேலூரில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு 11 மாதம் சிறையில் வாடியவர்.

அனுமந்தம்பட்டி மீ. முஹம்மது நயினார் ராவுத்தர், போடி வி. எம். அப்துல்காதர், போடி முகமது சாலியா, போடி ஜி. சாகுல்ஹமீது, பெரியகுளம் எஸ். எம். வி. சையது சாகிப் ஆகியோர் நாட்டு விடுதலைக்கு சிறை சென்ற தியாகிகள்.

கம்பம் ஹாஜி எம். முஹம்மது நயினார் ராவுத்தர், ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டவர். 1941ல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று சென்னை சிறையில் 2 மாதம் வாடியவர்.

மதுரை அ. காதர்பாட்சா ராவுத்தர், 1930ல் கள்ளுக் கடை மறியலில் ஈடுபட்டு, எட்டு மாதம் அலிப்புரம் சிறை யில் வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை அ. முகம்மது ராவுத்தர், ஒத்துழையாமை இயக்கத்திலும், 1922ம் ஆண்டுப் போராட்டத்திலும் பங்கேற்று, 15 மாதம் திருச்சி சிறையில் வாடியவர்.

கா. முகம்மது ராவுத்தர், ஒத்துழையாமையிலும், 1922ம் ஆண்டுப் போராட்டத்திலும் பங்கேற்று, கடலூர் சிறையில் 1 வருடம் 3 மாதம் விடுதலைக்காக வாடியவர்.

திண்டுக்கல் செ. செய்யது இப்ராகிம், 1930ல் உப்புச் சத்தியாக்கிரகத்திலும் 1932ல் சட்டமறுப்புப் போரிலும் பங்கேற்று 4 மாதம் திருச்சி சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

திருமங்கலம் பா. அப்துல்கரீம், 1915ல் பிறந்தவர். சட்டமறுப்பு இயக்கத்தில் 1933ல் கலந்துகொண்டு திருச்சி சிறையில் 4 மாதம் விடுதலைக்காக வாடியவர்.

மதுரை மேலூர் முஹம்மதுலாபுரம் இ. அப்துல்கரீம், 1922ல் கள்ளுக்கடை மறியலில் மதுரை ஜெயிலில் 3 மாதம் வாடியவர்.

திருமங்கலம் பெரியதெரு க. அப்துல்கரீம், 1924ல் சுதந்திரப் போரில் குதித்தவர். 1932ல் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு 6 மாதம் மதுரை சிறையில் வாடியவர்.

மதுரை பா. அப்துல்லத்தீப்கான், 1941ல் சத்தியாக்கிரகப் போரில் பங்கேற்று கண்ணனூர் சிறையில் இரண்டாண்டு வாடியவர்.

கம்பம் த. செய்யது முஹம்மது, 1941ல் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று சென்னை சிறையில் 10 வாரம் 5 நாட்கள் விடுதலைக்காக வாடியவர்.

மதுரை காதர்பிச்சை, 1922ல் மறியலில் ஒன்றேகால் வருடமும், 1923ல் மறியலில் 1 வருடமும் சிறை சென்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றவர். தேசியத்தில் ஊக்கமும் உணர்ச்சியும் கொண்டவர். காங்கிரஸ் வேலை எதையும் உற்சாகத்துடன் செய்து முடிக்கும் திறமை பெற்றவர்.

ஹாஜி முகம்மது மௌலானா த/பெ. ஹாஜி முகம்மது ஹாஜிமுத்து, மௌலானா சாகிப் த/பெ. முகம்மது உஸ்மான் சாகிபு, ஒத்துழையாமைப் போரில் பங்கேற்ற வர்கள்.

பெரியகுளம் எஸ். வி. எம். சாஹித் சாஹிப், 1921ல் இயக்கத்திலும் 1942ல் புரட்சியிலும் பங்கேற்று சென்னை, கண்ணனூர், வேலூர் சிறைகளில் ஓராண்டு வாடியவர்.

கம்பம் செய்யது முகம்மது, தனிநபர் சத்தியாக்கிரகத் தில் அலிப்புரம் சிறையில் 4 மாதம் வாடியவர்.

மதுரை செய்யத் அகமது கபீர் 1942ல் ஆகஸ்ட் புரட்சி யில் பங்கேற்று அலிப்புரம் ஜெயிலில் 4 மாதம் 5 நாட்கள் நாட்டுவிடுதலைக்கு வாடியவர்.

எஸ். எஸ். இப்ராகீம்

அதிராம்பட்டினத்து தியாகியான இவர் தனது பத்தாவது வயதில் உப்புச் சத்தியாக்கிரப் போரில் பங்கேற்று, கள்ளுக்கடை மறியல், அந்நியத்துணி பகிஷ் கரிப்பு, இராட்டை நூற்பு, கதர் நெய்தல்போன்ற சர்வோ தயப் பணியில் ஈடுபட்டவர். 1941ல் தனி நபர் சத்தியாக் கிரகப் போரிலும் 1942ல் ஆகஸ்ட் புரட்சியிலும் ஈடுபட்டு வேலூர், பெல்லாரி, அலிப்புரம் சிறையில் வாடியவர்.

பழனி கோட்டை மேடு அ. இப்ராகிம் நாட்டு விடுத லைக்காக சிறையில் வாடியவர்.

மு. காதர்பிச்சை சட்டமறுப்பு இயக்கத்தில் சிறை சென்று கடலூர் சிறையில் வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1917ல் பிறந்த காதர்மொய்தீன் 1942 ல் தனிநபர் சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டவர்.

கா. காதர்மொய்தீன் 1902 ல் பிறந்தவர். 1930 ல் கள்ளுக்கடை மறியலிலும் 1931ல் அந்நியத்துணி எரிப்பிலும் கலந்து கொண்டு திருச்சி சிறையில் வாடியவர்.

பெரியகுளம் சின்னாமுஹைதீன் பிச்சை ராவுத்தர் மகன் மரைக்காயர் 1915ல் பிறந்தவர். 1941ல் தனிநபர் சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டு அலிப்புரம் சிறையில் விடுதலைக்காக வாடியவர்.

பத்தொன்பதாவது வயதில் ஆகஸ்ட் புரட்சியில் சிறை சென்ற நா. மீராமுகைதீன் அலிப்புரம் சிறையில் 4 மாதம் 20 நாட்கள் விடுதலைக்காக வாடியவர்.

உத்தமத் தொண்டர்கள் வாழ்ந்த உத்தமபாளையம்

தென்னாட்டு 'பர்டோலி' என்று அழைக்கப்படும் உத்தமபாளையத்தைச் சேர்ந்த புலவர் இராவுத்தர், பீர் முகம்மது பாவலர், மைதீன் பிள்ளைராவுத்தர், தவக்கல் சாகிப், ஹாஜி கருத்தராவுத்தர், எம். கே. வக்கீல் மீரான் ராவுத்தர், எ. அப்துல் ரஹ்மான் ராவுத்தர், சையது ராவுத்தர், கே. சி. முகம்மது இஸ்மாயில், இப்ராகிம் கொந்தால்கான் இராவுத்தர், கொத்துமீரான் கான் இராவுத்தர், பாட்சா ராவுத்தர், எம். கே. பீர்மைதீன் இராவுத்தர், எஸ். சையது ராவுத்தர், பக்கீர் முகம்மது உசேன்பர், கடலூர் சையது மீரா எலசை சாய்பு ஆகியோர் நாட்டு விடுதலைக்காக பாடுபட்டவர்கள்.

மதுரை டாம் டாம் இப்ராகிம், 'டாம் டாம்' மூலம் காங்கிரஸ் சமாச்சாரங்களையும் செய்திகளையும் தெரிவிக்கும் உண்மை உழைப்பாளி. நாட்டு விடுதலைக்காக 1923ல் மறியலில் ஒரு வாரத் தண்டனை பெற்றவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரை முஹையதீன் பீர் நாட்டாண்மை, 1922ல் கள்ளுக்கடை மறியலில் பங்கேற்று ஒரு ஆண்டு கடலூர் சிறையில் வாடியவர்.

பி. முகம்மது கனி, 1930ல் கள்ளுக்கடை மறியலில் ஒரு வருடம் திருச்சி சிறையில் வாடியவர்.

தென்னாற்காடு மாவட்டம்

குறிஞ்சிப்பாடி கே. அப்துல்கமீது, எஸ். அப்துல் கமீது, ஆகஸ்ட் புரட்சி யுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு சிறை சென்றவர்கள். அரகண்டநல்லூர் எஸ். அப்துல்காதர் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர். கீரப்பாளையம் (சிதம்பரம் தாலுகா) அப்துல் ரயார் சாகிப் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு 3 மாதம் கடலூர் சிறையில் வாடியவர். புரம்பாக்கம் (உளுந்தூர் பேட்டை) எம். ஏ. அப்துல்ரசாக், தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பாதுகாப்புச்சட்டத்தின்கீழ் கைதாகி 3 மாதம் கடலூர், திருச்சி, சிறைகளில் வாடியவர். அரசாங்கத்தாரால் ரூ. 200 அபராதம் விதிக்கப்பட்டவர்.

சிதம்பரம் கீரப்பாளையம் புதுத் தெரு மு. அப்துல் ரசாக் சுதந்திரப்போர் நடவடிக்கையில் ஈடுபட்டு கடலூர் சிறையில் 3 மாதம் வாடியவர். குறிஞ்சிப்பாடி எஸ். ஏ. ஹமீது தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு பாது காப்புச் சட்டத்தில் 15 மாதம் சென்னை சிறையில் வாடிய வர். திருக்கோயிலூர் ஐ. டி. ஜலாலுதீன் உப்புச் சத்தியாக் கிரகத்திலும், அன்னியத் துணி எரிப்பிலும், ஆகஸ்ட் புரட் சியிலும், கலந்து கொண்டவர். திண்டிவனம் சே. சேக் அப்துல் காதர் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டு 147, 332, ஐ. பி. சி. யின்படி தண்டிக்கப்பட்டு வேலூர் சிறை யில் விடுதலைக்காக வாடியவர். திண்டிவனம் காசிக்கரை ஆதம் சாகிப் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு 9 மாதம் மதுரைச் சிறையில் வாடியவர். பண்ருட்டி முகம்மது உசேன் நீலன்சிலை சத்தியாக்கிரகத்தில் சென்னையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போராடி தண்டனைக்குள்ளானவர். நெல்லிக்குப்பம் பெரிய தெரு ஜே. ரபிக்உதீன் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதால் பாதுகாப்புச் சட்டத்தில் கைதாகி பெல்லாரி சிறையில் 1 ஆண்டு வாடியவர்.

திண்டிவனம் காஸ்மியான் சாகிப் தெருவில் வாழ்ந்த எம். ஏ. குப்புராவுத்தர் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு கடலூர் ராஜமுந்திரி சிறையில் ஒன்றரை ஆண்டு வாடியவர். திண்டிவனம் மியான் சாகிப் தெரு ஏ. ஆதம் சாகிப் உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று 9 மாதம் கடலூர் சிறையில் வாடியவர். கீழபுவனகிரி எம். ரகிமான் சாகிப் கள்ளுக்கடை மறியலில் கைதாகி கடலூர் சிறையில் 4 மாதங்கள் விடுதலைக்காக வாடியவர். கடலூர் என். டி. சுப்பராயலு செட்டித் தெரு சுலைமான் சாகிப் கள்ளுக்கடை மறியலில் கலந்து கடலூர் சிறையில் 6 மாதம் ஒரு வாரம் வாடியவர். செஞ்சி கிருஷ்ணாபுரம் மாணிக்கம் செட்டியார் தெரு செய்யது இப்ராகீம் சாகிப் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு பாதுகாப்புச் சட்டத்தில் அலிப்புரம் சிறையில் 2 மாதம் நாட்டு விடுதலைக்காக வாடியவர். திண்டிவனம் சே. சேக்அப்துல்காதர் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டு ஒன்பது மாதம் கடலூர் சிறையில் வாடியவர்.

திண்டிவனம் தா. சேக் ஆதம் சாகிப் 1930ல் சுதந்திரப் போரில் கலந்துகொண்டு ஒன்பது மாதங்கள் சென்னை, மதுரை சிறைகளில் சுதந்திரத்திற்காக வாடியவர். திண்டிவனம் சே. சேக்தாதாமியான் உப்புச்சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு சென்னை சிறையில் 9 மாதங்கள் வாடியவர். திண்டிவனம் ரத்தினசபாபதி பிள்ளைத் தெரு மு. சுபான் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் போராடி பாதுகாப்புச் சட்டத்தில் கைதாகி வேலூர் சிறையில் 3 மாதங்கள் வாடியவர். திருவெண்ணை நல்லூர் சுலைமான் பாட்சா சாகிப் ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர். கிராம முன்சீப் பதவியை தூக்கி எறிந்தவர். 6 மாதம் சிறையில் வாடியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேலம் மாவட்டம்

நாமக்கல் பா. அப்துல் ஜப்பார் சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்று கோயம்புத்தூர் சிறையில் ஒரு மாதம் நாட்டு விடுதலைக்காக வாடியவர்; நகர காங்கிரஸ் தலைவராகவும் இருந்தவர். சேலம் ஆத்தூர் புதுப் பேட்டையை சேர்ந்த எஸ். டி. அப்துல்கனி கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு கோவை சிறையில் 6 மாதம் நாட்டு சுதந்திரத்திற்காக வாடியவர். சேலம் கிச்சிப் பாளையம் என்.எஸ். அப்துல்ரகுமான் கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு இரண்டு மாதங்கள் கோவைச் சிறையில் நாட்டு விடுதலைக்கு வாடியவர். சேலம் ஏற்காடு அ. அப்துல்சாகிப் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று பாதுகாப்புச் சட்டத்தில் கைதாகி வேலூர் சிறையில் 6 மாதம் நாட்டு விடுதலைக்கு வாடியவர்.

சேலம்-1 ஐ சேர்ந்த அப்துல்சுபான், கள்ளுக்கடை மறியலிலும், அன்னியத் துணி எரிப்பிலும் கலந்து கொண்டு மூன்று மாதங்கள் கோயம்புத்தூர் சிறையில் வாடியவர். சேலம் ராசிபுரம் வெண்ணாத்தூர், தா. காதர்பாட்சா ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று நாமக்கல், சேலம், கோவை சிறையில் வாடியவர். நாமக்கல் ந. லத்தீப்கான் சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்று கோவைச் சிறையில் 7 மாதங்கள் வாடியவர். சேலம் பெண்ணாகரம் ஏ. முகம்மது காசீம் 1930ல் சுதந்திரப்போரில் கலந்து அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

வீதிதோறும் சென்று கதர்த்துணிகளை சுமந்து விற்ற தீவிர தேசபக்தர் சேலம் ஆத்தூர் தாமம்பட்டி கா. முகைதீன் சேக் சாகிப்பும், கே. எம். அப்துல் கபூர் சாகிப்பும், ஒத்துழையாமைப் போரிலும், கள்ளுக்கடை மறியலிலும் கலந்து கொண்டு கோவைச் சிறையில் 2 மாதங்கள் வாடியவர். சேலம் ஆத்தூர் ஆ. அப்துல்ரகீம் சாகிப், அன்னியத் துணி பகிஷ்காரத்தில் கலந்து கொண்டு 9 மாதங்கள் கடலூர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மத்திய சிறையில் வாடியவர். சேலம் டி.எம். அமீர்சாகிப் ஒத்துழையாமை, உப்புச்சத்தியாக்கிரகப் போராட்டங்களில் பங்கேற்று பல்லடம், கோயம்புத்தூர் சிறையில் 7 மாதங்கள் வாடியவர். சேலம் கே. கனிசாகிப் அன்னிய துணி எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு 6 மாதம் கோவைச் சிறையில் வாடியவர். சேலம் தாமம்பட்டி என். எஸ். குலாம் தஸ்தகீர்சாகிப் காங்கிரஸ் இயக்கம் ஆரம்பிக்கும் முன்பே சென்னை மகாஜன சபையில் பணியாற்றியதை ஏற்கனவே பார்த்திருக்கிறோம். அவர் ஒத்துழையாமை காலத்தில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு 2 மாதங்கள் கோவைச் சிறையில் வாடியவர். சங்ககிரி பா. முகம்மது உஸ்மான் சாகிப் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்று 18 மாதங்கள் கோவைச் சிறையில் வாடியவர்.

சேலம் தாமம்பட்டி கா. ரஸ்தம்சாகிப் கதர்த்துணிகளை தோளிலே சுமந்து வீதி வீதியாக விற்றவர்; கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு கோவைச் சிறையில் 2 மாதம் வாடியவர். சேலம் கிச்சிப்பாளையம் என். சப்ஜி கான்சாகிப் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு அலிப்புரம் சிறையில் 6 மாதங்கள் வாடியவர். சேலம் தாமம்பட்டி அ. சபுசாகிப் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு கோவைச் சிறையில் 2 மாதங்கள் வாடியவர். சேலம்-1 எம். சதார் சாகிப் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு கண்ணனூர் சிறையில் 2 வருடம் வாடியவர். சேலம் செய்யது அப்துல் லத்தீப் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு கோவைச் சிறையில் 4 மாதங்கள் வாடியவர்.

தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர், பாபநாசம் தாலுகா ஆலூர் மு. அப்துல் அஜிஸ் தனி நபர் சத்தியாகிரகத்திலும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலும் பங்கு பெற்றவர். பாபநாசம் தாலுகா காங்கிரஸ் கமிட்டி துணைத்தலைவராகப் பணியாற்றியவர். வாழையனூர் (பாபநாசம் தாலுகா) ஏ. எஸ். அப்துல்கரீம் இராவுத்தர், தனி நபர் சத்தியாக்கிரகத்திலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலும் கலந்து கொண்டு 3½ மாதம் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அலிப் புரம் சிறையில் தேச விடுதலைக்காக வாடியவர். நாகப் பட்டினம் கே. அப்துல்காதர் ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று மூன்று மாதம் அலிப்புரம் சிறையில் வாடியவர். மேலக் காவேரி அ. அப்துல்வகாப் கும்பகோண எழுச்சியில் கலந்து கொண்டதாக வழக்குத் தொடரப்பட்டு நாட்டு விடுதலைக்காக சிறை சென்றவர். ஆக்கூர் (மாயூரம்) அப்துல்லா அந்நியத்துணி எரிப்புப் போரிலும், கள்ளுக் கடை மறியலிலும், கலந்து கொண்டு 14 மாதங்கள் திருச்சி சிறையில் வாடியவர். நாகப்பட்டினம் மு. அப்துல்லா இராவுத்தர் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று ஓராண்டு திருச்சி சிறையில் வாடியவர்.

கும்பகோணம் தத்துவாஞ்சேரி சிதம்பரநாதபுரம் இ. அப்துல்லத்தீப் ஒத்துழையாமைப் போரிலும், சுதேசி இயக்கத்திலும் கலந்து கொண்டு திருச்சி சிறையில் 5 மாதம் நாட்டு விடுதலைக்காக வாடியவர். தஞ்சை பாபநாசம் என். அப்துல்வகாப் ஒத்துழையாமை இயக்கப் போரில் பங்கேற்று 14 மாதம் சிறையில் நாட்டு விடுதலைக் காக வாடியவர். மன்னார்குடி தென்பாறை எம். ஜே. பீர்முகம்மது தனி நபர் சத்தியாக்கிரகத்திலும், கள்ளுக் கடை மறியலிலும், ஆகஸ்ட் புரட்சியிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். அதிராம்பட்டினம் காட்டு பாவா பள்ளிவாசல் தெரு, எம். ஏ. சி. புகாரி ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர். நாகப்பட்டினம் மு. ஹாஜா அலாவுதீன் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று 5 மாதங்கள் திருச்சி சிறையில் தேச விடுதலைக்காக வாடியவர். நாகப்பட்டினம் கமாலியா மஸ்ஜித் தெரு வி. இ. எம். ஹமீது யூசுப் வத்தானி ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர். அதிராம்பட்டினம் காங்கிரஸ் கமிட்டி தலைவராகப் பணியாற்றிய சு. இப்ராகீம், தனி நபர் சத்தியாக்கிரத்திலும், ஆகஸ்ட் புரட்சியிலும், பங்கேற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அலிப்புரம், வேலூர் சிறைகளில் ஆறு மாதம் நாட்டு விடுதலைக்காக வாடியவர். மாயவரம் மேற்கு பகுதியைச் சேர்ந்த ஏ.எம். இஸ்மாயில், ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று அலிப்புரம் சிறையிலும், தஞ்சாவூர் சிறையிலும், 14 மாதங்கள் நாட்டு விடுதலைக்காக வாடிய தீவிரவாதி.

வந்தேமாதரம் பத்திரிகை துணை ஆசிரியர்

தஞ்சாவூர் மேல மெயின் தெரு அ. ஜெயினுலாப்தீன் கள்ளுக்கடை மறியலிலும், உப்புச் சத்தியாக்கிரகத்திலும், தனி நபர் சத்தியாக்கிரகத்திலும், ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கேற்றவர். தாலுகா காங்கிரஸ் கமிட்டி தலைவர்; வந்தேமாதம் வாரப்பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்; நாட்டு விடுதலைக்கு தீவிரப் பணியாற்றிய தேசபக்தர். தஞ்சாவூர் வைத்தியலிங்க கோன் லைனைச் சேர்ந்த ஜனாப் கே. குலாம் முஹைதீன் ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர். வலங்கைமான் சீனியாத் தெரு எஸ். கரீம் தனி நபர் சத்தியாக்கிரகத்திலும், ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கேற்று அலிப்புரம் சிறையில் பத்து மாதங்கள் நாட்டு விடுதலைக்காக வாடியவர். தஞ்சாவூர் அய்யம்பேட்டை கரீம் ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர்; மாதுரில் நடைபெற்ற எழுச்சிப் போரில் கலந்து கொண்டு சிறை சென்றவர். நாகூர் யூ. நவாப் சாகிப் மரைக்காயர் சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்று ஒன்பது மாதங்கள் திருச்சியில் சிறை சென்றவர். நாட்டு விடுதலைக்காக நாளும் வாடியவர். நாகப்பட்டினம் புதுத் தெரு அ. முகையதீன் மரைக்காயர் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று 6 மாதம் பாதுகாப்பு சட்டத்தில் திருச்சி, சென்னை சிறையில் வாடியவர். ராஜாஜியின் அமைச்சரவையில் பாராளுமன்ற செயலாளராகப் பணியாற்றிய தீவிரவாதி இவர்.

நாகப்பட்டினம் மு. முகம்மது அய்சாகனி 1942 ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று ஒரு வருடம் திருச்சி சிறை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யில் வாடியவர். தஞ்சாவூர் ந. ராஜா முகம்மது சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்று ஆறு மாதங்கள் திருச்சி சிறையில் தேசத்திற்காக வாடியவர். ஆக்கூர் சி. முகம்மது காசீம் ஒத்துழையாமைப் போரிலும், அந்நியத் துணி எரிப்பிலும் கலந்து கொண்டு பத்து மாதங்கள் திருச்சி சிறையில் நாட்டு விடுதலைக்காக வாடியவர்.

ஆடுதுறை கே. முஹம்மது ஹுசேன் கள்ளுக்கடை மறியலிலும், அந்நியத்துணி எரிப்பிலும், தனி நபர் சத்தியாக்கிரகத்திலும் பங்கேற்றவர்; மாவட்ட விவசாயத் தொழிலாளர் காங்கிரஸ் துணைத்தலைவராகப் பணியாற்றியவர். மாயவரம் ஆ. முகம்மது இப்ராகீம் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டு 3 மாதங்கள் திருச்சி சிறையில் வாடியவர்.

தஞ்சாவூர் அ. முகம்மது இஸ்மாயில் ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று 8 மாதங்கள் தஞ்சாவூர் சிறப்பு ஜெயிலிலும், வேலூர் சிறையிலும் சுதந்திரப் போரில் வாடியவர். தஞ்சாவூர் ப. முஹம்மது இப்ராகீம் ஒத்துழையாமை இயக்கப் போரில் பங்கேற்று திருச்சி சிறையில் 18 மாதங்கள் தேசத்திற்காக வாடியவர். நன்னிலம் கொரடாச்சேரி செ. முஹம்மதுமுகையதீன் ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று ஒரு வருடம் பாதுகாப்புச் சட்டத்தில் அலிப்புரம் சிறையில் வாடியவர். ஆக்கூர் உ. ராஜாமுகம்மது அந்நியத்துணி எரிப்பிலும், கள்ளுக்கடை மறியலிலும் கலந்து கொண்டு திருச்சி சிறையில் 4 மாதம் வாடியவர்.

கள்ளுக்கடை மறியல்

இந்திய விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்களின் பங்கு பற்றி விவரித்துக் கொண்டே செல்கிற போது 'கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டார்' என்று பலரைப் பற்றி குறிப்பிட்டுள்ளேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள்ளுக்கடை மறியல் எப்படி நடைபெற்றது? என்பதற்கு ஒரே ஒரு சான்றை மட்டும் தருகிறேன்.

நிலக்கோட்டை

மதுரை மாவட்டம் நிலக்கோட்டைத் தாலுகாவில் உள்ள கள்ளுக்கடைகள் அனைத்திற்கும் ஏலம் நிலக்கோட்டைத் தாலுகா அலுவலகம் முன்பு விடப்படும். இங்கு ஏலம் எடுக்க விடாமல் செய்தால் பிறகு மறியல் செய்ய வேண்டிய நிலை ஏற்படாது என்பதை உணர்ந்த தேச பக்தர்கள் ஊரெங்கும் ஏலம் எடுக்க வேண்டாம் என்று துண்டுப் பிரசுரங்கள் வழங்கினார்கள். சிதம்பர பாரதி, சுல்தான் பாக்தாதி போன்ற தொண்டர்கள் 'டாம் டாம்' மூலம் ஏலம் எடுக்க வேண்டாமென்று நிலக்கோட்டை நகரமெங்கும் தண்டோரா மூலம் அறிவித்து வந்தனர்.

ஏலம் விடும் நேரம் வந்ததும், 40 ஊர்களின் பெயரையும் வரிசையாக தாசில்தார் கூறிப்பார்த்தார்; யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. ஏன் தெரியுமா? தாலுகா அலுவலகம் முன்பு மதுரை மௌலானா சாகிப், மட்டப் பாறைஐயர், முனகாலபட்டாபி ராமைய்யர், கண்ணாயிர முதலியார், சுப்பிரமணிய முதலியார், வெங்கிடசாமிஐயர் போன்றவர்கள் ஏலம் எடுக்க வந்தவர்களை ஏலம் எடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டிருந்தனர். இக்கட்டுப் பாட்டைக் கண்ட தாசில்தார் ஏலம் எடுக்கும் நபர்களைத் தனித்தனியாகக் கூட்டி வேண்டிய பாதுகாப்பும், சகல உதவிகளும் செய்வதாக வாக்களித்தார். மன்னாடிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த ஏலதாரர் ஏலம் எடுக்க முன் வந்ததும், கூடியிருந்த தேசபக்தர்கள் கேலியும் கிண்டலும் செய்தனர். ஆத்திரமடைந்த தாசில்தார் ஏலதார்கள் சிலரை ரகசியமாக அழைத்து ஏலம் எடுக்கவந்தவரைக் கொள்ளையடித்துப் பணத்தை பறித்தார்கள் என்று வழக்குப்போட்டார்கள். அதில் மட்டப் பாறை ஐயர், மௌலானா சாகிப், பட்டாபிராமையர் போன்ற தலைவர்கள் மீது வழக்கு நடைபெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழக்கு விசாரணை பல ஊர்களில் நடைபெற்றது. வழக்கை வேடிக்கை பார்க்க வந்த பொதுமக்கள் மத்தியில் விடுதலைப் பிரச்சாரமும் நடைபெற்றது. நிலக்கோட்டை சோழவந்தான் வட்டாரத்தில் ஆறுமாதம் வரை அப்போது எந்த மதுக் கடைகளையும் திறக்கமுடிய வில்லை; அந்த அளவிற்கு மக்கள் மதுவிலக்குப் போருக்கு ஒத்துழைப்பு தந்தனர். இறுதியில் மதுரை மௌலானா சாகிப் உள்ளிட்ட தலைவர்கள் மீது தொடரப்பட்ட கள்ளுக்கடை கொள்ளைவழக்கு தள்ளுபடி ஆயிற்று. *

வரலாற்றுச் சிறப்பு மிக்க நிலக்கோட்டை தாலுகா கள்ளுக்கடை மறியலில் மௌலானா சாஹிப், சுல்தான் பாக்தாதி போன்ற தமிழக முஸ்லிம்களின் பங்கு போற்றத் தகுந்தது; தியாகத்திற்குரியது;

மாயவரம்

மாயவரம் இ. ஆதம்ஷா இராவுத்தர் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு திருச்சி சிறையில் தேசத்திற்காக 4 மாதங்கள் வாடியவர். ஆடுதுறை வெ. தாவூது இராவுத்தர் கும்பகோணம் சுதந்திர எழுச்சிக் கலகத்தில் வழக்குத் தொடரப்பட்டவர்; ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர். தஞ்சாவூர் கண்டியூர் அ.முகம்மது கனி இராவுத்தர் கள்ளுக்கடை மறியலிலும் கலந்து கொண்டு கடலூர் சிறையில் ஒரு வருடம் தேசத்திற்காக வாடியவர். தஞ்சாவூர் மு. சேக்தாவூது இராவுத்தர் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று அலிப்புரம் சிறையில் மூன்றரை மாதம் வாடியவர். கும்பகோணம் மா பாச்சா சாகிப் ஒத்துழையாமைப்போரில் பங்கேற்று திருச்சி சிறையில் ஆறு மாதம் நாட்டு விடுதலைக்காக வாடியவர். தஞ்சாவூர் ஆ. அப்துல் ரகுமான் சாகிப் ஒத்துழையாமைப் போரில் கலந்துகொண்டு திருச்சி சிறையில் ஒன்பது மாதங்கள் வாடியவர்.

* தியாகி சின்னசாமி பிள்ளை (சோழவந்தான்) 'சுதந்திரம் சும்மா கிடைக்கவில்லை' நூலில் பக் 14, 15.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தஞ்சாவூர் ஜெ பாப்பா இப்ராகீம் சாகிப் சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்து ஆறு மாதம் திருச்சி சிறையில் வாடியவர். கும்பகோணம் அ. கரீம்சாகிப், ஆகஸ்ட் புரட்சியில் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து ஆறு மாதம் பெல்லாரி சிறையில் வாடியவர். அய்யம் பேட்டை மௌலவி அப்துல் வகாப்சாகிப் ஒத்துழையாமைப் போரில் கலந்து கொண்டு ரூ. 500/– அபராதத்திற்கும், ஆறுமாத சிறை தண்டனைக்கும் உள்ளானவர். அதிராம்பட்டினம் மு. செய்யது அலியார் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றவர். நன்னிலம் இறவாஞ்சேரி என்.எஸ். சேக்தாவூது ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்றவர். வலங்கைமான் எம். ஏ. சத்தார், சைமன்கமிஷன் பகிஷ்கரிப்பிலும். உப்புச்சத்தியாக்கிரகத்திலும், தனிநபர் சத்தியாக்கிரகத்திலும் பங்கேற்று தேச விடுதலைப்போரில் தீவிரம் காட்டியவர். மன்னார்குடி பெரிய கடைத்தெரு மு.செய்யது அமீர் ஆகஸ்ட் புரட்சியில் பங்கேற்று பாதுகாப்புச் சட்டத்தில் அலிப்புரம் சிறையில் 8 மாதம் வாடியவர். நாகப்பட்டினம் பிடாரி கோயில் தெரு செ. செய்யது முஜிபுல்லா சாகிப் கிலாபத்திலும், தனிநபர் சத்தியாக்கிரகத்திலும் பங்கேற்று பாதுகாப்புச்சட்டத்தில் திருச்சி சிறையில் ஓராண்டும், அலிப்புரம் சிறையில் 4 மாதம் 11 நாட்களும் வாடியவர். நாகப்பட்டினம் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவராகப் பணியாற்றி நாட்டு விடுதலைக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர்.

கதர் உற்பத்திப் பணி

தஞ்சை மாவட்டம், அதிராம் பட்டினம் ஜனாப் மீரான் சாகிப் 1920ல் இருந்தே கதர் உற்பத்திப் பணியில் ஈடுபட்டவர்.*

வீரத்தலைவர் நேதாஜியும், வ. வே. சு. அய்யரும், ஒட்டப்பிடாரம் மாடசாமியும், காரைக்குடி சா. கணேசனும் சுதந்திரப்போரில் பங்கேற்ற சந்தர்ப்பங்களில் முஸ்லிம் தோற்றம் அவர்களுக்கு உதவியது; ஆபத்திலிருந்து காப்பாற்றியது.

* அ இராமசாமி ''தமிழ் நாட்டில் காந்தி'' பக்கம் 452

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரு. வி. க. வின் ஆசிரியர் அப்துல்கரீம்

தேசபக்தர் திரு. வி. க. வுக்கு அப்துல்கரீம் பாடம் போதித்தார் ''கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுதென்று'' காந்தியப்புரட்சி குறித்து சுதந்திரகீதம் இசைத்த விடுதலைக் கவிஞர் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை சின்னஞ்சிறுவராக இருந்த போது உணவளித்து தனது சொந்த மகனைப் போல் வளர்த்தது ஒரு முஸ்லிம் தாய். 30-4 1921ல் பள்ளத்தூரில் ராஜாஜிக்கு மேளதாளத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. கிலாபத் இயக்க காலமான அவ்வேளையில் நடைபெற்ற அந்த கூட்டத்திற்கு காரைக்குடி கோட்டையூர், காநாடு காத்தான், புதுவயல், சொக்கலிங்கம்புத்தூர் போன்ற ஊர்களிலிருந்து தேசாபிமானிகள் வந்திருந்தனர். அவர்களில் முஸ்லிம்களும் உண்டு* 28-4-1921ல் தேவகோட்டையில் ராஜாஜி மற்றும் பல தலைவர்கள் கலந்து கொண்ட கிலாபத் இயக்கக் கூட்டத்தில் பெருந்திரளாக மக்கள் வந்திருந்தனர். அவர்களில் முஸ்லிம்களும் அடங்குவர்** கூத்தாநல்லூரில் அப்போதைய அரசு எதிர்ப்பு கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் என்பதற்காக மன்னார்குடி முஸ்லிம்கள் மீது கூட்டு அபராதம் விதித்தது***

தினமணி - இந்தியன் எக்ஸ்பிரஸ்

சுதந்திரப்போராட்டக் காலத்தில் காங்கிரசின் கொள்கைகளை ஆதரித்து எழுதி வந்த பத்திரிகைகள் ஆகும். 9-2-1940 இல் இதன் காரியாலயங்கள் தீப்பற்றிக் கொண்டது. சென்னை முத்தியாலுப்பேட்டை பிரதம முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த தொண்டர்கள் தான்

---

* சொ. முருகப்பச் செட்டியார் ''தனவைசிய ஊழியன்'' மலர் 1 இதழ் 35. 6-5-1921

** ஏ. கே செட்டியார். 'குமரிமலர்'' ஜனவரி 1975 மலர் 31 இதழ்10

*** 'முன்னேற்றம் ஹிஜ்ரி மலர் 1363 பக்கம் 116.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தீயை அணைக்கப் பெரிதும் உதவினர். அவர்கள் செய்த சேவையை அப்போதைய தினமணியும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையும் புகழ்ந்து எழுதியது.* இப்படி எழுதிக்கொண்டே செல்லலாம்.

இந்த வரலாறு இத்துடன் முடிந்த முடிவல்ல. இன்னும் எத்தனையோ, சுதந்திரப் போராட்ட முஸ்லிம் தியாகிகள் வாழ்ந்து வெளியுலகிற்குத் தெரியாமல் மறைந்திருக்கலாம். அவர்களைப் பற்றிய விபரங்களை வெளிக்கொணரும் முயற்சியின் முதற்கட்டமே இது.

அன்னைத் திருநாட்டின் விடுதலைக்காக அயராதுழைத்த அகில இந்தியத் தலைவர் பெருமக்களின் வரலாறும்** இந்திய விடுதலைப்போரில் மறக்க முடியாத ஒன்றாகும்.

---

* முன்னேற்றம் ஹிஜ்ரி மலரில் ஹிஜ்ரி 1363 கே. டி. எம். அஹ்மது. இப்ராகீம் சாகிப், பி. ஏ., பி. எல்., அவர்கள் எழுதிய கட்டுரை பக்கம் 110.

** பார்க்க பின் இணைப்பு 3.

" Presented free of cost with compliments from the Central Institute of Indian Languages (Government of India) Mysore - 570 006. "

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின் இணைப்பு 1.

ஆற்காடு நவாபுகளின் வரிசை

வாலாஜாமுகம்மது அலி	1749—1795
உம்ததுல்உம்ரா	1795—1801
அஜிமுத்தௌலா	1801—1819
ஆஜம்ஜாஹ்	1819—1825

தனது கும்பெனி நண்பர்களுக்கு அண்மையில் இருக்க வேண்டுமென்பதற்காக அவர்களது கோட்டைக்கு அருகே சேப்பாக்கத்தில் அரண்மனை கட்டி புதுமனை புகும் நாளன்றே, ரூபாய் 30,000 இனாம் தொகை கவர்னர் முதல் எல்லோருக்கும் வழங்கி இரவு, பகல் பாராது வெள்ளையருக்கு விருந்தும் நடத்தியவர். ஆற்காட்டு நவாபு நாட்டுப் பற்று மிகுந்த பூலித்தேவரையும், பேராற்றலும் உள்ள கம்மந்தான் கான்சாகிபையும், கொடுமையாகப் பயன்படுத்தி பழிவாங்கிய ஆங்கிலேயக் கம்பெனியார் ஆற்காடு நவாப் ஆஜம்ஜாஹ் 1825-ல் மறைந்ததற்குப் பிறகு அவர்களது குடும்பத்தாரை வீட்டிலிருந்து விரட்டி விட்டு அவர்களது அரண்மனையைப் பொது ஏலத்தில் விற்பனைக்கு கொண்டு வந்ததும், நவாப் குடும்பத்தாரும், பின்னாளில் கும்பெனியாரின் கொடுமைக்கு தப்பவில்லை என்பதை வரலாறு உணர்த்துகிறது'' என்று 'விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்' நூலில் டாக்டர் எஸ்.எம். கமால் பக்கம் 148-149-இல் ஆதங்கத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின் இணைப்பு 2.

வாரன்ஹேஸ்டிங்க்ஸ்	1772—1785
காரன்வாலிஸ்	1786—1793
ஸாஜான்ஷோர்	1793—1798
வெல்லெஸ்லி	1798—1805
முதலாம் மின்டோ	1807—1813
ஹேஸ்டிங்க்ஸ்	1813—1823
ஆமர்ஸ்ட்	1823—1828
வில்லியம் பென்டிங்க்ஸ்	1828—1835
சர்சார்லஸ்மெட்காப்	1835—1836
ஜார்ஜ்ஈடன்பாரன் ஆக்லண்ட்	1836—1842
வெலன்பரோ	1842—1844
பெர்ஹன்றி ஹார்பிஞ்சு	1844—1848
டல்ஹௌசி	1848—1856
கானிஸ்	1856—1862
எல்கின்	1862—1863
சர்ஜான்லாரன்ஸ்	1864—1869
மேயோ	1869—1872
நார்த்புரூக்	1872—1876
லிட்டன்	1876—1880
ரிப்பன்	1880—1884
டப்பரின்	1884—1888
லேன்ஸ்டௌன்	1888—1894
இரண்டாம் எல்கின்	1894—1899
கர்சன்	1899—1905
இரண்டாம்மின்டோ	1905—1910
இரண்டாம் ஹார்டிஞ்ச்	1910—1916
செம்ஸ்போர்டு	1916—1921
லீடிங்	1921—1926
இர்வின்	1926—1931
வில்லிங்டன்	1931—1936
வின்லித்கோ	1936—1944
வேவல்டி	1944—1947
மவுண்ட்பேட்டன்	1947—1948

அதன்பின் இந்தியரான ராஜாஜி பொறுப்பிற்கு வந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின் இணைப்பு 3

பத்ருதீன் தயாப்ஜி

1844 அக்டோபர் 8 ல் பம்பாயில் பிறந்தார். லண்டனில் கல்வி கற்று 1867 ல் பாரிஸ்டரானார். 1882 ல் பம்பாய் சட்டசபை அங்கத்தினர். 1887 ல் சென்னையில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாசபையில் தலைவர். இவரது ஆலோசனையின் பேரில்தான் மாநாட்டில் செயல் திட்டத்தை வகுப்பதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு பின்னாளைய பொருளாய்வுக் குழுவிற்கு முன்னோடியாகவும் அமைந்தது.

1903-ல் பம்பாய் முஸ்லிம் கல்விக்கூடத்தில் தலைமை வகித்தார். பம்பாய் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் பணியாற்றினார். 1909-ல் இங்கிலாந்திற்கு கண் வைத்தியம் செய்யச் சென்ற இவர், 1909 - ஆகஸ்ட் 19ல் காலமானார். *

முகம்மது ரஹிமுத்துல்லா எம். சஹானி

1847 ஏப்ரல் 5ல் பிறந்த இவர் பம்பாய் பல்கலைக் கழக உறுப்பினராகவும், 1876ல் பம்பாய் நகரசபை உறுப்பின ராகவும், 1888ல் பம்பாய் நகரசபைத் தலைவராகவும், பம்பாய் சட்டசபை உறுப்பினராகவும், 1896ல் மத்திய சட்டசபை அங்கத்தினராகவும், 1896ல் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாசபைத் தலைவராகவும் பணியாற்றி யவர்.

இந்துக்களும், முஸ்லிம்களும் இணைந்து நாட்டு விடுதலைக்குப் பாடுபட வேண்டும் என்ற கொள்கையுடன் வாழ்ந்த அவர், 1902 ஜுன் 4ல் காலமானார். **

ஹஸன் இமாம்

1871 ஆகஸ்ட்31ல் பிறந்தவர். 1909ல் பீகார் மாணவர் மகாநாட்டுத் தலைவர்; வழக்கறிஞர்; 1911 ஏப்ரலில் கல்கத்தா ஹைகோர்ட் நீதிபதி.

* MUSLIM INDIA, MARCH 1984, P 101-102.
** CURRENT 'CONGRESS CENTENARY SPECIAL Dec. 2', 1985 Page. 45

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1911ல் அலிகார் சர்வகலாசாலை டிரஸ்ட்டி; 1913ல் ஹைகோர்ட் நீதிபதி பதவியை தூக்கி எறிந்தார். 1917ல் பீகார் மாகாண மகாநாட்டுத் தலைவர்.

காந்திஜியின் சத்தியாக்கிரகத்தை ஆதரித்தவர். ஹோம்ரூல் லீக்கின் தூது கோஷ்டித் தலைவர். 1918ல் பம்பாயில் லீ கமிஷன் முன் இவர் அளித்த சாட்சியம் பிரசித்தமானது. சர் அலி இமாமின் சகோதரரான இவர் 1933ல் இறந்தார்.

நவாப் செய்யது மஹ்முத் பஹதூர்

1869ல் பிறந்தார். 1900-1902ல் சென்னை சட்டசபை உறுப்பினர். 17 வருடங்கள் மாகாண மத்திய சட்டசபை உறுப்பினர். 1903ல் காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டித் தலைவர். 1904ல் காங்கிரஸ் சட்ட திட்டங்கள் இயற்றும் கமிட்டியின் உறுப்பினர். 26—12—1913ல் கராச்சியில் கூடிய காங்கிரஸ் மகாசபைத் தலைவர். 1914-1916ல் காங்கிரஸ் பொதுச் செயலாளர். 1916 பிப்ரவரி 12ல் காலமானார்.

தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் போராட்டத்திற்கு தங்கள் ஆதரவையும், அனுதாபத்தையும் தெரிவித்து 1919ல் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபை இந்தியாவிற்கு காந்திஜியை அறிமுகப்படுத்தியது இவர் தலைமையில் காங்கிரஸ் மகாசபை நடைபெற்ற போது தான்.

இந்தியச்சிங்கம் — இஸ்லாமியத்தங்கம்
மௌலானா முகம்மது அலி ஜௌஹர்

10—12—1878ல் ராம்பூரில் ஷேக் அப்துல்கானின் மகனாகப் பிறந்தார். இவருக்கு மூத்தவரே மௌலானா ஷௌகத் அலி. 18வது வயதில் அலகாபாத் பல்கலைக் கழகத்தில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லண்டன் ஆக்ஸ்போர்டில் பி. ஏ. ஹானர்ஸ் பட்டம் பெற்ற அவரைத் தனது செயலாளராக அப் பல்கலைக்கழகம் தெரிந்தெடுத்தது. அப்பதவி பெற்ற முதல் இந்தியர் மௌலானா முகம்மது அலியே.

'நாங்கள் ஒரு வகுப்பைத் தழுவுகிறவர்களல்ல, எல்லோருக்கும் மித்திரர்களாவோம்; இந்தியாவிலுள்ள பல சமூகத்தினர்களுக்குள் ஒருவிதமான அன்யோன்னியம் உண்டாவதற்காகவே நாங்கள் உழைக்க முன் வந்திருக்கிறோம்' என்று சொல்லி 'காம்ரேட்' (மித்திரன், தோழர்) என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். அது 1911 ஜனவரி 15ல் முதன் முதலாக வெளி வந்தது.

1913 பிப்ரவரி 23ல் ஹம்தர்த் பத்திரிகையினை ஹக்கீம் அஜ்மல்கானின் யோசனைப்படி மௌலானா முகம்மது அலி ஆரம்பித்து வெளியிட்டார். 'ஹம்தர்தின் தூதன்' என்று ஜனங்கள் அதனைக் கூறுவர்*.

அரசின் அடக்கு முறைகளால் ஹம்தர்த் நின்று போனது. 'காம்ரேட்' இதழும் கடும் துன்பத்திற்குள்ளாக்கப்பட்டது.

'நியூ ஈரா' (புதிய சகாப்தம்) என்ற பத்திரிகை காம்ரேட் அலுவலகத்திலிருந்து வெளிவந்தது. அதுவும் குறுகிய ஆயுளைக் கொண்டது. 'இவர் 1909ம் வருடத்தில் இவர் முஸ்லிம் சங்கம் ஸ்தாபிக்காமற்போனால், 1912ம் வருடத்தில் பத்திரிகைகளை ஸ்தாபிக்காமலிருந்தால் 1915ம் வருடத்தில் இவரும், இவரது தமையனாரும் சிறைபடாமலிருந்தால் பாரத நாட்டில் ஜனநாயக உணர்ச்சி இவ்வளவு முதிர்ந்திராது, ஆகவே அலீ சகோதரர்களில் உழைப்பே, ஜனநாயக உணர்ச்சிக்கு அஸ்திரவாரமாகும்.**

* உத்தமபாளையம் மௌலவி, அல்ஹாஜ் எஸ். எஸ். முகம்மது அப்துல்காதிர் சாகிப் பாக்கவி எழுதி, சென்னை பிரபல வர்த்தகர் ஜனாப் ஓ. எஸ். சதக் தம்பிமரைக்காயரால் 1938ல் வெளியிடப்பட்ட மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் நூலில் பக் 299.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆம் முப்பத்திரெண்டு ஆண்டு காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த காங்கிரஸை மூன்று ஆண்டுகளில் விழித்தெழச் செய்தவர். 1919ல் விடுதலையடைந்து அமிர்தசரஸ் காங்கிரசில் பங்கேற்றார். 1920ல் இங்கிலாந்துக்குச் சென்ற கிலாபத் தூதுக்கோஷ்டியின் தலைவர்.

1921ல் அகில இந்திய கிலாபத் கான்பரன்ஸ் தலைவர். இராணுவத்தில் முஸ்லிம்கள் சேரக்கூடாதென்று பிரகடனப் படுத்தினார். 1921 செப்டம்பரில் கைது செய்யப்பட்டு கராச்சி விசாரணையில் கர்ஜித்ததும், சிறை சென்றதும் வீரவரலாறு. 1923ல் காக்கி நாடாவில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்தார், நேரு ரிப்போர்ட்டில் கருத்துவேறுபாடு கொண்டு காங்கிரசிலிருந்து விலகினார். மூன்ரும் வட்டமேஜை மகாநாட்டுக்கு பிரதிநிதியாகச் சென்ற மௌலானா முகம்மது அலி 1931 ஜனவரி 4ல் இஷா தொழுகைக்குப்பின் சுதந்திரம் தருவதற்கான சூழ்நிலை இல்லை என்பதை அறிந்து இலண்டன் வரலாற்றிலே அதுபோன்ற ஓர் உணர்ச்சி மிக்க உரை இல்லை என்று சொல்லத் தக்க வகையில் கர்ஜிக்கும்போது ஏற்பட்ட மூளை இரத்த நாள உடைப்பால் (Cerebral Hacmarrhage) காலமானார்.

ஹகீம் அஜ்மல் கான்

1863 டிசம்பர் 27ல் ஹகீம் மஹ்மூதுகானின் மகனாகப் பிறந்தவர். யுனானி வைத்திய நிபுணர். 1906ல் டாக்கா முஸ்லிம் மகாநாட்டில் கலந்து கொண்டவர். 1911 ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்தவர். ஏராளமான நூல்களை எழுதியவர். 19 8ல் காங்கிரஸ் மகாசபையின் வரவேற்புத் தலைவர். 1921ல் கிலாபத் மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர். 1921 டிசம்பரில் கூடிய அகமதா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாத் காங்கிரஸ் மகாசபை கூட்டத்தின் தலைவர். 1922ல் சத்தியாக்கிரக கமிட்டித் தலைவர்.

1925ல் உடல்நிலை காரணமாக ஐரோப்பா சென்றார். 1927 டிசம்பர் 28ல் இறக்கும் வரையில் காங்கிரஸ் காரிய கமிட்டி உறுப்பினராக இருந்த இவர் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட்டவர்.

ஜமீயத்துல் உலமாயேஹிந்தின் நிறுவனர்களாக லக்னோ மௌலானா முகம்மது அப்துல் பாரி (1878—19—1—1926)* மௌலானா கபாயத்துல்லா, மௌலானா மஹமூதுல்ஹசன் ஆகியோர் காங்கிரசுடன் இணைந்து இந்த நாட்டு விடுதலைக்குச் செயல்பட்டவர்கள்.**

இப்ராகீம் ரகுமத்அலி சக்கரியா

லண்டனில் உள்ள இந்தியாவிற்கான வெளியுறவுச் செயலாளருக்கு இந்திய வைஸ்ராய் (உள்துறை) சிம்லா விலிருந்து 1925-ஜூன் 27ல் தந்தி ஒன்று அனுப்பினார் (தந்தி பி. என். 1376. ஒயிக்)

1818ம் ஆண்டு மூன்றாவது நெறிமுறை விதிகளின் கீழ் இந்தியப் புரட்சிக்காரர்களுக்கு எதிராக வாரண்டு பிறப்பிக்கவும், பெர்லினில் (ஜெர்மெனியில்) உள்ள இந்தியர்களில் கீழ்க்கண்டவர்கள் இந்தியாவிற்குத் திரும்ப வருவார்களானால் அவர்களை கைது செய்யவும் முடிவுசெய்யப்பட்ட விபரத்தை தெரிவித்துள்ளார்.

இந்திய விடுதலைக்கு ஜெர்மெனியில் சென்று படை திரட்டிய நாஞ்சில் நாட்டு ஜெய்ஹிந்த் செண்பகராமன் பிள்ளையுடன் மேலும் ஐந்து பேர்கள் (15—9—1891 — 26—5—1934) அதில் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். அதில்

* MUSLIM INDIA 'December 1983'

** ஏ. அஷ்ரப்அலி "இந்திய வரலாறு திருத்தப்பட வேண்டும் ஏன்? பக்கம் 48

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதலாவது குறிப்பிடப்படும் இந்தியப் புரட்சியாளர் இப்ராகீம் அல்லது முகம்மதலி என்கிற குஷிமுகம்மது மற்றொருவர் ரஹமத்அலி சக்கரியா ஆகிய இருவரும் முஸ்லிம் வீரச்சகோதரர்கள் ஆவார்கள்*

டாக்டர் எம். ஏ. அன்சாரி, உத்திரப்பிரதேசம், காஜிப்பூர் மாவட்டம் யூகப்பூரில் 1880 டிசம்பர் 25ல் பிறந்தவர்; இங்கிலாந்தில் படித்தவர் முஹ்தார் அகமது அன்சாரி. விடுதலைப் போரில் தீவிரப் பங்கு கொண்ட இவர் கயாவில் கிலாபத் மாநாட்டிற்கு தலைமை வகித்தார். 1920, 1922, 1926, 1927, 1931, 1932ம் ஆண்டுகளில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபை கூட்டங்களில் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார். 1927ல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தலைமை தாங்கிய இவர் நாட்டு விடுதலைக்காக, 1930லும் 1932லும் சிறைவாசமேற்றார். 1935ல் டில்லியில் கூடிய காங்கிரஸ் பொன்விழா மாநாட்டில் தலைமையேற்ற இவர் ராம்பூரிலிருந்து டில்லிக்கு ரயிலில் வந்து கொண்டிருந்த போது 1936ல் மே 10ல் மாரடைப்பால் காலமானார்.

பேராசிரியர் ஹுமாயூன் கபீர் (1906–1969) ரபி அகமது கித்வாய் போன்ற எண்ணற்ற முஸ்லிம்கள் காங்கிரசிலும், நாட்டு விடுதலைக்கும் ஆற்றிய சேவையை மறக்க இயலாது.

மௌலானா அபுல் கலாம் ஆஸாத், முகலாயப் பேரரசர் அக்பர் காலத்தில் வாழ்ந்த ஷேக் ஜமாலுத்தீன் தெஹ்லவி (ரஹ்) பரம்பரையில் வந்த மௌலானா முஹம்மத் காஹிருத்தீனின் புதல்வராக 1888 செப்டம்பரில் மக்காவில் பிறந்தவர் மௌலானா அபுல் கலாம் ஆஸாத். 1898ல் குடும்பத்தாருடன் இந்தியாவில் கல்கத்தாவில்

* ரகமி ''ஜெய்ஹிந்த் செண்பகராமன் பக்கம். 259, 260

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வசிக்கத் தொடங்கினார். 1905ல் கெய்ரோ அல் அஸ்ஹார் பல்கலைக் கழகத்தில் பயின்றார். 1907ல் இந்தியா திரும்பினார்.

1912ல் ஜுன் முதல் நாள் அல்ஹிலால் (இளம்பிறை) என்ற உருது வார இதழை கல்கத்தாவில் துவக்கினார். ஆங்கிலேயருக்கு ஆல வட்டம் வீசிக்கொண்டிருந்த பிற்போக்கு சக்திகளை 'அல்ஹிலால்' நடுங்க வைத்தது. அதனைக் கண்டு அஞ்சிய ஆங்கில அரசு அதனை நசுக்கிப் போட்டது.

அல்பஸாக் (பிரச்சாரகன்) என்ற இதழைத் துவக்கினார். அரசு ஆத்திரமுற்றது. 1915ல் வங்காளத்திலிருந்தே அவரை வெளியேற்றியது. நான்கு ஆண்டுகள் சிறையில் இருந்தார். காந்தியடிகளின் தலைமை தோன்றுவதற்கு முன்பே தமது எழுத்துப் பணியின் விளைவாகக் கடுங்காவல் தண்டனையை அனுபவித்தவர் ஆசாத். நாடெங்கும் ஆஸாத்தை விடுதலை செய்யக்கோரித் தீர்மானங்கள் எழுந்தது; அரசு பணிந்தது. ஆஸாத் விடுதலையானார்.

விடுதலையானதும், காந்தியின் தலைமையில் காங்கிரசில் சேர்ந்தார். 1921-1922ல் சி. ஆர். தாஸோடு சிறைசென்றார். சிறைக்குள்ளேயே விசாரணை செய்யப்பட்டு, ஒருவருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. தாங்கள் எதிர்பார்த்ததை விட தனது கணவருக்கு தண்டனை மிகவும் குறைவாக இருந்ததாக வீராங்கனை பேகம் ஆசாத், காந்திக்கு தந்தியில் தகவல் தெரிவித்தார்.

1923ல் டெல்லியில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மகாசபையின் தலைவராகப் பணியாற்றினார். 1930ல் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்திலும் 1932ல் சட்ட மறுப்பு இயக்கத்திலும் கலந்து சிறை சென்றார். 1940ல் ராம்கரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக்கு தலைமைதாங்கினார். 1942 ஆகஸ்ட் புரட்சி இப்படி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அத்தனை போராட்டங்களிலும், அரசு இவரை கைது செய்து சிறையில் அடைத்தது. 1946ல் இடைக்கால இந்திய அரசில் கல்வி அமைச்சரானார். வன்மையாகவும், வல்லமையாகவும் பேசிடும் ஆஸாத் பல நூல்ககளை எழுதியவர். 'வாளினும் வலியது பேனா என்ற முது மொழிக்கு ஆஜாத்தின் பேனாவை விடச் சிறந்த சான்று காணமுடியாது. சுமார் இரண்டு அல்லது மூன்று ரூபாய் பெறுமானமுள்ள பன்னிரெண்டு 'அல்ஹிலால் பிரதிகள் ஆயிரம் ரூபாய்க்கு அன்றே விற்கப்பட்டதென்றால் மக்க ளிடம் அவருக்கும் அவரது எழுத்திற்கும் இருந்த செல்வாக்கைப் பற்றிகூறவும், வேண்டுமோ*. மனித வர்க்கத்தின் நிரந்தரமான சிறந்த லட்சணங்களுக்கு உறைவிடமான இவர் 1958–ல்காலமானார்.

டில்லியில் இருந்த சமயம் அபுல்கலாம் ஆஜாத் நாள் தவறாமல் காந்தியை வந்து காண்பார். அவர் வந்ததும் சிகரட் சாம்பலை ஒற்றுவதற்காக உள்ள பீங்கான் கிண்ணத்தை திருமதி மனுபகின் காந்தி எடுத்து வைப்பார். ஒருநாள் மறந்து விட்டார். இந்திய பாகிஸ்தான் பிரச்சனை குறித்து மவுலானா அபுல்கலாம் ஆஜாத்துடன் காந்தி ஆராய்ந்து கொண்டிருந்தார். பேச்சுக் கிடையே எழுந்து சென்ற காந்தி ஜன்னல் அருகே கிடந்த ஒரு தட்டினை எடுத்து வந்து ஆஜாத் அருகில் வைத்தார். மௌலானாவிற்கு இக்கட்டான நிலை ஏற்பட்டது. உங்களுக்கு இச் சிறிய சேவை செய்ய நான் கொடுத்து வைத்தேன் என்றார் காந்தி**.

---

* எம். எம் இஸ்மாயில் எம். ஏ., 'மௌலானா ஆஜாத்' தினமணி வெளியீடு 1944 பக்கம் 129, 140.

** த. நா குமாரஸ்வாமி, ''பாபுஜியின் நினைவு கோர்வை' (1964) பக்கம் 27, 28.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டாக்டர் ஜாகிர் உசேன்

1897 இல் ஹைதராபாத்தில் பேகம் பேட்டையில் நீதிபதி பைதா உசேன்கானின் புதல்வராகப் பிறந்தார் டாக்டர் ஜாகிர் உசேன்.

இன்றைய அலிகார் பல்கலைக் கழகத்தில் 1913ல் பட்டப்படிப்பைத் துவங்கினார்.

1920 அக்டோபரில் மருத்துவ பரிசோதனைக்காக டெல்லி சென்ற போது காந்தியும், முகம்மது அலியும் அலிகார் பல்கலைக்கழகத்திற்கு வந்து கிலாபத்திற்கு ஆதரவு திரட்ட முயன்று பெருத்த ஏமாற்றத்தோடு சென்றனர். டெல்லி சென்று திரும்பிய ஜாகிர்உசேன் இதை அறிந்து உளம் நொந்தார்.

மாணவர்களைத் திரட்டினார். மறுபடியும் அலி சகோதரர்கள் அலிகார் வந்தனர். ஜாகிர் உசேன் தனது ஆசிரியப் பதவியை தூக்கி எறிந்தார்.

''அலிகார் பல்கலைக்கழகம், வெள்ளை அரசாங்கத்திடமிருந்து இனிமேல் மான்யம் பெருதல் கூடாது. அரசாங்கக் கட்டுய்பாடுகள் எந்தக் கோணத்திலும் இந்தப் பல்கலைக் கழகத்தைக் கட்டுப்படுத்துதல் கூடாது. நிர்வாகிகள் இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள மறுப்பார்களானால் இந்தக் கல்வி நிலையத்திலிருந்து அதே காரணங்களுக்காக வெளியேறும் மாணவர்களுக்குக் கல்வி புகட்டும் பொறுப்பினை விடுதலை இயக்கத்தினர் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்'' என்ற இந்த தீர்மானம் தான் ஜாமியா மில்லியா இஸ்லாமியா என்ற இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தின் தாயும் தந்தையுமாகும்*

---

* நாஞ்சில் ஆ. ஆரிது, பி.ஏ, ''டாக்டர் சாகிர் உசைன்'' பக்கம் 87.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1920 அக்டோபர் 20ல் அலிகார் பல்கலைக் கழகப் பள்ளிவாசலில் துவங்கப்பட்ட ஜாமியாவிற்கு ஹக்கீம் அஜ்மல்கான் வேந்தராகவும், மௌலானா முகம்மதலி துணைவேந்தராகவும், ஜாகிர்உசேன் நிர்வாகக்குழு உறுப்பினருமானார்கள்.

1923 இல் ஜெர்மனிக்குச் சென்று பொருளாதாரத் துறையில் டாக்டர் பட்டம் பெற்று 1926ல் தாயகம் திரும்பினார். பல்வேறு சூழ்நிலைகளினால் ஜாமியா பொருளாதாரச் சீர்கேட்டினால் சீர்கெட்டுஇருந்தது. 55,000ரூபாய் கடனிலிருந்த அதனை மூடவும் முடிவு செய்யப்பட்டது.

கிலாபத் இயக்கத்தினால் துவங்கப்பட்ட "ஜாமியா" நிறுவனம் மரணிக்கும் நிலையில் இருந்த போது டாக்டர் அன்சாரி, அபுல்கலாம் ஆசாத் சென்னைக்கு வந்தனர். சென்னையில் ஹாஜி. ம. ஜமால் முகம்மது சாகிப் பெருந்தொகை உதவி ஏனையோரிடமும் பொருள் வசூலித்துக் கொடுத்து அனுப்பினார்கள்.

பின்னாளில் அகில இந்தியாவின் குடியரசுத் தலைவராகி 1969 மே 3ல் மறைந்த ஜாகிர் உசைனின் தேசபக்தியும், சுதந்திர ஆர்வமும், அவரது அருஞ்செயல்களும் போற்றிப் பாராட்டத்தக்கது.

காயிதே ஆஜம் ஜின்னா

1876 டிசம்பர் 25ல் பிறந்தவர் முகம்மது அலிஜின்னா. 1882ல் மதராசாவிலும், 1886ல் கோகுல் தாஸ்தேஜ் பிரைமரி என்ற ஆங்கிலக் கல்வி நிலையத்திலும், அதன் பின்னர் கராச்சியிலும் படித்தார். 1892ல் இங்கிலாந்திற்குச் சென்றார். பாரிஸ்டர் பட்டம் பெற்றார். பம்பாயில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபடலானார்.

1908லும், 1916லும் திலகருக்காகவும்
1914ல் அலி சகோதரர்களுக்காகவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1917ல் அன்னிபெசன்ட்டுக்காகவும்,

1935ல் சரத் சந்திர போசிற்காகவும், வாதாடிய ஜின்னா,

1942ல் வழக்கறிஞர் தொழிலை நிறுத்திக் கொண்டார்.

1905ல் இந்திய தேசீய காங்கிரசில் சேர்ந்த ஜின்னா, 1906ல் கல்கத்தா மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

1916ல் பம்பாயிலிருந்து இம்பீரியல் கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஜின்னா, 1919ல் ஜாலியான் வாலா பாக் படுகொலையைக் கண்டித்து தமது கவுன்சில் உறுப்பினர் பதவியை தூக்கி எறிந்தார். கிலாபத் இயக்கத்தில் தீவிரத் தொண்டாற்றி தலைமை நிலையில் இருந்தார்.

1926ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஜின்னா மீண்டும் பம்பாய் மத்திய சட்ட சபைக்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரஸ் முஸ்லிம் லீக் இடையே இருந்த ஒற்றுமை எப்படியோ குலைந்தது. பாகிஸ்தான் தனி நாடானது. பாகிஸ்தானின் கவர்னர் ஜெனரலாக பதவி வகித்த ஜின்னா 1948 செப்டம்பர் 11ல் காலமானார்*

எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான்

1890ல் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் உத்தமன்சாய் கிராமத்தில் கான் பஹ்ராம் கானின் புதல்வராகத் தோன்றினார். பெஷாவரில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பையும், மேல் படிப்பினை அலிகாரிலும் படித்தார்.

---

* ஏ கே. ரிபாயி எழுதிய "காயிதே ஆஜம்"
இ ப. மு. முகம்மது மஹ்தூம் எழுதிய "முஹம்மதலி ஜின்னாஹ் ஜீவிய சரித்திரம்" (1940) நூலில் மேலும் பல விபரங்களை தெரிந்து கொள்ளலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிலாபத் இயக்கத்தில் சேர்ந்து அரசியல் கைதியாகி விடுதலை பெற்ற அவர் 1928 இல் கல்கத்தாவில் நடைபெற்ற கிலாபத் மகாநாட்டிற்குச் சென்றார்.

1929ல் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு இந்திய சுதந்திரப் போரில் தீவிரமாகக் குதித்தார்.

பெஷாவர் காங்கிரசின் மாதச் செலவுக்காக 500 ரூபாய் கொடுக்க ஒவ்வொரு மாதமும் தான் தயார் என்று நேரு சொன்ன போது, விடுதலைப் போராட்டத்தின் சுமையை நாம் எல்லோரும் பகிர்ந்து கொள்வோம்; நீங்கள் பணம் தர வேண்டாம் என்று தன்மான உணர்வுடன் கூறியவர் கான் அப்துல் கபார் கான்*

குதாய் கித்மத்கார் என்ற தொண்டர் படையை அமைத்தார். சுதந்திரப் போரில் இந்தியா பிரிக்கப் படுவதை எதிர்த்தார். பாகிஸ்தான் சிறையில் எண்ணற்ற தொண்டர்களுடன் 15 ஆண்டுகள் வாடினார். பாகிஸ்தானிடம் சேர்ந்திருந்தால் பாதுஷாவாக மாறியிருக்கலாம் நாட்டு விடுதலைக்காக நம்மிடையே பக்கிரியாக அவர் வாழ்ந்து மறைந்தார்.

ஆஸஃப் அலி

1888 மே 11ல் பிறந்து வழக்கறிஞராகி, நாட்டு விடுதலைக்குப் போராடி, 1818ல் சிறை சென்று புகழ்மிக்க பகத்சிங் வழக்கை நடத்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்.

1942 ஆகஸ்ட் புரட்சியில் வீரசாகசங்கள் புரிந்த இவர்
1946ல் ரயில்வே அமைச்சராகி,
1947ல் அமெரிக்கத் தூதராகவும் பணியிலிருந்த இவர்
1954 ஏப்ரல் 2ல் மறைந்தார்.

* வீ. செல்வராஜ்— "எல்லை காந்தி கான் அப்துல் கபார்கான்" பக்கம் 31.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலட்சியக் கவிஞர் அல்லாமா இக்பால்

22—2—1873ல் பிறந்து, ஐரோப்பாவில் பயின்று 1908ல் இந்தியா திரும்பியவர் அல்லாமா இக்பால். 1922ல் சர் பட்டத்தையும் பெற்றார். 1926ல் பஞ்சாப் சட்ட மேல் சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1928ல் சென்னை வந்தார். 1929ல் மைசூர், ஹைதராபாத், அலிகார் சென்றார். 1930ல் அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவரானார். 1931ல் லண்டன் வட்ட மேஜை மாநாட்டிற்குச் சென்றார். 1932ல் கல்விச் சீர்திருத்தம் செய்ய ஆப்கானிஸ்தானம் சென்றார்.

கிலாபத் இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்ட இக்பால் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட்டார். இந்திய விடுதலைப் போரில் தனக்கென தனி இடத்தைப் பெற்றுள்ள இக்பால், 22—4—1938ல் காலமானார்.

சோசலிசசிற்பி நேருவிற்கு சுதந்திரச் சிந்தனையை விதைத்த முபாரக்அலி

பதானில் நல்ல குடும்பத்தில் பிறந்து, பாரசீக மொழியில் பாண்டித்தியம் பெற்றவர் முன்ஷி முபாரக் அலி. மோதிலால் நேருவிடம் எழுத்தராகப் பணியாற்றினார். 1857ஆம் ஆண்டின் இந்திய சுதந்திரப் போரில் இவரது குடும்பத்தினர் பலரை ஆங்கிலேயர்கள் கொன்று குவித்தனர். அனைத்தையும் தாங்கிக் கொண்டு அமைதியுடனும் பொறுமையுடனும் வாழ்ந்து வந்தார்.

'தாடிவளர்த்திருந்த அவர் எனக்குப் பழைய காலத்தவராகப்பட்டது; தாவிச்சென்று அவரைத் தழுவிக்கொண்டு அவர் கதை சொல்லுவதைக் கண் கொட்டாமல் கேட்பேன். சலிப்பே தோன்றாது. அவர் அரபிக்கதைகள், பிறகதைகள், 1857-58இல் நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள் முதலியவைகளைச் சுவையோடு சொல்லுவார். அவர் சொல்லும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைகளை மணிக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருப்பேன் அவர் என் உள்ளத்திலே நீங்காத இடம் பெற்றுவிட்டார் அவருடைய அன்பையும் பண்பையும் நான் என்றுமே மறக்கமுடியாது* என்று நேரு கூறியிருக்கிறார்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான விடுதலைப்போர் குறித்தும் அதில் ஈடுபட்டு வீரமரணமடைந்த வீரர்கள், வீராங்கனைகள் குறித்தும் முபாரக் அலி கதை கதையாகச் சொன்ன கருத்துக்கள் சிறுவன் நேருவின் உள்ளத்தில் ஆழமான பாதிப்புக்களை ஏற்படுத்தின. இந்திய விடுதலை இயக்கத்தின் முன்னனி வீரராக நேரு உருவாவதற்கு இந்தக் கருத்துக்கள் வித்திட்டன என்றால் மிகையில்லை.*

பாரதப்பிரதமர் நேரு, இவரது புதல்வி திருமதி இந்திராகாந்தி அம்மையார், இவரது புதல்வர் திரு ராஜீவ் காந்தி இப்படி இந்தியாவில் கொடி கட்டி ஆண்ட பரம்பரைக்கு சுதந்திர வித்தை ஆரம்பகால கட்டத்தில் தூவி சுதந்திர தாகத்தை தூண்டியவர் முன்ஷி முபாரக் அலி என்ற முஸ்லிம் பெருமகனார் என்பதனை மார்தட்டிச் சொல்லலாம் அல்லவா!

ஹஸ்ரத் இப்பி.:.பக்கீர்: வடமேற்கு எல்லைப்புறமாகணங்களில் ஆங்கிலேயரின் சிம்மசொப்பனமாய் படை திரட்டிப் போராடியவர் ஹஸ்ரத் இப்பிபக்கீர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும், அதன் தலைசிறந்த ராஜதந்திரிகளையும் இராணுவத் தலைவர்களையும், 19:2 முதல் 1947 வரை பதினைந்து ஆண்டு காலம் தோல்வி

* ஜவஹர்லால் நேரு 'சுயசரிதை' ஸ்ரீமதி ஜெயா அருணாசலம் தமிழாக்கியது (1957) பக் 9

** 'உங்கள் நூலகம்' நியூ செஞ்சுரி வாசகர் பேரவை இரு மாத இதழ், நேரு நூற்றாண்டு சிறப்பிதழ் 1990 ஆகஸ்ட் செப்டம்பர். நேருவின் பாதையில் மதவெறியை மாய்ப்போம்' கட்டுரை பக்கம் 4-544

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகம் காணச் செய்து, தனி சுதந்திர ஆட்சி நடத்தி வந்த போராட்ட நாயகர் ஆவர்*

டாக்டர் செய்யது முகம்மது: பண்டித நேருவுடன் இங்கிலாந்தில் ஒன்றாகப்படித்து, பின்னாளில் அவருடனே காங்கிரசில் சேர்ந்தவர் டாக்டர் செய்யது முகம்மது, காங்கிரசில் முன்னணித் தலைவராக விளங்கிய நேருவும், டாக்டர் செய்யது முகம்மதும், அகம்மதுநகர் சிறையில் ஒன்றாக இருந்தனர். கண் பார்வை பழுதுபட்டு உடல் நிலை சீர்கெட்ட டாக்டர் செய்யது முகம்மதுவுக்கு தினமும் ஒரு மணி நேரம் பத்திரிகை படித்துக் காட்டுவார் நேரு. அது மட்டுமா? டாக்டர் சையத் முகம்மதுவுக்கு வேளை உணவையும் கொண்டு வந்து வைத்தும், அவர் சாப்பிட்டு முடித்த பின் அவரது தட்டுகளை நேருவே சுத்தமும் செய்வார்**

தற்காலிக சுதந்திர அரசுகள்

தாயகத்தின் கொடிய அடக்குப் முறைக்குப் பதிலடி கொடுத்து அயல் மண்ணில் போட்டி சர்க்கார் அமைத்துப் போராடுவது என்பது விடுதலைப் போராட்ட வரலாற்று வழிமுறைகளில் ஒன்றாகும்.

1915ல் ''இந்தோ-ஜெர்மென்மிசன்'' சார்பில் ஆப்கானிஸ்தான் தலைநகரில் காபூலில் சுதந்திர இந்தியாவின் முதல் தற்காலிக அரசாங்கம் ராஜா மகேந்திர பிரதாப் ஜனாதிபதியாக, மௌலானா பர்க்கத்துல்லாசிந்தி பிரதமராக, செண்பகராமன்பிள்ளை அயல்நாட்டு மந்திரியாக, மௌலானாமுகம்மது பசீர் பாதுகாப்பு மந்திரியாக பொறுப்பேற்க அமைக்கப்பட்டது*

* அல்ஹாஜ் ஏ. எம். யூசுப் ''ஹஸ்ரத் இப்பிஃபக்கீர் பக்கம்-4.

** ஆர் சீனிவாசமூர்த்தி ''நவபாரத சிற்பி நேரு உன்னத நிகழ்ச்சிகள்'' பக்கம்-25, 26.

* காங்கிரஸ் (தமிழ்நாடு) நூற்றாண்டு மலர் 1885 1985 பக்கம்-70

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்யது அகம்மது பரெல்வி (1776-1831)

வெள்ளையருக்கு எதிராக 80,000 பேரைக் கொண்ட பெரும்படையைத் திரட்டி ஜிகாத் என்னும் புனிதப்போரை ஆங்கிலேயருக்கு எதிராக நடத்தியவர். 1830ல் பெஷாவரில் சுதந்திர இந்திய அரசை அமைத்த இவர் 1831ல் பாலாகோட்டில் வெள்ளையருடன் நடந்த போரில் வீர மரணத்தை தழுவினார்*

1926ல் ஜனவரி 26 அரசின் அடக்கு முறைகளில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று மத்திய சட்டசபையில் பீகார் டிர்புட் பகுதி மௌலவி முகம்மது ஷஃபி தீர்மானம் கொண்டு வந்தார்**

அசாமைச் சேர்ந்த மௌலவி அப்துல்மைதீன் சௌதூரி மக்களை மேலும் கடுமையான நடவடிக்கைகளில் இறங்குமாறு தூண்ட வேண்டாம் என்று அதே சபையில் எடுத்துச் சொன்னார்.***

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற இந்திய விடுதலைப் போரில் எண்ணற்ற முஸ்லிம்கள் பங்கேற்ற விபரத்தை கம்தா சௌபேயின் ஆய்வு நூலின் வாயிலாக அறியலாம்.**** 1857 புரட்சியில் நாட்டு விடுதலைக்காக களப்பலியானவர்களைப் பற்றியும், இந்திய சுதந்திரப் போரில் வீரச்சாவினை தழுவிக்கொண்டவர்களைப்

---

* எம். ஏ. கரெண்டிகர் ''நவீனமயமாகிவரும் இந்தியாவில் இஸ்லாம்'' (1969) பக்கம் 183-184

** மனோரஞ்சன்ஜா – சுதந்திரப் போராட்டமும், மத்திய சட்ட சபையும், பக்கம் 110

*** மனோரஞ்சன்ஜா ''சுதந்திரப் போராட்டமும், மத்திய சட்ட சபையும்'' பக்கம் 143

**** KAMTA CHAUBEY 'MUSLIMS AND FREEDOM MOVEMENT IN INDIA' (1990) Allahabad.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பற்றியும் இந்திய அரசு வெளியிட்டுள்ள டாக்டர் பி. என். சோப்ராவின் நூலில் காணலாம்*

அகில இந்திய முஸ்லிம் லீக்கின் கூட்ட நடவடிக்கைகளை ஏ. எம். ஜெய்தி எழுதிய நூலின் பாகங்களில் அறியலாம்**

'ஜாலியன் வாலாபாக்' சிந்தனை

'ஆட்சியைப் பிடிக்க முயன்ற முயற்சி அடக்கப்பட்ட வரலாறு' எனும் தலைப்பில் 1920ல் 921 பக்கங்களில் லாகூர் உயர்நீதி மன்ற வழக்கறிஞர் பண்டிதர் பியாரி மோகன் எழுதி, லாலாலஜபதிராயின் அணிந்துரையுடன், லாகூரில் அச்சடிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. அதன் இறுதியில் 46 பக்கங்களைக் கொண்ட துணைப்பட்டியலில் இராணுவ நடவடிக்கைகளால் தண்டிக்கப்பட்ட, சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்ட, தூக்குத் தண்டனைகளுக்குள்ளான வீரத் தியாகிகள் 581 பேர்களின் பட்டியலில் 238 பேர்கள் முஸ்லிம்கள் என்பதை அந்த வரலாற்று ஆவணம் இன்றும் பறை சாற்றுகிறது. அதே நூலில் பின் இணைப்பில் பக்கம் 172, 173ல் அக்காலத்தில் வெளியான துண்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்கள்.

சௌக்கத் அலிக்கு ஜே!
மகாத்மாகாந்திக்கு ஜே!

என்று துவங்கி ஆங்கிலேயர்களை வீழ்த்திட, சுதந்திர தாகத்துடன் அணிதிரள்வோம் என்று கூறிக் கொண்டே வந்து அந்த நோட்டீஸின் இறுதியில் சொல்கிறார்கள்.

---

* Dr. p. N. CHOpRA WHO'S WHO OF INDIAN MARTYRS' Vol. I, II and III

** A. M. ZAIDI 'FROM SYED TO THE EMERCENGE OF JINNAH'.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Hindu, Muhammadan and Sikh brethren, raise the cry of Allah Akbar and kill the kafirs. Get ready soon, for the war and God will grant victory to India very soon. Fight with enthusiasm and enlist yourselves in the DandaArmy.

Servant of the Nation
DANDA AKHBAR
'Hindus, Muhammadans and Sikhs'*

இந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களும் இணைந்து நாட்டு விடுதலைக்கு வெள்ளையரை எதிர்த்துப் போராடியது சரித்திரம்., அன்று நிலவிய; ஒற்றுமையில் தொய்வு இன்று எதனால்? எண்ணிப் பார்ப்போம்; இணைந்து வாழ்வோம்; அதுவே நாட்டுக்காகப் போராடி மடிந்த நல்லவர்களுக்கு நாம் செலுத்துகிற காணிக்கையாகும்.

எனது விருப்பம்

திருவண்ணாமலையில் தந்தை பெரியார்தலைமையில் 15—11—1924ல் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது; மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் முக்கியமானவர்கள் என்று 21—11—1924 நவசக்தி இதழ் செய்தி வெளியிட்டது. அதில் முதல் பெயராக யாகூப் ஹாஸன் பெயர் இருந்தது; அவரது பெயரைத் தொடர்ந்தே இராஜாஜி, எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார், டாக்டர் பி. வரதராஜலு நாயுடு, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், டாக்டர் ராஜன், வி. சக்கரைச் செட்டியார், தங்கப் பெருமாள் பிள்ளை, எஸ். ராமநாதன், கே. சந்தானம், கே, எஸ் சுப்பிரமணியம், ஹாலாஸ்யம். வ. வே. சு. அய்யர், கிருஷ்ணசாமி சர்மா, ராய. சொக்கலிங்கஞ் செட்டியார்,

* Peary Mohan, 'An Imaginary Rebellion; And how it was supressed an account of the Punjab Disorders and the working of Martial Law' p.p. 172—173.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரத்தினசபாபதி கவுண்டர், சுவாமி சகஜானந்தர், அசலாம்பிகையம்மாள், நாகம்மாள் (ஈ. வெ. ராவின் துணைவியர்) இராமாமிருதம் அம்மாள் என்று பட்டியலை வெளியிட்டிருக்கிறது; இதில் முதல் பெயர் யாகூப் ஹாஸன் பெயர்; ஆம் விடுதலைப் போரில் முன்னணியில் நின்றவர்கள் தமிழக முஸ்லிம்கள்.

16—11—1924ல் இரண்டாம் நாள் மாநாட்டில் நாமக்கல் உஸ்மான் சாகிப்* தீர்மானம் கொண்டு வந்தார்.

நாமக்கல் உஸ்மான் சாகிப் யார்? அவர் விடுதலைப் போரில் ஆற்றிய பணிகள் என்ன?

இது போல இன்னும் வெளியில் தெரியாத, வெளி வராத பல தியாகிகளின் வரலாறு முழுமையாக ஆய்வு செய்யப்பட, தகவல்கள் சேகரிக்கப்பட, நூல் உருவில் தொடர்ந்து வெளிவரல் வேண்டுமென்ற எனது அவாவினை மீண்டும் வலியுறுத்தி முடிவுக்கு வருகிறேன்.

முடிவாக

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பங்கு வகித்தார்கள். பெற்ற சுதந்திரத்தை பேணிக் காத்திடவும், தேசிய அளவிலும் மாநில அளவிலும் தியாகங்கள் பல புரிந்து இந்நாட்டைப் பாதுகாப்பதிலும் அவர்கள் முன்னனியில் நின்றவர்கள்.

சூரியனே அஸ்தமிக்காத ஆங்கிலேய சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தைத் தகர்த்து, ஆங்கிலேயர் ஆட்சியை நம் தாய் நாட்டினின்றும் விரட்டியடிக்க வீறு கொண்டெழுந்து, விடுதலை வேள்வியில் தங்களைப் பலியாக்கிக் கொண்டு வாழ்க்கைச் சுகங்களையும், வசதிகளையும் தியாகம் செய்த தமிழக முஸ்லிம்கள் கணக்கற்றோர். அவர்களின் வரலாற்றை விவரிப்பின் பெருகும், தொகுப்பின் எஞ்சும்.

* திரு வி. க. 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' பக். 331.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீட்டை மறந்து, நாட்டை நினைத்து, தங்களை மெழுகுவர்த்திகளாக்கிக் கொண்டு, இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் ஈட்டித் தந்தனர் நம் முன்னோர்கள். ஈடிணையற்ற அத்தியாக சீலர்களின் ரத்தத்தால் சிவப்படைந்த இந்திய தேசீயத்தைத் தம் மதவெறியால் கறைபடுத்திக் காவியடையச் செய்திடக் கங்கணம் கட்டிக் கொண்டு அயோத்திகளையும் மீரட்டுகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது ஒரு கூட்டம்.

சுதந்திரமும், சுயமரியாதையும் இரு கண்கள் எனக் கருதக்கூடிய இந்நாட்டு முஸ்லிம்களின் கடந்த கால வரலாறு அவர்கள் கண்களைத் திறக்கட்டும்; அல்லது வரலாற்றின் ஒளியைக்காண விரும்பாத கருத்துக் குருடர்கள் தங்களைத் தாங்களே குருடாக்கிக் கொள்வதால் உலகம் இருட்டாகிவிடாது.

10067

நம் கண்ணறையின் ஒளிவிடாமல் கல்லறையில் துயிலும் விடுதலை வீரர்கள் கண்ணியத்துக்குரியவர்கள். அவர்கள் நம் கருத்தில் நிறைந்திருந்து கால காலங்களுக்கும் முஸ்லிம்கள், இந்த மண்ணில் யாருக்கும் தாழாமல், தன்மானத்தோடு சரிநிகர் சமமாக வாழவும், ஜனநாயகத்தால் ஆளவும், நாளும் நாளும் உத்வேகம் தந்து கொண்டேயிருப்பார்கள். அது உண்மைத் 'தியாகி'களை மீண்டும் மீண்டும் உருவாக்கிப் புதிய வரலாறுகளைப் படைக்கும்!

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி-6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY

	Signature	Date
Access on		
Class on		
Cat on		
Tag etc		
Filing		
E.A.R.		
Any other		
Checked		

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுகா, விசுவநாதபுரத்தில் N. செய்யது மசூது — காசினம்மாள் புதல்வராக 1—9—1954ல் பிறந்தவர்.

ஆரம்பக்கல்வியை எம்.எம். நடுநிலைப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியை செங்கோட்டையிலும், புகுமுகக் கல்வியை பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியிலும், பி.ஏ. படிப்பை தூய யோவான் கல்லூரியிலும், எம்.ஏ. படிப்பை மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வியிலும், எம்.ஃபில் படிப்பை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலும் பயின்றவர்.

இவரது துணைவியார் டாக்டர் திவானி ஜஹானரா. தி. நஜாத், தி. சுஹைனா என்ற இரு குழந்தைகள்.

19-வது வயதில் அறமுரசு இதழில் கட்டுரை எழுதத் துவங்கி, தொடர்ந்து 'நம்நாடு' 'இலட்சியப் பாதை' இதழ்களில் எழுதி, தற்போது 'குர்ஆனின் குரல்', 'ஜமாஅத்துல் உலமா', 'தினமணி', 'தினமணி சுடர்', 'தினகரன்' ஆகிய பாரம்பரியமிக்க பத்திரிகைகளில் நூற்றுக்கணக்கான கட்டுரைகளை எழுதியும், தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தமிழினக் காவலர் **வை. கோபால்சாமி** எம். பி., அவர்களிடம் கடந்த இருபதாண்டுகளாக தொடர்புகொண்டு, பதினைந்து ஆண்டுகளாக அவர்களுடைய உதவியாளராகவும் பணியாற்றி வருகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar